அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2016 - 2017

**மானியக் கோரிக்கை எண். 42**


**திரு. எஸ்.பி. வேலுமணி**
நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும்
சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2016

# பொருளடக்கம்


| வ.எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | **முன்னுரை** | 1 |
| 2. | **ஊராட்சி நிர்வாகம்** | 10 |
| 3. | **மாநில அரசுத் திட்டங்கள்** | |
| 3.1 | தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம் | 89 |
| 3.2 | முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் | 95 |
| 3.3 | நெசவாளர்களுக்கான முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் | 101 |
| 3.4 | 'தானே' வீடு வழங்கும் திட்டம் | 102 |
| 3.5 | ஊரக உட்கட்டமைப்பு – சாலைகள் | 102 |
| 3.6 | ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் | 110 |
| 3.7 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 113 |





| வ.எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 3.8 | தன்னிறைவுத் திட்டம் | 121 |
| 3.9 | முழு சுகாதார தமிழகம் – மாநில அரசின் முன்முயற்சிகள் | 125 |
| 3.10 | ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் புனரமைத்தல் | 127 |
| 3.11 | ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் | 128 |
| 3.12 | தூய்மையான கிராம இயக்கம் | 129 |
| 3.13 | தனிநபர் இல்லக் கழிப்பறை அமைக்கப்படுவதில் அரசினால் மேற்கொள்ளப்படும் உத்திகள் | 130 |
| 3.14 | திறந்த வெளியில் மலம் கழித்தலை ஒழித்தல் குறித்த திட்டம் தயாரித்தல் மற்றும் திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையை அடைய சமூக அணுகுமுறையை பயன்படுத்துதல். | 135 |
| 3.15 | ஊரகப் பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் | 138 |

| வ.எண் | | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|---|
| | 3.16 | பள்ளிக் கழிப்பறை பராமரித்தல் | 143 |
| | 3.17 | சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் | 145 |
| 4 | | **மத்திய அரசுத் திட்டங்கள்** | |
| | 4.1 | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் | 147 |
| | 4.2 | பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்) | 170 |
| | 4.3 | நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் | 174 |
| | 4.4 | பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் | 176 |
| | 4.5 | தூய்மை பாரத இயக்கம் ( ஊரகம்) | 178 |
| | 4.6 | நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் | 182 |
| | 4.7 | தேசிய கரிமவாயு மற்றும் உர மேலாண்மைத் திட்டம் | 185 |
| 5 | | **மனித வள மேம்பாடு** | |
| | 5.1 | அரசிதழ் பதிவு பெற்ற பணியமைப்பு | 187 |
| | 5.2 | பொறியியல் பணியமைப்பு | 188 |
| | 5.3 | முதுநிலை அலுவலர்களை பிற துறைக்கு மாற்றுப் பணியில் அனுப்புதல் | 190 |





| வ.எண் | | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|---|
| | 5.4 | அரசிதழ் பதிவு பெறாத பணியாளர் பணியமைப்பு | 191 |
| | 5.5 | திறன் மேம்பாடு | 201 |
| 6 | | **தமிழ்நாடு புது வாழ்வு திட்டம்** | 217 |
| 7 | | **தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்** | 240 |
| 8 | | **பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்** | 283 |
| 9 | | **வரவு செலவுத் திட்டம் 206–17** | 299 |
| 10 | | **முடிவுரை** | 301 |

## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2016–17

**முன்னுரை –**

***"தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போடச் செய்ய வேண்டும் என்பதும், இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்பதும் தான் இந்த அரசினுடைய குறிக்கோள்"***

***–மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்***

கிராமப்புற மக்களது சமூகப் பொருளாதார நலனே, இந்த அரசின் பல்வேறு முன்னோடித் திட்ட செயலாக்கத்தின் மையக் கருத்தாக அமைந்துள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஒப்பற்ற தொலைநோக்குத் தலைமையின்கீழ், இம்மாநிலம் பல தனித்துவம் வாய்ந்த மற்றும் புதுமையான திட்ட செயலாக்கத்தினைக் கண்டது. அது, ஊரகப் பகுதிகளை முன் எப்போதும் இல்லாத அளவு முன்னேற்றம் அடையச் செய்துள்ளது. வறுமை ஒழிப்பு மற்றும் உயர்தர சேவை வழங்குதல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே ஊரக வளர்ச்சித் திட்ட செயலாக்கம் அமைந்துள்ளது.

அனைத்து குடியிருப்புப் பகுதிகளுக்கும், வள ஆதாரங்களை சீரான முறையில் விநியோகிக்கவும்,



குறைந்தபட்ச அடிப்படை வசதிகளை அனைத்து குடியிருப்புகளுக்கும் வழங்கும் நோக்குடனும், **தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டத்தினை** இந்த அரசு 2011–12ல் அறிமுகப்படுத்தியது. இத்திட்டம் 2011–12 முதல் 2015–16 வரை ஐந்து ஆண்டுகளில் ரூ.3680 கோடி மொத்த ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது.

மேலும் சில கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த/மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில், இந்த அரசு, தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டத்தினை 2016–17 முதல் 2020–21 வரை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டிக்க முடிவு செய்துள்ளது.

**முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம்** அறிமுகப்படுத்தப்பட்டது, நம் நாட்டின் வளர்ச்சித் திட்ட வரலாற்றில், ஈடு இணையற்ற மற்றுமொரு திருப்புமுனைத் திட்டமாகும். இத்திட்டம், அதிக இருப்பிட இடவசதியுடன், சூரிய சக்தி விளக்குடன்கூடிய அனைத்து அடிப்படை வசதிகளுடன், ஒரு சுற்றுச்சூழல் நேய, கண்ணியமான இருப்பிடத்தை ஊரகப்பகுதி மக்களுக்கு கிடைக்கச் செய்கிறது. இத்திட்டம், தூய்மையான மற்றும் பசுமையான சக்தியை ஊரகப்பகுதிகளில் பெறுவதற்கான சூழலை உருவாக்குவதாகவும் அமைப்பதாகவும் உள்ளது. இத்திட்டம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி ஆகியவற்றிற்கிடையே ஒரு இணைப்பை ஏற்படுத்தும் தனித்தன்மை வாய்ந்த, அரிதான முன்மாதிரியாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தமிழ்நாடு தொலைநோக்கு 2023ன் குறிக்கோள், இந்தியாவிலேயே தமிழகத்தில் சிறந்த கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி அதன்மூலம் அனைவருக்கும் குடிநீர் மற்றும் முழு சுகாதாரம் ஆகியவற்றை கிடைக்கச் செய்வதாகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 2001ம் ஆண்டு முதல், சுகாதார வசதிகளை ஏற்படுத்துவதில் பல முன்னோடித் திட்டங்களை செயல்படுத்தி, இம்மாநிலத்தில் தூய்மைப் புரட்சி ஏற்படுத்தியுள்ளார்கள். அப்போதைய 12,618 கிராம ஊராட்சிகளில் ஒரு ஊராட்சிக்கு ஒன்று வீதம் 2001 முதல் 2004 வரை ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டு, ஊரக மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு சுகாதார வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட்டன. இந்த சுகாதார வளாகங்கள், 2011–12ல் புதுப்பிக்கப்பட்டதுடன் இதே போன்று ஊரக ஆண்களின் சுகாதார வசதிக்காக ஆண்கள் ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள், 2012–13ல் கட்டப்பட்டன. 2003ல் முதலில் ஆரம்பிக்கப்பட்ட தூய்மை கிராம இயக்கம், 2011–12ல் மீள அறிமுகப்படுத்தப்பட்டதால், திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத கிராமங்கள் அதிக அளவில் உருவாக்கப்படுதலில் புதிய உத்வேகத்தை அளித்துள்ளது.

மாநில அளவில் மிகப்பெரிய அளவிலான தகவல் மற்றும் கல்வி வழியில் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த களப்பணி ஜூலை 2013ல் துவக்கப்பட்டது, மற்றும் பல்வேறு அரசுத் துறைகளின் களப்பணியாளர்கள் மூலம்



நேர்முகத் தகவல் பரிமாற்றம் செய்தது, தனிநபர் கழிப்பறைக்கான தேவையை உருவாக்கி உத்வேகம் அளித்துள்ளது. தனிநபர் கழிப்பறை அமைத்தல் மற்றும் பயன்பாட்டினை கண்காணித்தலில், சமூகம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்பு சங்கம், சுய உதவிக் குழுக்களின் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஆகியவற்றின் ஈடுபாடு, தமிழ்நாட்டினை திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற மாநிலமாக மாற்றுவதில் ஓர் அடிப்படை மாற்றத்தையே உருவாக்கி உள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட 9000 கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கையை செம்மைப்படுத்தும் பொருட்டு தூய்மைக் காவலர்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர். இந்த ஊராட்சிகளில், தூய்மைப் பராமரிப்பில் ஒரு வியக்கத்தகு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கிராமப் பகுதிகளிலுள்ள அரசுப் பள்ளிகளில் சுகாதார வசதிகளை நிலைபெறச் செய்யவும், கழிவறைகள் தூய்மையாக பயன்படத்தக்க வகையில் பராமரிக்கப்படுவதை உறுதி செய்யவும், தேவையான நிதி வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்மிக்க தலைமையின் கீழ் எடுக்கப்பட்ட இதுபோன்ற முன்னோடி முயற்சிகள் மாநிலத்தை **“முழு சுகாதார தமிழகம்”** என்ற திசையை நோக்கி செலுத்துகிறது.

பொருளாதார முன்னேற்றத்திற்கு, ஒரு சிறந்த மற்றும் திறன்வாய்ந்த உட்கட்டமைப்பு முதற்கண் தேவையாகும். ஒரு வளர்ந்து வரும் ஊரகப் பொருளாதாரத்திற்கு, துணைபுரியும் உட்கட்டமைப்பு அனைத்து நிலைகளிலும் தேவை. எந்த ஊரக வளர்ச்சித் திட்டமாக இருப்பினும், கிராமச் சாலைத்

தொகுப்பு அதன் முக்கிய அங்கமாக உள்ளது. புதிய சாலைகள் அமைப்பதற்கான அதிகரித்துவரும் தேவைகள், மற்றும் ஏற்கனவே அமைக்கப்பட்ட சாலைகளின் மேம்பாட்டிற்கான தொடர் வேண்டுகோள் ஆகியவற்றிற் கிடையே ஒரு சமநிலைப்பாட்டை ஏற்படுத்த, திட்டமிடலும், சரியான நிதிப் பயன்பாடும் இன்றியமையாததாகும். மேற்கண்ட நோக்கத்தினை கருத்திற்கொண்டு, சாலைகளை தேர்ந்தெடுப்பதில் மாவட்டங்களுக்கு நெகிழ்தன்மையை வழங்கிடவும், ‘தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்’ என்ற ஒருங்கிணைந்த சாலைத் திட்டம் தமிழக அரசால் துவங்கப்பட்டது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை சிறந்த முறையில் செயல்படுத்த இந்த அரசு பல முயற்சிகளை எடுத்ததன் மூலம், தமிழ்நாடு தேசிய அளவில் திட்ட செயலாக்கத்தில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. உடல் மற்றும் மன அளவிலான மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக, தனித்துவம் வாய்ந்த ஒரு முயற்சியாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டப் பணிகளில் அவர்களை பங்கேற்றிட ஏதுவாக சிறப்பு விலை விகித அட்டவணையினை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முயற்சிக்காக, **2012–13**ம் ஆண்டு ‘சமூகப் பங்களிப்பு’ என்ற தலைப்பின் கீழ் சிறந்த மாநிலத்திற்கான தேசிய அளவிலான விருது தமிழ்நாட்டிற்கு கிடைக்கப்பெற்றது.

திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில்



பணிபுரியும் பணியாளர்களை தூய்மைக் காவலர்களாக நியமனம் செய்து, தினசரி திடக்கழிவுகளை ஊரக குடியிருப்புகளிலிருந்து அகற்ற பயன்படுத்துவது இந்த அரசின் மற்றுமொரு தனித்துவம் வாய்ந்த முன்முயற்சியாகும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் உரக்குழிகளைத் தோண்டி, சேகரிக்கப்படும் கழிவுகள், மக்கும் மற்றும் மக்காத கழிவுகளாகப் பிரிக்கப்பட்டு, அவைகள் முறையே, உரமாகவும், மறுசுழற்சிக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

சுற்றுச்சூழல் மாசுபடுவதன் தீமைகளைத் தடுக்க, பசுமைச் சூழலை அதிகரிக்கும் கொள்கையை இந்த அரசு பின்பற்றுகிறது. புவி வெப்ப மயமாதல், மண் அரிப்பு மற்றும் சுற்றுச்சூழல் மாசுபடுவதை தடுக்கவும், உயிர் பன்முகத்தன்மையைக் காத்து உயிரியல் சமநிலையை பேணும் நோக்கத்திலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் மிக அதிக அளவில் காடு வளர்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய காடு வளர்ப்புப் பணிகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தனியாகவும், வனத்துறையோடு ஒருங்கிணைந்தும் மேற்கொள்ளப் படுகின்றன. ஊராட்சி/õ¼õ£Œˆ¶¬ø‚° ªê£%ìñ£Ù மற்றும் பொது இடங்களிலும், சாலையோரங்களில் நிழல் தரும் வகையிலும் மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசின் ஊரகக் குடியிருப்புத் திட்டப் பயனாளிகள் அனைவருக்கும் வீட்டுத்தோட்டம் அமைக்க, நான்கு பழமரக்கன்றுகள் வழங்கப்படுகின்றன.

கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளிய மக்களை அவர்கள் பங்கேற்புடன் கண்டறிந்து அவர்களது வறுமையை அகற்றிடவும், பெண்களின் ஆற்றலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டும் புது வாழ்வு திட்டம் செயல்ð´ˆîŠபட்டு வருகின்றது. இந்த முன்னோடி வறுமை ஒழிப்புத் திட்டம், உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. ஏழை மக்களைக் கொண்டு வலுவான சமூக அமைப்புகள் ஏற்படுத்துவதையும், திறன் வளர்ப்பதிலும், வங்கிகள் மூலம் கடன் இணைப்பினை வழங்கி வருமானம் ஈட்டக் கூடிய சிறு தொழில்கள் மூலம் வாழ்வாதாரத்தை பெருக்குவதையும் குறிக்கோளாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுகிறது.

சமுதாயம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள், ஒத்த தொழில் குழுக்கள், ஒத்த தொழில் கூட்டமைப்புகள் மற்றும் மக்கள் கற்றல் மையங்கள் (மகமைகள்) மூலம் இச்செயல்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றன. இத்திட்டம், 26 மாவட்டங்களில் 120 பின்தங்கிய வட்டாரங்களில் அமைந்துள்ள 4,174 ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்மிக்க வழிகாட்டுதலில், மகளிருடைய, குறிப்பாக ஊரகப் பகுதிகளில் வாழும் மகளிரின் வாழ்வில், மகளிர் சுய உதவிக் குழு இயக்கம் விரைவான மாற்றத்தையும் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தையும் கொண்டு வந்துள்ளது. 1983ம் ஆண்டு மகளிரின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக துவக்கப்பட்ட தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், மகளிர் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகிய முக்கிய திட்டங்களின் மூலம் மகளிரின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தி, தொழில் வாய்ப்புகளை உருவாக்கி, வறுமையின் பிடியிலிருந்து அவர்களை விடுவித்து, அவர்களின் வளமான வாழ்வுக்கு வழிகாட்டி வருகிறது. மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு சேமிப்பு பழக்கம் ஏற்படுத்துதல், அடிப்படைப் பயிற்சியை வழங்குதல், அவர்களுக்குள் உட்கடன் பழக்கம் ஏற்படுத்துதல், சுழல்நிதி வழங்குதல், தொழில் தொடங்குவதற்கான வங்கிக் கடன் இணைப்பு தருதல் என பல்வேறு வழிகளில், சுய உதவிக் குழுக்கள் சுய சார்புடன் இருப்பதற்கு, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் அவர்களை ஊக்கப்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது, விடுபட்ட ஏழை மக்கள், குறிப்பாக விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், சமூகத்தில் விளிம்பு நிலையில் வாழும் மக்கள் ஆகியோரை சுய உதவிக் குழுக்கள் இயக்கத்திற்குள்

கொண்டு வந்து, இதற்கு துணைபுரிகின்ற சமுதாய நிறுவனங்களை ஏற்படுத்தி அவைகளை வலுப்படுத்தவும், சமூக மூலதனம் மற்றும் நிதி உள்ளாக்கம் உள்ளிட்ட பல்வேறு நீடித்த வாழ்வாதார வாய்ப்புகளை ஏழை மக்களுக்கு உருவாக்கி, அவர்களின் திறமையை வளர்த்து, முழுமையாக வறுமையை ஒழிப்பதையும் தலையாய நோக்கங்களாக கொண்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாட்டில் உள்ள 265 ஊராட்சி ஒன்றியங்களில் 3 கட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற விதி எண். 110–ன்கீழ் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற இயக்கம் ஆகியவற்றின் செயல்பாடுகள், 2016–17ம் ஆண்டு முதல் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது நகர்ப்புற வறுமை குறைப்பிற்கு ஒரு உத்வேகத்தை அளிக்கும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையானது, வேலையற்ற இளைஞர்களே இல்லாத, வறுமை முற்றிலும் அகற்றப்பட்ட, அனைத்து அடிப்படை வசதிகளும் ஒவ்வொரு குடிமகனுக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய, இவை எல்லாவற்றிற்கும் மேலாக, அனைத்து மக்களும் வளம், பாதுகாப்பு, மற்றும் அமைதியினைப் பெற வேண்டும் என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது தொலைநோக்கு எண்ணத்தினை நிறைவேற்றிட, தொடர்ந்து அயராது பாடுபடும்.



## 2. ஊராட்சி நிர்வாகம்

## 2. ஊராட்சி நிர்வாகம்

தமிழ்நாட்டில் சோழப் பேரரசர்கள் காலந்தொட்டு, உள்ளாட்சி அமைப்புகள் செயல்பட்டு வந்துள்ளன. மன்னர் பராந்தக சோழர் ஆட்சிக் காலத்தைச் சார்ந்த (கி.பி.907–955) காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரிலுள்ள ஸ்ரீ வைகுண்டப்பெருமாள் கோவில் கல்வெட்டுகளும் வரைவுகளும் உள்ளாட்சி அமைப்புகள் மிக சிறப்பாக செயல்பட்டதற்கான உறுதியான வரலாற்றுச் சான்றுகளாக விளங்குகின்றன. கிராமக் குழுக்களின் உறுப்பினர்கள் இரகசியக் 'குடவோலை' முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு கிராம அளவில் பொருளாதார மற்றும் நிர்வாகப் பொறுப்புகளை முழுமையான சுதந்திரத்துடன் செயல்படுத்தி வந்ததன் மூலம் மக்களாட்சி முறை கடைப்பிடிக்கப்பட்டது. மன்னராட்சி அமைப்பில் மக்களாட்சி தோற்றம் கொண்ட இம்முறையில் கிராமக் குழுவின் உறுப்பினராகப் போட்டியிடுவதற்கான தகுதிகள் மற்றும் தகுதியின்மைக்கான விதிகளும் வகுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

சுதந்திரத்திற்குப் பின், அரசியலமைப்புச் சட்டம் பகுதி IV, பிரிவு 40ல் கிராம ஊராட்சிகளை அமைத்து அவற்றுக்கு அதிகாரங்களும், பொறுப்புகளும் வழங்க வழிவகை செய்யப்பட்டது. மத்திய அரசால் அமைக்கப்பட்ட திரு.பல்வந்த்ராய் மேத்தா அவர்கள் தலைமையிலான குழு, 1957ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சமர்ப்பிக்கப்பட்ட தனது



அறிக்கையில் மக்களாட்சி பரவலாக்கம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் ஊராட்சி அமைப்புகளை ஏற்படுத்திட பரிந்துரைத்தது.

அதன்படி, மதராஸ் அரசு இயற்றிய, 1958–ஆம் ஆண்டு மதராஸ் பஞ்சாயத்துச் சட்டம் மற்றும் மதராஸ் மாவட்ட வளர்ச்சி மன்றச் சட்டம் ஆகியவற்றில் அடங்கிய முக்கிய அம்சங்களாவன:

1. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகள் என்ற இரண்டு அடுக்கு முறை
2. ஊராட்சி ஒன்றியங்கள் உருவாக்கப்பட்டு சமுதாய வளர்ச்சி வட்டாரங்களாக ஒருங்கிணைக்கப்பட்டன.
3. கிராம ஊராட்சித் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியக் குழுவின் உறுப்பினராகவும், ஊராட்சி ஒன்றியக் குழுவின் பெருந்தலைவராகவும் நேரடியாகவும், மறைமுகமாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
4. பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மற்றும் சமூக நலப்பணிகளைச் செயல்படுத்தும் பொறுப்புகளை ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்குதல்.
5. மாவட்ட போர்டுகளை கலைத்தல்
6. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட நிர்வாகத்தில் ஆலோசனை வழங்க மாவட்ட வளர்ச்சி மன்ற குழு ஏற்படுத்தப்பட்டது.

## 2.1. 73–வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம்.

73–வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம், 1992 ஆம் ஆண்டு இயற்றப்பட்டு 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 243 ஜி–ன்படி ஊராட்சி அமைப்புகளுக்குப் பல்வேறு பொருள்களில் திட்டங்களைச் செயல்படுத்தும் முழுமையான அதிகாரங்களும், பொறுப்புகளும் கிடைப்பதற்கு அதிகமான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன. அரசியலமைப்புச் சட்டத்தில் 11–வது அட்டவணையில் 29 பொருள்கள் குறித்து வரையறுக்கப்பட்டுள்ளன. 74–வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 'மாவட்ட திட்டக் குழு' உருவாக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, 22.4.1994ல் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (தமிழ்நாடு சட்டம் 21, 1994) தமிழ்நாடு அரசு நடைமுறைக்கு கொண்டு வந்தது.

## 2.2. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994–ன்படி தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சி அமைப்புகளில், பல்வேறு முக்கியமான மாறுதல்கள் கொண்டு வரப்பட்டன.

i) தமிழ்நாட்டில் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி என மூன்றடுக்கு ஊராட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.



ii) மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளில் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மற்றும் காலியிடம் ஏற்பட்ட 6 மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட்டு உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கான பதவியிடங்கள் நிரப்பப்படுதல்.

iii) ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பிலும் உள்ள மொத்த மக்கள் தொகையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விகிதாச்சாரத்தின் அடிப்படையில் பதவியிடங்கள் (வார்டு உறுப்பினர்கள்) மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கு (ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் / ஊராட்சித் தலைவர்) சுழற்சி முறையுடன் கூடிய இட ஒதுக்கீடு கொண்டு வருதல்.

iv) மொத்தப் பதவி மற்றும் தலைமைப் பதவியிடங்களில் மூன்றில் ஒரு பங்கு பெண்களுக்கு சுழற்சி முறையுடன் கூடிய இட ஒதுக்கீடு செய்யும் முறையை கொண்டு வருதல்.

v) ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தொடர்ந்து தேர்தல் நடத்த தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் என்ற தன்னாட்சி அமைப்பினை ஏற்படுத்துதல்.

vi) மாநில நிதி ஆதாரங்களை ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளித்திட பரிந்துரை செய்யும் வகையில் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மாநில நிதி ஆணையத்தினை ஏற்படுத்துதல்

vii) மாவட்ட அளவில் விரிவான வளர்ச்சித் திட்டத்தினைத் தயாரித்திட ஏதுவாக ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தயாரித்துள்ள திட்டங்களைத் தொகுத்திட மாவட்ட திட்டக்குழுவினை ஏற்படுத்துதல்.

viii) கிராம ஊராட்சியிலுள்ள அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கிய . 'கிராம சபை' என்ற அமைப்பினைக் கொண்டு வருதல்.

## 2.3. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994–ன் கீழ் வெளியிடப்பட்ட முக்கிய விதிகள்

1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்கீழ் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் தொடர்புடைய அனைத்து விதிகளையும் வெளியிட அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அரசால் வெளியிடப்படும் விதிகள் 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அம்சங்களை செயல்படுத்த தொடர்புடைய அமைப்புகளுக்கும், அலுவலர்களுக்கும் உறுதுணையாகத் திகழ்கின்றன.

### i) தமிழ்நாடு ஊராட்சிகள் (கிராம ஊராட்சி கூட்டத்தினை நடத்துவதற்கான குறைவெண் வரம்பு மற்றும் நடைமுறைகள்) விதிகள், 1999:

ஊராட்சி மன்றக் கூட்டங்களுக்கிடையிலான கால இடைவெளி, கூட்டம் நடத்துவதற்கான அறிவிப்பு மற்றும்



பொருள்கள், குறைவெண் வரம்பு, வருகைப் பதிவு, தீர்மானம் இயற்றுதல், கூட்ட நடவடிக்கைக் குறிப்புகள் தயார் செய்தல் மற்றும் ஆவணங்களைப் பாதுகாத்தல் ஆகியவை குறித்து இவ்விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ii) கிராம சபை நடத்துவதற்கான விதிகள்:

தமிழ் நாடு கிராம சபை (கிராம சபை கூட்டுதல் மற்றும் நடத்துவதற்கான நடைமுறைகள்) விதிகள் 1998 மற்றும் அவ்விதிகளுக்கு 2006–ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட திருத்தங்களில் கிராம சபை கூட்டுவதற்கான நடைமுறைகள் மற்றும் நடத்துவதற்கான வழிமுறைகள் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்விதிகளின்படி, ஆண்டுக்கு 4 முறை, அதாவது ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களில் கிராம சபை நடத்த வேண்டியது அவசியமாக்கப்பட்டுள்ளது.

கிராம சபை நடத்துவதற்கான குறைவெண் வரம்பு, கூட்டப்பொருள், வருகைப் பதிவு, தீர்மானங்கள் இயற்றுதல் மற்றும் கூட்ட நடவடிக்கைக் குறிப்புகளைத் தயார் செய்தல் ஆகியவை குறித்த நெறிமுறைகள் இவ்விதிகளில் விரிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### iii) தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்) விதிகள், 1995:

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நேரடி மற்றும் மறைமுகத் தேர்தல்களை நடத்துவது குறித்து இவ்விதிகள் விளக்குகின்றன. தேர்தல் நடத்தும் அலுவலர்கள், வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல்,

தேர்தல் அறிவிப்பு வெளியிடுதல், வேட்பு மனு தாக்கல், வாக்குப்பதிவு, வாக்குகளை எண்ணுதல், ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல், கிராம ஊராட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல், தேர்தல் செலவினங்கள், தேர்தல் வழக்குகள் ஆகியவை குறித்து இவ்விதிகளில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

iv) **தமிழ்நாடு ஊராட்சிகள் (இட ஒதுக்கீடு மற்றும் இட ஒதுக்கீட்டிற்கான சுழற்சி முறை) விதிகள், 1995:**

மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பதவியிடங்களில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கான இட ஒதுக்கீடு மற்றும் இட ஒதுக்கீட்டிற்கான சுழற்சிமுறை குறித்து இவ்விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

v) **தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள், 1997:**

ஊரகப் பகுதிகளில் மனைப் பிரிவுகள் அங்கீகாரம் மற்றும் கட்டட வரைபடங்களை அங்கீகரித்தல் ஆகியவற்றுக்கான விதிமுறைகள் இவ்விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விதிகளின்படி, ஊராட்சி மன்றத்தலைவர் சில வரைமுறைகளுக்குட்பட்டு கட்டட வரைபட அனுமதி அளிக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்ட பரப்பளவிற்கு மிகையான கட்டட வரைபடங்களுக்கும், அனைத்து மனைப்பிரிவுகளுக்கும் நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநரின் தொழில்நுட்ப அனுமதி



பெற்று கிராம ஊராட்சி மன்றத் தலைவர் அனுமதி அளிக்க இவ்விதிகள் வகை செய்கிறது.

vi) **தமிழ்நாடு ஊராட்சிகள் (வரிவிதிப்பு மற்றும் வசூலித்தல்) விதிகள், 1999:**

கிராம ஊராட்சிகளில் வீட்டுவரி நிர்ணயித்தல், வீட்டு வரி செலுத்துவோர் பட்டியல் தயாரித்தல், வீட்டு வரி விதிப்பின் மீதான மேல்முறையீடு, வீட்டு வரியை வசூல் செய்வதற்கான வழிமுறைகள் ஆகியவை இவ்விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

vii) **தமிழ்நாடு ஊராட்சிகள் (பணிகளுக்கான திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரித்தல் மற்றும் ஒப்பந்தங்களுக்கான வழிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்) விதிகள், 2007:**

கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றின் பொது நிதி, மத்திய மற்றும் மாநில அரசுகளின் மூலம் பெறப்படும் திட்ட நிதி ஆகியவற்றைக் கொண்டு மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரித்தல் மற்றும் ஒப்பந்தங்களுக்கான வழிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவை குறித்து இவ்விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

viii) **தமிழ்நாடு ஊராட்சிகள் (கிணறுகள் தோண்டுதல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒழுங்கு முறைப்படுத்துதல்) விதிகள், 2015:**

ஊரகப் பகுதிகளில் ஆழ்துளைக் கிணறுகள், குழாய் கிணறுகள் மற்றும் திறந்த வெளிக் கிணறுகள் ஆகிய பணிகளை மேற்கொள்ளும்போது எதிர்பாராத விதமாக குழந்தைகளுக்கு நேரக்கூடிய விபத்துக்களை தவிர்த்திட மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து இவ்விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. கிணறு தோண்டுவதற்கான அனுமதியினை விண்ணப்பதாரருக்கு வழங்குதல், கிணறு தோண்டும் நிறுவனங்களுக்கு பதிவுச் சான்று வழங்குதல், அதற்கான பதிவேட்டினை பராமரித்தலுக்கான படிவங்கள் மற்றும் மாதாந்திர அறிக்கைகள் அனுப்புதல் ஆகியவை குறித்து இவ்விதிகளில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ix) குடிமை பணிகளுக்கான பயன்பாடு மற்றும் பராமரிப்பு செலவின வழிமுறைகள்:

அரசு ஆணை எண். 157 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி) துறை நாள். 21.12.2015ல் பயன்பாடு மற்றும் பராமரிப்பிற்கான செலவினத்திற்கு வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளது.

**(i) கை பம்பு**

| | |
|---|---|
| **கை பம்பு** | ரூ.1000/- (கூலி வகை மட்டும்) |



**(ii) மின்விசை பம்பு**

| | |
|---|---|
| 2 குதிரை திறன் | ரூ.7,500 |
| 5 குதிரை திறன் | ரூ.10,000 |
| 7.5 குதிரை திறன் | ரூ.12,000 |

**(iii) தெருவிளக்குகள் உபகரணங்கள் பொருத்துதல் மற்றும் மாற்றுதல்**

| | |
|---|---|
| தெரு விளக்கு மற்றும் சோடியம் ஆவி விளக்கு | ரூ.50/- |
| சோக் / ஸ்டார்ட்டர் / கன்டன்ஸர் | ரூ.25 |

**x) கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டம் தயாரிப்பதற்கான வழிகாட்டி நெறிமுறைகள்:**

உள்ளாட்சி அமைப்புகளான கிராம ஊராட்சிகள் உள்ளூர் மக்களின் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்தல் மற்றும் அடித்தட்டு மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்திட கடமைப்பட்டனவாகும். சரியான திட்டமிடல் மற்றும் செம்மையாகவும் பொறுப்புணர்வுடனும் வளங்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் கிராம ஊராட்சிகள் சிறப்பாக செயல்பட இயலும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 240ன் படி கிராம ஊராட்சிக்கான வளர்ச்சித்திட்டம் ஒவ்வொரு ஆண்டும் கிராம ஊராட்சிகளால் தயார் செய்யப்பட வேண்டும். வெளிப்படையிலான மற்றும் பயனுள்ள வகையில் நிதி மற்றும்

வளங்களை பயன்படுத்திட பங்கேற்பின் அடிப்படையிலான திட்டமிடுதல் மிகவும் முக்கியமானது.
அதற்கிணங்க 14வது நிதிக்குழு மான்யத்தை அடித்தள அளவிலான திட்டமிடல் அடிப்படையில் பயன்படுத்திட அரசாணை எண் 34 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா.1 ) துறை நாள். 02.03.2016ல் விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

## 2.4. மாநிலத் தேர்தல் ஆணையம்

அதிகாரப் பரவலாக்கம் மற்றும் ஜனநாயகத்தை வலுப்படுத்தும் விதமாக சுதந்திரமான மற்றும் சுய சார்புடைய அமைப்பாக தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் 1994–ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. கிராம ஊராட்சிகளில் வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் உள்ளிட்ட அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் முறையாக தேர்தலை நடத்துதல், அதனைக் கண்காணித்தல், இயக்குதல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகிய பணிகள் ஆணையரைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தைச் சார்ந்ததாகும்.

1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 239 உட்பிரிவு (3)–ன்படி தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு, ஆணையர் மற்றும் நிர்வாக பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள். மாநிலத் தேர்தல் ஆணையரின் பணி விதிகள், பதவிக்காலம் ஆகியவை குறித்த விதிகளை



ஆளுநர் நிர்ணயிப்பார். ஆணையர் இரண்டு ஆண்டுகளுக்குப் பதவி வகிப்பார். மேலும், இப்பதவியினை ஆறு ஆண்டுகளுக்கு மிகாமல் இரண்டு முறை நீட்டிப்பு செய்யலாம். மாநிலத் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டவருக்கு 65 வயது நிறைவடையும் நிலையில் அவருக்கு ஓய்வளிக்கப்பட வேண்டும். மாநிலத் தேர்தல் ஆணையரை அவருடைய பணியிலிருந்து நீக்க முடியாது. அவ்வாறு நீக்குவதாக இருந்தால், உயர் நீதிமன்ற நீதிபதியை நீக்கும் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். மேலும், மாநிலத் தேர்தல் ஆணையர் நியமிக்கப்பட்ட பின்னர் அவருடைய பணி விதிகள் தொடர்பான நிபந்தனைகள் எதுவும் அவரைப் பாதிக்கக்கூடிய வகையில் இருக்கக் கூடாது.

## 2.5. உள்ளாட்சித் தேர்தல் நடத்துதல்

தமிழ்நாட்டில், 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்ட பின் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்கள் அக்டோபர் 1996–ம் ஆண்டு நடத்தப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகளுக்கான இரண்டாவது சாதாரண தேர்தல் அக்டோபர் 2001–ம் ஆண்டும், அதேபோல மூன்றாவது சாதாரண தேர்தல் அக்டோபர் 2006–ம் ஆண்டும் நடத்தி முடிக்கப்பட்டன. உள்ளாட்சி அமைப்புகளுக்கான நான்காவது சாதாரண தேர்தல் அக்டோபர் மாதம் 2011–ம் ஆண்டு வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது.

மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்களுக்கான தேர்தல்கள் கட்சி அடிப்படையில் நடத்தப்பட்டன. ஆனால், கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான பதவியிடங்களுக்கு கட்சி சாரா அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப்பட்டன. 2011ம் ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதம் நடைபெற்ற தேர்தல்களில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கான பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கான விபரங்கள் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.1.**

**மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளில் பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்கள் விவரம்**

| வ. எண். | பதவியிடம் குறித்த விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கிராம ஊராட்சி வார்டுகள் | 99,333 |
| 2 | ஊராட்சி ஒன்றிய வார்டுகள் | 6,471 |
| 3 | மாவட்ட ஊராட்சி வார்டுகள் | 655 |
| 4 | கிராம ஊராட்சித் தலைவர்கள் | 12,524 |
| 5 | ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் | 385 |
| 6 | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | 31 |
| **மொத்தம்** | | **1,19,399** |

### 2.6. கிராம ஊராட்சிகளில் பல உறுப்பினர் வார்டுகளை ஓர் உறுப்பினர் வார்டுகளாக மாற்றியமைத்தல்

2006–ம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஓர் உறுப்பினர் வார்டுகள் அடிப்படையிலும், கிராம ஊராட்சிக்கு



பல உறுப்பினர் கொண்ட வார்டுகள் அடிப்படையிலும் தேர்தல் நடைபெற்று வந்தது.

கிராம ஊராட்சியில் வழக்கத்திலிருந்த பல உறுப்பினர் வார்டு முறையினால் பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு கிராம ஊராட்சி வார்டுகளில் இட ஒதுக்கீடு செய்வதில் மிகுந்த சிரமங்கள் இருந்தன. மேலும், இந்த முறையால் கிராமத்திலுள்ள வாக்காளர்களுக்கு வாக்கு சீட்டுக்களில் குழப்பமும், வாக்கு எண்ணிக்கையின்போது அலுவலர்களுக்கு சிரமங்களும் ஏற்பட்டன. பல உறுப்பினர்களைக் கொண்ட வார்டுகளின் எல்லைகள் தெளிவாக வரையறை செய்யப்படாததால் ஒவ்வொரு வார்டு உறுப்பினருக்குரிய பகுதி தெளிவு படுத்தப்படவில்லை. எனவே, 2009–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த சட்டம்) (தமிழ்நாடு சட்டம் 20, 2009)–ன்படி, 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 12–க்கு திருத்தம் செய்யப்பட்டது. ஆனால், அச்சட்ட திருத்தத்திற்கு தொடர்பான விதி திருத்தம் வெளியிடப்படாததால் பல உறுப்பினர் வார்டுகளை ஓர் உறுப்பினர் வார்டாக மாற்றி அமைக்கும் பணி நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அரசாணை எண்.63 ஊரக வளர்ச்சி (பரா 2) ஊராட்சித் துறை நாள்.14.9.2011–ன்படி, 2011ம் ஆண்டு செப்டம்பர் மாதம் தமிழ்நாடு ஊராட்சிகள் (உறுப்பினர்கள் எண்ணிக்கை நிர்ணயம் செய்தல் மற்றும் வார்டுகளை பிரித்தல்) விதிகள் 1995–ல் திருத்தம் கொண்டு வரப்பட்டு,

கிராம ஊராட்சியில் ஒரு உறுப்பினர் வார்டு முறை கொண்டுவரப்பட்டது.

1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, கிராம ஊராட்சியில், 40,879 பல உறுப்பினர் வார்டுகளில் 97,458 வார்டு உறுப்பினர்கள் இருந்தனர். எனவே, தேர்தல் நடைமுறைகள் தங்குதடையின்றி நடைபெறும் வகையிலும், கிராம ஊராட்சி வார்டுகளின் எல்லைகளை தெளிவாக வரையறை செய்யும் பொருட்டும், கிராம ஊராட்சியில் உள்ள பல உறுப்பினர் வார்டுகளை ஒரு உறுப்பினர் வார்டுகளாக மாற்ற முடிவு செய்யப்பட்டது. 2001ம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்அடிப்படையில் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் பல உறுப்பினர் வார்டுகளை ஒரு உறுப்பினர் வார்டுகளாக மாற்றியமைக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வாயிலாக, கிராம ஊராட்சி வார்டுகள் மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 99,333 ஆக அதிகரித்து அதே எண்ணிக்கையிலான வார்டுகளும் ஏற்படுத்தப்பட்டன. கிராம ஊராட்சிகளின் வார்டு உறுப்பினர்களுக்கான சாதாரண தேர்தல் ஒரு உறுப்பினர் வார்டு முறையில் அக்டோபர் 2011–ல் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.



## 2.7. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஊராட்சி அமைப்புகளின் பல்வேறு பதவியிடங்களுக்கு மக்கள் தொகை விகிதத்தின் அடிப்படையில் உரிய இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். இந்திய அரசியலமைப்புச் சட்டம், சட்டக்கூறு 243 D–ன்படி ஊராட்சி அமைப்புகளில் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கான பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை செய்யப்பட வேண்டும். அதில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் ஆதிதிராவிடர், பழங்குடியினப் பெண்களுக்கு ஒதுக்கப்படும் எண்ணிக்கையையும் உள்ளடக்கி மொத்த ஒதுக்கீட்டில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்திட வேண்டும். இதற்காக, 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவுகள் 11, 20, 32, 57 மற்றும் 1995–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (பதவியிடங்களுக்கான இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை) விதிகள் ஆகியவற்றில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு இடஒதுக்கீடு செய்வது குறித்து தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.2.**

| வ.எண் | இட ஒதுக்கீடு வகை | மொத்த பதவி இடங்கள் | மகளிருக்கான ஒதுக்குடு | விழுக்காடு | ஆதி திராவிடருக்கான ஒதுக்கீடு | விழுக்காடு | பழங்குடியினருக்கான ஒதுக்கீடு | விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | 31 | 11 | 35% | 7 | 24% | 0 | 0% |
| 2. | ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் | 385 | 140 | 36% | 87 | 23% | 4 | 1% |
| 3. | கிராம ஊராட்சித் தலைவர்கள் | 12,524 | 4,289 | 34% | 3,136 | 25% | 156 | 1% |
| 4. | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 655 | 228 | 35% | 154 | 24% | 8 | 1% |
| 5. | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் | 6,471 | 2,286 | 35% | 1,526 | 24% | 64 | 1% |
| 6. | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 99,333 | 33,121 | 33% | 25,360 | 26% | 1039 | 1% |

## 2.8 ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு உயர்த்தி வழங்கப்பட்ட இட ஒதுக்கீடும் பதவிகளும் (50 விழுக்காடு ஒதுக்கீடு)

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (தமிழ்நாடு சட்டம் 21,1994)–ல் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியக்குழு மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் உள்ள பதவியிடங்கள் மற்றும் தலைமை பதவியிடங்கள் மூன்றில் ஒரு பங்கு மகளிருக்கு ஒதுக்கீடு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.



ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஊரக வளர்ச்சியில் மகளிர் பங்கேற்பினை அதிகப்படுத்தவும் மகளிருக்குரிய அதிகாரம் வழங்கப்படுவதை மேம்படுத்திடவும் மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீட்டினை 50 விழுக்காடாக உயர்த்துவது அவசியம் என கருதியதால், மகளிருக்கு இடஒதுக்கீடு மூன்றில் ஒரு பங்கு என்பதை உயர்த்தி 50 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யும் வகையில், தமிழ்நாடு ஊராட்சிகள் (இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை இட ஒதுக்கீடு) விதிகள் 1995–ல் திருத்தம் செய்து அரசு ஆணை எண். 60 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா1) துறை, நாள். 23.05.2016–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாணையின்படி, எதிர்வரும் 2016–ம் ஆண்டு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் மகளிர்க்கான உயர்த்தப்பட்ட இட ஒதுக்கீடு நடைமுறைக்கு வரும்.

## 2.9. கிராம ஊராட்சி

31 மாவட்டங்களில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளில் 79,394 குக்கிராமங்கள் உள்ளன. கிராம ஊராட்சி என்பது, அதற்கென உள்ள கிராமங்களை உள்ளடக்கி, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு ஊராட்சிகளின் ஆய்வாளர் அறிவிக்கையில் குறிப்பிட்ட தேதியிலிருந்து அமைக்கப்படும். ஒவ்வொரு ஊராட்சியும் உரிய காரணங்களால் கலைக்கப்படாதவரை ஒவ்வொரு சாதாரணத் தேர்தலுக்குப்பின்னர் நடைபெறும் முதற்கூட்டத்திலிருந்து 5 ஆண்டு காலம் செயல்பாட்டில்

இருக்கும். கிராம ஊராட்சியின் தலைவர், கிராம ஊராட்சியின் செயல் அலுவலர் ஆவார்.

## 2.10. கிராம சபை

கிராம சபை என்பது ஒவ்வொரு கிராம ஊராட்சியில் உள்ள ஜனநாயகத்தின் ஆணிவேராகும். கிராம ஊராட்சிகள் செவ்வனே செயல்படத் தேவையான, வெளிப்படையான மற்றும் பொறுப்பான நிர்வாகத்தினை ஊக்குவிக்கவும், திட்டமிடுதல், திட்டங்களை செயல் படுத்துதல் மற்றும் பயனாளிகளை தேர்வு செய்தல் ஆகியவற்றில் பொதுமக்களின் பங்கேற்பினை அதிகரித்தல் மற்றும் சமூகத் தணிக்கைக்கு வழிவகுத்திட செயல்திறன் மிக்க ஒரு கிராம சபை அவசியமாகிறது. சட்டப்படி, இரண்டு கிராமசபைக் கூட்டங்களுக்கு இடையே உள்ள காலம் ஆறு மாதங்களுக்கு மிகாமல் இருக்கும் வகையில் கிராம சபைக் கூட்டங்கள் கூட்டப்பட வேண்டும். ஆயினும், ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஆண்டில் குறைந்தது நான்கு முறை, அதாவது ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15, அக்டோபர் 2 ஆகிய நாட்களில் கிராம சபைக்கூட்டம் நடத்த தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. கிராம ஊராட்சியில் உள்ள மக்கள் தொகை அடிப்படையில் அரசு கீழ்க்கண்டவாறு குறைவெண் வரம்பு நிர்ணயம் செய்துள்ளது.



**அட்டவணை 2.3.**

**கிராம சபைக் கூட்டத்திற்கான திருத்திய குறைவெண் வரம்பு**

| வ. எண். | கிராம ஊராட்சியின் மக்கள் தொகை | கிராம சபைக் கூட்டத்திற்கான குறைவெண் வரம்பு |
|---|---|---|
| 1 | 500 வரை | 50 |
| 2 | 501 முதல் 3,000 வரை | 100 |
| 3 | 3,001 முதல் 10,000 வரை | 200 |
| 4 | 10,000க்கு மேல் | 300 |

கிராம சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளுதல் மற்றும் கூட்ட நடவடிக்கைகளை முறையான பதிவேடுகள் மற்றும் புகைப்படம் மூலம் பதிவு செய்யவும் கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

கிராம சபை பின்வரும் முக்கியமான பணிகளை நிறைவேற்றுகின்றது.

1. கிராம வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்.
2. கிராம ஊராட்சியின் வரவு-செலவு திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்.
3. தணிக்கை அறிக்கைக்கு ஒப்புதல் வழங்குதல்
4. திட்டப்பணிகள் செயல்பாட்டின் முன்னேற்றத்தை ஆய்வு செய்தல்.
5. பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளின் பட்டியலுக்கு ஒப்புதல் வழங்குதல்.
6. கிராமத்தில் உள்ள பல்வேறு இன மக்களிடையே சமுதாய மற்றும் சமூக நல்லிணக்கத்தை ஊக்குவித்தல்.

## 2.11. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி ஊராட்சிவாரியான மக்கள் தொகை விபரம்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்துடன் ஒருங்கிணைந்து கிராம ஊராட்சி வாரியாக 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி, 31 மாவட்டங்களில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளுக்கும் ஊரக மக்கள் தொகை விபரம் ஆகஸ்ட் 2014ல் வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாறு கிராம ஊராட்சி வாரியாக வெளியிடப்பட்ட மக்கள் தொகையில் தாழ்த்தப்பட்ட / பழங்குடி இனத்தவர் மற்றும் பெண்கள் குறித்த விவரங்களும் அடங்கும். மேலும், மேற்கண்ட விவரங்கள் www.tnrd.gov.in என்ற இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மக்கள் தொகை அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கிராம ஊராட்சிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### அட்டவணை 2.4.

### 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அடிப்படையில் கிராம ஊராட்சிகளை வகைப்படுத்துதல்

| வ. எண். | மக்கள் தொகை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 500 மற்றும் அதற்குக் கீழ் | 46 |
| 2 | 501–1000 | 833 |
| 3 | 1001–3000 | 6,821 |
| 4 | 3001–5000 | 2,781 |
| 5 | 5001–10000 | 1,753 |
| 6 | 10,000க்கு மேல் | 290 |
| **மொத்தம்** | | **12,524** |

மாவட்ட வாரியாக தாழ்த்தப்பட்ட / பழங்குடி இனத்தவர் மற்றும் பெண்கள் உள்ளடக்கிய ஊரக மக்கள் தொகை விவரம் பின்வருமாறு:



### அட்டவணை 2.5.

### மாவட்ட வாரியான ஊரக மக்கள் தொகை விவரம்

| வ. எண். | மாவட்டம் | ஊரக மக்கள் தொகை | பெண்கள் | பழங் குடியினர் | ஆதி திராவிடர் | ஆதி திராவிடர் விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 18,61,789 | 9,24,124 | 29,706 | 6,24,458 | 33.54 |
| 2 | திருவள்ளூர் | 15,85,280 | 7,90,170 | 37,708 | 5,04,115 | 31.80 |
| 3 | கடலூர் | 18,00,133 | 8,91,507 | 10,082 | 6,25,788 | 34.76 |
| 4 | விழுப்புரம் | 29,12,960 | 14,45,062 | 71,289 | 9,19,308 | 31.56 |
| 5 | வேலூர் | 24,82,556 | 12,41,612 | 65,230 | 6,05,248 | 24.38 |
| 6 | திருவண்ணாமலை | 20,39,049 | 10,14,486 | 87,096 | 5,02,044 | 24.62 |
| 7 | சேலம் | 19,57,105 | 9,45,014 | 1,12,334 | 3,54,545 | 18.12 |
| 8 | நாமக்கல் | 10,87,895 | 5,37,918 | 55,417 | 2,48,100 | 22.81 |
| 9 | தர்மபுரி | 12,90,530 | 6,24,646 | 60,609 | 2,13,538 | 16.55 |
| 10 | கிருஷ்ணகிரி | 14,65,743 | 7,17,175 | 20,980 | 2,20,945 | 15.07 |
| 11 | ஈரோடு | 11,30,722 | 5,59,797 | 19,084 | 2,16,689 | 19.16 |
| 12 | திருப்பூர் | 11,39,466 | 5,68,772 | 1,947 | 2,63,539 | 23.13 |
| 13 | கோயம்புத்தூர் | 10,21,359 | 5,10,409 | 19,565 | 2,13,492 | 20.90 |
| 14 | நீலகிரி | 3,10,591 | 1,59,447 | 22,767 | 91,446 | 29.44 |
| 15 | தஞ்சாவூர் | 16,67,809 | 8,46,926 | 1,465 | 3,84,291 | 23.04 |
| 16 | நாகப்பட்டினம் | 12,61,288 | 6,37,194 | 2,214 | 4,60,876 | 36.54 |
| 17 | திருவாரூர் | 10,06,482 | 5,06,528 | 939 | 3,88,740 | 38.62 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 14,71,945 | 7,39,563 | 14,519 | 3,05,109 | 20.73 |
| 19 | கரூர் | 6,68,360 | 3,36,684 | 201 | 1,59,718 | 23.90 |
| 20 | பெரம்பலூர் | 4,68,017 | 2,34,113 | 2,136 | 1,50,504 | 32.16 |
| 21 | அரியலூர் | 6,71,100 | 3,37,847 | 9,946 | 1,63,770 | 24.40 |
| 22 | புதுக்கோட்டை | 13,41,111 | 6,75,896 | 845 | 2,51,552 | 18.76 |
| 23 | மதுரை | 13,00,481 | 6,44,431 | 4,896 | 2,72,494 | 20.95 |
| 24 | தேனி | 5,75,394 | 2,84,527 | 1,377 | 1,43,589 | 24.95 |
| 25 | திண்டுக்கல் | 14,57,412 | 7,25,917 | 4,580 | 3,34,064 | 22.92 |
| 26 | இராமநாதபுரம் | 10,09,270 | 5,01,016 | 526 | 2,13,583 | 21.16 |
| 27 | விருதுநகர் | 12,86,543 | 6,44,603 | 1,197 | 3,15,796 | 24.55 |
| 28 | சிவகங்கை | 9,52,610 | 4,77,215 | 518 | 1,88,454 | 19.78 |
| 29 | திருநெல்வேலி | 16,45,509 | 8,32,916 | 4,099 | 3,58,487 | 21.79 |
| 30 | தூத்துக்குடி | 9,71,273 | 4,92,268 | 1,921 | 2,48,752 | 25.61 |
| 31 | கன்னியாகுமரி | 6,46,441 | 3,25,257 | 3,893 | 26,546 | 4.11 |
| | மொத்தம் | 404,86,223 | 201,73,040 | 6,69,086 | 99,69,580 | 24.62 |

## 2.12. ஊராட்சி வாரியான பரப்பளவு விவரம்

**2011** ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, ஊராட்சிக்கான மொத்த மக்கள் தொகை, ஆதிதிராவிடர், பழங்குடியினர் மக்கள் தொகை மற்றும் ஊராட்சியின் பரப்பளவு அடிப்படையில் ஊராட்சிகளுக்கு வழங்கப்படும் பகிர்வு மானியத்தினை வழங்க நான்காவது மாநில நிதி ஆணையம் பரிந்துரைத்துள்ளது. இப்பரிந்துரையினை மாநில அரசு ஏற்றுக்கொண்டு, அதனடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்கான பகிர்வு மானியத்தினை விடுவித்திட ஆணையிட்டுள்ளது. ஊரகப் பகுதிகளின் மொத்தப் பரப்பளவு **1,04,149.61** சதுர கி.மீ. ஆகும். மாவட்ட வாரியான பரப்பளவு விபரம் பின்வருமாறு:

**அட்டவணை 2.6.**

**மாவட்ட வாரியாக கிராம ஊராட்சிகளின் பரப்பளவு விவரம்**

| வ. எண் | மாவட்டம் | ஊராட்சிகளின் எண்ணிக்கை | குக்கிராமங்களின் எண்ணிக்கை | குக்கிராமங்களின் சராசரி எண்ணிக்கை | பரப்பளவு (சதுர கி.மீ) | ஊராட்சியின் சராசரி பரப்பளவு (சதுர கி.மீ) |
|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 633 | 3,512 | 6 | 3,851.45 | 6.08 |
| 2 | திருவள்ளூர் | 526 | 3,862 | 7 | 2,859.84 | 5.44 |
| 3 | கடலூர் | 683 | 2,403 | 4 | 2,942.24 | 4.31 |
| 4 | விழுப்புரம் | 1,099 | 3,487 | 3 | 6,509.43 | 5.92 |
| 5 | வேலூர் | 743 | 6,109 | 8 | 4,022.30 | 5.41 |
| 6 | திருவண்ணாமலை | 860 | 4,267 | 5 | 4,826.27 | 5.61 |
| 7 | சேலம் | 385 | 5,109 | 13 | 4,561.41 | 11.85 |
| 8 | நாமக்கல் | 322 | 2,520 | 8 | 3,119.43 | 9.69 |
| 9 | தர்மபுரி | 251 | 2,835 | 11 | 4,407.43 | 17.56 |



| வ. எண் | மாவட்டம் | ஊராட்சிகளின் எண்ணிக்கை | குக்கிராமங்களின் எண்ணிக்கை | குக்கிராமங்களின் சராசரி எண்ணிக்கை | பரப்பளவு (சதுர கி.மீ) | ஊராட்சியின் சராசரி பரப்பளவு (சதுர கி.மீ) |
|---|---|---|---|---|---|---|
| 10 | கிருஷ்ணகிரி | 333 | 3,983 | 12 | 4,965.73 | 14.91 |
| 11 | ஈரோடு | 225 | 3,199 | 14 | 2,626.99 | 11.68 |
| 12 | திருப்பூர் | 265 | 2,455 | 9 | 4,545.50 | 17.15 |
| 13 | கோயம்புத்தூர் | 228 | 1,200 | 5 | 2,534.24 | 11.12 |
| 14 | நீலகிரி | 35 | 1,282 | 37 | 1,170.39 | 33.44 |
| 15 | தஞ்சாவூர் | 589 | 2,260 | 4 | 3,657.67 | 6.21 |
| 16 | நாகப்பட்டினம் | 434 | 2,054 | 5 | 2,400.31 | 5.53 |
| 17 | திருவாரூர் | 430 | 1,704 | 4 | 2,322.69 | 5.40 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 404 | 2,210 | 5 | 4,028.00 | 9.97 |
| 19 | கரூர் | 157 | 2,179 | 14 | 2,656.25 | 16.92 |
| 20 | பெரம்பலூர் | 121 | 314 | 3 | 1,609.54 | 13.30 |
| 21 | அரியலூர் | 201 | 710 | 4 | 1,710.17 | 8.51 |
| 22 | புதுக்கோட்டை | 497 | 4,062 | 8 | 4,433.78 | 8.92 |
| 23 | மதுரை | 420 | 1,946 | 5 | 3,183.18 | 7.58 |
| 24 | தேனி | 130 | 607 | 5 | 1,159.89 | 8.92 |
| 25 | திண்டுக்கல் | 306 | 3,083 | 10 | 4,401.34 | 14.38 |
| 26 | இராமநாதபுரம் | 429 | 2,306 | 5 | 4,116.19 | 9.59 |
| 27 | விருதுநகர் | 450 | 1,760 | 4 | 3,282.08 | 7.29 |
| 28 | சிவகங்கை | 445 | 2,723 | 6 | 3,075.90 | 6.91 |
| 29 | திருநெல்வேலி | 425 | 2,337 | 5 | 4,283.06 | 10.08 |
| 30 | தூத்துக்குடி | 403 | 1,761 | 4 | 4,260.78 | 10.57 |
| 31 | கன்னியாகுமரி | 95 | 1,155 | 12 | 626.14 | 6.59 |
| | மொத்தம் | 12,524 | 79,394 | 6 | 1,04,149.61 | 8.32 |

## 2.13. கிராம ஊராட்சிகளின் சட்டரீதியான கடமைகள்

**1994–**ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு **110–**ன் படி கீழே குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொள்ளுதல் கிராம ஊராட்சிகளின் முக்கியக் கடமையாகும்.

i) அனைத்து கிராமச்சாலைகள், பாலங்கள், சிறுபாலங்கள், தடுப்புச்சுவர்கள் மற்றும் தரைப்பாலங்களை அமைத்தல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல் (நெடுஞ்சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தவிர)

ii) பொது இடங்களில் தெரு விளக்குகள் அமைத்தல்.

iii) கழிவு நீர்க் கால்வாய் அமைத்துக் கழிவுநீரை வெளியேற்றுதல்.

iv) தெருக்களை சுத்தம் செய்தல் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துதல்.

v) பொதுக்கழிப்பிட வசதி ஏற்படுத்துதல்

vi) இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகளை ஏற்படுத்திப் பராமரித்தல்.

vii) குடிநீர் வழங்குதல்.

viii) அவ்வப்போது அரசு அறிவிக்கை வாயிலாகப் பணிக்கக்கூடிய பிற கடமைகள்.

## 2.13.1. குடிநீர் வழங்கல்

ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் பணி, கிராம ஊராட்சியின் அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகும். கிராம ஊராட்சிகளில், கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் முதன்மைக் குடிநீர் ஆதாரமாகவும், மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் சிறிய நீர்த்தேக்கத் தொட்டிகள் முதன்மைக் குடிநீர் சேகரிப்பு அமைப்புகளாகவும் விளங்குகின்றன. ஊரகப் பகுதிகளில் உள்ள குடிநீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் சேகரிப்பு அமைப்புகளின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.



### அட்டவணை 2.7.

### மாவட்ட வாரியான குடிநீர் ஆதாரங்கள் குறித்த விவரம்

| வ.எண் | மாவட்டம் | கைப்பம்பு எண்ணிக்கை | மின்விசைப்பம்பு எண்ணிக்கை | சிறு மின்விசைப்பம்பு எண்ணிக்கை | கூட்டுக் குடிநீர் திட்டங்களின் எண்ணிக்கை | கூட்டுக்குடிநீர் வழங்கப்படும் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 9,150 | 6,816 | 4,174 | 20 | 69 |
| 2 | திருவள்ளூர் | 4,762 | 4,038 | 2,416 | 9 | 36 |
| 3 | கடலூர் | 16,813 | 4,370 | 1,788 | 12 | 60 |
| 4 | விழுப்புரம் | 15,741 | 6,014 | 10,428 | 11 | 78 |
| 5 | வேலூர் | 9,964 | 7,350 | 13,468 | 20 | 46 |
| 6 | திருவண்ணாமலை | 11,350 | 5,064 | 7,016 | 25 | 240 |
| 7 | சேலம் | 7,737 | 5,402 | 5,078 | 9 | 262 |
| 8 | நாமக்கல் | 3,123 | 4,403 | 2,804 | 12 | 298 |
| 9 | தர்மபுரி | 11,542 | 3,038 | 5,602 | 8 | 66 |
| 10 | கிருஷ்ணகிரி | 9,700 | 3,743 | 3,640 | 17 | 93 |
| 11 | ஈரோடு | 4,980 | 4,929 | 2,330 | 40 | 192 |
| 12 | திருப்பூர் | 4,750 | 3,457 | 1,276 | 17 | 265 |
| 13 | கோயம்புத்தூர் | 2,837 | 3,661 | 646 | 9 | 228 |
| 14 | நீலகிரி | 25 | 1,241 | 183 | 1 | 4 |
| 15 | தஞ்சாவூர் | 7,069 | 5,254 | 2,755 | 6 | 90 |
| 16 | நாகப்பட்டினம் | 25,454 | 2,152 | 2,071 | 12 | 291 |
| 17 | திருவாரூர் | 12,663 | 2,804 | 1,392 | 4 | 96 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 9,603 | 3,261 | 3,432 | 25 | 327 |
| 19 | கரூர் | 3,455 | 2,726 | 3,349 | 12 | 92 |
| 20 | பெரம்பலூர் | 3,147 | 823 | 879 | 4 | 65 |
| 21 | அரியலூர் | 1,628 | 1,408 | 882 | 7 | 168 |
| 22 | புதுக்கோட்டை | 6,925 | 4,028 | 5,383 | 46 | 208 |
| 23 | மதுரை | 6,854 | 3,422 | 4,816 | 7 | 182 |
| 24 | தேனி | 1,079 | 1,054 | 1,170 | 24 | 106 |
| 25 | திண்டுக்கல் | 4,384 | 6,255 | 5,245 | 32 | 116 |
| 26 | இராமநாதபுரம் | 2,152 | 2,098 | 1,396 | 52 | 429 |
| 27 | விருதுநகர் | 10,839 | 3,629 | 3,696 | 12 | 153 |
| 28 | சிவகங்கை | 6,000 | 3,232 | 5,052 | 33 | 129 |
| 29 | திருநெல்வேலி | 5,038 | 2,682 | 3,448 | 26 | 388 |
| 30 | தூத்துக்குடி | 8,399 | 1,939 | 1,758 | 22 | 354 |
| 31 | கன்னியாகுமரி | 748 | 1,387 | 1,456 | 13 | 44 |
|  | மொத்தம் | 2,27,911 | 1,11,680 | 1,09,029 | 547 | 5,175 |

ஏற்கனவே உள்ள குடிநீர் ஆதாரங்களுடன், **2015–16**–ம் ஆண்டில் **49,681** குடிநீர் பணிகள் வெவ்வெறு திட்டங்களான தமிழ்நாடு குக்கிராம வளர்ச்சி திட்டம், உட்கட்டமைப்பு இடைநிரவல் திட்டம், மாநில நிதிக்குழு மான்யம் மற்றும் கிராம ஊராட்சியின் பொது நிதி ஆகிய திட்டங்களில் ரூ. **871.89** கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 2.13.2. குக்கிராம அளவில் தினசரி குடிநீர் விநியோகத்தினை இணையதளம் மூலம் கண்காணித்தல்

மாவட்ட ஆட்சித்தலைவர்களால் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் தமிழ்நாடு மின்வாரிய அலுவலர்களுக்கான ஒருங்கிணைந்த கண்காணிப்பு கூட்டம் வாரந்தோறும் நடத்தப்பட்டு ஊரகப்பகுதிகளில் சீரான குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படுவது உறுதி செய்யப்பட்டு வருகிறது. ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து குக்கிராமங்களுக்கும் அன்றாடம் குடிநீர் விநியோகம் செய்வதை இணையதளம் மூலம் கண்காணித்திட தேசிய தகவல் மையம் மூலம் மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அனைத்து கிராம ஊராட்சிகளும் தினந்தோறும் குக்கிராமம் வாரியான குடிநீர் விநியோகம் குறித்து இணையதளம் வாயிலாக பதிவுகள் மேற்கொண்டு வருகின்றன. அதன்படி, தினந்தோறும் குக்கிராம வாரியான



அன்றாட குடிநீர் விநியோகத்தினை கண்காணித்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) ஆகியோர் மாவட்ட அளவில் கிராம ஊராட்சிகளில் அன்றாட குடிநீர் விநியோக நிலையினை இம்மென்பொருள் மூலம் கண்காணித்து வருகின்றனர். அதேபோல, ஊரகப்பகுதிகளில் குக்கிராம வாரியாக குடிநீர் விநியோகம் செய்தலை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரகம், இணையதளம் வாயிலாக மாநில அளவில் கண்காணித்து அனைத்து குக்கிராமங்களிலும் நாள்தோறும் சீரான குடிநீர் விநியோகம் செய்தல் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இணையதளம் மூலம் பெறப்படும் அறிக்கைகள் ஒவ்வொரு வாரமும் பரிசீலிக்கப்பட்டு மூன்று நாட்களுக்கு மேல் குடிநீர் வழங்கப்படாத குக்கிராமங்கள் கண்டறியப்பட்டு ஊரகப் பகுதிகளில் சீராக குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வட்டார வளர்ச்சி அலுவலர்களால் குடிநீர் பற்றாக்குறை உள்ள குக்கிராமங்களில் சிறப்பு நடவடிக்கைகள் மூலம் குடிநீர் விநியோகம் தடங்கலின்றி முறையாக வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 2.13.3. தெரு விளக்குகள் பராமரித்தல்

தெருவிளக்குகள் இல்லாத இடங்களுக்கு விரிவுபடுத்துதல் மற்றும் பராமரித்தல் ஆகியவை கிராம ஊராட்சிகளின் அவசியமான பணிகளில் ஒன்றாகும். கிராம ஊாட்சிகளில் பராமரிக்கப்படும் பல்வேறு வகையான தெருவிளக்குகள் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை 2.8**

**மாவட்ட வாரியான தெருவிளக்குகள் விவரம்**

| வ.எண் | மாவட்டம் | குழல் விளக்கு | பாதரச ஆவி விளக்கு | சோடியம் ஆவி விளக்கு | ஆடர் ஒளி விளக்கு | சூரியசக்தி தெரு விளக்கு | எல்இடி விளக்கு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 75,180 | 514 | 12,163 | 23,082 | 1,538 | 69 | 112,546 |
| 2 | திருவள்ளூர் | 33,186 | 856 | 8,230 | 69,926 | 1,115 | 60 | 113,373 |
| 3 | கடலூர் | 69,980 | 596 | 10,150 | 30,461 | 2,001 | 0 | 113,188 |
| 4 | விழுப்புரம் | 62,656 | 26 | 10,166 | 56,279 | 1,020 | 2,420 | 132,567 |
| 5 | வேலூர் | 85,279 | 772 | 4,767 | 9,784 | 2,529 | 340 | 103,471 |
| 6 | திருவண்ணா மலை | 59,952 | 883 | 5,792 | 21,110 | 1,485 | 0 | 89,222 |
| 7 | சேலம் | 78,103 | 406 | 1,970 | 20,348 | 1,519 | 782 | 103,128 |
| 8 | நாமக்கல் | 52,041 | 44 | 2,640 | 2,824 | 1,496 | 262 | 59,307 |
| 9 | தர்மபுரி | 36,959 | 543 | 1,287 | 11,343 | 420 | 0 | 50,552 |
| 10 | கிருஷ்ணகிரி | 21,117 | 295 | 864 | 39,470 | 1,235 | 240 | 63,221 |
| 11 | ஈரோடு | 60,810 | 170 | 1,975 | 3,069 | 1,075 | 730 | 67,829 |
| 12 | திருப்பூர் | 47,231 | 349 | 1,451 | 3,627 | 1,611 | 335 | 54,604 |
| 13 | கோயம்புத்தூர் | 54,685 | 370 | 1,828 | 12,342 | 840 | 960 | 71,025 |
| 14 | நீலகிரி | 9,857 | 0 | 1,173 | 1,415 | 220 | 441 | 13,106 |
| 15 | தஞ்சாவூர் | 127,358 | 1,887 | 6,478 | 46,083 | 2,025 | 0 | 183,831 |
| 16 | நாகப்பட்டினம் | 67,190 | 104 | 2,116 | 29,074 | 1,315 | 360 | 100,159 |
| 17 | திருவாரூர் | 64,451 | 151 | 1,853 | 18,928 | 1,230 | 0 | 86,613 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 81,515 | 611 | 3,394 | 5,720 | 1,546 | 60 | 92,846 |
| 19 | கரூர் | 30,741 | 182 | 750 | 12,083 | 760 | 82 | 44,598 |
| 20 | பெரம்பலூர் | 15,047 | 37 | 618 | 8,337 | 180 | 54 | 24,273 |
| 21 | அரியலூர் | 27,690 | 369 | 2,565 | 8,340 | 645 | 0 | 39,609 |
| 22 | புதுக்கோட்டை | 69,005 | 135 | 2,238 | 14,285 | 1,915 | 1,200 | 88,778 |
| 23 | மதுரை | 53,126 | 110 | 1,261 | 5,786 | 1,225 | 0 | 61,508 |
| 24 | தேனி | 21,611 | 14 | 539 | 140 | 524 | 0 | 22,828 |
| 25 | திண்டுக்கல் | 33,457 | 259 | 646 | 29,551 | 1,369 | 0 | 65,282 |
| 26 | இராமநாதபுரம் | 40,429 | 181 | 2,695 | 38,569 | 510 | 0 | 82,384 |
| 27 | விருதுநகர் | 42,411 | 511 | 1,700 | 15,699 | 1,574 | 8 | 61,903 |
| 28 | சிவகங்கை | 44,173 | 119 | 1,133 | 16,678 | 1,173 | 4,148 | 67,424 |
| 29 | திருநெல்வேலி | 78,260 | 410 | 3,840 | 1,190 | 1,860 | 0 | 85,560 |
| 30 | தூத்துக்குடி | 62,177 | 88 | 1,435 | 3,926 | 1,500 | 0 | 69,126 |
| 31 | கன்னியாகுமரி | 40,182 | 7 | 1,440 | 10,560 | 440 | 67 | 52,696 |
| | **மொத்தம்** | **16,45,859** | **10,999** | **99,157** | **5,70,029** | **37,895** | **12,618** | **23,76,557** |



### 2.13.4. கிராம ஊராட்சிகளில் தூய்மை மற்றும் சுகாதாரத்தினைப் பேணிக் காத்தல்.

ஊரகப் பகுதிகளில் தூய்மை மற்றும் சுகாதாரத்தை பேணிக் காத்தல், கிராம ஊராட்சியின் கட்டாயக் கடமைகளில் ஒன்றாகும். அதன்படி, கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட சுகாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

i) தெருக்கள் மற்றும் ஊராட்சி சாலைகளை சுத்தம் செய்தல்.

ii) கழிவு நீர்க்கால்வாய் அமைத்தல், சுத்தம் செய்தல் மற்றும் கழிவு நீரை வெளியேற்றுதல்.

iii) உபயோகமற்ற கட்டுமானப் பொருட்கள் மற்றும் முட்புதர்களை அகற்றுதல்.

iv) பொதுக் கழிப்பிடங்களில் சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

v) பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்

vi) சுடுகாடு/இடுகாடு ஆகியவற்றை அமைத்தல் மற்றும் பராமரித்தல்

vii) பயன்பாட்டில் இல்லாத கிணறுகள், சுகாதாரமற்ற குட்டைகள், குளங்கள், சாக்கடைகள், குழிகள் அல்லது பள்ளங்கள் ஆகியவற்றை மூடுதல் மற்றும் ஊராட்சியில் இதர சுகாதார மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளுதல்.

கிராம ஊராட்சிகளில் சுகாதாரத்தை பேணிக்காத்திட 26,622 துப்புரவுப் பணியாளர்கள் தற்போது பணியாற்றி வருகின்றனர். ஊரகப் பகுதிகளில் சுகாதாரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும், ஊராட்சிகளுக்கு போதிய அளவில் துப்புரவுப் பணியாளர்கள் இருப்பதை உறுதி செய்திட ஏதுவாக, தமிழ்நாடு அரசு, 16,726 துப்புரவுப் பணியாளர்களைக் கூடுதலாக நியமித்திட 2013–ல்ஆணை வெளியிட்டதன் அடிப்படையில் அனைத்து ஊராட்சிகளிலும் துப்புரவுப் பணியாளர்கள் கூடுதலாக நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றனர்.

**2.13.5. ஊரகப் பகுதிகளில் டெங்கு காய்ச்சலைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

கிராமப்புறங்களில் டெங்கு காய்ச்சல் பரவலைத் தடுக்கவும் கட்டுப்படுத்தவும் அனைத்து கிராம ஊராட்சிகளால் கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



i) ஒருங்கிணைந்து செயல்படும் அலகாக கிராம ஊராட்சி செயல்பட்டு கிராம மக்களிடையே டெங்கு காய்ச்சல் பரவும் விதம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

ii) ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், மாவட்ட மலேரியா அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர், ஊரக சுகாதார மேற்பார்வையாளர்கள், ஊரக சுகாதார செவிலியர் ஆகியோரை ஒருங்கிணைத்து வட்டார அளவில் தொடர்ச்சியான கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து தூய்மை மற்றும் சுகாதாரம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

iii) மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த உள்ளூர் அளவில் மின்னணு மற்றும் அச்சு ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டு டெங்கு காய்ச்சல் குறித்த விவரங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன.

iv) கொசுக்கள் மற்றும் இளம்பருவ புழுக்களை ஒழிப்பதன் மூலம் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்துதல் குறித்த துண்டு பிரசுரங்கள் மக்களிடையே விநியோகிக்கப்பட்டதுடன் தண்டோரா மூலம் டெங்கு காய்ச்சலைப் பற்றியும் கொசுக்கள் பரவாமல் தடுப்பது குறித்தும் அறிவிப்பு செய்யப்படுகிறது.

v) அனைத்து சுய உதவிக் குழு உறுப்பினர்களையும் ஊரக வளர்ச்சி மற்றும் சுகாதார பணியாளர்களுடன் ஒருங்கிணைத்து தேவையான விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

vi) மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் கைப்பம்புகளை ஒட்டியுள்ள பகுதிகளைச் சுத்தம் செய்து குளோரின் முறையாக கலந்து குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

vii) கிராம ஊராட்சிகளில் உள்ள தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்காமல் இருக்க சரளை மண் கொண்டு நிரப்ப வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

viii) நீர் தேங்குவதால் கொசுக்கள் உற்பத்தியாவதை தடுக்கும் நோக்கத்தில் உபயோகப்படுத்தப்பட்ட பழைய உருளிப்பட்டைகள், தேங்காய் ஓடுகள், உடைந்த பானைகளின் ஓடுகள் ஆகியவற்றை முறையாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ix) கிராம ஊராட்சிகளில் டெங்கு காய்ச்சல் பரவுவதை முற்றிலுமாக தடுத்திட ஊராட்சி ஒன்றிய அளவில் 20 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு, அவர்கள் வட்டார மருத்துவ அலுவலர்களின் கீழ் உள்ள சுகாதார ஆய்வாளர்களுடன் ஒருங்கிணைந்து முழு வீச்சில்



செயல்பட்டு, தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

x) தற்போது 9,000 கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் ஊரகப் பகுதிகளில் குப்பைகளை அகற்ற 52,998 தூய்மைக் காவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

xi) ஊராட்சி ஒன்றியங்கள் / கிராம ஊராட்சிகளின் பொது நிதியிலிருந்து 3,308 புகைமூட்ட இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு ஒவ்வொரு ஊராட்சியிலும் சுழற்சி முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

xii) கிராம ஊராட்சிகளில் துப்புரவுப் பணிகள் மேற்கொள்வதைக் கண்காணித்திட ஒவ்வொரு வட்டாரத்திற்கும் உதவி இயக்குநர் நிலையில் மண்டல அலுவலர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர்களால் நியமனம் செய்யப்பட்டு கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

xiii) மூடி வைக்கப்பட்ட பாத்திரங்களில் மட்டுமே நீர் சேகரித்து வைக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி வீடு வீடாகப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

xiv) முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக இயக்குநரகத்திலிருந்து விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## 2.14 விருப்புரிமைப் பணிகள்

1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 111–ன்படி ஊராட்சியின் தேவைக்கேற்பவும் நிதி ஆதாரங்களைக் கணக்கில் கொண்டும் பின்வரும் கடமைகளை நிறைவேற்றிட வேண்டும்.

i) மரங்களை நட்டு பாதுகாத்தல்.

ii) கிராமத்திலுள்ள சாலையோரங்களில் மற்றும் பொது இடங்களில் தெரு விளக்குகள் அமைத்தல்

iii) சந்தைகள் ஏற்படுத்தி பராமரித்தல்

iv) விழாக்கள் மற்றும் பொருட்காட்சிகளை கட்டுப்படுத்துதல்

v) வண்டிகள் நிறுத்துமிடங்கள், கால்நடைத் தொழுவங்கள், இறைச்சிக்கூடங்கள் மற்றும் படிப்பகங்களை ஏற்படுத்தி பராமரித்தல்.

vi) விளையாட்டுத் திடல்கள் ஏற்படுத்தி பராமரித்தல்.

## 2.15. நிதி ஆதாரங்கள்

மூன்றடுக்கு கிராம ஊராட்சி அமைப்புகளில் வரி விதிப்பு செய்ய அதிகாரம் பெற்ற ஒரே அமைப்பு கிராம ஊராட்சியாகும். கிராம ஊராட்சிகள், கீழ்க்கண்ட வரி மற்றும் வரியில்லா வருவாய் ஆதாரங்களைப் பெற அதிகாரம் பெற்றுள்ளன.



### 2.15.1. வரி வருவாய்

கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட வரி இனங்களிலிருந்து வருவாயாகப் பெற அதிகாரம் பெற்றுள்ளன.

i) வீட்டு வரி / சொத்துவரி

ii) தொழில்வரி

iii) விளம்பரவரி

### 2.15.2. வீடு / சொத்துவரி

1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 172 மற்றும் அரசாணை எண். 255, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 13.12.1999–ன்படி ஊரகப் பகுதிகளில் கட்டப்படும் ஒவ்வொரு கட்டடத்திற்கும் வீட்டுவரி / சொத்துவரி, தொடர்புடைய கிராம ஊராட்சிக்கு செலுத்தப்படவேண்டும். மேலும், அரசு உதவி பெறாமல் சுய நிதியிலிருந்து பாடத் திட்டத்தினை அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்கள், செயல்படுத்தும் போது அக்கட்டடங்களுக்கு வீட்டு வரி / சொத்து வரி விதிக்கப்படும். அதனடிப்படையில், 2008–09ம் ஆண்டு முதல் சுயநிதிக்கல்வி நிறுவனங்களின் கட்டடங்களுக்கு கிராம ஊராட்சிகளால் சொத்து வரி நிர்ணயித்து வசூலிக்கப்பட்டு வருகிறது. **மாவட்ட வாரியாக** வசூலிக்கப்பட்ட வீட்டுவரி / சொத்து வரி விவரம் பின்வருமாறு:

## அட்டவணை 2.9.

## 2015–16 ஆம் ஆண்டில் மாவட்ட வாரியான வீட்டுவரி/ சொத்துவரி கேட்பு விவரம்

(ரூபாய் கோடியில்)

| வ.எண் | மாவட்டம் | வீட்டுவரி | சுயநிதி கல்வ நிறுவனங்கள் மீதான சொத்துவரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 30.82 | 3.16 | 33.98 |
| 2 | திருவள்ளூர் | 12.73 | 2.29 | 15.02 |
| 3 | கடலூர் | 7.78 | 0.55 | 8.33 |
| 4 | விழுப்புரம் | 5.95 | 0.45 | 6.4 |
| 5 | வேலூர் | 5.2 | 1.41 | 6.61 |
| 6 | திருவண்ணாமலை | 5.72 | 0.73 | 6.45 |
| 7 | சேலம் | 5.7 | 2.17 | 7.87 |
| 8 | நாமக்கல் | 3.03 | 2.09 | 5.12 |
| 9 | தர்மபுரி | 1.75 | 0.39 | 2.14 |
| 10 | கிருஷ்ணகிரி | 5.23 | 0.44 | 5.67 |
| 11 | ஈரோடு | 5.68 | 1.45 | 7.13 |
| 12 | திருப்பூர் | 7.46 | 0.49 | 7.95 |
| 13 | கோயம்புத்தூர் | 14.11 | 1.71 | 15.82 |
| 14 | நீலகிரி | 2.52 | 0.13 | 2.65 |
| 15 | தஞ்சாவூர் | 7.64 | 0.72 | 8.36 |
| 16 | நாகப்பட்டினம் | 2.92 | 0.37 | 3.29 |
| 17 | திருவாரூர் | 2.38 | 0.16 | 2.54 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 6.74 | 1.1 | 7.84 |
| 19 | கரூர் | 4.5 | 0.56 | 5.06 |
| 20 | பெரம்பலூர் | 1.81 | 0.65 | 2.46 |
| 21 | அரியலூர் | 2.02 | 0.06 | 2.08 |
| 22 | புதுக்கோட்டை | 4.52 | 0.8 | 5.32 |
| 23 | மதுரை | 8.01 | 0.65 | 8.66 |
| 24 | தேனி | 2.46 | 0.22 | 2.68 |
| 25 | திண்டுக்கல் | 8.04 | 0.61 | 8.65 |
| 26 | இராமநாதபுரம் | 4.83 | 0.28 | 5.11 |
| 27 | விருதுநகர் | 7.84 | 0.79 | 8.63 |
| 28 | சிவகங்கை | 4.05 | 0.28 | 4.33 |
| 29 | திருநெல்வேலி | 5.32 | 0.36 | 5.68 |
| 30 | தூத்துக்குடி | 4.34 | 0.27 | 4.61 |
| 31 | கன்னியாகுமரி | 3.46 | 0.44 | 3.9 |
| மொத்தம் | | 194.56 | 25.78 | 220.34 |



### 2.15.3. தொழில் வரி

ஊரகப் பகுதிகளில் தொழில் வரி வசூலிக்கும் அதிகாரம் கிராம ஊராட்சிகளிடம் உள்ளது. 1958ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 121–ல் விவரிக்கப்பட்டவாறு தொழிலாளர்களின் ஊதியம் அல்லது கூலித்தொகையிலிருந்து தொழில்வரி விதிக்கவும், வசூல் செய்யவும் வழிவகை உள்ளது. தொழிலாளர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் தொகை தொடர்புடைய கிராம ஊராட்சிகளுக்கு செலுத்திட வேண்டும். தொழில், வணிகம் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றை ஒருங்கிணைத்து வரி விதிக்க வழிவகை செய்து தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994ம் ஆண்டு பிரிவு 198 அ–க்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி 2015–16ம் ஆண்டிற்கான தொழில்வரி கேட்பு ரூ. 97.84 கோடி என நிர்ணயம் செய்யப்பட்டது.

## அட்டவணை 2.10.

### மாவட்ட வாரியான தொழில்வரி கேட்பு விவரம் – 2015–16

(ரூபாய் கோடியில்)

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | கேட்பு |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 11.93 |
| 2 | திருவள்ளூர் | 5.97 |
| 3 | கடலூர் | 2.75 |
| 4 | விழுப்புரம் | 4.42 |
| 5 | வேலூர் | 5.65 |
| 6 | திருவண்ணாமலை | 4.43 |
| 7 | சேலம் | 3.35 |
| 8 | நாமக்கல் | 2.2 |

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | கேட்பு |
|---|---|---|
| 9 | தர்மபுரி | 1.85 |
| 10 | கிருஷ்ணகிரி | 3.33 |
| 11 | ஈரோடு | 2.12 |
| 12 | திருப்பூர் | 1.72 |
| 13 | கோயம்புத்தூர் | 5.22 |
| 14 | நீலகிரி | 0.58 |
| 15 | தஞ்சாவூர் | 2.9 |
| 16 | நாகப்பட்டினம் | 1.84 |
| 17 | திருவாரூர் | 1.72 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 3.93 |
| 19 | கரூர் | 1.98 |
| 20 | பெரம்பலூர் | 0.86 |
| 21 | அரியலூர் | 0.99 |
| 22 | புதுக்கோட்டை | 2.55 |
| 23 | மதுரை | 2.79 |
| 24 | தேனி | 1.5 |
| 25 | திண்டுக்கல் | 3.24 |
| 26 | இராமநாதபுரம் | 3.29 |
| 27 | விருதுநகர் | 4.96 |
| 28 | சிவகங்கை | 2.36 |
| 29 | திருநெல்வேலி | 3.18 |
| 30 | தூத்துக்குடி | 2.88 |
| 31 | கன்னியாகுமரி | 1.35 |
| **மொத்தம்** | | **97.84** |

### 2.15.4. வரியல்லாத வருவாய்

கீழ்க்கண்ட இனங்களிலிருந்து வரியல்லாத வருவாய் பெற கிராம ஊராட்சிகள் அதிகாரம் பெற்றுள்ளன.

i) மனைப் பிரிவுகள் மற்றும் கட்டட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்
ii) அபாயகரமான, அருவருக்கத்தக்க தொழில்களுக்கான கட்டணங்கள்
iii) சந்தைக் கட்டணம்



iv) குடிநீர் கட்டணம்
v) வண்டி நிலையங்களுக்கான கட்டணம்
vi) சமூகக் காடுகள் ஏலம்
vii) மீன்பாசி குத்தகை
viii) 2சி பட்டா கட்டணம்
ix) சந்தை மற்றும் பொருட்காட்சிகளிலிருந்து பெறப்படும் வருமானங்கள்
x) படகுக் குழாம் மூலம் பெறப்படும் கட்டணங்கள்
xi) அபராதங்கள் மற்றும் தண்டத்தீர்வை.

### 2.15.5. மனைப்பிரிவுகள் மற்றும் கட்டட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்

ஊரகப் பகுதிகளில் உள்ள மனைப்பிரிவுகள் மற்றும் கட்டிட வரைபடங்களுக்கு அனுமதி அளித்தல் தொடர்பாக தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள் 1997–ல் விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள், 1997 விதி 3–ன்படி கிராம ஊராட்சித் தலைவரால், நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநர் அல்லது அவரால் அங்கீரிக்கப்பட்ட இணை இயக்குநர் அல்லது துணை இயக்குநர் அனுமதியுடன் மனைப்பிரிவு அனுமதி வழங்கப்படவேண்டும். மனைப்பிரிவு அனுமதிக்கான விண்ணப்பத்தினை கிராம ஊராட்சித் தலைவரிடம் விண்ணப்பதாரரால் அளிக்கப்பட வேண்டும். கிராம ஊராட்சித் தலைவர், அவ்விண்ணப்பத்தை நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநருக்கு தொழில்நுட்ப அனுமதிக்காக பரிந்துரைக்க வேண்டும்.

விண்ணப்பதாரரால் கிராம ஊராட்சிகளுக்கு ஒப்பளிப்பு செய்திட வேண்டிய பொது உபயோகத்திற்கான திறந்த வெளி இடம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் உள்ளிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநரால் மனைப்பிரிவுகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்படும். அதனடிப்படையில் கிராம ஊராட்சித் தலைவரால் மனைப்பிரிவுகளுக்கான இறுதி ஒப்புதல் வழங்கப்படும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள், 1997 விதி 4–ன்படி குறிப்பிட்ட வரையறைகளுக்குட்பட்டு கட்டட வரைபட அனுமதி கிராம ஊராட்சித் தலைவரால் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. 4,000 சதுர அடி பரப்பளவுக்கு மிகாத குடியிருப்பு கட்டடங்கள் மற்றும் 2,000 சதுர அடி பரப்பளவுக்கு மிகாத வணிக கட்டடங்களுக்கு வரைபட அனுமதியினை கிராம ஊராட்சித் தலைவர் வழங்கலாம். இவ்வரம்பிற்கு மேற்பட்ட கட்டடங்களுக்கு நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநரின் தொழில்நுட்ப அனுமதியுடன் கட்டட வரைபட அனுமதியினை கிராம ஊராட்சித் தலைவர் வழங்கலாம்.

காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள குறிப்பிட்ட கிராம ஊராட்சிகள், சென்னை பெருநகரப் பகுதிக்குள் கொண்டு வரப்பட்டு மனைப்பிரிவு மற்றும் கட்டட வரைபட அனுமதிக்காக சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அதிகார வரம்பெல்லைக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.



### 2.15.6. அபாயகரமான, கேடு விளைவிக்கக் கூடிய தொழில்களுக்கான உரிமக்கட்டணம்

ஊரகப் பகுதிகளில் அபாயகரமான, கேடு விளைவிக்கக் கூடிய தொழில்களுக்கான உரிமங்களை கிராம ஊராட்சிகள் வழங்குகின்றன. 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 159–ல் தெரிவித்துள்ளபடி புதிய தொழில் தொடங்க விண்ணப்பிக்கவோ அல்லது புதுப்பிக்கவோ விரும்பும் விண்ணப்பதாரர், தொடர்புடைய கிராம ஊராட்சியில் விண்ணப்பித்திட வேண்டும்.

அதன்படி 2015–16ம் ஆண்டில் 2,46,153 வணிக நிறுவனங்களுக்கு கிராம ஊராட்சிகளில் தொழில் தொடங்க / புதுப்பிக்க உரிமம் வழங்கப்பட்டதுடன் உரிமக்கட்டணமாக ரூ.11.84 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

### 2.15.7. குடிநீர் கட்டணங்கள்

ஊரகப் பகுதிகளில் வீட்டிற்கான, குடிநீர் இணைப்பிற்கு கட்டணம் விதித்திட கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. குடிநீர் இணைப்பு பெறுவதற்கு பிணையத் தொகையாக கிராம ஊராட்சிக்கு ரூ.1000/– செலுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு வீட்டு குடிநீர் ‘இணைப்பிற்கும் மாதக்கட்டணம் ரூ.30/– செலுத்தப்படவேண்டும். அதன்படி 2015–16–ம் ஆண்டில் குடிநீர் கட்டணத்திற்கான கேட்பு ரூ. 72.82 கோடி ஆகும். மாவட்டவாரியான குடிநீர் கட்டண விபரம் பின்வருமாறு:

### அட்டவணை 2.11.

### 2015-16 ஆம் ஆண்டிற்கான மாவட்ட வாரியான குடிநீர் கட்டணங்கள் கேட்பு விபரம்

(ரூபாய் கோடியில்)

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | கேட்பு |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 2.95 |
| 2 | திருவள்ளூர் | 2.12 |
| 3 | கடலூர் | 1.45 |
| 4 | விழுப்புரம் | 0.32 |
| 5 | வேலூர் | 4.38 |
| 6 | திருவண்ணாமலை | 2.78 |
| 7 | சேலம் | 1.98 |
| 8 | நாமக்கல் | 2.09 |
| 9 | தர்மபுரி | 0.22 |
| 10 | கிருஷ்ணகிரி | 0.27 |
| 11 | ஈரோடு | 2.26 |
| 12 | திருப்பூர் | 3.7 |
| 13 | கோயம்புத்தூர் | 6.24 |
| 14 | நீலகிரி | 0.14 |
| 15 | தஞ்சாவூர் | 4.76 |
| 16 | நாகப்பட்டினம் | 1.03 |
| 17 | திருவாரூர் | 1.97 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 5.63 |
| 19 | கரூர் | 2.76 |
| 20 | பெரம்பலூர் | 0.89 |
| 21 | அரியலூர் | 1.59 |
| 22 | புதுக்கோட்டை | 1.23 |
| 23 | மதுரை | 2.22 |
| 24 | தேனி | 2.96 |
| 25 | திண்டுக்கல் | 3.1 |
| 26 | இராமநாதபுரம் | 1.09 |
| 27 | விருதுநகர் | 2.09 |
| 28 | சிவகங்கை | 2.77 |
| 29 | திருநெல்வேலி | 2.28 |
| 30 | தூத்துக்குடி | 1.35 |
| 31 | கன்னியாகுமரி | 4.2 |
| | மொத்தம் | **72.82** |



## 2.16. மானியங்கள்

### 2.16.1. மாநில நிதி ஆணைய மானியம்

73–வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் மற்றும் 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 198–ன்படி, தமிழ்நாட்டில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மாநில நிதி ஆணையம் அமைக்கப்பட்டு வருகிறது. மாநில நிதி ஆணையத்தின் வரம்பெல்லைகள் மற்றும் வரையறைகளாவன:–

1. அரசால் விதிக்கப்படும் வரி, தீர்வை, சுங்கம் மற்றும் கட்டணங்கள் மூலம் பெறப்படும் மொத்த வருவாயில் மாநிலத்திற்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பிரித்து வழங்கும் முறை.
2. ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய வரிகள், தீர்வை, சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை நிர்ணயித்தல்.
3. மாநிலத்தின் மொத்தத் தொகுப்பு நிதியிலிருந்து ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மானியங்கள்.
4. ஊராட்சிகளின் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கான வழிமுறைகள்.

### 2.16.2. நான்காவது மாநில நிதி ஆணையம்

மாநில அரசால் அமைக்கப்பட்ட நான்காவது மாநில நிதி ஆணையம், 2012 முதல் 2017 வரையுள்ள ஐந்தாண்டு காலத்திற்கான பரிந்துரைகளை 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அரசுக்கு அறிக்கையாக அளித்தது. இப் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் மீதான நடவடிக்கை விவரங்கள் 14.5.2013–ல் சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. மேற்கண்ட பரிந்துரைகளின் மீது அரசால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளில் கீழ்க்கண்டவை முக்கியமானவைகளாகும்.

அ) மாநில அரசின் சொந்த வரிவருவாயில் 10 விழுக்காடு ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

ஆ) ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 58 : 42 என்ற விகிதத்தில் பகிர்வு மானியம் பகிர்ந்தளிக்கப்படும்.

இ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியத் தொகை, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு 60 : 32 : 8 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படும்.

ஈ) கிராம ஊராட்சிகளைப் பொறுத்தவரை, 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கீட்டின்படி ஊராட்சியின் மொத்த மக்கள் தொகை, ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மக்கள்தொகை மற்றும் ஊராட்சியின் பரப்பளவு ஆகியவற்றின் அடிப்படையில் 60:20:20 என்ற விகிதத்தில் நிதி விடுவிக்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 100 விழுக்காடு நிதி விடுவிக்கப்படுகிறது.

உ) வரி விதிப்பில் 100 விழுக்காடு வரி நிர்ணயம், வசூல் மற்றும் மறுநிர்ணயம் மேற்கொள்ளும் கிராம ஊராட்சிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும்.

ஊ) 2013–14 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் குறைந்தபட்ச மானியம் ரூ.5 இலட்சம் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும்.

எ) ஊராட்சி ஒன்றியங்களுக்கான குறைந்தபட்ச மானியம் ரூ.30 இலட்சம் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும்.

ஏ) ஊரகப் பகுதிகளில் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைக்கென ரூ.150 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2015–16 ஆம் ஆண்டில் ரூ. 5222.07 கோடி நிதியினை பகிர்வு மானியமாக ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசு வழங்கியுள்ளது.

### 2.16.3. ஐந்தாவது மாநில நிதி ஆணையம் அமைத்தல்

அரசாணை நிலை எண்.281, நிதி (நிதி ஆணையம்–IV) துறை, நாள் 1.12.2014ன்படி ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின், அதாவது, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள்

ஆகியவற்றின் நிதி நிலையை பரிசீலித்து மேம்படுத்திட ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தினை அமைத்துள்ளது. இந்த ஆணையம் பரிந்துரை செய்ய வேண்டிய இனங்கள் பின்வருமாறு:

அ) மேற்கொள்ள வேண்டிய வழிகாட்டி நெறிமுறைகள்:–

i) மாநில அரசு விதிக்கத்தக்க வரிகள், தீர்வைகள், சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றின் நிகர வருவாயினை மாநில அரசுக்கும், மேற்கண்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கும் இடையே பகிர்ந்து கொள்ளுதல், அத்தகைய வருவாயில் மேற்சொன்ன உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே அவைகளுக்கான பங்குகளைப் பிரித்தளித்தல்.

ii) மேற்கண்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் அல்லது அவைகளே தக்க வைத்துக் கொள்ளக்கூடிய வரிகள், தீர்வைகள், சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை தீர்மானித்தல்.

iii) மாநில அரசின் தொகுப்பு நிதியிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட வேண்டிய மானியங்கள்.

ஆ) உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மற்றும் பிற மாநிலங்களில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளின் வரி விபரத்தினைக் கருத்தில் கொண்டு, ஊரக மற்றும் நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கு தேவையான புதிய வாய்ப்புகளைக் கண்டறிதல்.



உள்ளாட்சி அமைப்புகளின் நிதிநிலையை ஆய்வு செய்யும்போது உள்ளாட்சி அமைப்புகளின் நிதிநிலையை மார்ச் 31, 2015ல் உள்ளவாறு ஆணையம் மதிப்பீடு செய்ய வேண்டும். 2017ம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து தொடங்கும் ஐந்தாண்டுகளுக்கு பொருந்தும் வகையில் 2016ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ம் தேதிக்குள் தனது அறிக்கையை அரசுக்கு அளித்திட ஆணையம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**2.16.4. உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி 2015–16**

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு விடுவிக்கப்படும் பகிர்வு மான்யத்தில் 10 விழுக்காடு கணக்கிட்டு அதனை கிராம ஊராட்சிகளுக்கான ஒதுக்கீட்டில் பிடித்தம் செய்து உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி ஏற்படுத்தப்படும் என தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. இந்நிதி, திட்டப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும். இவ்வொதுக்கீட்டில் 50 விழுக்காடு தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்திற்காகவும், எஞ்சிய 50 விழுக்காடு நிதியில் ஒரு பகுதி, மாவட்டங்களில் அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கும், மீதித் தொகை மக்கள் தொகை அடிப்படையில் மாவட்டங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 2012–ம் ஆண்டு டிசம்பர் 17 மற்றும் 18 ஆகிய நாட்களில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில்,

மாவட்டங்களுக்கு விடுவிக்கப்படும் உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி 2013–14–ம் ஆண்டு முதல் ரூ.5 கோடியாக அதிகரிக்கப்படும் என அறிவித்தார்கள். அதன்படி ரூ.3 கோடி ஊரக உட்கட்டமைப்பு இடை நிரவல் நிதியிலிருந்தும் ரூ.2 கோடி நகர்ப்புற உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதியிலிருந்தும், பகிர்ந்து கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது.

2015–16ம் ஆண்டிற்கான உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதியாக ரூ.219.08 கோடி மாவட்டஆட்சித் தலைவர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இந்நிதியின் மூலம் பணிகளைத் தேர்வு செய்யும்போது கீழ்க்கண்ட பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என வழிகாட்டி நெறிமுறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அ) தாய் திட்டம் செயல்படுத்தப்படும் குக்கிராமங்களில் குடிநீர் விநியோகம், தெருவிளக்கு, சாலைகள், இடுகாடு, இடுகாட்டுப் பாதை போன்ற அடிப்படை வசதிகளில் உள்ள இடைவெளிகளை நிரப்பும் வகையில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் குக்கிராமங்கள் உள்ள ஊராட்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும்.

ஆ) 2015ஆம் ஆண்டுக்குள் திறந்தவெளி மலம் கழித்தல் நிலையற்ற கிராம ஊராட்சிகளாக மாற்ற முனைப்பான நடவடிக்கை எடுக்கும் கிராம ஊராட்சிகளுக்கு முன்னுரிமை.



இ) தமிழ்நாடு மின்வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய நீண்டகால நிலுவைத் தொகையினை செலுத்துதல்.

ஈ) தார்ச்சாலை அல்லாத அனைத்து ஊரக சாலைகளையும் தார்ச்சாலைகளாக மேம்படுத்திட தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள நிலையில் மண் மற்றும் கிராவல் சாலைகளை தார்சாலைகளாக மாற்ற முன்னுரிமை அளித்தல்.

உ) ஊராட்சி / ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான கட்டடங்களில் ஒரே தவணையில் பராமரிப்பு பணிகளை முழுமையாக மேற்கொள்ளுதல்.

2015–16ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட 3,045 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.12.**

**2015-16-ம் ஆண்டில் உட்கட்டமைப்பு இடை நிரவல் நிதியில் எடுக்கப்பட்ட பணிகள் விவரம்**

(ரூபாய் கோடியில்)

| வ.எண் | பணியின் வகைப்பாடு | பணிகளின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 1 | அங்கன்வாடி மையங்கள் | 32 | 7.35 |
| 2 | பாலங்கள் / கல்வர்ட் | 169 | 18.66 |
| 3 | தார் சாலைகள் | 593 | 67.39 |
| 4 | சிமெமணட் சாலைகள் | 113 | 6.79 |
| 5 | பாதாள சாக்கடை | 333 | 14.11 |
| 6 | குடிநீர் பணிகள் | 873 | 35.24 |
| 7 | இதர பணிகள் | 932 | 53.07 |
| 8 | மின் கட்டணம் | -- | 26.47 |
| 9 | குடிநீர் கட்டணம் | -- | 2.40 |
| மொத்தம் | | 3045 | 231.48 |

### 2.16.5. மத்திய நிதி ஆணைய மானியம்

பதினான்காவது நிதி ஆணைய குழு கிராம ஊராட்சிக்கு அடிப்படை மான்யம் மற்றும் செயலாக்க மான்யம் ஆகியன பரிந்துரை செய்துள்ளது. மொத்த மான்ய தொகையில் 90 விழுக்காடு அடிப்படை மான்யமாகும். 10 விழுக்காடு செயலாக்க மான்யமாகும். 2015–16–ம் ஆண்டுக்கு அடிப்படை மான்யமாக ரூ. 947.65 கோடி ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளது. பதினான்காவது நிதி குழு ஆணையத்தின் பரிந்துரையின்படி 2016–17ம் ஆண்டு முதல் கிராம ஊராட்சியின் செயல்பாட்டுடன் கூடிய நிபந்தனைக்கு உட்பட்ட மான்யமாக செயலாக்க மான்யம் விடுவிக்கப்படும். 2015–16 முதல் 2019–20ம் ஆண்டு வரையிலான காலத்திற்கு தமிழ்நாட்டுக்கு உரிய பங்கு விவரம் கீழ்குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.13**

(ரூபாய் கோடியில் )

| மான்யம் | 2015-16 | 2016-17 | 2017-18 | 2018-19 | 2019-20 | மொத்தம் (2015-20) |
|---|---|---|---|---|---|---|
| அடிப்படை மான்யம் | 947.65 | 1312.19 | 1516.12 | 1753.87 | 2369.86 | 7899.69 |
| செயலாக்க மான்யம் | -- | 172.12 | 194.78 | 221.20 | 289.64 | 877.74 |
| **மொத்தம்** | **947.65** | **1484.31** | **1710.90** | **1975.07** | **2659.50** | **8777.43** |



**i) மத்திய நிதி ஆணைய அடிப்படை மான்யம்**

2015–16–ம் ஆண்டிற்கான பதினான்காவது மத்திய நிதி ஆணைய அடிப்படை மானியத்தொகையாக ரூ. 947.65 கோடியை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இத்தொகை முழுவதும் மக்கள் தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. ஊராட்சிகளில் அடிப்படை பணிகளான குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள் பராமரிப்பு, சுகாதாரம், மின்கட்டணம் மற்றும் குடிநீர் கட்டணம் ஆகியவற்றிற்காக இம்மான்யம் பயன்படுத்தப்படுகிறது.

**ii)மத்திய நிதி ஆணைய செயலாக்க மான்யம்**

கிராம ஊராட்சிகள் பதினான்காவது நிதிக்குழு ஆணைய செயலாக்க மான்யம் பெறுவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் அரசு ஆணை எண். 55 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா.1) துறை நாள். 05.05.2016–ல் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசிதழ் எண். 117 நாள். 20.05.2016–ல் இதற்கான அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

பதினான்காவது மத்திய நிதிக்குழு, கிராம ஊராட்சிகளுக்கு செயலாக்க மான்யம் வழங்கிட விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் பரிந்துரை செய்துள்ளது. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டு கிராம ஊராட்சிகளுக்கு செயலாக்க மான்யம்

வழங்கப்படுவதை மாநில அரசே தீர்மானித்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

1. கிராம ஊராட்சிகள், செயலாக்க மான்யம் கோரும் ஆண்டுக்கு முந்தைய இரண்டு ஆண்டுகளுக்குரிய ஊராட்சி கணக்கு தணிக்கை அறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டும்.
2. கிராம ஊராட்சிகளின் முந்தைய ஆண்டைவிட சொந்த வருவாய் அதிகரித்திருப்பது, அத்தணிக்கை அறிக்கையில் பிரதிபலிக்க வேண்டும்.

### 2.16.6. ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் முத்திரைத்தாள் வரி, கேளிக்கை வரி ஆகியவற்றிலிருந்து பெறப்படும் வருவாயினை மாநில அளவில் ஒருங்கிணைத்து ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு பிரித்து வழங்கப்படுகிறது. அதன்படி, 2015–16 ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் ரூ.713.01 கோடியினை பின்வருமாறு அனுமதித்து அரசு ஆணையிட்டது.

i) ஐம்பது விழுக்காடு தொகை ரூ.356.50 கோடி நிதியினை கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு 67:33 என்ற விகிதத்தில் 2011 மக்கள் தொகை அடிப்படையில் பிரித்தளித்துள்ளது. அவ்வாறு ரூ.238.86 கோடி, கிராம



ஊராட்சிகளுக்கும், ரூ.117.64 கோடி, ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

ii) மீதமுள்ள 50 விழுக்காடு நிதியான ரூ.356.50 கோடி குறிப்பிட்ட வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் ஊரகப் பகுதிகளில் முன்னுரிமைத் திட்டங்களுக்காகவும், தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்திற்காகவும் (தாய்) 50:50 என்ற விகிதத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.16.7. ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதி

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை செயலரைத் தலைவராகக் கொண்ட குழுவிற்கு ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்ட கூறு நிதியிலிருந்து பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடங்கள், கிராம ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், பெரிய பாலங்கள், தரைப்பாலங்கள், இணைப்புச் சாலைகள், பேருந்து நிறுத்தங்கள் போன்ற பெரிய அளவிலான பணிகள் இத்திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ளன. அதன்படி, 2015–16 ஆம் ஆண்டில் ரூ.221.92 கோடி மதிப்பீட்டில் 810 பணிகள் கீழ்க்கண்டவாறு எடுக்கப்பட்டுள்ளன.

### அட்டவணை 2.14

### 2015-16-ம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதியில் எடுக்கப்பட்ட பணிகள் விவரம்

(ரூபாய் கோடியில்)

| வ.எண் | வகைப்பாடு | பணிகளின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 1 | ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடங்கள் | 2 | 5.23 |
| 2 | பேருந்து நிறுத்தங்கள் | 2 | 2.16 |
| 3 | சாலைகள் | 518 | 164.00 |
| 4 | பாலங்கள் | 20 | 17.59 |
| 5 | இதர உட்கட்டமைப்பு பணிகள் | 268 | 32.94 |
| **மொத்தம்** | | **810** | **221.92** |

### 2.16.8 ஊராட்சிகளின் வருவாய் வரம்பு

தமிழ்நாட்டில் 12,524 கிராம ஊராட்சிகள் உள்ளன. 2015–16ம் ஆண்டு வருவாய் அடிப்படையில் கிராம ஊராட்சிகள் கீழ்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.15**

**ஊராட்சிகளின் வருவாய் வரம்பு**

| வருவாய் வரம்பு | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|
| ரூ. 5 லட்சம் முதல் 7 லட்சம் வரை | 150 |
| ரூ. 7லட்சம் முதல் 10 லட்சம் வரை | 861 |
| ரூ.10 லட்சம் முதல் 20 லட்சம் வரை | 6309 |
| ரூ.20 லட்சம் முதல் 50 லட்சம் வரை | 4370 |
| ரூ.50 லட்சம் முதல் 1 கோடி வரை | 705 |
| ரூ.1 கோடிக்கு மேல் | 129 |
| **மொத்தம்** | **12524** |



### 2.17 கிராம ஊராட்சிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள்

### 2.17.1.அலுவலகக் கட்டடங்கள்

தமிழ் நாட்டில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளுக்கும் சொந்த அலுவலக கட்டடங்கள் உள்ளன. மாநில அரசின் நிதி ஆதாரத்தைக் கொண்டு நீண்டநாள் பயன்பாட்டிற்குப் பின் பழுதடைந்த கிராம ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் இடிக்கப்பட்டு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி மற்றும் மத்திய அரசின் ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் திட்டம் ஆகியவற்றின் கீழ் 2011–12 முதல் 2014–15ம் ஆண்டு வரை ரூ.128.75 கோடி செலவில் 1,481 ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. உள்ளாட்சி நிதி/மாநில அரசு நிதியைக் கொண்டு பழுதுநீக்கம் மற்றும் புனரமைப்பு பணிகளும் ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, 2011–12ம் ஆண்டு முதல் 2014–15ம் ஆண்டு வரை ரூ.64.64 கோடி செலவில் 6,561 ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.

### 2.17.2. கணினி மற்றும் இணைய வசதிகள்

12,524 கிராம ஊராட்சிகளிலும் தடையில்லா மின்சார வசதியுடன் கணினி மற்றும் பிரிண்டர் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. இதுவரை 10,010 கிராம ஊராட்சிகளில் அகன்ற அலைவரிசை இணையதள வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 2.17.3. கிராம ஊராட்சி சேவை மையம்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 2013–14ம் ஆண்டில் ரூ.547.63 கோடி மதிப்பீட்டில் 4,174 கிராம ஊராட்சி சேவை மையங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதேபோல 2014–15ம் ஆண்டில் ரூ.648.93 கோடி மதிப்பீட்டில் 4,460 கிராம ஊராட்சி சேவை மையப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்த சேவை மையங்கள், தகவல் அளிக்கக் கூடிய மையங்களாகவும், வளர்ச்சிக்கு உறுதுணையான இணையதள தகவல் பரிமாற்றம் மேற்கொள்ள வழிவகுக்கும் மையங்களாகவும் செயல்படும். அரசு ஆணை எண். 83 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அதி–1) துறை நாள். 26.05.2015ல் வழிகாட்டுதல் ஆணையிடப்பட்டுள்ளது. 2015–16ம் ஆண்டில் 3890 கிராம ஊராட்சி சேவை மையங்கள் ரூ.661 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

### 2.18 ஊராட்சி ஒன்றியம்

தமிழ்நாட்டில் இடைநிலை அளவில் 385 ஊராட்சி ஒன்றியங்கள் (வட்டார ஊராட்சிகள்) உள்ளன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், ஊராட்சி ஒன்றிய வார்டுகளை உள்ளடக்கிய வளர்ச்சி வட்டாரங்களாகும். ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் தொடர்புடைய வார்டில் உள்ள மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய வார்டு



உறுப்பினர்களால், மறைமுகத் தேர்தலின் மூலம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் தேர்வு செய்யப்படுவார்.

### 2.19 தர்மபுரி மற்றும் கடலூர் மாவட்டங்களில் புதியதாக ஊராட்சி ஒன்றியம் தோற்றுவித்தல் :

தர்மபுரி மாவட்டத்தில் உள்ள பென்னகரம் மற்றும் மொரப்பூர் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து ஏரியூர் மற்றும் கடத்தூர் என்ற இரண்டு ஊராட்சி ஒன்றியங்களை புதிதாக தோற்றுவித்திட அரசாணை எண். 176 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் – 9.12.2013ல் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, 10 கிராம ஊராட்சிகளைக் கொண்டு, ஏரியூர் ஊராட்சி ஒன்றியமும், 25 கிராம ஊராட்சிகளைக் கொண்டு கடத்தூர் ஊராட்சி ஒன்றியமும் செயல்படும்.

அதுபோல, கடலூர் மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார்கோயில், கீரப்பாளையம் மற்றும் கம்மாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளைப் பிரித்து, ஸ்ரீமுஷ்ணத்தினைத் தலைமையிடமாகக் கொண்டு 41 ஊராட்சிகளுடன் புதிய ஊராட்சி ஒன்றியம் ஏற்படுத்திட அரசாணை எண்.97, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (ஊ.து.II) நாள் – 5.8.2014ல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த மூன்று ஊராட்சி ஒன்றியக் குழுக்களும் 2016ஆம் ஆண்டு நடைபெற உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரணத் தேர்தலில் பிரதிநிதிகள் தேர்வு செய்யப்பட்டு செயல்படத் துவங்கும்.

## அட்டவணை 2.16

## கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களின் வகைப்பாடு

| ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளின் வரம்பு விவரம் | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 10– மற்றும் அதற்கு குறைவாக | 23 |
| 11 முதல் 20 வரை | 80 |
| 21 முதல் 30 வரை | 80 |
| 31 முதல் 40 வரை | 83 |
| 41 முதல் 50 வரை | 65 |
| 51 மற்றும் அதற்கு அதிகமாக | 54 |
| **மொத்தம்** | **385** |

மாவட்ட வாரியான ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் பரப்பளவு விபரம் பின்வருமாறு :–

## அட்டவணை 2.17

## மாவட்ட வாரியாக ஊராட்சி ஒன்றியங்களின் விபரம்

| வ.எண் | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சி களின் எண்ணிக்கை | ஊராட்சிகளின் சராசரி எண்ணிக்கை | ஊரக பரப்பளவு (ச.கிமீ) | ஊராட்சி ஒன்றியத்தின் சராசரி பரப்பளவு (ச.கிமீ) |
|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 13 | 633 | **49** | 3,851.45 | 296.27 |
| 2 | திருவள்ளூர் | 14 | 526 | **38** | 2,859.84 | 204.27 |
| 3 | கடலூர் | 13 | 683 | **53** | 2,942.24 | 226.33 |
| 4 | விழுப்புரம் | 22 | 1,099 | **50** | 6,509.43 | 295.88 |
| 5 | வேலூர் | 20 | 743 | **37** | 4,022.30 | 201.12 |
| 6 | திருவண்ணாமலை | 18 | 860 | **48** | 4,826.27 | 268.13 |
| 7 | சேலம் | 20 | 385 | **19** | 4561.41 | 228.07 |
| 8 | நாமக்கல் | 15 | 322 | **21** | 3,119.43 | 207.96 |
| 9 | தர்மபுரி | 8 | 251 | **31** | 4,407.43 | 550.93 |
| 10 | கிருஷ்ணகிரி | 10 | 333 | **33** | 4,965.73 | 496.57 |
| 11 | ஈரோடு | 14 | 225 | **16** | 2,626.99 | 187.64 |
| 12 | திருப்பூர் | 13 | 265 | **20** | 4,545.50 | 349.65 |
| 13 | கோயம்புத்துார் | 12 | 228 | **19** | 2,534.24 | 211.19 |
| 14 | நீலகிரி | 4 | 35 | **9** | 1,170.39 | 292.60 |
| 15 | தஞ்சாவூர் | 14 | 589 | **42** | 3,657.67 | 261.26 |
| 16 | நாகப்பட்டினம் | 11 | 434 | **39** | 2,400.31 | 218.21 |
| 17 | திருவாரூர் | 10 | 430 | **43** | 2,322.69 | 232.27 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 14 | 404 | **29** | 4,028.00 | 287.71 |
| 19 | கரூர் | 8 | 157 | **20** | 2,656.25 | 332.03 |
| 20 | பெரம்பலூர் | 4 | 121 | **30** | 1,609.54 | 402.39 |
| 21 | அரியலூர் | 6 | 201 | **34** | 1,710.17 | 285.03 |
| 22 | புதுக்கோட்டை | 13 | 497 | **38** | 4,433.78 | 341.06 |
| 23 | மதுரை | 13 | 420 | **32** | 3,183.18 | 244.86 |
| 24 | தேனி | 8 | 130 | **16** | 1,159.89 | 144.99 |
| 25 | திண்டுக்கல் | 14 | 306 | **22** | 4,401.34 | 314.38 |
| 26 | இராமநாதபுரம் | 11 | 429 | **39** | 4,116.19 | 374.20 |
| 27 | விருதுநகர் | 11 | 450 | **41** | 3,282.08 | 298.37 |
| 28 | சிவகங்கை | 12 | 445 | **37** | 3,075.90 | 256.33 |
| 29 | திருநெல்வேலி | 19 | 425 | **22** | 4,283.06 | 225.42 |
| 30 | துாத்துக்குடி | 12 | 403 | **34** | 4,260.78 | 355.07 |
| 31 | கன்னியாகுமரி | 9 | 95 | **11** | 626.14 | 69.57 |
| **மொத்தம்** | | **385** | **12,524** | **33** | **1,04,149.61** | **270.52** |

வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), ஊராட்சி ஒன்றியத்தின் செயல் அலுவலர் ஆவார். அவருக்கு உதவியாக நிர்வாகப் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில்

உள்ள பணியாளர்கள் இருப்பார்கள். **1994**–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு **112**–ன்படி ஊராட்சி ஒன்றியக் குழு மேற்கொள்ளும் பணிகளில் முக்கியமானவை பின்வருமாறு:

1. மத்திய மற்றும் மாநில அரசின் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துதல்.
2. ஊராட்சி ஒன்றிய சாலைகள், சிறுபாலங்கள், பாலங்கள், தடுப்புச் சுவர்கள், தரைப்பாலங்கள் அமைத்தல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்.
3. ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல்.
4. ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகளான சிறுபாசனக் குளங்கள், குட்டைகள், ஊரணிகள் ஆகியவற்றை பராமரித்தல் மற்றும் புதிதாக அமைத்தல்
5. தொற்றுநோய் பரவாதவண்ணம் இருக்கத் தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
6. ஊராட்சி ஒன்றியக் குழுக்களால் வரையறுக்கப்பட்ட கண்காட்சி மற்றும் விழாக்கள் நடத்துதல்.
7. ஊராட்சி ஒன்றியச் சந்தைகளாக வகைப்படுத்தப்பட்டவற்றை பராமரித்தல்.

**1994**–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு **114**ன்படி பொருளாதார வளர்ச்சி குறித்த திட்டங்கள்



மற்றும் இதர செயல்பாடுகளை ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் செயல்படுத்தும்படி அரசு பணிக்கலாம்.

## 2.20. நிதி

1. ஊராட்சி ஒன்றிய குழுவிடம் வரி நிர்ணயம் செய்யும் அதிகாரம் இல்லை.
2. வரியில்லா வருவாய், ஒப்படைக்கப்பட்ட / பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாயில் ஒரு பகுதி, கட்டணங்கள், வாடகை, அபராதம் மற்றும் தண்டதீர்வை.
3. மாநில நிதிக்குழு மானியம், மத்திய மற்றும் மாநில அரசுகள் விடுவிக்கும் திட்டங்களுக்கான வளர்ச்சி நிதி ஆகியன நிதி ஆதாரங்களாக உள்ளன.

## 2.21. ஊராட்சி ஒன்றியங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள்

### 2.21.1. அலுவலகக் கட்டடங்கள்

தமிழ் நாட்டிலுள்ள **385** ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சொந்த அலுவலகக் கட்டடங்கள் உள்ளன. நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு பழுதடைந்த பழைய கட்டடங்களுக்குப் பதிலாக மாநில அரசு நிதியைக் கொண்டு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. **2011–12**ம் ஆண்டு முதல் **2015–16**ம் ஆண்டு வரை ரூ.**148.25** கோடி செலவில் **78** ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

### 2.21.2. கணினி மற்றும் இணையதள வசதிகள்

அனைத்து 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் தடையில்லா மின்சார வசதியுடன் கூடிய கணினி, பிரிண்டர் மற்றும் இணையதள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### 2.21.3. ஊராட்சி ஒன்றிய சேவை மையம்

வட்டார அளவில் பல்வேறு துறைகள் சார்ந்த சேவைகளை வழங்குவதற்கும் வளர்ச்சிப் பணிகளுக்கு உறுதுணையான இணையதள பரிமாற்றங்களுக்கும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 2013–14ம் ஆண்டில் ரூ.32.88 கோடி மதிப்பீட்டில் 120 ஊராட்சி ஒன்றிய சேவை மையப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அதேபோல, 2014–15ம் ஆண்டில் ரூ.45.45 கோடி மதிப்பீட்டில் 150 ஊராட்சி ஒன்றிய சேவை மையப் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 2.21.4. ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள்

மாநிலம் முழுவதும் 28,031 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. அதன் உட்கட்டமைப்பு பணிகளான வகுப்பறைகள், சமையலறை, குடிநீர், கழிவறை மற்றும் சுற்றுச்சுவர் வசதிகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் வாயிலாகவும் ஊராட்சி ஒன்றியப் பொதுநிதியிலிருந்தும் மேற்கொள்ளப் படுகின்றன. மாவட்ட வாரியாக ஊராட்சி



ஒன்றியத் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் விவரம் பின்வருமாறு:–

**அட்டவணை 2.18**

**ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் விவரம்**

| வ. எண் | மாவட்டம் | ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 737 | 284 | 1,021 |
| 2 | திருவள்ளூர் | 839 | 242 | 1,081 |
| 3 | கடலூர் | 758 | 251 | 1,009 |
| 4 | விழுப்புரம் | 1,222 | 397 | 1,619 |
| 5 | வேலூர் | 1,156 | 401 | 1,557 |
| 6 | திருவண்ணாமலை | 1,190 | 306 | 1,496 |
| 7 | சேலம் | 975 | 345 | 1,320 |
| 8 | நாமக்கல் | 649 | 148 | 797 |
| 9 | தர்மபுரி | 785 | 313 | 1,098 |
| 10 | கிருஷ்ணகிரி | 1,091 | 286 | 1,377 |
| 11 | ஈரோடு | 743 | 283 | 1,026 |
| 12 | திருப்பூர் | 840 | 227 | 1,067 |
| 13 | கோயம்புத்தூர் | 665 | 216 | 881 |
| 14 | நீலகிரி | 215 | 65 | 280 |
| 15 | தஞ்சாவூர் | 796 | 190 | 986 |
| 16 | நாகப்பட்டினம் | 489 | 176 | 665 |
| 17 | திருவாரூர் | 535 | 209 | 744 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 712 | 203 | 915 |
| 19 | கரூர் | 497 | 163 | 660 |
| 20 | பெரம்பலூர் | 343 | 117 | 460 |
| 21 | அரியலூர் | 170 | 59 | 229 |
| 22 | புதுக்கோட்டை | 1,001 | 294 | 1,295 |
| 23 | மதுரை | 639 | 207 | 846 |
| 24 | தேனி | 237 | 82 | 319 |
| 25 | திண்டுக்கல் | 857 | 200 | 1,057 |
| 26 | இராமநாதபுரம் | 756 | 155 | 911 |
| 27 | விருதுநகர் | 600 | 150 | 750 |
| 28 | சிவகங்கை | 705 | 243 | 948 |
| 29 | திருநெல்வேலி | 555 | 99 | 654 |
| 30 | தூத்துக்குடி | 476 | 112 | 588 |
| 31 | கன்னியாகுமரி | 280 | 95 | 375 |
| **மொத்தம்** | | **21,513** | **6,518** | **28,031** |

### 2.21.5. நீராதார அமைப்புகள்

ஊரகப் பகுதிகளில் உள்ள குளங்கள், குட்டைகள் மற்றும் சிறுபாசன ஏரிகள் ஆகியன ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியமான சொத்துக்களில் சிலவாகும். மாவட்ட வாரியாக சிறுபாசன ஏரிகள் மற்றும் குளங்கள்/குட்டைகள் எண்ணிக்கை பின்வருமாறு

**அட்டவணை 2.19**
**மாவட்ட வாரியாக சிறுபாசன கண்மாய்கள், குட்டைகள் / ஊரணிகள் விவரம்**

| வ.எண் | மாவட்டம் | சிறுபாசன கண்மாய்கள் | ஊரணிகள்/ குட்டைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 1,100 | 1,240 | 2,340 |
| 2 | திருவள்ளூர் | 649 | 2,059 | 2,708 |
| 3 | கடலூர் | 254 | 2,304 | 2,558 |
| 4 | விழுப்புரம் | 1,257 | 3,551 | 4,808 |
| 5 | வேலூர் | 633 | 854 | 1,487 |
| 6 | திருவண்ணாமலை | 1,250 | 2,027 | 3,277 |
| 7 | சேலம் | 242 | 375 | 617 |
| 8 | நாமக்கல் | 152 | 422 | 574 |
| 9 | தர்மபுரி | 555 | 628 | 1,183 |
| 10 | கிருஷ்ணகிரி | 1,172 | 1,211 | 2,383 |
| 11 | ஈரோடு | 19 | 597 | 616 |
| 12 | திருப்பூர் | 10 | 1,434 | 1,444 |
| 13 | கோயம்புத்தூர் | 9 | 709 | 718 |
| 14 | நீலகிரி | 0 | 225 | 225 |
| 15 | தஞ்சாவூர் | 63 | 3,131 | 3,194 |
| 16 | நாகப்பட்டினம் | 0 | 3,979 | 3,979 |
| 17 | திருவாரூர் | 0 | 3,602 | 3,602 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 1,406 | 705 | 2,111 |
| 19 | கரூர் | 108 | 388 | 496 |
| 20 | பெரம்பலூர் | 477 | 1,615 | 2,092 |
| 21 | அரியலூர் | 138 | 753 | 891 |
| 22 | புதுக்கோட்டை | 3,824 | 1,795 | 5,619 |
| 23 | மதுரை | 1,029 | 3,233 | 4,262 |
| 24 | தேனி | 26 | 319 | 345 |
| 25 | திண்டுக்கல் | 1,577 | 1,000 | 2,577 |



| வ.எண் | மாவட்டம் | சிறுபாசன கண்மாய்கள் | ஊரணிகள்/ குட்டைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 26 | இராமநாதபுரம் | 818 | 2,499 | 3,317 |
| 27 | விருதுநகர் | 300 | 1,730 | 2,030 |
| 28 | சிவகங்கை | 2,776 | 4,156 | 6,932 |
| 29 | திருநெல்வேலி | 769 | 769 | 1,538 |
| 30 | தூத்துக்குடி | 397 | 1,148 | 1,545 |
| 31 | கன்னியாகுமரி | 599 | 300 | 899 |
| மொத்தம் | | 21,609 | 48,758 | 70,367 |

### 2.22. மாவட்ட ஊராட்சி

தமிழ்நாட்டில் 31 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன. 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 24–ன்படி ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் மாவட்ட ஊராட்சி அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், மக்களால் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல் மூலம் மாவட்ட ஊராட்சித் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், உதவி இயக்குநர் நிலையில் ஒரு அலுவலர் ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் செயலராக நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகிறார். அவருக்கு உறுதுணையாகப் பணியாளர்கள் உள்ளனர். மாவட்ட ஊராட்சி, பின்வரும் நிலைக்குழுக்களை அமைக்கலாம்.

1. உணவு மற்றும் வேளாண்மை
2. தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்கள்
3. பொதுப் பணிகள்

4. கல்வி
5. மது விலக்கு உள்ளிட்ட சுகாதாரம் மற்றும் மக்கள் நலவாழ்வு.

இக்குழுக்கள் தவிர, தேவையின் அடிப்படையில் மாவட்ட ஊராட்சியால் கூடுதல் நிலைக் குழுக்களை அமைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு நிலைக் குழுவும், தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களில் ஒருவரைத் தலைவராகத் தேர்வு செய்திட வேண்டும். மாவட்ட ஊராட்சித் தலைவர், மேற்படி நிலைக் குழுக்களின் பதவி வழி உறுப்பினர் ஆவார்.

### 2.22.1. செயல்பாடுகள்

1. மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்.
2. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் நிர்வாக அறிக்கையினை ஒருங்கிணைத்தல் மற்றும் மாவட்டத்தின் ஆண்டறிக்கையைத் தயாரித்தல்.
3. விவசாயம், நிலவள மேம்பாடு, கால்நடை பராமரிப்பு, பால்வளம், கோழிப்பண்ணை, மீன்வளம் மற்றும் கிராமத் தொழில்கள் ஆகியவற்றைத் திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல்.
4. ஊரக வீட்டு வசதிக்கான திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல் (குறிப்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு.)
5. பெரிய அளவிலான குடிநீர் திட்டப் பணிகளைக் கண்டறிதல்.



### 2.22.2. நிதி

மாவட்ட ஊராட்சிகளுக்கு வரி விதிக்கும் அதிகாரம் ஏதும் இல்லை. மாநில நிதி ஆணைய மானியம் மட்டுமே முதன்மையான வருவாயாகும். குறிப்பிட்ட சில இனங்களில் மாவட்ட ஊராட்சிக்கு சொந்தமான நிலம் மற்றும் கட்டடம் மூலமாக கிடைக்கும் வருவாய் முக்கியமானவையாகும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் 58 விழுக்காடு நிதியில் 8 விழுக்காடு மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த மானியம் ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படுகிறது.

### 2.22.3 மாவட்டத் திட்டக் குழு

மாவட்டத் திட்டக் குழு என்ற அமைப்பினை ஏற்படுத்திட 74வது இந்திய அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் வழிவகுத்துள்ளது. அதன்படி மாவட்டத் திட்டக் குழு 31 மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டத் திட்டக்குழுவின் தலைவராக மாவட்ட ஊராட்சித் தலைவரும், துணைத்தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவரும் உள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விகிதாச்சாரத்திற்கேற்ப உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாவர். மாவட்டத் திட்டக்குழுவின் பணிகள் பின்வருமாறு:

1. மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான மாவட்ட அளவிலான வள ஆதாரங்கள் விபரங்களை சேகரித்தல், தொகுத்தல் மற்றும் நாளது தேதிவரையிலான விபரங்களைப் பெறுதல்.

2. தேவைகளைக் கண்டறிந்து முன்னுரிமை அளித்தல்

3. மாவட்டத்தின் வளர்ச்சிக்குத் தேவையான கொள்கைகள், திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் முன்னுரிமை அளித்தல்.

4. மாவட்டத்தில் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தயாரித்த திட்டங்களை ஒருங்கிணைத்து மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல். மாவட்டத் திட்டக்குழு தயாரிக்கும் வளர்ச்சித் திட்டம், மாநிலத் திட்டக்குழு தயாரிக்கும் மாநில அளவிலான திட்டத்திற்கு உதவியாக இருத்தல்.

5. மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் ஆய்வு செய்தல்.

6. வளர்ச்சித் திட்டங்களில் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பை ஊக்குவித்தல்.

7. மாநில அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துதல் தொடர்பான ஆலோசனைகளை மாநில அரசுக்கு வழங்குதல்.

8. மாநில அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் இதர பணிகளை நிறைவேற்றுதல்.



## 2.23. மாவட்ட ஊராட்சிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள்

### 2.23.1. அலுவலக கட்டடங்கள்

மாநில அளவில் 31 மாவட்ட ஊராட்சிகளுக்கும் சொந்த கட்டடங்கள் உள்ளன. திருவள்ளூர், வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய சொந்தக்கட்டிடம் இல்லாத மூன்று மாவட்டங்களுக்கு ரூ.75 லட்சம் வீதம் மொத்தம் ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் 2014–15 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதியில் இருந்து புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆணையிட்டதன்படி திருவள்ளூர், வேலூார் மற்றும் விருதுநகர் ஆகிய 3 மாவட்ட ஊராட்சி அலுவலகங்கள் இறுதியாக கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

### 2.23.2. கணினி மற்றும் இணையதள வசதி

31 மாவட்ட ஊராட்சிகளிலும் கணினி, பிரிண்டர் மற்றும் இணையதள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### 2.23.3. வாகனங்கள்

அனைத்து மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சி செயலர்களுக்கும் ஊரகப் பகுதிகளில் மத்திய மற்றும் மாநில அரசு திட்டச் செயல்பாடுகளை கண்காணிப்பதற்காக வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 2.24. மத்திய அரசின் ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் திட்டம்

இத்திட்டத்தில் 2014–15–ம் ஆண்டு ரூ 2.60 கோடி மதிப்பீட்டில் முறையே சத்திய விஜய நகரம், கிருஷ்ணகிரி,

பட்டுக்கோட்டை, பவானிசாகர் மற்றும் டி.கல்லுப்பட்டி ஆகிய ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்களில் மாவட்ட ஊராட்சி வள மையங்கள் கட்டுமான பணிகளுக்காக கீழ்க்காணும் விவரப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1. | ச.வி. நகரம் | 50.00 |
| 2. | கிருஷ்ணகிரி | 50.00 |
| 3. | பட்டுக்கோட்டை | 60.00 |
| 4. | பவானிசாகர் | 50.00 |
| 5. | டி. கல்லுப்பட்டி | 50.00 |
| | **மொத்தம்** | **260.00** |

இதேபோன்று, இத்திட்டத்தின் கீழ் மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்களில் ஏற்கனவே உள்ள கட்டிடங்களில் ரூ.2.38 கோடி மதிப்பீட்டில் கீழ்க்காணும் விவரப்படி புதுப்பித்தல் மற்றும் பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | பணி | தொகை ரூபாய் லட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | ச.வி. நகரம் | ஏழு கட்டிடங்கள் புதுப்பித்தல் | 50.00 |
| 2. | கிருஷ்ணகிரி | மூன்று விடுதிகள் மற்றும் பிரதான கட்டிடங்கள் பழுதுநீக்கம் செய்தல் | 50.00 |
| 3. | பட்டுக்கோட்டை | உணவு விடுதி, விருந்தினர் குடியிருப்பு, நூல் நிலையம் மற்றும் விடுதி கட்டிடங்கள் புதுப்பித்தல் | 38.00 |
| 4. | பவானிசாகர் | விடுதி, வகுப்பறை மற்றும் பயிற்சி கூடம் ஆகியன பழுதுநீக்கம் செய்து புதுப்பித்தல் | 50.00 |
| 5. | டி. கல்லுப்பட்டி | ஐந்து முந்தைய கட்டிடங்கள் பழுதுநீக்கம் மற்றும் புதுப்பித்தல் | 50.00 |
| | | **மொத்தம்** | **238.00** |



**2.25. மத்திய அரசின் ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் திட்டம் – 2014–15–ல் ஊராட்சி மன்ற அலுவலக கட்டுமான பணிகள்**

இத்திட்டத்தில், 5,000–க்கும் குறைவாக மக்கள் தொகையுள்ள 56 ஊராட்சிகளில் புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டடம் கட்டுவதற்கு அலுவலகம் ஒன்றுக்கு ரூ. 12.00 லட்சம் வீதம் ரூ. 672.00 லட்சம் மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதேபோன்று, 5000–ற்கும் மேற்பட்ட மக்கள் தொகையுடைய 6 கிராம ஊராட்சிகளில் கட்டடம் ஒன்றுக்கு ரூ. 15.00 லட்சம் வீதம், ரூ.90.00 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் ரூ.762.00 லட்சம் புதிய ஊராட்சி மன்ற கட்டுமான பணிகளுக்கு அனுமதிக்கப்பட்டு, அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று 2015–16–ம் ஆண்டு இத்திட்டத்தில் ரூ.896.00 லட்சம் மதிப்பீட்டில் 10 மாவட்டங்களில் மாவட்ட ஊராட்சி சேவை மையங்களும், 5 மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்களில் ரூ.40.00 லட்சம் மதிப்பீட்டில் பயிற்சிக்கான கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

**2.26 விருதுகள்**

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் சிறந்த முயற்சிகள் மற்றும் நடவடிக்கைளை ஊக்குவிக்கும்

வகையில் தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய அரசு பல்வேறு விருதுகளை ஏற்படுத்தியுள்ளன. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் பல்வேறு விருதுகள் விவரம் பின்வருமாறு:–

1. ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருது
2. ராஷ்டிரிய கௌரவ கிராம சபை விருது
3. ஊராட்சிகளில் மின்னணு ஆளுமைக்கான தேசிய விருது
4. சிறந்த நடைமுறைகள் / புதுமையான திட்டங்களுக்கான விருது

**2.26.1. ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருது**

ஊராட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள், கூடுதல் நிதி மற்றும் பணியாளர்களை அளிப்பதுடன் ஊராட்சிகளின் திறனை மேம்படுத்த ஏதுவாக மாநில அரசுகளுக்கு உறுதுணையாக, ஊராட்சிகளுக்கு அதிகாரமளித்தல் மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றிற்கு ஊக்கத்தொகை அளிக்கும் விருதினை ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருது என மாற்றி மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம் அறிவித்துள்ளது.

2012–13ஆம் ஆண்டில் மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம், சிறந்த கிராம ஊராட்சிக்கு ரூ. 7 இலட்சம், சிறந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ. 20 இலட்சம் மற்றும் சிறந்த மாவட்ட ஊராட்சிக்கு ரூ.40 இலட்சம் வீதம் தமிழ்நாட்டில் உள்ள 6 கிராம ஊராட்சிகள், 2 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஒரு மாவட்ட ஊராட்சிக்கு ரொக்கப்



பரிசுடன் விருது வழங்கி மொத்தம் ரூ.1.22 கோடி நிதியினை விடுவித்துள்ளது.

அதேபோல 2013–14 ஆம் ஆண்டில் 6 சிறந்த கிராம ஊராட்சிகளுக்கு ரூ.8 லட்சம் வீதமும், 2 சிறந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ. 25 லட்சம் வீதமும் மற்றும் சிறந்த ஒரு மாவட்ட ஊராட்சிக்கு ரூ.50 லட்சமும் நிதியினை மத்திய அரசு விடுவித்துள்ளது.

அதேபோல 2014–15 ஆம் ஆண்டில் 6 சிறந்த கிராம ஊராட்சிகளுக்கு தலா ரூ.8 லட்சம் வீதமும், 2 சிறந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு தலா ரூ.20 லட்சம் வீதமும் மற்றும் சிறந்த ஒரு மாவட்ட ஊராட்சிக்கு ரூ.30 லட்சம் நிதியும் கொண்ட விருதினை மத்திய அரசு வழங்கியுள்ளது.

இதே போன்று 2015–16 – ஆம் ஆண்டில் 6 கிராம ஊராட்சிகளுக்கும் 2 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மற்றும் ஒரு மாவட்ட ஊராட்சிக்கும் விருதுடன் ஊக்கத்தொகையும் வழங்கப்பட்டுள்ளது. விவரங்கள் வருமாறு :

| வ. எண் | உள்ளாட்சி அமைப்பின் பெயர் | மாவட்டம் |
|---|---|---|
| 1. | **திருப்பூர் மாவட்ட ஊராட்சி** | திருப்பூர் |
| 2. | மதுக்கரை ஊராட்சி ஒன்றியம் | **கோயம்புத்தூர்** |
| 3. | கே.மயிலாடும்பாறை | **தேனி** |
| 4. | மலுமிச்சம்பட்டி கிராம ஊராட்சி | கோயம்புத்தூர் |
| 5. | அரியநந்தல் கிராம ஊராட்சி | இராமநாதபுரம் |
| 6. | ஓடந்துரை கிராம ஊராட்சி | கோயம்புத்தூர் |
| 7. | கொடநாடு கிராம ஊராட்சி | நீலகிரி |
| 8. | இராசிங்கபுரம் கிராம ஊராட்சி | தேனி |
| 9. | இராஜக்கமங்கலம் கிராம ஊராட்சி | கன்னியாகுமரி |

**2.26.2. ராஷ்ட்ரிய கௌரவ கிராம சபை விருது**

வலுவான கிராம சபையின் மூலம் சிறப்பான சாதனைகள் புரியும் கிராம ஊராட்சிகளை அங்கீகரிக்கவும், ஊக்கமளிக்கவும் ஏதுவாக 2012ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம், ராஷ்ட்ரிய கௌரவ கிராம சபை விருதினை ஏற்படுத்தியுள்ளது.

2011–12–ஆம் ஆண்டிற்கான விருதுக்கு இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மேதலோடை கிராம ஊராட்சியை மத்திய அரசு தேர்வு செய்து ரு.5 லட்சம் ரொக்கப் பரிசாக வழங்கியது. 2012–13 ஆம் ஆண்டிற்கான விருதிற்கு, திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள நெடுங்குணம் கிராம ஊராட்சியினை மத்திய அரசு தேர்வு செய்து ரூ.10 லட்சம் ரொக்கப் பரிசாக வழங்கியது. அதேபோல 2013–14 ஆம் ஆண்டிற்கான விருதிற்கு இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கருத்தனேந்தல் கிராம ஊராட்சியை மத்திய அரசு தேர்வு செய்து ரூ.10 லட்சம் ரொக்கப் பரிசாக வழங்கியது.

அதேபோல 2014–15 ஆம் ஆண்டிற்கான விருதிற்கு நீலகிரி மாவட்டம், குன்னூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பேரட்டி கிராம ஊராட்சியை மத்திய அரசு தேர்வு செய்து ரூ.10 லட்சம் ரொக்கப் பரிசாக வழங்கியது.

இதேபோன்று 2015–16–ம் ஆண்டிற்கான விருதிற்கு திண்டுக்கல் மாவட்டம் தொப்பம்பட்டி ஊராட்சி



ஒன்றியத்திலுள்ள அக்கரைப்பட்டி கிராம ஊராட்சியை மத்திய அரசு தேர்வு செய்து விருதுடன் ரொக்கப்பரிசும் வழங்கியுள்ளது.

**2.26.3. ஊராட்சிகளில் மின் ஆளுகைக்கான தேசிய விருது**

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புத்தன்மை ஆகியவற்றை மேம்படுத்திடவும் அதிகாரப் பரவலாக்கத்தின் அடிப்படையிலான திறன்மிக்க தன்னாட்சி அமைப்புகளாக மாற்றிடவும் தேசிய மின்னாளுகைத் திட்டத்தின் கீழ் ஊராட்சிகளில் மின்னாளுகைக்கான செயல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம், ஊராட்சி அமைப்புகளுக்காக, பத்து வகையிலான மென்பொருள் தொகுப்புகளை உருவாக்கியுள்ளது. **ஊராட்சிகளில் மின்னாளுமைத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தியமைக்காக மத்திய அரசின் 2014 ஆம் ஆண்டிற்கான ஊராட்சி மின்னாளுமை** விருதுக்காக தமிழ்நாடு மாநிலம் தேர்வு செய்யப்பட்டது. மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களால் மேற்கண்ட விருது 2015 ம் ஆண்டு ஏப்ரல் மாதம், 24ம் நாளன்று வழங்கப்பட்டது.

**2.26.4. சிறந்த நடைமுறைகளுக்கான மாநில அரசு விருது (குக்கிராமவாரியாக குடிநீர் வழங்குதலை இணையதளம் மூலமாக கண்காணித்தல்)**

ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து குக்கிராமங்களுக்கும் அன்றாடம் குடிநீர் விநியோகம் செய்வதை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை கண்காணித்து வருகிறது. அதன்படி ஊரக வளர்ச்சி (ம)

ஊராட்சித் துறை இணையதளம் மூலம் குக்கிராம அளவில் தினசரி குடிநீர் விநியோகத்தினை கண்காணிப்பதற்கான மென்பொருள் உருவாக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இம்முயற்சியினை பாராட்டும் விதமாக தமிழ்நாடு அரசு சிறந்த நடைமுறைகள்/ புதுமையான திட்டங்களுக்கான விருதினை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு வழங்கியுள்ளது. **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களுக்கு, 2014 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று இவ்விருதினை வழங்கினார்கள்.**



## 3. மாநில அரசு திட்டங்கள்

### 3.1. தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம்

பொதுவாக திட்ட செயலாக்கம் மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்கு ''கிராம ஊராட்சி''யினையே அடிப்படை வளர்ச்சிக்கான அலகாகக் கொண்டு ஊரக வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி ஊரக வளர்ச்சித் துறைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தற்போதுள்ள நடைமுறையைவிட ஒரு படி மேலாக, திட்டமிடுதல், நிதியளித்தல் மற்றும் திட்ட செயலாக்கம் ஆகியவற்றிற்கு கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களை அலகாக எடுத்துத் திட்டங்களைச் செயல்படுத்தி வந்தது. அனைத்து குக்கிராமங்களுக்கும் சமமான நிதி ஆதாரம் வழங்கும் பொருட்டும், வள ஆதாரங்களை பகிர்ந்தளிப்பதில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் களையும் நோக்கிலும், குறைந்தபட்ச அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் அனைத்து குக்கிராமங்களுக்கும் சென்றடையும் வகையிலும் ஒரு முன்னோடித் திட்டமாக "**தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம்**" என்னும் புதிய திட்டம் 2011–12ஆம் ஆண்டு முதல் இவ்வரசால் செயல்படுத்தப்பட்டது. ***தேசிய அளவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், தமிழகத்தில் மட்டும் தான் குக்கிராமங்களை வளர்ச்சி அலகாகக் கொண்டு முதன்முறையாக, இம்முன்னோடித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.***



தமிழகத்தில், சென்னை நீங்கலாக உள்ள 31 மாவட்டங்களில் 12,524 கிராம ஊராட்சிகள் உள்ளன. மொத்தமுள்ள 12,524 கிராம ஊராட்சிகளில் 79,394 குக்கிராமங்கள் உள்ள நிலையில், சராசரியாக ஒரு கிராம ஊராட்சியில் 6 குக்கிராமங்கள் உள்ளன. எனினும், கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களின் எண்ணிக்கை மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகிறது. நீலகிரி மாவட்டத்தில் ஒரு கிராம ஊராட்சியில் சராசரியாக 37 குக்கிராமங்களும், விழுப்புரம் மாவட்டத்தில் சராசரியாக 3 குக்கிராமங்களும் உள்ளன. பல்வேறு எண்ணிக்கையிலான குக்கிராமங்களைக் கொண்ட கிராம ஊராட்சிகளுக்குச் சம அளவிலான நிதி ஒதுக்கீடு அளித்தது, வளர்ச்சி நிலையில் வேறுபாட்டினையும், பொதுச் சொத்துகள் உருவாக்குவதில் மாறுபாட்டினையும் முன்னேற்றத்தில் ஏற்ற தாழ்வுகளையும் உருவாக்கியது. எனவே, இந்த வேறுபாடுகளை களையும் வகையிலும், சம அளவிலான நிதி மற்றும் அடிப்படை வசதிகளை உருவாக்கும் நோக்குடனும், தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் "குக்கிராமங்கள்" அடிப்படை அலகாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள சில கிராம ஊராட்சிகளில் மக்கள் தொகை 500க்குக் குறைவாகவும், சில ஊராட்சிகளில் மக்கள் தொகை 10,000க்கு அதிகமாகவும் உள்ளது. குக்கிராமங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

## அட்டவணை 3.1.

### குக்கிராமங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கிராம ஊராட்சிகளை வகைப்படுத்துதல்.

| வ.எண். | குக்கிராமங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 5க்கும் கீழ் | 6,241 |
| 2. | 5–15 | 5,434 |
| 3. | 16–25 | 637 |
| 4. | 26–50 | 189 |
| 5. | 50க்கு மேல் | 23 |
| **மொத்தம்** | | **12,524** |

### 3.1.1. நிதி ஒதுக்கீடு

குக்கிராமங்களின் எண்ணிக்கையையும், ஊராட்சியில் உள்ள மக்கள் தொகையையும் ஒப்புநோக்கும் போது, குக்கிராமங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மக்கள் தொகையும் கூடுகிறது என்பது தெளிவாகிறது. அதிகமான குக்கிராமங்களை கொண்டுள்ள கிராம ஊராட்சிகளின் தேவைகளும் அதிகமான அளவில் இருக்கும். இதைக் கருத்திற்கொண்டு, நிதி ஒதுக்கீட்டிற்காக குக்கிராமங்களின் அடிப்படையில் கிராம ஊராட்சிகள் 5 பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதிக அளவிலான மக்கள் தொகையும், அதிக குக்கிராமங்களும் கொண்டுள்ள கிராம ஊராட்சிகள் அதிக அளவிலான நிதி ஒதுக்கீட்டினைப் பெறுகின்றன. பின்வரும் அட்டவணையே இதற்குச் சான்றாகும்.



## அட்டவணை 3.2.

### "தாய்" திட்டத்திற்குத் தேவைப்படும் நிதி

| வ. எண் | குக்கிராமங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சி களின் எண்ணிக்கை | மொத்த மக்கள் தொகை ( 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி) | ஒரு ஊராட்சிக்கான சராசரி மக்கள் தொகை | ஒரு ஊராட்சிக்கான ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | குறைந்தபட்ச அடிப்படை மானிய நிதி | கூடுதல் நிதி | மொத்த நிதி |
| 1. | 5க்கும் கீழ் | 6,241 | 1,25,34,047 | 2,008 | 20 | 0 | 20 |
| 2. | 5–15 | 5,434 | 1,73,92,688 | 3,201 | 20 | 10 | 30 |
| 3. | 16– 25 | 637 | 35,53,429 | 5,578 | 20 | 20 | 40 |
| 4. | 26–50 | 189 | 15,57,132 | 8,239 | 20 | 30 | 50 |
| 5. | 50க்கு மேல் | 23* | 3,07,557 | 13,372 | 20 | 30 | 50 |
| மொத்தம் | | 12524 | 3,53,44,853 | 2,822 | | --- | --- |

***** ***23 கிராம ஊராட்சிகளில் 50 க்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் உள்ளன. இக்குக்கிராமங்களுக்கு மேலும் தேவைப்படும் பணிகளை கண்டறிந்து 2014–15ம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சித்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் பிற திட்டங்களின் மூலம் ஒருங்கிணைந்து செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.***

2011–12 ஆம் ஆண்டில் ரூ.680 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டது. 2012–13 ஆம் ஆண்டு முதல், ஊரக குக்கிராமங்களில் தேவைப்படும் அடிப்படை உட்கட்டமைப்பினை நிறைவு செய்வதில் உள்ள இடைவெளிகளை (Infrastructural gaps) நிரப்பிடும் நோக்கில் இத்திட்டத்திற்கான நிதியை ரூ.750 கோடியாக அரசு உயர்த்தியது. மேற்படி கூடுதல் நிதி

ஒதுக்கீடான ரூ.70 கோடி "தாய்" திட்ட கிராமங்கள் மற்றும் அவற்றிற்கு அருகில் உள்ள கிராமச் சாலைகளை மேம்படுத்த ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### 3.1.2. திட்டக் கூறுகள்

"தாய்" திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகள் மூன்று பிரிவுகளாக பின்வரும் அட்டவணையில் உள்ளபடி வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.3.**

**"தாய்" திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகள்**

| வ. எண் | குறைந்த பட்ச அடிப்படை தேவைகள் | கூடுதல் தேவைகள் | இதர பணிகள் |
|---|---|---|---|
| 1 | குடிநீர் விநியோகம் | அங்கன்வாடி மையம் | அனுமதிக்கப் பட்ட இதரப் பணிகள் |
| 2 | தெருவிளக்குகள் | பொது விநியோகக் கடை | |
| 3 | சாலைகள் | சுய உதவிக்குழு கட்டடம் | |
| 4 | சுடுகாடு / இடுகாடு | கதிரடிக்கும் களம் | |
| 5 | சுடுகாடு / இடுகாட்டிற்கு சாலை வசதிகள் | விளையாட்டு மைதானம் | |

**அட்டவணை 3.4.**

**ஆண்டுவாரியான திட்ட செயலாக்கம்**

| ஆண்டு | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | குக்கிராமங்களின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 2011–12 | 2020 | 25335 | 680.00 |
| 2012–13 | 2250 | 18581 | 750.00 |
| 2013–14 | 2500 | 15115 | 750.00 |
| 2014–15 | 2741 | 12095 | 750.00 |
| 2015–16 | 3013 | 8268 | 750.00 |
| மொத்தம் | 12,524 | 79,394 | 3680.00 |



### 3.1.3. சாதனைகள்

**2011–12**ம் ஆண்டு முதல் **2015–16**ம் ஆண்டு வரை இத்திட்டத்தின் கீழ் **51,178** குடிநீர் பணிகளான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், சிறுமின்விசை இறைப்பான்கள், தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் கைப்பம்புகள், **1,05,714** தெருவிளக்குகள், **47,491** சிமண்ட் மற்றும் தார் சாலைப் பணிகள், **23,302** சுடுகாடு/இடுகாடு மற்றும் சுடுகாடு இடுகாட்டிற்கு சாலை வசதி செய்தல், **610** பொது விநியோகக் கடைகள், அங்கன்வாடிகள், சுய உதவிக்குழு கட்டிடங்கள், கதிரடிக்கும் களம் மற்றும் விளையாட்டு மைதானம் ஆகிய அத்தியாவசிய கூடுதல் பணிகள் மற்றும் **3153** இதரப் பணிகள் ஆகமொத்தம் **2,31,769** பணிகள் ரூ.**3680** கோடி மதிப்பீட்டில் மாநிலத்திலுள்ள **79,394** குக்கிராமங்களிலும் மேற்கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் கிராம ஊராட்சிகளில் உள்ள குக்கிராமங்களில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை நிலைத்த தன்மையுடன் உருவாக்கிடவும் மேம்பாடு செய்திடவும் தாய்–திட்டத்தினை மேலும் **5** ஆண்டுகளுக்கு **2016–17** முதல் **2020–21** வரை நீட்டித்து செயல்படுத்திட தீர்மானித்துள்ளார்கள்.

**3.2. முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்**

**முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் ஊரகப் பகுதிகளில் வசிக்கும் ஏழைகளின் வீடுகளுக்கான தேவையை நிறைவு செய்யும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்ட தமிழக அரசின் முன்னோடி திட்டம் ஆகும். நமது நாட்டிலேயே 2011 –12 ஆம் ஆண்டில் 300 சதுர அடி பரப்பளவில் ரூ. 1.80 இலட்சம் அலகுத் தொகையில், மாநில அரசின் முழு நிதி உதவியுடன் சூரிய மின்சக்தி விளக்குகளுடன் கூடிய வீடுகள் வழங்குவது இதுவே முதன் முறையாகும்.**

அதன்படி, அரசு ஆணை (நிலை) எண். 46, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(மாஅதி–1)த் துறை நாள் 17.08.2011–ன் வழியாக 2011–12–ஆம் ஆண்டு முதல் அடுத்து வரும் 5 ஆண்டுகளில், ஆண்டிற்கு 60,000 வீடுகள் வீதம் 3 இலட்சம் வீடுகள் கட்ட அரசு ஆணையிட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 09.04.2013 அன்று சட்டமன்றப் பேரவையில் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க ‘‘முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்திற்கான அலகுத் தொகை ரூ.1.80 இலட்சத்திலிருந்து ரூ.2.10 இலட்சமாக 2013–14 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப்படும்’’ என அறிவித்தார்கள். இதில் ரூ.1.80 இலட்சம் வீடு கட்டுவதற்கும், ரூ.30,000/–சூரிய மின்சக்தி



விளக்குகள் அமைக்க தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமைக்கும் நேரடியாக வழங்கப்படும். இம்முகமையானது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர்களுடன் ஒருங்கிணைந்து இப்பணியினை மேற்கொள்ளும்.

**3.2.1 இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்**

- ஊரகப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள் அனைவரும் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் பெற தகுதியானவர்கள்.
- ஒவ்வொரு வீடும் 300 சதுர அடி பரப்பளவில், ரூ.2.10 இலட்சம் அலகுத் தொகையுடன் மாநில அரசின் முழு நிதி உதவியுடன் கட்டப்படுகிறது.
- ஒவ்வொரு வீடும், வசிக்கும் அறை, படுக்கை அறை, சமையல் அறை, கழிப்பறை மற்றும் தாழ்வாரம் ஆகிய வசதிகள் மற்றும் மழைநீர் சேகரிப்பு அமைப்புடன் கட்டப்படுகிறது.
- ஒவ்வொரு வீட்டிலும் சூரிய ஒளி சக்தியில் எரியும் 5 அடர்குறு விளக்குகள் அமைக்கப்படும். இவை படுக்கை அறை, வசிக்கும் அறை, சமையல்அறை, கழிப்பறை மற்றும் தாழ்வாரம் ஆகிய பகுதிகளில் ஒரு விளக்கு வீதம் அமைக்கப்படும். பயனாளிகளின் விருப்பத்தின்படி தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து மின் இணைப்பு பெறும் விருப்பத்திற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- சூரிய சக்தி விளக்குகள் அமைக்கும் பணியினை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை செயல்படுத்தும்.

- பசுமை வீடுகள், பயனாளிகளின் குடியிருப்பு அமைந்துள்ள இடம் (அவர்/அவளின் வசிப்பிடத்தை மாற்றியமைத்து) அல்லது கிராம ஊராட்சியின் பிற பகுதியில் அமைந்துள்ள பயனாளிக்குச் சொந்தமான இடங்களில் கட்டித்தரப்படும். மேலும், இத்திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்படுவதற்கென நில எடுப்புகள் ஏதும் செய்யப்படமாட்டாது. வீட்டுமனைப் பட்டா அல்லது சரியான நில உரிமை உள்ளவர்கள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் வீடு பெறத் தகுதியானவர்கள் ஆவர்.

**3.2.2 தூய்மை பாரத இயக்கம் (கிராமின்) (SBM(G)) / மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டங்களுடன் ஒருங்கிணைப்பு**

i. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து ஒரு பயனாளிக்கு தினக்கூலி அடிப்படையில் 90 மனித நாட்களுக்கான ஊதியம் அளிக்கப்பட வேண்டும்.

ii. தூய்மை பாரத இயக்கம் (கிராமின்) (SBM(G)) திட்டத்துடன் ஒருங்கிணைந்து கழிப்பறை கட்ட ரூ.12,000/— வழங்கப்பட வேண்டும்.



**3.2.3. பயனாளிகளின் தகுதிகள்**

பயனாளிகள் கீழ்க்கண்ட தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்:—

- சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
- சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியில் உள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களின் நிரந்தர காத்திருப்போர் பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும்.
- 300 சதுர அடிக்கு குறையாத வீட்டு மனை இடத்திற்கு சொந்தக்காரராக இருக்க வேண்டும்.
- குடும்பத் தலைவரின் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினரில் எவரேனும் ஒருவர் பெயரிலோ வில்லங்கமற்ற வீட்டுமனைப் பட்டா இருக்க வேண்டும்.
- தொடர்புடைய கிராம ஊராட்சியில் அல்லது வேறு எங்கும் கான்கிரீட் கூரை போடப்பட்ட சொந்த வீடு எதுவும் இருக்கக் கூடாது.
- அரசின் இதர வீடு கட்டும் திட்டங்களில் பயன்பெற்றவராக இருக்கக் கூடாது.

### 3.2.4. பயனாளிகள் தேர்வு செய்யும் முறை

- ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோரின் நிரந்தர காத்திருப்புப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, அதில் மிகவும் வறிய நிலையில் உள்ளோர் தேர்வு செய்யப்பட வேண்டும்.
- மொத்தம் 60,000 வீடுகளில், 17,400 வீடுகள் அதாவது 29 விழுக்காடு ஆதி திராவிடர்களுக்கும், 600 வீடுகள் அதாவது 1 விழுக்காடு பழங்குடியினர்களுக்கும், மீதமுள்ள 42,000 வீடுகள் அதாவது 70 விழுக்காடு இதர இனங்களுக்கும் (ஆதிதிராவிடர், பழங்குடியினர் அல்லாதோர்) வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள கிராமப்புற மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.
- மாவட்ட வாரியான ஒதுக்கீட்டில் 3 விழுக்காடு மாற்று திறனாளிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.
- பயனாளிகள் பட்டியல் தயாரிக்கப்படும் போது, மாற்றுத் திறனாளிகள், விதவைகள், ஆதரவற்ற மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், பெண்களைத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள், முன்னாள் இராணுவத்தினர் மற்றும் முன்னாள் துணை இராணுவ படையினர், ICDS துறையினரால்



அடையாளம் காணப்பட்ட கிராமப் பகுதிகளில் வாழும் ஊட்டச்சத்து குறைவினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைக் கொண்ட குடும்பங்கள், திருநங்கைகள், HIV/AIDS/TB ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டு, துணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) சான்றிதழ் பெற்றவர்கள், வெள்ளம், தீ விபத்து போன்ற இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். மேலும், மனநலம் குன்றியோர் உள்ள குடும்பங்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.

- கிராம ஊராட்சிகள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருக்கும் தகுதியுள்ள பயனாளிகளின் பட்டியலை தயார் செய்து கிராம சபையின் ஒப்புதலுக்காக வைக்கவேண்டும்.
- பயனாளிகள் தேர்வு, வீடுகள் ஒதுக்கீடு, கட்டுமானப் பொருட்கள் விநியோகம் மற்றும் இத்திட்டம் தொடர்பான நடைமுறை படுத்தப்படும் வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை (நிலை) எண். 64, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(மா.அதி–1) துறை நாள் 24.04.2015–யில் உள்ளது. இதனை http://tnrd.gov.in/scheme/stcmspghs.php என்ற இணையதள முகவரியில் காணலாம்.

## 3.2.5 முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்ட சாதனைகள்

**2011–12 முதல் 2015–16 ஆம் ஆண்டு வரை ரூ. 5,940 கோடி மதிப்பீட்டில் 3 இலட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.**

முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டம், 2016–17 முதல் 2020–21 வரையுள்ள அடுத்த 5 ஆண்டுகளுக்கும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 2016–17ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ. 420 கோடியில் 20,000 வீடுகள் கட்டப்படும்.

## 3.3 நெசவாளர்களுக்கான முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம்

ஊரகப் பகுதிகளில் வசிக்கும் நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் 2013–14 ஆம் ஆண்டில் 10,000 வீடுகள் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண். 231, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்(டி2) துறை, நாள். 22.10.2013–ன்படி, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறையினரால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வீடும் 365 சதுர அடி பரப்பளவில் ரூ.2.60 இலட்சம் அலகுத் தொகையில் கட்டப்படும். இதில் ரூ. 2.30 இலட்சம் வீட்டின் கட்டுமானப் பணிக்கும், ரூ.30,000 சூரிய மின்சக்தி விளக்குகள்



அமைப்பதற்கும் பயன்படுத்தப்படும். மொத்தமுள்ள 10,000 வீடுகளும் ரூ. 260 கோடி ஒதுக்கீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

## 3.4 தானே வீடு வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சரால் “ தானே” புயலால் பாதிக்கப்பட்ட இடர்பாடுகளை குறைக்க வீடுகளை இழந்த மக்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்க ஆணையிடப்பட்டதின் பேரில் தானே புயலால் முழுமையாக சேதமடைந்த வீடுகளை மாற்ற ரூ.1000 கோடி நிதி ஒதுக்கிட்டில் கடலூர் (90,000) மற்றும் விழுப்புரம் (10,000) மாவட்டங்களுக்கு ரூ.1 லட்சம் அலகு தொகையில் 1 லட்சம் கான்கிரீட் வீடுகள் கட்ட “தானே வீடு வழங்கும் திட்டம்” தொடங்கப்பட்டு வீடுகள் கட்டப்பட்டன.

## 3.5. ஊரக உட்கட்டமைப்பு – சாலைகள்

தமிழ்நாட்டிலுள்ள மொத்த இணைப்புச் சாலைகளில், கிராமச்சாலைகளின் பங்கு 86 விழுக்காடு ஆகும். வாழ்வாதார வாய்ப்புகள், கல்வி, சுகாதாரம் மற்றும் சந்தைகளை சென்றடைய வழி வகுப்பதன் மூலம், கிராமங்களது சமூகப் பொருளாதார மாற்றத்திற்கான காரணியாக கிராமச்சாலைகள் விளங்குகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஊரகச் சாலைத் தொகுப்பினை மேம்படுத்தி அதன் மூலம், மாநிலத்தின் தொலைதூரப் பகுதிகளுக்கும் சாலை வசதியினை உறுதிப்படுத்தும் தொலை நோக்குப் பார்வையினை கொண்டுள்ளார்கள்.

### 3.5.1. மேம்படுத்தப்பட்ட புள்ளி விவரங்கள் (Strengthening of Database)

i. ஊரகச் சாலைகளின் தொகுப்பு முறைப்படுத்தப்பட்டு நாளது வரை சரி செய்யப்பட்டதன் மூலம், 2011க்கு முன்னர் 1.03 இலட்சம் கி.மீ. ஆக இருந்த சாலைத் தொகுப்பின் நீளம், 2015–16ம் ஆண்டில் 1.47 இலட்சம் கி.மீ. நீளமாக அதிகரித்துள்ளது.

ii. ஒவ்வொரு கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தனி '**சாலைக்குறியீடு**' வழங்கப்பட்டுள்ளது.

iii. ஒவ்வொரு பேருந்து செல்லும் சாலைக்கும் தனி **" பேருந்து தட குறியீடு"** வழங்கப்பட்டுள்ளது.

iv. கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் முழு விவரப்பட்டியல், **www.tnrd.gov.in** என்ற வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் விவரங்கள் பின்வருமாறு:

**அட்டவணை 3.5**

**கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள்**

| வ. எண் | மேற்பரப்பு வகை | கிராம ஊராட்சி சாலை | ஊராட்சி ஒன்றிய சாலை | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | நீளம் (கி.மீ) | | |
| 1 | தார் சாலை | 66,727 | 29,189 | **95,916** |
| 2 | சிமெண்ட் சாலை | 2,633 | 274 | **2,907** |
| 3 | ஈரடுக்கு கப்பிசாலை | 2,148 | 244 | **2,392** |
| 4 | ஓரடுக்கு கப்பிசாலை | 7,249 | 514 | **7,763** |
| 5 | சரளைக்கல் சாலை | 5,947 | 266 | **6,213** |
| 6 | மண்சாலை | 31,254 | 1,098 | **32,352** |
| | **மொத்தம்** | **1,15,958** | **31,585** | **1,47,543** |



### 3.5.2. கொள்கை முன்முயற்சிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரகச் சாலைகள் மேம்பாட்டிற்காக பல்வேறு சாலைத் திட்டங்களை இணைத்து, **தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்** என்ற ஒட்டுமொத்த திட்டத்தினை அறிவித்தார்கள்.

இத் திட்டம், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு, ஊரகச் சாலை மேம்பாட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் நெகிழ்தன்மை அளிக்கிறது. **2015–16ம் ஆண்டில், தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்படுத்த 800 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.**

மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில், 50% மக்கள் தொகை அடிப்படையிலும், மீதமுள்ள 50% மாவட்டத்தில் உள்ள சாலைகள் தொகுப்பின் நீளத்தின் அடிப்படையிலும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் இரண்டு பிரிவுகளாக செயல்படுத்தப்படுகிறது.

**பிரிவு – I**

தார் இடப்படாத சாலைகளை 400 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் தார்ச் சாலைகளாக மேம்பாடு செய்தல்.

**பிரிவு – II**

ஏற்கனவே உள்ள பழுதடைந்த தார்ச் சாலைகளை 400 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் வலுப்படுத்துதல் மற்றும் பழுதடைந்த தார்ச் சாலைகளை பராமரித்தல். இப்பிரிவின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியில், குறைந்தபட்சம் 50 % பேருந்து செல்லும் சாலைகளுக்காகவும், 25 % க்கு குறைவில்லாமல் சாலை பராமரிப்பிற்காகவும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**ஆக மொத்தம், 4225 கி.மீ. நீளமுள்ள 2387 சாலைகள் 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டத்தின் கீழ் மேம்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டம் 2016–17ம் ஆண்டிலும் தொடரும்.**

**அட்டவணை 3.6**

**திட்ட வாரியாக கடந்த 5 ஆண்டுகளில் எடுக்கப்பட்ட சாலைப் பணிகளின் விவரம்**

| வ.எண். | திட்டத்தின் பெயர் | நீளம் (கி.மீ) | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டு (தாய்) திட்டம் | 7,170.29 | 1,167.38 |
| 2 | நபார்டு–ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி | 5,522.51 | 1,252.21 |
| 3 | பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் | 2,818.28 | 1,160.78 |
| 4 | தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் | 4225.10 | 800.00 |
| 5 | ஊரக உட்கட்டமைப்பு திட்டம் | 4,318.92 | 616.67 |
| 6 | பேருந்து செல்லும் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் | 1,399.28 | 300.00 |
| 7 | பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு தார்ச்சாலை அமைத்தல் | 429.87 | 37.50 |
| 8 | மாநில நிதிக்குழு மானியம் | 1,552.46 | 304.30 |
| 9 | ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதி | 1,191.46 | 406.73 |
| 10 | 13வது நிதிக்குழு மான்யம் | 6,573.13 | 622.00 |
| 11 | ஊரகச் சாலைகள் பராமரிப்புத் திட்டம் | 3,649.19 | 381.07 |
| 12 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 1,175.11 | 187.66 |
| 13 | பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 660.52 | 106.70 |
| 14 | இதர திட்டங்கள் | 5,848.78 | 1,442.85 |
| | **மொத்தம்** | **46,534.90** | **8,785.85** |

### 3.5.3. பசுமை முன்முயற்சிகள்

பிளாஸ்டிக் கழிவுகளை பாதுகாப்பான முறையில் அகற்றுவதை உறுதிப்படுத்தும் வகையில், இத்துறை, பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி தார்ச் சாலைகள் அமைப்பதை அதிக அளவில் மேற்கொண்டு வருகிறது. மொத்தம், 1,285.17 கோடி ரூபாய் மதிப்பீட்டில், **9,650.08** கி.மீ. நீளமுள்ள சாலைகள், பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி இதுவரை அமைக்கப்பட்டுள்ளன. பிளாஸ்டிக் கழிவுகளை சேகரிப்பதற்கான மையங்கள், 1.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 31 மாவட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ளன.

### 3.5.4. வடிவமைப்பு பிரிவு

இத்துறையின் மூலம் சமீப காலமாக பல உயர்மதிப்புப் பாலங்கள் மற்றும் கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதைக் கருத்திற் கொண்டு, மாநில அளவில் ஒரு வடிவமைப்பு பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு அனைத்து உயர் மதிப்புப் பணிகளுக்கான வடிவமைப்பு தொடர்பான ஆவணங்களை கூர்ந்தாய்வு செய்தல் மற்றும் பல்வேறு வகையான கட்டடங்களின் மாதிரி வடிவமைப்பினை தயார் செய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

### 3.5.5. தொழில்நுட்ப முன்முயற்சிகள்

இத்துறை, சாலைப் பணிகளின் நிகழ்நேர கண்காணிப்பை, நுண்ணறிவு கைபேசி மூலம் பதிவேற்றம் செய்ய ஒரு மென்பொருளை உருவாக்கியுள்ளது. இந்த நுண்ணறிவு கைபேசியினால் புவிசார் இடம் காட்டும் புகைப்படங்களுடன் கூடிய பணியின் நிலையினை எவ்வித காலதாமதமுமின்றி பணித்தளத்திலிருந்தே பதிவேற்றம் செய்ய வழிவகை செய்கிறது.

### 3.5.6. தரக் கட்டுப்பாடு

தரக் கட்டுப்பாட்டிற்குத் தேவையான சரிபார்ப்பு முறைகளை வெளிப்படையான வகையில் வழங்கும் பொருட்டு, இத்துறை சுதந்திரமான மூன்றாம் தரப்பு தரக்கட்டுப்பாட்டு முறையை செயல்படுத்த, மாநில தரக்கட்டுப்பாடு கண்காணிப்பாளராக ஓய்வு பெற்ற பொறியாளர்களை ஈடுபடுத்தியுள்ளது. இவர்கள்



மாதந்தோறும் மாவட்டங்களில் நடைபெறும் பணிகளை ஆய்வு மேற்கொண்டு அதற்கான அறிக்கையினை சமர்ப்பிப்பார்கள். தரக்கட்டுப்பாடு கண்காணிப்பாளர்களின் ஆய்வு குறிப்புகளின்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அவ்வப்பொழுது சீராய்வு செய்யப்படுகிறது.

பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளின் தரத்தை ஆய்வு செய்ய, தேசிய கிராமச் சாலைகள் மேம்பாட்டு நிறுவனமும், தேசிய தரக்கட்டுப்பாடு கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்தி வருகின்றது.

இந்த அரசு, ஊரகச் சாலைகளின் தரத்தை மேலும் ஊக்குவிக்கும் பொருட்டு, **5 மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்களில் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் மற்றும் 5 நடமாடும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்** ஆகியவற்றை அமைக்க 5.60 கோடி ரூபாயினை ஒதுக்கீடு செய்துள்ளது. கள ஆய்வு மேற்கொள்வதற்குத் தேவையான அனைத்து பரிசோதனைக் கருவிகளும் இவ்வாய்வகங்களில் இருக்கும்.

### 3.5.7. நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (NABARD-RIDF)

மாநில அரசுகள் செயல்படுத்தும் ஊரக உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி வழங்கிட நபார்டு வங்கியின் கீழ், “ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி” யினை மத்திய அரசு அமைத்துள்ளது.

**நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி XX (2014-15)**

நபார்டு–ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி XX–ன் கீழ், 1,183 கி.மீ. நீளமுள்ள 589 சாலைப் பணிகள் மற்றும் 26 பாலங்கள் 339.61 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

**நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி XXI (2015-16)**

நபார்டு–ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி XXI–ன் கீழ், 372.74 கி.மீ. நீளமுள்ள 193 சாலைப் பணிகள் மற்றும் 41 பாலங்கள் 162.76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

கடந்த 5 ஆண்டுகளில் நபார்டு திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட பணிகளின் விவரம் பின்வருமாறு-

**அட்டவணை 3.7**

**கடந்த 5 ஆண்டுகளில் நபார்டு திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட பணிகளின் விவரம்**

| வ. எண். | ஆண்டு | எண்ணிக்கை | நீளம் (கி.மீ.) | மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | 2011–12 | 958 | 2,598.65 | 451.77 |
| 2 | 2012–13 | 381 | 1,000.46 | 198.07 |
| 3 | 2013–14 | 185 | 367.63 | 100.00 |
| 4 | 2014–15 | 615 | 1183.03 | 339.61 |
| 5 | 2015–16 | 234 | 372.74 | 162.76 |
| | **மொத்தம்** | **2373** | **5,522.51** | **1252.21** |



**3.5.8. மாநில உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதி**

நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநரால், மாநில உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதி நிர்வகிக்கப்படுகிறது. குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள் மற்றும் தொழில்துறை கட்டடங்களில் இருந்து உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் கட்டணம் 2007ம் ஆண்டில் இருந்து சேகரிக்கப்படுகிறது. இந்நிதி குடிநீர் விநியோகம், சாலைகள், வடிகால் வசதிகள் மற்றும் மெட்ரோ இரயில் போன்ற வசதிகளின் தொடர்ச்சியான வளர்ச்சியினை உறுதிசெய்ய தேவையான திட்டங்களை செயலாக்க பயன்படுத்தப் படுகிறது.

கடந்த 2014–15ம் ஆண்டில், 9 மாவட்டங்களில், 69.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 53 பாலங்கள் கட்ட உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதியின் கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2015–16ம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் 13 பணிகள் 3.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

**3.6. ஒருங்கிணைந்த பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை செய்திட அதிக முன்னுரிமை அளித்து வருகிறார்கள். அதன்படி இந்த அரசு, 2011–12ம் ஆண்டு முதல் ஒருங்கிணைந்த பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம்

ஊரகப் பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான புதிய வகுப்பறைகள், சமையல் கூடங்கள், குடிநீர் வழங்குதல், கழிப்பறைகள் இதர பிறவசதிகள் ஏற்படுத்தப்படும். பழுதுபார்த்தல் / புதுப்பித்தல் ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்படும். மேலும், இத்திட்டம் பேரூராட்சிகள், மற்றும் நகராட்சிகளில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் செயல்படுத்தப்படும்.

பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப புதிய கட்டடங்கள் எடுத்துக்கொள்ளப்படும். புதிய பள்ளிக் கட்டடங்கள் அனைத்தும், தட்டோடு பதித்த கான்கிரீட் கூரைகளுடன் தண்ணீர் கசியாத வகையில் கட்டப்படும். பள்ளிக் கட்டடம் கட்டத் தேவையான காலி இடம் இல்லாத நிலையில், ஏற்கனவே உள்ள கான்கிரீட் பள்ளிக் கட்டடத்தின் உறுதித் தன்மையை சரிபார்த்து அதன் மேல் தளத்தில் புதிய கட்டடம் அமைக்கப்படும்.

சமையலறை இல்லாத ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் புதிய சமையலறைகள் அமைக்கப்படும். சமையலறைக் கூடங்கள் பழுதடைந்த நிலையில் இருப்பின், பழுது பார்த்தல் / புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்படும்.

புதிய சமையல் அறைக் கட்டடங்கள் உணவுப் பொருட்களை இருப்பு வைத்துக்கொள்ளும் கூடுதல் அறைகளுடன் எடுத்துக்கொள்ளப்படும். அவசியமான இடங்களில் தேவையின் அடிப்படையில் பழுதுபார்த்தல்



மற்றும் குடிநீர் குழாய் நீட்டிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், தேவைப்படும் இடங்களில் புதிய குடிநீர் இணைப்புகள் ஏற்படுத்தப்படும்.

அனைத்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் பயிலும் மாணவ மாணவிகளுக்குத் தனித்தனியாக, போதுமான அளவில் கழிப்பறைகள் அமைப்பதை இந்த அரசு உறுதி செய்துள்ளது. மாணவிகளின் வசதிக்காக எரியூட்டிகள் (Incinerator) அமைக்கப்பட்டுள்ளன. மேலும் மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் பள்ளிகளில் சுற்றுச்சூழல் சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3.6.1. திட்ட செயலாக்கம் 2011 – 12 முதல் 2015 – 16 வரை:

2011 – 12 முதல் 2015–16 வரை இத்திட்டத்திற்காக ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மொத்தம் 48,011 பணிகள் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. ஆண்டு வாரியான பணிகளின் விவரம் கீழ்க்கண்டவாறு:

**அட்டவணை 3.8**

| வ. எண் | பணிகளின் விவரம் | பணிகளின் எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 | 2015–16 | கூடுதல் |
| புதிய பணிகள் | | | | | | | |
| 1 | பள்ளி கட்டடம் | 155 | 58 | 113 | 84 | 152 | 562 |
| 2 | சமையல் கூடம் | 1049 | 618 | 232 | 107 | 41 | 2047 |
| 3 | கழிப்பறை | 847 | 523 | 563 | 375 | 302 | 2610 |
| 4 | குடிநீர் வழங்கல் | 2217 | 893 | 1267 | 924 | 455 | 5756 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | சுற்றுச் சுவர் | 9 | 1191 | 544 | 1108 | 571 | 3423 |
| **துணை மொத்தம்** | | 4277 | 3283 | 2719 | 2598 | 1521 | 14398 |
| **பழுதுபார்ப்பு பணிகள்** | | | | | | | |
| 1 | பள்ளி கட்டடம் | 1228 | 2063 | 3536 | 4590 | 4664 | 16081 |
| 2 | சமையல் கூடம் | 1397 | 1189 | 1099 | 839 | 652 | 5176 |
| 3 | கழிப்பறை | 3516 | 2534 | 2686 | 2024 | 1596 | 12356 |
| **துணை மொத்தம்** | | 6141 | 5786 | 7321 | 7452 | 6912 | 33613 |
| **பெரு மொத்தம்** | | 10418 | 9069 | 10040 | 10051 | 8433 | 48011 |

மேலும், இத்திட்டம் **2016–17**ம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.

## 3.7. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

சட்டமன்ற உறுப்பினர் ஒவ்வொருவரும் தங்களது தொகுதியின் உட்கட்டமைப்புத் தேவைகளைக் கண்டறிந்து, அதன் அடிப்படையில் நிறைவேற்ற வேண்டிய பணிகளை இத்திட்டத்தின்கீழ் பரிந்துரை செய்வர். இத்திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில், ஒவ்வொரு தொகுதிக்கும், ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூ.**2.00** கோடி வழங்கப்பட்டு வருகிறது.

தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்வாக அனுமதி வழங்கி செயல்படுத்தும் முகமையினை நிர்ணயிப்பார். தொகுதிக்கான மொத்த ஒதுக்கீட்டில் ரூ.**1.10** கோடி நிதியை அரசால் குறிப்பிடப்பட்ட முன்னுரிமைப் பணிகளுக்கும் மீதமுள்ள ரூ.**90** இலட்சம் நிதியினை சட்ட மன்ற உறுப்பினர் தனது விருப்பப்படி திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிட்டுள்ள பணிகளுக்காகவும் ஒதுக்கீடு செய்யலாம்.

### 3.7.1. சிறப்பம்சங்கள்

**வரையறுக்கப்பட்ட நிதி தொகையான ரூ.1.10 கோடியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கான (மாநகராட்சி /நகராட்சி/ஊராட்சி ஒன்றியம் / அரசு பள்ளிகள் மட்டும்) கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணி | : | ரூ.25.00 இலட்சம் |
| 2. | ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் அங்கன்வாடி கட்டிடங்கள், சத்துணவு மையக் கட்டிடங்கள், சத்துணவு சமையற்கூடங்கள் கட்டுதல், அங்கன்வாடி சமையல் அறையை நவீனப்படுத்துதல் | : | ரூ..20.00 இலட்சம் |
| 3. | குடிநீர் வழங்கல் பணிகள் | : | ரூ.15.00 இலட்சம் |
| 4. | சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்தம் விருப்பத்தின் அடிப்படையில் தடைசெய்யப்பட்ட பணிகள் நீங்கலாக கீழ்க்கண்டவாறு பணிகளைத் தேர்வு செய்யலாம். | : | ரூ.50.00 இலட்சம் |

**ஊரக மற்றும் நகர்புறப் பகுதிகளில் ;**

1. ஊரகப் பகுதிகளில் சூரிய சக்தி தெரு விளக்குகள் நிறுவுதல்/ அரசு கட்டடங்களின் கூரை மேல் சூரிய ஒளி சக்தி நிறுவுதல்/ நகர்ப்புறங்களில் LED தெருவிளக்குகள் அமைத்தல்.

2. சரளை மற்றும் கப்பிச்சாலைகளை தார்ச்சாலையாக மேம்படுத்துதல்
3. மிகவும் பழுதடைந்துள்ள தார்சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார்சாலைப் பணி மட்டும் மேற்கொள்ளல்)
4. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்
5. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்பு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு விடுதிகள், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு பல்தொழில் பயிலகங்கள் ஆகியவைகளுக்கு கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல்.
6. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு ஆதரவற்றோர் விடுதிகள் ஆகியவைகளுக்கு உள்கட்டமைப்பு வசதி செய்தல்
7. பாலங்கள் கட்டுதல்
8. இடுகாடு மற்றும் சுடுகாடு வசதி இல்லாத கிராம ஊராட்சிகளில் கூடுதலாக இவ்வசதிகளை அமைத்தல். நகர்ப்புற பகுதிகளில் அமைந்துள்ள சுடுகாடு/இடுகாடுகளில் சுற்றுச் சுவர் மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.
9. வக்ஃப் வாரியத்தில் (Wakf Board) பொது சொத்தாக பதிவு செய்யப்பட்ட மயானங்களுக்கு சுற்றுச்சுவர்/வேலி அமைத்தல். தற்போது வக்ஃப் வாரியத்திற்கென பொறியியல் பிரிவு இல்லை என்பதால், இப்பணிகளை மேற்கொள்ள தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைப்பு செய்யப்படுகிறது.
10. பொது விநியோக கடைகளுக்கு கட்டடங்கள் கட்டுதல்.
11. உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொத்துகளாக இருக்கும் வகையில் உபகரணங்களுடன் கூடிய உடற்பயிற்சிக் கூடம் / ஜிம்னாசியம் கட்டடங்கள் கட்டுதல்.

ஊரகப் பகுதிகளில் மேற்குறிப்பிட்ட பணிகளுடன் கூடுதலாக பெண்கள் மற்றும் ஆண்களுக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டும் பணிகளையும் மேற்கொள்ளலாம்.

நகர்ப்புற பகுதிகளில் மேற்குறிப்பிட்ட பணிகளுடன் கூடுதலாக, மழைநீர் வடிகால் வசதிகளுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் நடைபாதைகள் அமைத்தல், புதிய பொதுப் பூங்காக்கள்அமைத்தல், பொதுக் கழிப்பிடங்கள் கட்டுதல், ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் ஹைட்ராலிக் விசையால் இயக்கப்படுகின்ற

கழிவகற்றும் இயந்திரங்களை வாங்குதல் ஆகிய பணிகளையும் மேற்கொள்ளலாம்.

## வரையறுக்கப்படாத தொகையான ரூ.90 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்ட பட்டியலில் உள்ள கீழ்க்கண்ட பணிகளைத் தவிர, ஏனைய பணிகளை வரையறுக்கப்படாத திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (பயணிகள் நிழற் குடை அமைப்பது இக்கூறில் எடுத்துச்செய்ய அனுமதிக்கப்படுகிறது).

## தடை செய்யப்பட்ட பணிகள்

1. மத்திய, மாநில அரசுத் துறைகள் பொதுத் துறை நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள் ஆகியவைகளுக்கான அலுவலக கட்டிடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல். **விதிவிலக்கு (i)** நேரடிக் கொள்முதல் நிலையங்கள், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடங்கள், மொத்த குளிர்பதன மையக்கட்டடங்கள். **(ii)** அரசாணை நிலை எண். 179 ஊ.வ.மற்றும் ஊராட்சி (மா.அ.தி) துறை நாள். 19.12.2013ன்படி மொத்தம் மதிப்பீட்டு தொகை ரூ213.15 இலட்சத்தில் 84 சட்டமன்ற உறுப்பினர்கள் அலுவலகங்களுக்கு சுற்றுச் சுவர் கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.



2. தனி நபர்/குடும்பப் பயனுக்காக சொத்துக்களை உருவாக்குதல், (விதிவிலக்கு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட வழிகாட்டுதலின்படி பேரூராட்சிகளில் புதிய வீடுகள் கட்டுதல்)
3. அனைத்து வகையான பராமரிப்பு, பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளுதல். **விதிவிலக்கு** – அரசுத் திட்டங்களான இந்திரா நினைவு குடியிருப்புத்திட்டம், தாட்கோ திட்டம் மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் 31.12.2006 வரை கட்டப்பட்ட வீடுகளை வீடு ஒன்றுக்கு ரூ.50,000/–க்கு மிகாமல் பழுது நீக்கும் பணிகளை மேற்கொள்ளுதல். இருப்பினும், இப்பணிகளை எடுத்துக்கொள்ளும் முன்னர் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் மற்றும் தாட்கோ நிறுவனத்திடமிருந்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.
4. அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குதல்,–**விதிவிலக்கு** (i) அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு தங்கும் விடுதிகள், அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசு தொழில்பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு பல்தொழில் பயிலகங்கள்

ஆகியவற்றிற்கு தளவாடச் சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல். (ii) மாற்றுத் திறனாளிகளுக்கு கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல். (iii) போலியோ மற்றும் மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டோருக்காக CP Chair வாங்குதல் மற்றும் மனவளர்ச்சி குன்றிய சிறப்பு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு அறிவுத்திறனை மேம்படுத்தும் பொருட்டு, மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு கற்பிக்கும் கருவி கலப்பெட்டிகள் வாங்குதல். (iv) உடற்பயிற்சிக் கூடம் / ஜிம்னாசியம் ஆகியவற்றிற்கு தேவையான உபகரணங்கள் வாங்குதல். (v) தற்போதுள்ள அரசு கட்டடங்களில் சூரிய மின் ஒளிகலன்கள் நிறுவுவதற்காக உபகரணங்கள் வாங்குதல்

5. அரசு உதவி பெறும் பள்ளிகள், சுயநிதிப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் எவ்விதப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.
6. அனைத்து வணிக நிறுவனங்கள் / அலகுகள் குறித்த பணிகள்.
7. மானியம் மற்றும் கடன், மத்திய, மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்கு பங்களித்தல்.
8. நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்.



9. முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகள் அல்லது இனங்களுக்கான தொகை மீளச் செலுத்துதல்.
10. அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்.
11. மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள் / குழுக்களுக்கு சொந்தமான நிலங்களில் பணிகள்.
12. குட்டைகள், ஊரணிகள், ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் வாய்க்கால் போன்றவைகளைத் தூர் வாருதல்.
13. சரளை / கப்பி சாலைகள் (தார்சாலை வரை அமைக்கும் சாலைப்பணிகளை மட்டுமே எடுத்துக்கொள்ளலாம்).
14. உயர் மின்கம்ப விளக்குகள் பொருத்துதல்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் மொத்த நிதியில் 21 சதவீத ஊரகப்பகுதிகளில் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் அதிக எண்ணிக்கையில் வாழும் பகுதிகளிலும் அல்லது நகர்புறங்களில் குடிசை பகுதிகளில் வாழும் மக்களும் பயன்பெறும் வகையில் அப்பகுதிக்கென ஒதுக்கப்பட வேண்டும்.

### 3.7.2. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கம்

இத்திட்டத்தின் கீழ் 2015–16–ம் ஆண்டில் ரூ.470 கோடி நிதி ஒதுக்கீட்டில் 14,682 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

2016–17–ம் ஆண்டிலும் இத்திட்டத்திற்கு ரூ.470 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.8. தன்னிறைவுத் திட்டம்

தன்னிறைவுத்திட்டம், திட்டமிடுதல், நிதி ஆதாரங்களை திரட்டுதல், செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்ற வளர்ச்சி பணிகளில் சமுதாயத்தினை நேரடியாக ஈடுபடுத்திட வழிவகை செய்கிறது. தொழில்நுட்ப உதவி மற்றும் நிதி உதவி அளித்து அரசு இத்திட்டத்தினை செயல்படுத்துகிறது.

இத்திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் 2011–12–ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

### 3.8.1. பொதுமக்கள் பங்களிப்பு

கண்டறியப்படும் பணிக்கான மதிப்பீட்டு தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் பொதுமக்களின் பங்களிப்பு இருக்கவேண்டும்.

### 3.8.2. பணிகளை தேர்வு செய்தல்

1) தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் பணிகளை எடுத்து செய்வதற்கான தேவை குறித்த கருத்து, தனிநபர், குழுக்கள், நிறுவனங்கள், பொது அல்லது தனியார் நிறுவனங்கள் அல்லது சமுதாயம் ஆகியவற்றின் மூலமாக உருவாகலாம்.



2) மாவட்ட ஆட்சித்தலைவர், மேற்கொள்ளப்பட வேண்டிய பணியின் அத்தியாவசியத் தேவை மற்றும் அதனை நடைமுறைப்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் குறித்து திட்டவழிகாட்டு நெறிமுறைகளின்படி பரிசீலனை செய்வார். பணியின் தேவை நிறைவு அளிக்கும் பட்சத்தில், திட்டப் பணியினை மேற்கொள்ளவிருக்கும் முகமையிடம் விளக்கமான மதிப்பீட்டினை மாவட்ட ஆட்சித்தலைவர் கோருவார். அனுமதி வழங்க ஏதுவாக, விண்ணப்பதாரர் உரிய தொகைக்கான கேட்பு வரைவோலையை மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநரிடம் செலுத்தவேண்டும்.
3) உள்ளாட்சி அமைப்பு, பல்கலைக் கழகங்கள் வழங்கும் பங்களிப்பு நிதி இத்திட்டத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
4) பணிகளை மேற்கொள்ள உள்ளாட்சி அமைப்பு அல்லது சம்மந்தப்பட்ட துறையின் அனுமதி தேவையெனில் அதற்கான அனுமதி, நிர்வாக அனுமதி வழங்குவதற்கு முன் பெறப்படவேண்டும்.
5) உருவாக்கப்படும் சொத்துக்கள், உள்ளாட்சி அமைப்பு அல்லது துறையின் பராமரிப்பின் கீழ் இருக்கவேண்டியிருப்பின், அச்சொத்துக்களை

உருவாக்க, உள்ளாட்சி அமைப்பு/துறையின் ஒப்புதலை பெறவேண்டும்.

6) இத்திட்டத்தின் கீழ் குறைவாக நிதி இருக்கும் பட்சத்தில், பல்வேறு பணிகளை செய்ய கோரிக்கைகள் வரப்பெறின் அவற்றுள் மிக அதிக அளவில் சமுதாயத்திற்கு பயன்தரும் பணிகளை மாவட்ட ஆட்சியர் கண்டறிந்து அத்தகைய பணிகளுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும்.

### 3.8.3. பணிகளை நிறைவேற்றுதல்

சம்மந்தப்பட்ட துறைகள் அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998–ன்படி ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் செயல்படுத்தப்படும்.

மக்கள் இத்திட்டத்தில் பெரிய அளவில் பங்கேற்க ஏதுவாக, பொதுமக்களோ அல்லது பணிக்கான பங்களிப்பை அளித்தவர்களோ, பணியை தாங்களாகவோ அல்லது அவர்களின் முகவர்கள் மூலமாகவோ செய்திட விரும்பினால் மாவட்ட ஆட்சித்தலைவர் இந்த கோரிக்கையை ஆய்வு செய்து, அப்பணியின் மதிப்பீட்டில், பொது மக்களின் பங்களிப்பு 50 சதவீதம் அல்லது அதற்கு மேல் இருந்தால் பங்களித்தவரையோ அல்லது அவரின் முகவரையோ, அப்பணியை செயல்படுத்த அனுமதி வழங்குவார். ஆனால் பொதுப்பணித் துறை கட்டுப்பாட்டில் உள்ள குளங்கள் மற்றும் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ள நீராதாரக் குளங்களைத் தூர்வாரும் பணியின் மதிப்பீட்டில் 50



விழுக்காட்டிற்கும் மேலாக பொதுமக்களின் பங்களிப்புத் தொகை இருப்பினும், ஒப்பந்தப்புள்ளி முறையைப் பின்பற்றியே அப்பணியை மேற்கொள்ள வேண்டும்.

### 3.8.4. 2011 – 12 முதல் 2015 – 16 வரையிலான திட்ட செயல்பாடு

2011 –12 முதல் 2015 –16 வரை மொத்தம் 10,801 சமுதாயத்திற்கு பயன்தரத்தக்க சொத்துக்கள் ரூ.694.34 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்ட விவரம் கீழ்கண்ட அட்டவணையில் உள்ளது.

**அட்டவணை 3.9**

| வ. எண். | பணிகள் | பணிகளின் எண்ணிக்கை | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 | 2015–16 | |
| 1 | குடிநீர் வழங்குதல் | 390 | 443 | 460 | 271 | 181 | 1745 |
| 2 | கொள்முதல் மற்றும் விநியோகம் | 496 | 425 | 295 | 501 | 509 | 2226 |
| 3 | பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் | 20 | 8 | 5 | 42 | 36 | 111 |
| 4 | நீர்ப்பாசன பணிகள் | 463 | 425 | 463 | 407 | 374 | 2132 |
| 5 | கட்டடங்கள் | 473 | 440 | 355 | 377 | 299 | 1944 |
| 6 | கதிரடிக்கும் கலம் | 8 | 8 | 15 | 8 | 14 | 53 |
| 7 | சாலைகள் | 715 | 485 | 432 | 531 | 413 | 2576 |
| 8 | இதர பணிகள் | 0 | 0 | 7 | 5 | 2 | 14 |
| மொத்தம் | | 2565 | 2234 | 2032 | 2142 | 1828 | 10801 |

மேலும், இத்திட்டம் 2016–17ம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும் .

### 3.9. முழு சுகாதார தமிழகம்

### மாநில அரசின் முன்முயற்சிகள்

தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை அனைவரும் பெறுவதற்கு தேவையான சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளை இந்தியாவிலேயே தமிழ்நாடு பெற வேண்டும் என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தமிழ்நாடு தொலைநோக்கு 2023–ன் இலக்காகும். திறந்தவெளி மலம் கழித்தல் அற்ற **"முழு சுகாதார தமிழகம்"** என்ற இலக்கினை விரைந்து அடைய, அனைத்து பங்கேற்பாளர்களையும் ஒருங்கிணைத்து மக்கள் இயக்கமாக செயல்படுத்துவது அவசியமாகிறது.

மாநிலத்தில் சுகாதாரப் புரட்சி ஏற்படுத்தும் விதமாக தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னோடி முன்முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ஊரக மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு அடிப்படை சுகாதார வசதிகள் மேற்கொள்ளும் பொருட்டு ஊராட்சிக்கு ஒன்று வீதம் அப்போது இருந்த 12,618 கிராம ஊராட்சிகளில், ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் 2001–04 வரையிலான காலத்தில் கட்டப்பட்டன. முழுமையான சுகாதாரத்தை எய்துவதற்கான தாக்கத்தினை ஏற்படுத்தும் பொருட்டு, 2003ம் ஆண்டு, தூய்மையான கிராம இயக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது. தனிநபர் இல்லக் கழிப்பறை கட்ட அப்போது இருந்த அலகுத் தொகை



குறைவாக இருந்ததால் தமிழ்நாடு அரசு, 2012ம் ஆண்டு ஏப்ரல் மாதம் மாநில அரசின் கூடுதல் பங்குத் தொகையாக கழிப்பறை ஒன்றுக்கு ரூபாய் 1,500 வழங்க ஆணையிட்டது. ஊரக மகளிருக்கு சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்பட்டதை போன்று, 2012–13ம் ஆண்டு ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது. ஜூலை 2013ம் ஆண்டு, மாநில அளவில், தகவல், கல்வி மற்றும் தொடர்பு இயக்கம் தொடங்கப்பட்டது. மேலும், அனைத்து துறையைச் சார்ந்த கிராம அளவிலான அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்களை ஈடுபடுத்தி நேர்முக தகவல் பரிமாற்றம் வாயிலாக மூலம் தனிநபர் இல்லங்களில் சுகாதார வசதியின் தேவையை ஏற்படுத்துவதன் மூலம் ஒட்டுமொத்த சுகாதார வசதிகள் அடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கிராம அளவில் சமூகம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான மகளிர் சுய உதவிக்குழுக்களின் கூட்டமைப்பு ஆகியவற்றை தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுதல் மற்றும் அதன் பயன்பாட்டைக் கண்காணித்தல் ஆகியவற்றில் ஈடுபடுத்தப்படுதல் என்பது சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கான ஒரு சிறப்பான உத்தியாக அமைந்துள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட 9,000 கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதில், "தூய்மைக் காவலர்கள்" அறிமுகப்படுத்தியதன் மூலம் மேற்படி கிராமங்கள்

தூய்மையாக பராமரிக்கப்படுவதை தெளிவாக உணர முடிவதுடன் அது வெளிப்படையான ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. ஊரக பகுதியில் உள்ள அரசு பள்ளிகளில் சுகாதார வசதிகளை தொடர்ந்து பராமரித்திட வேண்டி, தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பள்ளி கழிப்பறைகள் சுத்தமாக பராமரிப்பதுடன் அவை பயன்பாட்டில் உள்ளதை உறுதி செய்யப்பட்டுள்ளது. தேசிய அளவில் மேற்படி முன்முயற்சிகள் முன்னோடியாக திகழ்கின்றன.

**3.10. ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் புனரமைத்தல்.**

மகளிருக்கான சுகாதார தேவைகளை நிறைவேற்றும் விதமாக, தமிழகத்திலுள்ள அப்போதிருந்த அனைத்து 12,618 கிராம ஊராட்சிகளிலும் சுமார் 750 சதுர அடி பரப்பளவில், ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் கட்ட, 2001ம் ஆண்டில் இந்த அரசால் முடிவெடுக்கப்பட்டது. ஒவ்வொரு வளாகமும் 14 கழிப்பறைகள், 2 குளியலறைகள், 1 விசைப்பம்பு அறை, 1 தண்ணீர் தொட்டி மற்றும் துணி துவைக்கும் மேடை ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். குளிக்கவும், துணி துவைக்கவும், தேவையான தண்ணீர் வசதி ஏற்படுத்தப்பட்டது. தண்ணீர் வசதி மற்றும் விளக்குகளுக்கு தேவையான மின் வசதியைக் கிராம ஊராட்சிகள் வழங்கி தொடர்புடைய குடும்பங்கள் அதனைப் பராமரித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டன. ஒவ்வொரு வளாகத்திலும் பெண்கள் பயன்படுத்திய நாப்கின்களை



சுகாதாரமாக அப்புறப்படுத்திட எரியூட்டிகள் அமைக்கப்பட்டுள்ளது.

2006 முதல் 2011ம் ஆண்டு வரை, போதுமான கவனிப்பு இல்லாததால், பெரும்பாலான மகளிர் சுகாதார வளாகங்கள் முறையான பயன்பாடு மற்றும் பராமரிப்பு இல்லாமல் போனது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில், பழுதடைந்திருந்த 12,796 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள், 2011 –12ம் ஆண்டில், ரூ.170 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டு ஊரகப் பெண்களுக்கு அடிப்படை சுகாதாரம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த வளாகங்களின் தினசரி பராமரிப்பினை பயன்படுத்துவோர் குழுக்களே எடுத்துச் செய்வதுடன், இதன் தொடர் பராமரிப்பு சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியால் மேற்கொள்ளப்படுகிறது.

**3.11. ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஊரக மகளிருக்கு ஏற்படுத்திக்கொடுத்த ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாக வசதியைப் போல, ஊரகப் பகுதிகளிலுள்ள ஆடவர்களும் இது போன்ற வசதிகளை வழங்கக் கேட்டுக் கொண்டதின் அடிப்படையில், 2012–13ம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் அமைத்திட ஆணையிட்டார்கள். தமிழ்நாட்டில் ரூ. 35 கோடி மதிப்பீட்டில், 770 ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டன.

ஒவ்வொரு வளாகமும், 570 சதுர அடி பரப்பளவில், 8 கழிப்பறைகளை உள்ளடக்கியதாகவும், இதில் முதியோர் / மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் ஒரு நவீன கழிப்பறையும் (Western Closet), இளம்சிறார்கள் பயன்படுத்தக் கூடிய வகையில் குழந்தை நேயக் கழிப்பறையும் (Baby Friendly Toilet) இருக்கும். தண்ணீர் வசதியுடன் கூடிய குளிக்கும் இடம், துணி துவைக்கும் மேடை ஆகியவையும் இருக்கும். இதன் தொடர் பயன்பாட்டிற்காக ஒவ்வொரு வளாகத்திலும் தனியாக தண்ணீர் வசதி உறுதி செய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் பராமரிக்கப்படுவது போல, இந்த வளாகங்களின் தினசரி பராமரிப்பினை பயன்படுத்துவோர் குழுக்களால் எடுத்துச் செய்யப்படுகிறது. தேவையின் அடிப்படையில், 429 கிராம ஊராட்சிகளில் ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் 2014–15ம் ஆண்டில் கட்டப்பட்டுள்ளன.

### 3.12. தூய்மையான கிராம இயக்கம்

தமிழ்நாட்டில் சுகாதாரப் புரட்சியின் மூலம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு, இந்த அரசால் 2003ம் ஆண்டில் ''தூய்மையான கிராம இயக்கம்'' துவக்கப்பட்டது. இவ்வியக்கம், சுற்றுச்சூழல் சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும். திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற தூய்மையான சுற்றுச்சூழல் உடைய கிராம ஊராட்சிகள் மாநில அரசு வழங்கும் விருது தொகை



ரூபாய் 5 இலட்சம் பெற பரிந்துரை செய்ய தகுதியானதாக இருந்தன.

2006ம் ஆண்டு கைவிடப்பட்ட இத்திட்டம் 2011–12ம் ஆண்டில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டு, ஆண்டுதோறும் ரூ.1.55 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு கிராம ஊராட்சி வீதம் தேர்வு செய்யப்பட்டு, 31 கிராம ஊராட்சிகளுக்கும் ஒரு ஊராட்சிக்கு ரூ.5 இலட்சம் என்ற அடிப்படையில் பரிசுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

### 3.13. தனிநபர் இல்லக் கழிப்பறை அமைக்கப்படுவதில் அரசினால் மேற்கொள்ளப்படும் உத்திகள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாட்டை திறந்த வெளி மலம் கழித்தல் அற்ற மாநிலமாக ஆக்குவதற்கு பல்முனை உத்திகளை மேற்கொண்டு அனைத்து பங்கேற்பாளர்களையும் ஒருங்கிணைத்து மக்கள் இயக்கமாக சுகாதார எழுச்சி உருவாக்கி அதன் மூலம் திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் வேரறுக்கப்படும் வேண்டும். தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுவதற்கு திட்டமிடுதல், நடைமுறைபடுத்துதல் மற்றும் அதன் பயன்பாட்டை கண்காணித்தல் குறித்த விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை எண்.68 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–1) துறை நாள் 16.6.2016ல் தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.

இந்த வழிகாட்டு நெறிமுறையின் நோக்கமானது, கிராம ஊராட்சி அளவில் சுகாதார திட்டத்திற்கு மக்களிடம் ஆர்வத்தை ஏற்படுத்துதல், திட்டமிடுதல், நடைமுறைப் படுத்துதல், ஊக்கத்தொகை அளித்தல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றிற்கு விரிவான செயல் திட்டமளித்தல் ஆகும். இந்த வழிகாட்டி நெறிமுறைகளின் விரிவான குறிக்கோள்கள் கீழ் வருமாறு:

- திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கமற்ற மாநிலமாக தமிழகத்தை குறிப்பிட்ட கால வரையறைக்குள் மாற்றும் பொருட்டு, ஊரகப் பகுதிகளில் சுகாதாரத் திட்டத்தினை முடுக்கி விடுதல்.
- திட்டப் பங்கேற்பாளர்களான ஊராட்சி அமைப்பின் பிரதிநிதிகள், சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்பு சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, பல்வேறு அரசுத் துறைகளின் களப்பணியாளர்கள், ஊக்குவிப்பாளர்கள் ஆகியோரைத் தீவிரமாக ஈடுபடுத்தி திறந்தவெளி மலம் கழித்தலை அறவே ஒழித்தல்.
- முழுசுகாதரத்திற்கு சமூக அணுகுமுறையினை பயன்படுத்தி, பயிற்சி பெற்ற ஊக்குவிப்பாளர்கள் மற்றும் இதர பங்கேற்பாளர்கள் மூலம், திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையை அடைய வேண்டிய முக்கியத்துவத்தை சமூகத்திற்கு கற்பித்தல்.



- தொடர் மனமாற்ற நடவடிக்கைகள் (Behavioural change) மூலம் நீடித்து நிலைத்த, பாதுகாப்பான சுகாதார நடைமுறையை தொடந்து பின்பற்றச் செய்தல்.

மேற்குறிப்பிட்ட விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வாயிலாக கிராம ஊராட்சி அளவில் செயல்படும் சமூகம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றின் ஈடுபாட்டுடன் உரிய நோக்கத்தினை அடைய ஏதுவாகும். தற்போது திறந்தவெளியில் மலம் கழிக்கும் குடும்பத்தினர், கழிப்பறையைக் கட்டிப் பயன்படுத்திட மக்களிடையே நேர்முக தகவல் பரிமாற்றம் (Inter Personal Communication) மற்றும் தகவல் தொடர்பினால் அவர்களின் பழக்க வழக்கத்தை மாற்றம் செய்வது சாத்தியம் ஆகும். எனவே, சமூகம் சார்ந்த அமைப்புகள் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத கிராமங்களை உருவாக்கும் நோக்கத்தினை அடைய பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவர்களாக உள்ளனர்.

இத்திட்டத்தைப் பயனுள்ள வகையில் செயல்படுத்திட கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அவை தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன:

- கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினால் ஈடுபடுத்தப்படும் சமூக பயிற்றுநர்கள் (சுகாதாரம்) / சமூக வல்லுநர்கள்

(சுகாதாரம்) ஆகியோர்களுக்கு ஒரு அடிப்படைத் திறன் கட்டமைப்பு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி செயலர்கள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும் இதே போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

- ஒவ்வொரு தனிநபர் இல்லக் கழிப்பறைக்கும் அதிகபட்ச ஊக்க நிதியாக ரூ.300 கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு இரண்டு தவணைகளில் விடுவிக்கப்படுகிறது. முதல் தவணையாக, தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டி தொடர்ந்து ஆறு மாத காலத்திற்கு பயன்படுத்தப்பட்ட பின்பு ரூ.200 மற்றும் மேற்படி கழிப்பறை ஒரு ஆண்டிற்கு மேல் தொடர்ச்சியாக பயன்பாட்டில் இருப்பதை உறுதி செய்த பின்னர் இரண்டாவது தவணையாக ரூ.100 விடுவிக்கப்படும்.
- மாதிரி வடிவமைப்புகள் மற்றும் விரிவான மதிப்பீடு வழங்கப்பட்டதன் மூலம் கழிப்பறை கட்டுமானத்தில் தொழில்நுட்பத் தன்மை உறுதி செய்யப்பட்டுள்ளது. கழிப்பறை கட்டுமானத்தில் தொழில்நுட்பத் தன்மை குறித்த குறும்படம் ஒன்று யுனிசெஃப் உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி குறும்படத்தில் கழிப்பறை கட்டுமானத்தில் பல்வேறு மாதிரிகளான



உறிஞ்சு குழி முறை (தேன்கூடு முறை மற்றும் வட்ட வடிவிலான உறை கட்டுமானம்) மற்றும் கழிவுத் தொட்டி முறை கட்டமைப்பு முதலியன கட்டுவது குறித்து எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டச் செயல்பாட்டில் ஈடுபடுத்தப்படும் தொழில்நுட்பம் அறிந்த மற்றும் தொழில்நுட்பம் அறியாத இரு தரப்பினரும் இதன் மூலம் பயனடைந்துள்ளனர்.

- இத்திட்டத்தின் கீழ் பயனாளிக்கு இரண்டு தவணைகளில் நிதி விடுவிப்பதை விரைவுபடுத்த வேண்டி, பணி மதிப்பீட்டுச் சான்று அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் தொழில்நுட்ப அலுவலர் (பணி மேற்பார்வையாளர்) அளவீடுகள் செய்யும் நடைமுறை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பணிப் பார்வையாளர்கள் தங்கள் பகுதிக்குட்பட்ட தனிநபர் இல்லக் கழிப்பறைகளை பார்வைவிட்டு பணி முன்னேற்றத்தின் அடிப்படையில் பணி மதிப்பீட்டுச் சான்று வழங்குவார்கள். இதன் மூலம் தொகை விடுவிப்பு நடைமுறை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.
- ஏழ்மை நிலையில் உள்ள பயனாளிகளுக்கு போதுமான நிதிவசதி இல்லாத காரணத்தால் கட்டுமானப் பணிகள் தொடங்குவதில் சிரமம் ஏற்படுவதை கருத்திற் கொண்டு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்/ ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு

ஆகியவற்றின் நிதியில் இருந்து ரூ.5,000 முன்பணமாக வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

- கழிப்பறைகள் தரமான முறையில் கட்டுவதையும், அதன் தொடர் பயன்பாட்டினை உறுதி செய்யும் வகையிலும் வட்டார, மாவட்ட அளவிலான உயர் அலுவலர்கள் மூலம் தொடர்ந்து கள ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. மேலும், மாநில தர கண்காணிப்பு அலுவலர் மூலம் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுமானம் குறித்து சிறப்பினமாக ஆய்வு மேற்கொள்ள அனுப்பப்படுகின்றனர்.
- **மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு கொத்தனார் பயிற்சி அளித்தல்:** நடப்பாண்டில் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் கட்டுமான பணியாளர்களில் குறைந்த பட்சம் ஐந்து மகளிர் சுயஉதவி குழு உறுப்பினர்களை கண்டறிந்து அவர்களுக்கு கொத்தனார் பயிற்சி மற்றும் கழிப்பறை கட்டுதலில் தொழில் நுட்பரீதியாக பயிற்சி அளிக்கப்படும்.

### 3.14. திறந்த வெளியில் மலம் கழித்தலை ஒழித்தல் குறித்த திட்டம் தயாரித்தல் மற்றும் திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையை அடைய சமூக அணுகுமுறையை பயன்படுத்துதல்.

- மாவட்ட ஆட்சி தலைவர்கள், கண்டறியப்பட்ட ஒவ்வொரு கிராம ஊராட்சி மற்றும் வட்டாரத்திற்கும் திறந்த வெளியில் மலம் கழித்தலை ஒழித்தல் குறித்த திட்டம் தயாரித்து அதன் மூலம் திறந்தவெளியில்



மலம் கழித்தல் அற்ற நிலையினை அடைவதற்கான மைல்கல்லை, உன்னிப்பாக கண்காணிப்பதற்கு ஏதுவாகும்.

- கிராம ஊராட்சிகள் திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையினைஅடைவதற்கு சமூக அணுகுமுறை விரிவாக பயன்படுத்தப்படுகிறது. சமூக அணுகுமுறை என்பது கிராம சமுதாயத்தில் சுகாதார நிலையை ஆய்வு செய்தல், நடைப்பயணம் மேற்கொள்ளுதல், மலம் கழிக்கும் இடத்தை கிராம வரைபடம் மூலம் விளக்குதல், அருவறுப்பை தூண்ட செய்தல், தீப்பொறிபோல் சுகாதாரத்தைப் பரவச்செய்தல், செயல்முறை திட்டம் தயாரித்தல், சமூக நடவடிக்கை மற்றும் தொடர் நடவடிக்கை மூலம் கண்காணித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.
- திறந்த வெளியில் மலம் கழித்தலை ஒழித்தல் குறித்த திட்டத்தின்படி, நடப்பாண்டில் திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையை அடைய இலக்கிடப்பட்ட கிராம ஊராட்சிகளில் சமூக அணுகுமுறை அறிமுகப்படுத்தப்படும்.
- இலக்கிடப்பட்ட கிராம ஊராட்சிகளில், சமூக அணுகுமுறையில் பயிற்சி அளிக்கப்பட்ட அதிகபட்சமாக இரண்டு ஊக்குவிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள். கிராம ஊராட்சி திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையினை

அடைந்ததை, மாநில அளவிலான சரிபார்க்கும் குழு உறுதி செய்த பிறகு ஒவ்வொரு ஊக்குவிப்பாளருக்கும் தலா ரூபாய். 5,000/– ஊக்கத்தொகையாக வழங்கப்படும்.

### 3.14.1. திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையினை அடைதல்:

- திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையினை அடைந்த பிறகு கிராம ஊராட்சியானது அதனை கிராம சபை கூட்டத்தில் அறிவிப்பு செய்யப்பட வேண்டும். அதே நிலை தொடர்ந்து நீடித்து நிலைக்க தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டும். மேற்படி அறிவிப்பானது, சட்டரீதியாக நடைபெறும் கிராம சபை கூட்டங்களான, மே மாதம் 1ம் தேதி, ஆகஸ்ட் மாதம் 15ம் தேதி, அக்டோபர் மாதம் 2ம் தேதி அல்லது ஜனவரி மாதம் 26ம் தேதி அல்லது இதற்காக பிரத்யேகமாக கூட்டப்படும் சிறப்பு கிராம சபை கூட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும். மேற்படி கிராம ஊராட்சியின் அறிவிப்பின் அடிப்படையில், வழிகாட்டு நெறிமுறைகளின்படி மாவட்ட அளவிலான சரிபார்த்தல் அதன் பிறகு, மாநில அளவிலான சரிபார்த்தல் நடத்தப்பட்டு, திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நிலை அடைந்ததற்கான அங்கீகாரம் மற்றும் உறுதி செய்யப்படும்.



2015–16ம் ஆண்டு 1,632 கிராம ஊராட்சிகள், திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற ஊராட்சியாக, 2.10.2015 மற்றும் 26.1.2016 ஆகிய தேதிகளில் நடைபெற்ற கிராம சபை கூட்டங்களில் சுயமாக அறிவிப்பு செய்துள்ளன.

### 3.15. ஊரகப் பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மைத் திட்டம்

கிராம ஊராட்சிகள் தூய்மையாகவும் மற்றும் சுகாதாரமாகவும் இருப்பதற்கு அரசு தொடர்ந்து அதிக முன்னுரிமை அளித்து வருவதுடன் கிராம ஊராட்சிகளில் மறுசுழற்சி மற்றும் குப்பைகள் அகற்றுவதற்கான வசதிகளுடன் கூடிய முறையான திடக்கழிவுமேலாண்மை அமைப்புகள் ஏற்படுத்த, விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, 10,000க்கும் மேற்பட்ட மக்கள் தொகை உள்ள கிராம ஊராட்சிகள், பெரிய நகர்ப்புறத்தை ஒட்டிய கிராம ஊராட்சிகள், முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலா மற்றும் புனிதத்தலங்கள் உள்ள கிராம ஊராட்சிகள், பெரிய தொழிற்சாலைகள் / வணிக அமைப்புகள் /கல்வி நிறுவனங்கள் அடங்கிய கிராம ஊராட்சிகள் ஆகிய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தன்மைகள்கொண்ட கிராம ஊராட்சிகள் கண்டறியப்பட்டு, முதற்கட்டமாக 2,000 கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மேலும் இத்திட்டம், மாநகராட்சி ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகள், சிறப்பு நிலை நகராட்சிகள், மாவட்ட தலைநகரங்கள் உள்ள ஊராட்சிகள் மற்றும் 300

குடும்பங்களுக்கு மேலாக உள்ள கிராம ஊராட்சிகள் போன்ற குறிப்பிட்ட தன்மைகள் உடைய கிராம ஊராட்சிகள் கண்டறியப்பட்டு இரண்டாம் கட்டமாக 7,000 கிராம ஊராட்சிகளில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**இத்திட்டத்தின் முக்கிய சிறப்பம்சங்கள் பின்வருமாறு.**

i. ஒரே ஒரு குக்கிராமத்தைக் கொண்ட கிராம ஊராட்சியாக இருப்பின் இத்திட்டம் செயல்படுத்துவதற்கு அந்த கிராம ஊராட்சியே ஒரு தனி அலகாகும். பெரிய ஊராட்சியாக இருப்பின் ஒரு குக்கிராமத்தையோ அல்லது குக்கிராமங்கள் தொகுப்பாகவோ இத்திட்டம் செயல்படுத்த அலகாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

ii. திடக்கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கு முன்பு அவை மக்கும் குப்பை (Bio-degradable) மற்றும் மக்காத குப்பைகளாக (Non-Biodegradable) பிரிக்கப்படுகிறது.

iii. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், மக்கும் கழிவுகள் மூலம் உரம் தயாரிப்பதற்கு இரண்டு குழிகளும், மீதமுள்ள திடக்கழிவுகளை அப்புறப்படுத்த ஒரு குழியும் தோண்டப்படுகிறது.

iv. தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம ஊராட்சியில் 150 குடும்பத்திற்கு ஒரு பணியாளர் வீதம் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகளில் மகாத்மா



காந்தி தேசிய வேலை உறுதித் திட்டப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

v. “தூய்மைக் காவலர்கள்” என்று அழைக்கப்படும் இவர்கள், வீடு வீடாக குப்பைகளை சேகரித்தல், பிரித்தல் மற்றும் திடக் கழிவுகளை குழிகளுக்கு எடுத்துச் சென்று கொட்டுதல் போன்ற பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்

vi. இப்பணியாளர்களுக்கான ஊதியம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர்களுக்கு 100 நாட்களுக்கு மட்டுமே பணி வழங்க முடியும் என்பதால் குறிப்பிட்ட நிதியாண்டில் ஏற்கெனவே 100 நாட்கள் பணி முடித்த தூய்மை காவலர்களாக ஈடுபடுத்தப்படும் நபர்களுக்கு பதில், புதிய தொகுப்பு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர்கள் தூய்மைக் காவலர்களாக ஈடுபடுத்தப்படுவார்கள். அதே போல பணித்தள மேற்பார்வையாளர்கள் ஒவ்வொரு 100 நாட்களுக்கு பிறகு மாற்றப்படுவதன் மூலம் புதிய நபர்கள் மேற்பார்வை பணியில் அனுபவம் பெற உறுதி செய்யப்படுகிறது.

vii. திட்ட நிதியிலிருந்து மூன்று சக்கர மிதிவண்டிகள், தூய்மைப்படுத்தத் தேவையான உபகரணங்கள், தூய்மைக் காவலர்களுக்கு மேல் சட்டை, கையுறை

மற்றும் தொப்பி ஆகியவை, பிரித்தல் மற்றும் சேமிப்பதற்கான கொட்டகைகள், தெருவில் வைக்கும் குப்பை தொட்டிகள், நறுக்கும் இயந்திரம் மற்றும் தூய்மைப்படுத்தும் இயந்திரம் ஆகியவை வழங்கப்படுகிறது.

viii. கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவை தூய்மைக் காவலர்களை கண்காணிக்கும் ஒருங்கிணைப்பு முகமையாக செயல்படுகிறது.

**3.15.1. பயிற்சி திட்டங்கள்:**

இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் பொருட்டு, மாவட்ட, வட்டார மற்றும் கிராம ஊராட்சி அளவில் அலுவலர்களுக்கும், ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் இதர பங்கேற்பாளர்கள் ஆகியோர்களுக்கு தகுந்த பயிற்சியும், திட்டம் குறித்த விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படுகிறது.

**3.15.2. கணக்குகளை பராமரித்தல்:**

திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கென பெறப்படும் நிதியினை கண்காணிக்கவும், திட்டம் நீடித்து செயல்படுவதை உறுதி செய்யவும் கிராம ஊராட்சிகள் இதற்கென சேமிப்பு வங்கி கணக்கினை தனியாக பராமரிக்க வேண்டும். மக்கிய உரம், மண்புழு உரம், மறு சுழற்சி கழிவுகளை விற்பனை செய்வதன் மூலம் கிராம ஊராட்சிக்கு கிடைக்கும் வருமானத்தை, கிராம ஊராட்சியின் திட கழிவு



மேலாண்மை வங்கிக் கணக்கில் மட்டுமே செலுத்தப்படவேண்டும்.

**3.15.3. கிராம ஊராட்சி அளவிலான திடக்கழிவு மேலாண்மைக் குழு:**

தினசரி செயல்பாடுகளை கண்காணிக்க, சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சி அளவில் திடக்கழிவு மேலாண்மைக் குழு ஒன்று கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட வேண்டும்.

(1) கிராம ஊராட்சித் தலைவர், (2) கிராம ஊராட்சித் துணைத்தலைவர், (3) சம்மந்தப்பட்ட வார்டு உறுப்பினர், (4) சம்மந்தப்பட்ட குக்கிராமத்தைச் சார்ந்த கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பிரதிநிதி மற்றும் (5) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் ஈடுபடுத்தப்படும் பணித்தளப் மேற்பார்வையாளர்.

வார்டு உறுப்பினர் மற்றும் குக்கிராமம் பிரதிநிதித்துவம் உடைய / கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் தங்களின் பகுதிகளில் செயல்படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகளை கண்காணிப்பார்கள்.

**3.15.4. சமூகத் தணிக்கை:**

சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியைப் பொருத்தமட்டில் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட செயல்பாடுகளுக்கான சமூக தணிக்கையை கிராம சபை மேற்கொள்ளும்.

இத்திட்டத்தின் வெளிப்படை தன்மையை உறுதிப்படுத்தும் வகையிலும், ஆலோசனைக்காகவும் மற்றும் மேம்பாட்டிற்காகவும், அனைத்து செயல்பாடுகள் குறித்த வரவு செலவுத் திட்டம் மற்றும் செலவீனங்கள் ஆகியவை எல்லா கிராம சபை கூட்டங்களிலும் வைக்கப்படவேண்டும்.

**3.16. பள்ளிக் கழிப்பறை பராமரித்தல்**

ஊரக பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய பள்ளிகளிலும் மற்றும் அரசு பள்ளிகளிலும் மாணவ மாணவியருக்கு போதுமான கழிப்பிட வசதிகள் செய்து தருவதை இந்த அரசு உறுதிசெய்துள்ளது. ஊரகப் பகுதிகளில். 28,031 ஊராட்சி ஒன்றிய ஆரம்ப / நடுநிலைப் பள்ளிகளும் மற்றும் 6,916 அரசு பள்ளிகளும் உள்ளன. ஆக மொத்தம் ஊரகப் பகுதிகளில் 34,947 அரசு பள்ளிகள் உள்ளன. மாணவ மாணவிகளின் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதில் சுகாதார வசதிகள் ஒரு முக்கிய அங்கமாக உள்ளது. அரசு பள்ளிகளில் சுகாதார வசதிகள் நீடித்து நிலைப்பதற்கு ஏதுவாக, பள்ளி கழிப்பறைகளை சுத்தமாக பராமரிப்பதை உறுதி செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிராம வறுமை ஒழிப்பு சங்கம் அல்லது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலமாகவோ அல்லது தனியார் நிறுவனம் மூலமாகவோ ஒவ்வொரு அரசு / ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் உள்ள கழிப்பறையை சுத்தம் செய்வதற்கு ஒரு சுகாதார பணியாளரை ஈடுபடுத்த, அரசாணை நிலை எண் 151 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (CGS-1)



நாள்.30.11.2015–ல் அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அந்தந்த பள்ளிகளில் மாணவ மற்றும் மாணவியர்களின் கழிப்பறையை சுத்தப்படுத்துவதே சுகாதார பணியாளரின் பொறுப்பாகும். மகளிர் பள்ளிகளில் பெண் சுகாதார பணியாளரை மட்டுமே ஈடுபடுத்தப்பட வேண்டும். தினந்தோறும் இரண்டு முறை அதாவது காலையிலும் மாலையிலும் கண்டிப்பாக சுத்தம் செய்ய வேண்டும். 2015–16ம் ஆண்டில், சுகாதார பணியாளர்களின் மாத ஊதியத்திற்கும் தூய்மைப்படுத்த தேவையான பொருட்களையும் வாங்குவதற்கும் அரசு ரூ.57.63 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. பள்ளியில் உள்ள கழிப்பறை சுத்தமாக இருப்பதை கண்காணிப்பது, சம்பந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியரின் பொறுப்பாகும்.

குறைந்தபட்சம் வாரத்தில் ஒருமுறை, கிராம ஊராட்சித் தலைவர், சம்பந்தப்பட்ட வார்டு உறுப்பினர் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்கள், பள்ளியில் உள்ள கழிப்பறை சுத்தமாக இருப்பதை பார்வையிட்டு ஆய்வு செய்வார்கள். வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), வட்டார வள மையத்தின் மேற்பார்வையாளர் மற்றும் உதவி தொடக்க கல்வி அலுவலர்/ கூடுதல் உதவி தொடக்க கல்வி அலுவலர் ஆகியோர்கள் இணைந்து ஒவ்வொரு காலாண்டும் பள்ளி கழிப்பறை சுத்தமாக பராமரிப்பது குறித்து பள்ளி தலைமையாசிரியர்களை ஆய்வு செய்வார்கள். மேலும் பள்ளிக் கழிப்பறையை சுத்தமாக பராமரிப்பதை ஆய்வு செய்வதற்கும் கண்காணிப்பதற்கும், மாவட்ட ஆட்சித்தலைவர்கள், பள்ளி கல்வித் துறை மற்றும் ஊரக

வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையை சார்ந்த மாவட்ட அலுவலர்களை ஒவ்வொரு வட்டாரத்திற்கும் மண்டல அலுவலர்களாக நியமனம் செய்துள்ளார்கள்.

### 3.17. சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்

நக்சலைட்டுகளின் நடவடிக்கைகளை தடுத்திடும் வகையில் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான சிறப்புத் திட்டமாக 2003–04ம் ஆண்டு **சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்** அறிமுகப்படுத்தப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு முறையே தலா ரூ.700 இலட்சம் மற்றும் ரூ. 50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் பசுமை வீடுகள் கட்டுதல், ஆவின் பாலகம் கட்டுதல், வேளாண் கூலி விவசாயிகளுக்கு பூச்சி மருந்து தெளிப்பான் வாங்குதல், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருத்துவ உபகரணங்கள் வாங்குதல், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் குடிநீர் குழாய் விரிவாக்கம் செய்தல், அங்கன்வாடி மையங்களை நவீனப்படுத்துதல் உள்ளிட்ட பணிகளும் பல்வேறு பயிற்சித் திட்டங்களும் 2015–16ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டது.

2016–17ம் நிதியாண்டிற்கும் இத்திட்டத்திற்காக ரூ.7.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இவ்வாண்டில், இத்திட்டத்தின்கீழ், கிராமப்புற சுயஉதவிக் குழுக்களில் உள்ள மகளிர் மேம்பாடு அடையும் விதமாக, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலமாக செயல்படுத்திட நிதி ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளன.



## 4. மத்திய திட்டங்கள்

## 4.1 . மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS)

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் 02.02.2006 ல் தொடங்கப்பட்டது. ஒவ்வொரு நிதியாண்டிலும் ஊரகப் பகுதிகளில் திறன்சாரா, உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 நாட்களுக்கு குறையாமல் வேலை வாய்ப்பினை அளிக்க இத்திட்டம் உறுதி செய்கிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் ‘வேலை செய்யும் உரிமையை’ நிலைநிறுத்துவதற்காக உருவாக்கப்பட்ட முக்கியமான படியாகும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இத்திட்டம் மட்டுமே சட்டப்பூர்வ பாதுகாப்பு கொண்ட ஒரே வறுமை ஒழிப்பு திட்டமாகும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் திருத்திய அட்டவணை I–ன்படி முக்கிய குறிக்கோள்கள் கீழ்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

அ) ஒவ்வொரு நிதியாண்டிலும், ஊரகப் பகுதிகளில் திறன்சாரா, உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலை வாய்ப்பினை அளிப்பதன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட தரமான மற்றும் நிலையான சொத்துக்களை உருவாக்குதல்.



ஆ) ஏழை மக்களின் வாழ்வாதார அடிப்படை வளத்தை வலுப்படுத்துதல்.

இ) சமூகப் பங்களிப்பை உறுதி செய்ய திறம்பட செயலாற்றுதல்.

ஈ) ஊராட்சி அமைப்பு முறையை வலுப்படுத்துதல்.

தமிழ்நாட்டில், முதலில் இத்திட்டம் 6 மாவட்டங்களில் 2.2.2006ல் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் மூன்று கட்டங்களாக கீழ்க்கண்ட அட்டவணையின்படி, அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

**அட்டவணை எண்.4.1**

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மூன்று கட்டங்களில் விரிவாக்கம்**

| முதற் கட்டம் (2.2.2006 லிருந்து ) | இரண்டாம் கட்டம் (1.4.2007 லிருந்து ) | மூன்றாம் கட்டம் (1.4.2008 லிருந்து) | |
|---|---|---|---|
| 1. கடலூர் | 1. தஞ்சாவூர் | 1. காஞ்சிபுரம் | 11. திருச்சி |
| 2. விழுப்புரம் | 2. திருவாரூர் | 2. திருவள்ளூர் | 12. பெரம்பலூர் |
| 3. திருவண்ணாமலை | 3. கரூர் | 3. வேலூர் | 13. அரியலூர் |
| 4. நாகப்பட்டினம் | 4. திருநெல்வேலி | 4. சேலம் | 14. புதுக்கோட்டை |
| 5. திண்டுக்கல் | | 5. நாமக்கல் | 15. மதுரை |
| 6. சிவகங்கை | | 6. தர்மபுரி | 16. தேனி |
| | | 7. கிருஷ்ணகிரி | 17. இராமநாதபுரம் |
| | | 8. ஈரோடு | 18. விருதுநகர் |
| | | 9. கோயம்புத்தூர் | 19. தூத்துக்குடி |
| | | 10. நீலகிரி | 20. கன்னியாகுமரி |
| | | | 21. திருப்பூர் |

### 4.1.1. திட்டத்தின் சிறப்பம்சங்கள்

1. ஊரகப் பகுதிகளில் திறன்சாரா உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள, பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு நிதியாண்டிலும் 100 நாட்களுக்கு வேலை வாய்ப்பினை உறுதி செய்தல்.
2. திறன்சாரா உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கான (unskilled labour) ஊதியச் செலவு 100 விழுக்காடு மத்திய அரசால் வழங்கப்படுகிறது. கட்டுமானப் பொருட்களின் செலவினம், திறன் சார்ந்த (skilled labour) மற்றும் பகுதி திறன் சார்ந்த தொழிலாளர்களின் (semi-skilled labour) ஊதியச் செலவு, மத்திய அரசு மற்றும் மாநில அரசால் 75:25 என்ற விகிதாச்சாரத்தில் வழங்கப்படுகிறது
3. ஒப்பந்ததாரர்கள் அல்லது தொழிலாளர்களுக்கு மாற்றான இயந்திரங்களுக்கு அனுமதி இல்லை.
4. அனைத்து ஊராட்சிகள் (ம) முகமைகள் மூலம் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணிகளுக்குண்டான ஊதியம் (ம) பொருட்கள் 60:40 எனும் விகிதாச்சார அடிப்படையில் மாவட்ட அளவில் கணக்கிடப்படும்.
5. அனுமதியளிக்கப்பட்ட மொத்த பணிகளில் 50% பணிகள் கிராம ஊராட்சிகள் மூலம் செயல்படுத்தப்பட வேண்டும்.



6. திறன்சாரா உடல் உழைப்பு மேற்கொள்ள விருப்பம் உள்ள ஊரக குடும்பங்களைச் சேர்ந்த வயது வந்த உறுப்பினர்கள் தனது விருப்பத்தினை வாய் மொழியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ, கிராம ஊராட்சிக்கு தெரிவித்து பதிவு செய்துகொள்ள வேண்டும்.
7. ஊரக பகுதிகளில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் வேலைக்கு விண்ணப்பித்து அவ்வேலையினை பெறும் பொருட்டு வேலை அட்டையினை பெற உரிமை பெற்றுள்ளது.
8. புதிய வேலை அட்டையினை பதிவு செய்தலை எளிதாக்குவதற்கும், தொழிலாளர்களின் குறைகளை சீர்செய்வதற்கும், ரோஜ்கார் திவாஸ் (வேலைவாய்ப்பு தினம்), அனைத்து கிராம ஊராட்சிகளிலும் மாதத்திற்கு ஒரு முறை நடத்தப்படுகிறது.
9. கிராம சபா கூட்டங்களில் பங்கேற்பதற்கும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் அந்த கிராம ஊராட்சிகளில் எடுத்து செய்ய இருக்கும் பணிகளின் தொகுப்பு மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பணிகளை தெரிவு செய்வதற்கும் அனைத்து தொழிலாளர்களுக்கும் உரிமை உள்ளது.
10. வேலை நடைபெறும் இடம் கிராமத்திலிருந்து 5 கி.மீ. தூரத்திற்கு மேல் இருக்கும் பட்சத்தில், போக்குவரத்து மற்றும் வாழ்வாதாரத் தொகையாக ஊதியத்தில் 10 விழுக்காடு கூடுதலாக

வழங்கப்படும். இருப்பினும் தமிழ்நாட்டில் வேலை நடைபெறும் இடம் 2 கி.மீ சுற்றளவிற்குள் இருக்குமாறு பணித் தளங்கள் அமைக்கப் படுகின்றன.

11. திறன்சாரா தொழிலாளர்களுக்கான ஊதியம் ஊரக விலைப் பட்டியலின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தின் திருத்திய அட்டவணை I–ன்படி திறன்சாரா தொழிலாளர்களுக்கான விலைப் பட்டியலின்படியான ஊதியமானது ஓர் வயது வந்த நபர் 1 மணி நேர உணவு இடைவேளையுடன் கூடிய 8 மணி நேர பணியில் பெறக்கூடிய (அதாவது 7 மணி நேர வேலை) ஊதியத்திற்கு சமமாக இருக்கும்.

12. ஆண்கள் மற்றும் பெண்களுக்குச் சம அளவிலான ஊதியம் வழங்கப்படும். 2016–17ஆம் ஆண்டிற்கான அறிவிக்கப்பட்ட ஊதியம் நாளொன்றுக்கு ரூ.203/– ஆகும்.

13. தொழிலாளர்களுக்கான ஊதியம் பொது நிதி மேலாண்மை அமைப்பு (PFMS) மூலம் வழங்கப்பட்டு தொழிலாளர்களின் வங்கிக் கணக்கிற்கு 15 நாட்களுக்குள் ஈடுசெய்யப்படுகின்றது.

14. மூன்றில் ஒரு பங்கு பயனாளிகள் பெண்களாக இருக்க வேண்டும்.



15. வேலை நடைபெறும் இடங்களில் குடிநீர், முதலுதவிப்பெட்டி, நிழற் கூடங்கள் போன்ற வசதிகள் செய்து தரப்படும்.

16. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் சமூகத் தணிக்கையினை கிராம சபை, அதற்காக அமைக்கப்பட்டுள்ள ‘‘கிராம சமூகத் தணிக்கையாளர்கள்’’ மூலம் மேற்கொள்கின்றது.

17. குறைகளை துரிதமாக தீர்க்கும் வகையில் குறை தீர்க்கும் அமைப்பின் ஒரு பகுதியாக கட்டணம் இல்லாத் தொலைபேசி சேவை (Toll free Helpline) ‘‘1299’’ ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுகிறது.

18. இத்திட்டச் செயல்பாடு குறித்து அறிவுரைகள் வழங்கிடவும், கண்காணிக்கவும் மற்றும் மதிப்பீடு செய்யவும், தமிழக அரசால் ‘‘மாநில வேலை உறுதி மன்றம்’’ என்ற அமைப்பு தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் பிரிவு 12–ன்படி அமைக்கப்பட்டுள்ளது.

### 4.1.2. அனுமதிக்கப்பட்ட பணிகள்

மத்திய அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி அனுமதிக்கப்பட்ட பணிகளின் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை 4.2.**

**மத்திய அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி அனுமதிக்கப்பட்ட பணிகளின் விவரம்**

| வகைப்பாடு – அ | வகைப்பாடு – ஆ | வகைப்பாடு – இ | வகைப்பாடு – ஈ |
|---|---|---|---|
| **இயற்கை வள மேலாண்மையுடன் தொடர்புடைய பொதுப்பணிகள்** | **நலிவுற்ற இனத்திற்கான தனிநபர் சொத்துக்கள் / பொது சொத்துக்களை உருவாக்குதல்.** | **பொது உட்கட்டமைப்பு வசதிகள் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு இணக்கமான சுயஉதவிக் குழுக்கள் உட்பட.** | **ஊரக உட்கட்டமைப்பு வசதிகள்** |
| • நீராதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் நீர் சேகரிப்பு கட்டமைப்புகள்<br>• நீர் மேலாண்மைப் பணிகள்<br>• சிறு மற்றும் குறு நீர்ப்பாசனப் பணிகள்<br>• பாரம்பரிய நீராதாரங்களை சீரமைத்தல்<br>• காடு வளர்ப்பு<br>• மரக்கன்றுகள் நடுதல்<br>• பழ மரக் கன்றுகள் நடுதல்.<br>• பொது இடங்களில் நில மேம்பாட்டு பணிகள் | • கிணறுகள்<br>• பண்ணைக் குட்டைகள்<br>• இதர நீராதாரப் பணிகள்,<br>• தோட்டக்கலை சார்ந்த பணிகள், பட்டு வளர்ப்பு, மரக் கன்றுகள் நடுதல், மற்றும் காடு வளர்ப்பு.<br>• தரிசு நிலம் அல்லது பயனற்ற நிலங்களை மேம்படுத்தி விவசாய நிலங்களாக மாற்றுதல்<br>• மாநில அல்லது மத்திய அரசு திட்டங்களின் கீழ் அனுமதிக்கப்பட்ட வீடுகள் கட்டு வதற்கான திறன்சாரா செலவினத் தினை மேற்கொள்ளல்<br>• மாட்டுக் கொட்டகை ஆட்டுக் கொட்டகை, கோழிக் கொட்டகை, பன்றிக் கொட்டகை, அமைத்தல்<br>• கால்நடைத் தீவனத் தொட்டிகளை அமைத்தல்.<br>• மீன் உலர் களம்<br>• சேமிப்பு வசதிகள்<br>• பொது இடங்களில் உள்ள நீர்நிலைகளில் மீன் வளர்த்தல்<br>• தனி நபர் இல்லக் கழிப்பறைகள் | தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு இணக்கமான சுய உதவி குழுக்கள் உள்ளிட்ட சுய உதவிக் குழுக்களுக்கான பொது பணிமனை தளங்களை அமைத்தல். | • ஊரக சுகாதார பணிகள்<br>• சாலை வசதி இல்லாத ஊரகப் பகுதிகளில் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்துதல்<br>• விளையாட்டு மைதானம் அமைத்தல்<br>• பேரழிவினை தடுக்கும் ஆயத்தப்பணிகள், சாலைகளை சீரமைத்தல்<br>• வெள்ளக்கட்டுப்பாடு மற்றும் தடுப்புபணிகள் உட்பட பொது உட்கட்டமைப்பு பணிகள்<br>• கிராம ஊராட்சிக் கட்டிடங்கள் கட்டுதல்<br>• மகளிர் சுய உதவிக் குழு மற்றும் கூட்டமைப்பிற்கான கட்டிடங்கள் கட்டுதல்<br>• புயல் நிவாரணக் கூடங்கள்<br>• அங்கன்வாடி கட்டிடங்கள்<br>• கிராம சந்தை, கிராமங்களில் இடுகாடு மற்றும் சுடுகாட்டு கொட்டகைகளை ஊராட்சி மற்றும் வட்டார அளவில் கட்டுதல்'<br>• உணவு சேமிப்பு கட்டிடங்கள் கட்டுதல்.<br>• சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட கட்டிட பணிகளுக்கு தேவையான கட்டுமானப் பொருட்களை அந்த கட்டிடத்தின் மதிப்பீட்டில் ஒரு அங்கமாக மேற்கொள்ளுதல்.<br>• இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஊரக பொது சொத்துக்களை பராமரித்தல். |



### 4.1.3. 2011–12 முதல் 2015–16 வரை எடுக்கப்பட்ட சிறப்பு முயற்சிகள்

- ஒரு கிராம ஊராட்சியில் ஒரு பணி என்பதற்கு பதிலாக ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒன்றுக்கும் மேற்பட்ட பணிகளை எடுத்து செய்ய அக்டோபர் 2011 முதல் அனுமதிக்கப்பட்டது. இதன்மூலம் தொழிலாளர்களின் பங்கேற்பு பன்மடங்கு அதிகரித்தது.
- 2012–13 ஆம் ஆண்டில் வறட்சியை போக்கும் விதமாக, ஒரு குடும்பத்திற்கான வேலைவாய்ப்பு 100 நாட்கள் என்பதிலிருந்து 150 நாட்களாக உயர்த்தப்பட்டது. 21.02.2013 முதல் 31.03.2013 வரையிலான காலத்தில் 12.73 இலட்சம் குடும்பங்களுக்கு 100 நாட்களுக்கு மேல் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. இதனால் இக்குடும்பங்களுக்கு கூடுதல் ஊதியமாக ரூ.271 கோடி வழங்கப்பட்டது.
- அண்ணா பல்கலைக்கழக தொலை உணர் தொடர்பு நிறுவனம் (IRS) மூலம் வள ஆதார வரைபடங்கள் (Resource Map) அனைத்து மாவட்டங்களுக்கும் கிடைக்கும் வகையில் தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வரைபடங்களின் அடிப்படையில், முந்தைய காலங்களில் பெற்றிருந்த கொள்ளளவை நீராதார அமைப்புகள் பெறும் வகையிலும், நிலத்தடி நீர் அளவை உயர்த்தும் பொருட்டும், செயற்கைக் கோள்

உதவியுடன் தயார் செய்யப்பட்ட படங்களின் உதவியுடன் நீராதாராப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால், சராசரி ஊதிய விகிதத்தினை அதிகரிக்க கால நிர்ணய வேலை அளவீடு (Time & Motion) மூலம் திருத்திய ஊரக விலைப் புள்ளிப் பட்டியல் வழங்குவது மற்றும் இதுகுறித்து தொழிலாளர்களுக்கு தெரிவிக்க ஏதுவாக பணித்தளப் பொறுப்பாளருக்கு பயிற்சியளிப்பது உள்ளிட்ட உறுதியான பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.
- 2012–13 முதல் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் மற்றும் சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலங்களில் தனி நபர் நில மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.
- பசுமைப்பகுதிகளை அதிகரிக்கும் பொருட்டு அரசுக்கு சொந்தமான இடங்கள், பொது இடங்கள், கிராம ஊராட்சிக்கு சொந்தமான இடங்கள் மற்றும் தனி நபர் விவசாயிகளது நிலங்களில் மரம் வளர்ப்பு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய சாலைகள், பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம் நபார்டு நிதியுதவித் திட்டம் ஆகிய திட்டங்களில் அமைக்கப்பட்ட சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைத்



துறையினால் அமைக்கப்பட்ட சாலைகள் ஆகியவற்றில், சாலைகளின் இரு மருங்கிலும் மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

- கிராம ஊராட்சிகள் / ஊராட்சி ஒன்றியங்களே காடுவளர்ப்பு பணிகளை மேற்கொள்ள ஏதுவாக பல்வேறு மாவட்டங்களில், கிராம ஊராட்சிகள் / ஊராட்சி ஒன்றியங்களே நாற்றங்கால் அமைக்க ஊக்குவிக்கப்படுகின்றன.
- ஊரக மக்களுக்கு அதிகாரம் அளித்திடும் வகையில், கிராம ஊராட்சி சேவை மையங்கள் மற்றும் வட்டார ஊராட்சி சேவை மையங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 4.1.4. உன்னத முயற்சிகள்:–

#### 4.1.4.1. மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு பணிகள்

- மாற்றுத்திறனாளிகள் உரிமை (சமவாய்ப்பு, உரிமை பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம், 1995ல் தெரிவித்துள்ளவற்றை மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் செயல்படுத்தும் வகையில், தமிழக அரசு மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு வழிவகைகள் செய்துள்ளது. இதற்கான அரசாணையில் மாற்றுத் திறனாளிகள், சிறப்பு பணிகளை மேற்கொள்ளும் வகையில் அல்லது மண்

வேலை தொடர்பான பணிகளை மேற்கொள்ள ஏதுவாக சிறப்பு நடவடிக்கைகள் செய்யப்பட்டுள்ளது.

- மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு நடவடிக்கை களாக பணித் தளத்தில் தொழிலாளர்களுக்கு குடிநீர் வழங்கும் பணி, குழந்தைகளை பராமரிக்கும் பொறுப்பு, பணித்தள பொறுப்பாளருக்கு முன்அளவீட்டினை மேற்கொள்ள உதவுதல், பணித்தளத்தில் அகற்றப்பட்ட மரங்களை அப்புறப்படுத்துதல் (இலை, தழைகள் மற்றும் சிறு மரங்கள்) ஆழப்படுத்தப்படும் இடங்களில் தண்ணீர் தெளித்தல் (குறிப்பாக கோடை காலங்களில்) மண்வெட்டி, கடப்பாறை போன்றவற்றை கொண்டு கரைகளில் கொட்டப்படும் மண்களை சமன்படுத்துதல், கரைகளை சமன்படுத்துதல் (benching) மற்றும் கரைகளின் சரிவுப்பகுதியினை சீர்செய்தல் போன்றவை அடங்கும்.
- உடல் உழைப்பினை மேற்கொள்ளத் தகுதியுள்ள மாற்றுத் திறனாளிகளை மண்வேலை தொடர்பான பணிகளான முட்புதர்களை அகற்றுதல், ஆழப்படுத்துதல், மரம் நடுதல், மண்நிரப்புதல் மற்றும் நீர்பாய்ச்சுதல் போன்ற பணிகளுக்கு பயன்படுத்தலாம். மண்வேலையை பொறுத்தவரை மாற்றுத்திறனாளிகள் 50 சதவிகித வேலை செய்தாலே அல்லது நான்கு மணி நேரம் முழுமையாக வேலை மேற்கொண்டாலே போதுமானதாகும்.



- தமிழ்நாட்டின் இத்தகைய சிறப்பு முயற்சியினை மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் பாராட்டியதோடு மற்ற மாநிலங்களும் தமிழகத்தை முன்னுதாரணமாக கொண்டு செயல்படுத்த கேட்டுக்கொண்டுள்ளது.
- மாற்றுத்திறனாளி தொழிலாளர்களுக்கு சிறப்பு ஊரக விலைப்பட்டியலோடு சிறப்பு பணிவகைப்பாடும் தமிழகத்தால் ஏற்படுத்தப்பட்டதை அடிப்படையாக கொண்டு, மத்திய அரசால், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்ட அட்டவணை–1 ல் மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு ஊரக விலைப்பட்டியல் இடம்பெறும் வகையில் திருத்தம் வெளியிடப்பட்டது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் (2011–12 முதல் 2015–16 வரை) மாற்றுத்திறனாளிகள் மூலம் 148.65 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு ரூ.230.05 கோடி ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது.

**4.1.4.2. பண்ணைக் குட்டைகள் அமைத்தல்**

ஆதி திராவிடர் / பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலங்களில் 15,000 பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணி 8 டெல்டா மாவட்டங்களில் மேற்கொள்ளப் பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. விவசாயிகளிடமிருந்து வரப்பெற்ற பெருமளவிலான

வரவேற்பினைத் தொடர்ந்து 23 டெல்டா அல்லாத பிற மாவட்டங்களிலும், டெல்டா அல்லாத பகுதிகள் அடங்கிய டெல்டா மாவட்டங்களிலும் பண்ணைக்குட்டைகள் அமைக்கும் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

**4.1.4.3. பிற துறைகளுடன் ஒருமுகப்படுத்துதல்**

கிராமப்புற மக்கள் குறுகிய காலத்தில் அதிக அளவில் பயனடையும் வகையில், பிற துறைகளுடன் ஒருங்கிணைத்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

ஊரக குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தவும், நில மேம்பாட்டு நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் இதர துறைகளான விவசாயம், தோட்டக்கலை, தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, கால்நடை பராமரிப்பு, மீன் வளம், வனத்துறை, பட்டு வளர்ப்பு, சமூக நலம், நெடுஞ்சாலை, பொதுப்பணித்துறை மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் போன்ற துறைகளுடன் ஒருமுகப்படுத்தப் பட்டுள்ளது. மீன் வளர்ப்பு நடவடிக்கைகளை மீன் வளத் துறையுடன் ஒருமுகப்படுத்தியும், அரசு பட்டு பண்ணைகளில் பண்ணைக்குட்டைகள் அமைத்தலை பட்டு வளர்ப்பு துறையுடன் ஒருமுகப்படுத்தியும் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

**4.1.4.4. மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளுதல்**

ஊரகப் பகுதிகளை பசுமை மயமாக்கும் முயற்சியாக, ஊராட்சி சாலைகள், ஊராட்சி ஒன்றிய சாலைகள்,



நெடுஞ்சாலைகள், பிரதம மந்திரியின் கிராம சாலைகள் ஆகியவற்றின் இருமருங்கிலும் 2,000 கி.மீ நீளத்திற்கு நிழல்தரும் மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாபெரும் மரம் நடவு (Massive Tree Plantation) பணிகள் வனத்துறையுடன் ஒருங்கிணைந்து மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் மூலம் பசுமையாக்குதல் அதிகரிக்கப்படுவதுடன், சுற்றுச் சூழல் மாசுபடுத்தும் காரணிகள் கட்டுப்படுத்தப்பட்டு மனித மற்றும் விலங்கினங்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படுகின்றது. அரசு நிலங்கள், அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், தொழிற்சாலைகள், பள்ளிகள், கல்லூரிகள், இதர அரசு நிறுவனங்கள், பொது பூங்காக்கள் மற்றும் பொருத்தமான இடங்களில் மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2014–15 ஆம் ஆண்டு 25.70 இலட்சம் மரக்கன்றுகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் நடப்பட்டுள்ளது. 2015–16 ஆம் ஆண்டு 32.63 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது.

குடியிருப்புகளுக்கான பிரத்தியேக மரம் வளர்க்கும் திட்டத்தின் மூலம் 54,000 இந்திரா நினைவு குடியிருப்பு திட்டப் பயனாளிகள் மற்றும் 60,000 முதலமைச்சரின் சூரிய ஒளியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டப் பயனாளிகள் வீடுகளில் வீட்டிற்கு 4 பலன் தரும் பழக் கன்றுகள் வீதம் ஆக மொத்தம் 4.56 இலட்சம் மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 1,14,000 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

மரம் வளர்க்கும் திட்டத்திற்கான மரக்கன்றுகளின் தேவையை முழுமையாக பூர்த்தி செய்யும் வகையில், 2015–16 ஆம் ஆண்டில் 70 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த கிராம ஊராட்சிகளில் 120 நாற்றங்கால்கள் அமைக்கும் பணிகள் மாதிரி முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 4.1.5. வங்கிகள் / பொது நிதி மேலாண்மை முறை மூலம் ஊதியம் வழங்குதல் (PFMS)

வங்கிகள் மூலம் ஊதியம் வழங்குவதில் தாமதம் ஏற்படாமலிருப்பதற்காக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களுக்கு 2013–14 முதல் மின்னணு நிதி மேலாண்மை முறை (e-FMS) மூலம் ஊதியம் வழங்கப்படுகிறது.

மின்னணு நிதி மேலாண்மை முறை (e-FMS) என்பது மாநில அளவில் நிர்வகிக்கப்படும் வங்கி கணக்கிலிருந்து தொடர்பு வங்கி மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பணியாற்றும் தொழிலாளர்களது வங்கி கணக்கிற்கு ஊதியத்தினை ஈடு செய்யும் ஓர் தானியங்கி முறையாகும்.

மின்னணு நிதி மேலாண்மை முறை (e-FMS) காஞ்சிபுரம் மாவட்டம், காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த 4 கிராம ஊராட்சிகளில் சோதனை முறையில் 17.06.2013–ல் மேற்கொள்ளப்பட்டது. மாநிலத்தில் உள்ள 385 வட்டாரங்களில் உள்ள அனைத்து 12,524 கிராம ஊராட்சிகளிலும் இம்முறை படிப்படியாக செயல்படுத்தப்பட்டு 01.04.2014 முதல் மாநிலத்திலுள்ள அனைத்து



தொழிலாளர்களுக்குமான ஊதியம் மின்னணு நிதி மேலாண்மை முறை மூலம் மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. 10.04.2015 முதல், வங்கி பரிமாற்றம் ஒற்றைக் கணக்கு தொடர்பு வங்கி முறையில் மாற்றம் செய்யப்பட்டு பொது நிதி மேலாண்மை முறை (PFMS) மூலம் ஊதியம் வழங்கப்படுகின்றது.

### 4.1.6. 2011–12 முதல் 2015–16 வரையிலான சாதனைகள்

**2011–12 முதல் 2015–16–**ம் ஆண்டு வரை இந்த அரசால் 173.81 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு, ரூ.21770.85 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட செயலாக்கத்தில் 2015–16–ம் ஆண்டு தேசிய அளவில் தமிழ்நாடு கீழ்க்கண்டவாறு சிறந்து விளங்குகிறது.

**அட்டவணை 4.3.**

**2015–16ம் ஆண்டில் தேசிய அளவில் தமிழ்நாட்டின் செயல்பாடு**

| | | |
|---|---|---|
| 1 | மனிதசக்தி நாட்கள் உருவாக்குதல் | 36.87 கோடி மனிதசக்தி நாட்களை எய்தியதன் மூலம் நாட்டிலேயே தமிழ்நாடு **முதலிடத்தை** பெற்றுள்ளது. |
| 2 | தொழிலாளர்களுக்கான ஊதிய செலவினம் | தொழிலாளர்களுக்கான ஊதியமாக ரூ.4901.58 கோடி செலவழித்ததன் மூலம் நாட்டிலேயே தமிழ்நாடு **முதலிடத்தை** பெற்றுள்ளது. |
| 3 | பெண்களின் பங்களிப்பு விகிதம் | 31.41 கோடி மனிதசக்தி நாட்கள் மகளிரால் எய்தப்பட்டதன் மூலம் நாட்டிலேயே **முதலாவது** இடத்தில் உள்ளது. |
| 5 | தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினரின் பங்களிப்பு விகிதம். | சாதனை 30% |

### 4.1.7. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கான விருதுகள்

**அ) மாநிலத்திற்கான தேசிய விருது**

முதன்முறையாக சிறப்பாக செயல்பட்ட மாநிலங்களுக்கான விருதுகள் மூன்று வகைப்பாட்டின் கீழ் 2012–13 முதல் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றில் **தமிழ்நாடு "சமூகப் பங்களிப்பு" (social inclusion) என்ற வகைப்பாட்டில் சிறந்த மாநிலமாக தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டுள்ளது. மேலும், சமூக பங்களிப்பு என்ற வகைப்பாட்டின் கீழ் விருது பெற்ற ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டுமே.**

**"ஒருங்கிணைத்தல் மூலம் நிலைத்த வாழ்வாதாரத்தை ஏற்படுத்துதல்" என்கிற முயற்சிக்காக 2014–15 ம் ஆண்டுக்கு தமிழ்நாடு தேசிய விருது பெற்றது.** மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தினை செயல்படுத்துவதில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பான முயற்சிகள் குறித்து நடத்தப்பட்ட கண்காட்சிக்கான தேசிய விருது தமிழ்நாட்டுக்கு புது டில்லியில் நடைபெற்ற மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட தின நிகழ்ச்சியில் 02.02.2016 அன்று அளிக்கப்பட்டது.

**ஆ) மாவட்டம் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கான தேசிய விருதுகள்**

ஒவ்வொரு ஆண்டும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தேசிய அளவில் நன்றாக செயல்படும் மாவட்டங்கள் மற்றும் கிராம ஊராட்சிகள்



மத்திய அரசால் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றது. 2011–12 முதல் 2014–15–ம் ஆண்டுவரை இத்திட்டத்தினை சிறப்பாக செயல் படுத்தியதற்காகப் பெறப்பட்ட விருதுகள் விவரம் கீழ்கண்டவாறு:

**அட்டவணை 4.4.**

**மாவட்டம் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கான தேசிய விருதுகள்**

| வருடம் | மாவட்ட விருது | கிராம ஊராட்சிக்கான விருது |
|---|---|---|
| 2011–12 | 1. தஞ்சாவூர்<br>2. திருச்சிராப்பள்ளி | 1. காடம்பாடி கிராம ஊராட்சி, சூலூர் ஊராட்சி ஒன்றியம், கோயம்புத்தூர் மாவட்டம். |
| 2012–13 | 1. நீலகிரி | 1. தாணிக்கோட்டகம் கிராம ஊராட்சி, வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியம், நாகப்பட்டினம் மாவட்டம். |
| 2013–14 | 1. தேனி | 1. எப். கீழையூர் கிராம ஊராட்சி, மணப்பாறை ஊராட்சி ஒன்றியம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| 2014–15 | 1. திருவள்ளூர்<br>2. புதுக்கோட்டை | – |

### 4.1.8. 2016–17-ம் ஆண்டில் திட்ட செயலாக்கம்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டப் பணிகளானது ஊரக வளர்ச்சித் துறையின் இதர திட்டங்களான பிரதம மந்திரி வீடுகள் திட்டம் (கிராமம்), முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டும் திட்டம் மற்றும் இதர துறைகளான வேளாண்மை, தோட்டக்கலை, வனத்துறை, பட்டுவளர்ப்புத் துறை, மீன்வளம் மற்றும் கால்நடைத்துறை ஆகிய துறைகளுடன் ஒருங்கிணைத்தும் செயல்படுத்தப் பட்டுவருகிறது.

2016–17 ஆம் ஆண்டில் 31.55 கோடி மனித சக்தி நாட்களை உருவாக்குவதற்கு தொழிலாளர் வரவு செலவு திட்டத்தில் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 2016ல் டெல்லியில் நடைபெற்ற மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்திற்கான 2016–17 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் வரவு செலவு திட்டம், மத்திய அரசின் அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் கூட்டத்தில் பின்வரும் இனங்களில் இத்திட்டத்தினை தீவிரமாக செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

(i) 7500 பண்ணைக் குட்டைகள், 10,000 குளங்கள் மற்றும் ஊரணிகள்

(ii) 385 மண்புழு உர அலகுகள்

(iii) 7.50 இலட்சம் தனிநபர் இல்லக் கழிப்பறைகள்

(iv) 1000 அங்கன்வாடி மையங்கள்

(v) 10,000 கி.மீ. நீளத்திற்கு சாலைகளின் இருமருங்கிலும் மரம் நடுதல்

மேற்கூறப்பட்ட இலக்குகளின் அடிப்படையில், பின்வரும் முக்கிய பணிகள் 2016–17 ஆம் ஆண்டில் செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- தனிநபர் சொத்துக்களை உருவாக்கும் பணிகளான சிறு மற்றும் குறு விவசாயிகள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் விவசாய நிலங்களில் பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணிகள் மற்றும் 7.5 இலட்சம் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படும்.



- 2013–14 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட பசுமையாக்குதல் முயற்சியினை தொடர்ந்து செயல்படுத்திடும் பொருட்டு கிராம ஊராட்சி நிலங்கள், பொது இடங்கள் மற்றும் சாலை ஓரங்களில் மரம் நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் மரக்கன்றுகள் கிடைக்க ஏதுவாக நாற்றங்கால்கள் அமைக்கப்பட்டுவருகிறது.
- நீர் சேகரிப்புப் பணிகளான பாரம்பரிய நீர் ஆதாரங்களைச் சீரமைக்கும் பணிகளுக்கு முக்கியமாக பாசனக் குளங்களை தூர்வாருதல் மற்றும் பிற நீர் நிலைகளான ஊரணிகள், குட்டைகள், சிறுபாசனக் கண்மாய்கள், நீர்வரத்து கால்வாய்கள் மற்றும் பண்ணைக் குட்டை பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இத்தகைய நீர் சேகரிப்பு மற்றும் நீர் பாசன பணிகள் 2016–17 ஆம் ஆண்டில் சுமார் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் செய்யப்படவுள்ளன.

### 4.1.9. சமூக தணிக்கை

சமூக தனிக்கை என்பது அலுவலர்களோ, வெளி அமைப்புகளோ அல்லாது பொது மக்களே செய்யும் தணிக்கை, ஆகும். நிதி செலவினம் மட்டுமல்லாது, திட்டத்தின் செயல்முறை மற்றும் சமூக அம்சங்கள் பணித்திறன் ஆகிய கோணங்களிலிருந்தும் ஆய்வு செய்வது

சமூக தணிக்கையின் நோக்கமாகும். சமூக தணிக்கை ஒரு தகவல் தொடர்பு மற்றும் கல்விக்கான கருவி; இது வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புடைமையை அமல்படுத்த உதவும். சமூக தணிக்கை வளர்ச்சித் திட்டங்களில் எல்லா நிலைகளிலும் (திட்டமிடுதல், வடிவமைத்தல், செயல்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல்) மக்களின் பங்கேற்பை அதிகப்படுத்த உதவும். சமூக தணிக்கையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் பொருட்டு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தில், சிறப்பு கிராம சபையால் சமூக தணிக்கை நடத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும், மத்திய அரசு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்ட தணிக்கை விதிகள் 2011 மூலம் சீரான தணிக்கை நடைமுறைகளை நிர்ணயித்துள்ளது.

**சமூக தணிக்கை சங்கம் தோற்றுவித்தல்**

1. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தணிக்கை விதிகள் 2011–ன்அடிப்படையில் அரசாணை (நிலை) எண்.64, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள் 27.07.2012–ன்படி, சமூக தணிக்கை அலகு ஒன்று உருவாக்க உத்தரவிடப்பட்டு தேவையான அலுவலர்கள் மற்றும் அவர்களின் பொறுப்புகளும் இவ்வரசாணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.



2. அரசாணை (நிலை) எண்.125 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 21.12.2012ல் தமிழ்நாடு சமூக தணிக்கைச் சங்கம் உருவாக்கிடவும் மற்றும் அதற்கான உப விதிகளுக்கு ஒப்புதல் வழங்கியும் ஆணையிட்டுள்ளது. தமிழ்நாடு சமூக தணிக்கைச் சங்கம் 2013 ஜனவரி 9 ஆம் தேதி தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975–ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சமூக தணிக்கை சங்கத்தின் மூலம் 6 பயிற்சி கையேடுகள் வெளியிடப்பட்டுள்ளது.

- பயிற்றுநர்களுக்கான பயிற்சி கையேடுகள் 2
- கிராம ஊராட்சி தலைவர்களுக்கான பயிற்சி கையேடு 1
- கிராம ஊராட்சி செயலாளர்களுகான பயிற்சி கையேடு 1
- வார்டு உறுப்பினர்களுக்கான பயிற்சி கையேடு 1
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்கான பயிற்சி கையேடு 1

மேலும், சமூக தணிக்கை குறித்து பொது மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரம் விநியோகம் செய்யப்பட்டது.

**மாதிரி சமூக தணிக்கை**

2013அம் ஆண்டில் தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கம் 19 மாவட்டங்களில் 19 மாதிரி சமூக தணிக்கைகள்

மேற்கொண்டு குறைபாடுகளைக் கண்டறிந்து திட்டத்தினை செயல் படுத்தும் அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு குறை நிவர்த்தி அறிக்கைகள் கோரப்பட்டது.

**சமூகத் தணிக்கை செயல்பாடுகள்**

சமூகத் தணிக்கை பணியானது **24.1.2015** முதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. **2015 –16** ஆம் நிதியாண்டில் சமூக தணிக்கை நாட்காட்டிகள் தயாரிக்கப்பட்டு **24** சுற்றுகளில் **8,344** ஊராட்சிகளில் சமூக தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. நடப்பு நிதியாண்டில் **30.5.2016** அன்று முதல் சமூக தணிக்கை தொடங்கப்பட்டு இதவரை **2463** கிராம ஊராட்சிகளில் சமூக தனிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் **2014–15, 2015–16** ஆகிய ஆண்டுகளில் தணிக்கை மேற்கொள்ளப்படாமல் நிலுவையிலிருந்த ஊராட்சிகளிலும் சமூக தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**சமூக தணிக்கையின் தாக்கம்**

சமூக தணிக்கையானது, திட்டப்பயனாளி களிடையேயும், திட்டத்தினை செயல்படுத்துபவர்கள் மத்தியிலும் அளப்பறிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. திட்டத்தில் பங்கு கொள்பவர்களுக்கு சமூக தணிக்கையின் முக்கியத்துவம் உணர வைக்கப்பட்டுள்ளது. சமூக தணிக்கை அலகின் மூலம் பயனாளிகளுக்கு அவர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் தொடர்பாக வெற்றிகரமாக விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சமூக தணிக்கையினை இத்திட்டத்தில் பணியாற்றும்



பணியாளர்களைக் கொண்டு சமூக தணிக்கை மேற்கொள்வதால் வட்டார அளவில் மற்றும் ஊராட்சி அளவில் பராமரிக்கப்படும் பதிவேடுகளின் பதிவுகள் மேம்படுத்தப்பட்டுள்ளதோடு அதன் முக்கியத்துவம் உணர வைக்கப்பட்டுள்ளது.சமூக தணிக்கை சிறப்பு கிராம சபை கூட்டத்தினால் பொது மக்கள் தங்களது உரிமைகளையும் சட்ட ரீதியான பயன்களையும் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**4.2. பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்)**

மத்திய அரசின் வீட்டு வசதி திட்டமானது பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) என சீரமைக்கப்பட்டுள்ளது. கிராமப் பகுதிகளில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும், வீடில்லாத ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், கொத்தடிமைகளாக இருந்து விடுவிக்கப்பட்டவர்கள், வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் அல்லாத ஊரக ஏழை மக்கள் ஆகியோருக்கு இலவச வீடுகள் கட்டித்தருதல் முந்தைய இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். கிராம சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் நபர்களின் பட்டியலிலிருந்து பயனாளிகள், தேர்வு செய்யப்படுகின்றனர். இத்திட்டத்திற்கான ஒரு நிதியாண்டின் மொத்த ஒதுக்கீட்டில் குறைந்தபட்சம் **60** விழுக்காடு, வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு (SC/ST) புதிய வீடுகள் மற்றும் கச்சா வீடுகளை மேம்பாடு

செய்வதற்காகப் பயன்படுத்தப்படும். அதிகபட்சமாக 40 விழுக்காடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அல்லாத பிற வகுப்பினைச் சார்ந்த வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கின்ற மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், மேற்கண்ட இனங்களில் 3 விழுக்காடானது, மாற்றுத் திறனாளிகள் மற்றும் மனவளர்ச்சி குன்றியோருக்கு ஒதுக்கப்படுகிறது. 2014–15–ம் ஆண்டு வரை 75:25 என்ற விகிதத்தில் இருந்த மத்திய மற்றும் மாநில அரசின் நிதி பங்கீடு விகிதம், 2015–16–ம் ஆண்டு முதல் 60:40 என மாற்றப்பட்டுள்ளது. ஒவ்வொரு வீடும் 210 சதுர அடி பரப்பளவு கொண்டது. கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்காக அலகுத்தொகையை விட கூடுதல் நிதியாக ரூ.50,000 மாநில அரசு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. 2011–12–ம் ஆண்டு முதல் 2015–16–ம் ஆண்டு வரை மொத்தம் 4,41,637 வீடுகள் ரூ.4875.718 கோடி மொத்த மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன. இது மாநில அரசு நிதியிலிருந்து வழங்கப்பட்ட ரூ.3010.655 கோடியையும் உள்ளடக்கியது ஆகும்.

- மேலும், 2015–16–ஆம் ஆண்டு முதல் பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தொகை பொது நிதி மேலாண்மை முறையின் (PFMS) மூலம் பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக ஈடு செய்யப்படுகிறது.
- மேலும், 2015–16–ஆம் ஆண்டில், 90 மனித சக்தி நாட்களை ஒரு வீட்டிற்கு வழங்குவதன் மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்



திட்டத்தின்கீழ் இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தை ஒருங்கிணைப்பு செய்ய அரசாணை எண். 59 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி.1) துறை நாள்–15.4.2015–ல் உத்திரவிடப்பட்டுள்ளது.

- மேலும். தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின் மூலம் கழிப்பறை கட்ட ரூ.12,000 வழங்கப்படுகிறது.

### 4.2.1. பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) சிறப்புத் திட்டம் (வெள்ள நிவாரணம்) – 2016–17

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) சிறப்புத் திட்டம் (வெள்ள நிவாரணம்) – 2016–17ன் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் ரூ.778.396 கோடி மொத்த மதிப்பீட்டில் 45,788 வீடுகள் கட்டப்படும். மத்திய மாநில அரசுகளின் நிதி பங்கீடு விகிதம் 60:40 ஆகும். பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) சிறப்புத் திட்டம் (வெள்ள நிவாரணம்)–2016–17–ல் ஒரு வீட்டிற்கான அலகு தொகை ரூ.70,000–ல் மத்திய அரசின் பங்குத் தொகை ரூ.42,000 (60%) மற்றும் மாநில அரசின் பங்குத் தொகை ரூ.28,000 (40%) ஆகும். கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்காக மாநில அரசு கூடுதல் நிதியாக ரூ.1,00,000 வழங்குவதால், தமிழ்நாட்டில் பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) சிறப்புத் திட்டம்(வெள்ள நிவாரணம்)–2016–17ன் கீழ், ஒரு வீட்டிற்கான மொத்த அலகுத் தொகை ரூ.1.70 இலட்சம் ஆகும். இதில், மாநில அரசின் பங்குத் தொகை ரூ.1,28,000 (75.29 %) மத்திய அரசின் பங்குத் தொகை ரூ.42,000 (24.71 %).

### 4.2.2. பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) – 2016-17

- **2016–17** ஆம் ஆண்டு முதல் இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம், பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) (Pradhan Mantri Awaas Yojana-Gramin) என சீரமைக்கப்பட்டுள்ளது.
- பொருத்தமான மற்றும் புதிய தொழிற்நுட்பங்களைப் பயன்படுத்தி பயனுள்ள மதிப்பீட்டில் (Cost Effective) பயனாளிகளால் தரமான மற்றும் பேரிடர்களைத் தாங்கக் கூடிய வீடுகள் கட்டுவதை நோக்கமாகக் கொண்ட திட்டம் பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) ஆகும்.
- சமூக பொருளாதார கணக்கெடுப்பு பட்டியல் **2011–ஐ** பயன்படுத்தி கிராம சபை மூலம் பயனாளிகளைக் கண்டறிந்து, பயனாளிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர். பயனாளிகளை நீக்குதல் அல்லது முன்னுரிமைப்படுத்துதலில் ஏற்படும் குறைபாடுகளைக் களைய "மேல்முறையீட்டுக்குழு" (Appellate Committee) ஒன்று மாவட்ட அளவில் ஏற்படுத்தப்பட உள்ளது.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ் **2016–17–ஆம்** ஆண்டு தமிழகத்திற்கு **1,31,831** வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



### 4.3 நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம்

ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளியினை நிரப்புவதே நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கமாகும். மத்திய அரசு, நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியினை **2011–12–ம்** ஆண்டு முதல் ரூ.**2** கோடியிலிருந்து ரூ.**5** கோடியாக உயர்த்தியுள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இத்திட்ட செயலாக்கத்திற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையே தொடர்பு துறை ஆகும். தமிழ்நாட்டில் **39** மக்களவை உறுப்பினர்களுக்கும், **18** மாநிலங்களவை உறுப்பினர்களுக்கும் மற்றும் **2** தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் பணிகளுக்கான நிர்வாக அனுமதி வழங்குவார். இத்திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யக்கூடிய பணிகள் குறித்த விளக்கப் பட்டியலும், தடை செய்யப்பட்ட பணிகள் குறித்தும் வழிகாட்டு நெறிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அனைத்து வகையான பராமரிப்பு பணிகளும் தடை செய்யப்பட்டுள்ளன. குளங்கள், குட்டைகள், ஆறுகள், வாய்க்கால் தூர் வாருதல் போன்ற பணிகள் பராமரிப்பு பணிகளாக கருதப்பட்டு இத்திட்டத்தின் கீழ் எடுத்து செய்ய இயலாது.

இத்திட்டத்தின் கீழ் **2015–16–ம்** ஆண்டில் ரூ.**295** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## அட்டவணை 4.5
## நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதி 2015–16–ம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள பணிகள் விபரம்

| வ.எண் | பணிகள் | பணிகளின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு (ரூ.கோடி) |
|---|---|---|---|
| 1. | கட்டிடங்கள் | 976 | 76.75 |
| 2. | சாலைகள் | 1146 | 82.45 |
| 3. | குடிநீர் வழங்கல் | 532 | 19.69 |
| 4. | இதர பணிகள் | 1960 | 106.86 |
| **மொத்தம்** | | **4614** | **285.75** |

### 4.3.1. வடமேற்கு பருவ மழை –2015

### நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி உள்ளூர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வெள்ள நிவாரணப் பணிகள் மேற்கொள்ளல்

தமிழகத்தில் கடந்த 2015 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் ஏற்பட்ட பெருமழை வெள்ளத்தையடுத்து, மத்திய அரசு, இம்மாநிலத்தை பேரிடர் மாநிலமாக அறிவித்தது.

அதனைத் தொடர்ந்து, கடலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் வெள்ள நிவாரணப் பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்கள் அளித்திருந்த பணிகள் பட்டியலின்படி, மத்திய அரசிற்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது.



அதன்படி, மத்திய அரசு மேற்காணும் கருத்துருவை ஏற்றுக்கொண்டதையடுத்து கீழ்காணும் விவரப்படி பணிகள் எடுத்துச் செய்யப்பட்டு வருகின்றன.

## அட்டவணை 4.6

| மாவட்டம் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | | பொ.ப.துறை | | நகராட்சி நிர்வாகம் | | ஆக மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | எடுக்கப்பட்டுள்ள பணிகள் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | எடுக்கப்பட்டுள்ள பணிகள் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | எடுக்கப்பட்டுள்ள பணிகள் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | எடுக்கப்பட்டுள்ள பணிகள் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
| கடலூர் | 12 | 377.50 | 1 | 700 | 1 | 300 | 14 | 1377.50 |
| காஞ்சிபுரம் | 197 | 1533.20 | - | - | - | - | 197 | 1533.20 |
| திருவள்ளூர் | 11 | 1042.50 | - | - | - | - | 11 | 1042.50 |
| **கூடுதல்** | **220** | **2953.20** | **1** | **700** | **1** | **300** | **222** | **3953.20** |

### 4.4. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்

500–க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட இணைப்புச்சாலை வசதி இல்லாத குக்கிராமங்களுக்கு சாலை இணைப்பு வசதி செய்து தருவதும், ஏற்கனவே உள்ள இணைப்புச் சாலைகளை மேம்படுத்துவதும் இத்திட்டத்தின் குறிக்கோளாகும். பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம், முன்னர் 100% மத்திய அரசு நிதி ஆதாரத்துடன் செயல்படுத்தப்பட்டது. தற்போது, 60% மத்திய அரசின் பங்களிப்புடனும், 40% மாநில அரசின் பங்களிப்புடனும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அட்டவணை 4.7

**பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் பகுதி I முதல் VII வரை**

| வ.எண் | பகுதி | வருடம் | எண்ணிக்கை | நீளம் கி.மீ | மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|---|
| 1 | I | 2000-01 | 862 | 1442.123 | 152.911 |
| 2 | II | 2001-02 | 444 | 795.088 | 114.265 |
| 3 | III | 2003-04 | 491 | 1096.398 | 159.072 |
| 4 | IV | 2004-05 | 393 | 778.310 | 111.354 |
| 5 | V | 2005-06 | 365 | 799.592 | 170.838 |
| 6 | VI | 2006-07 | 810 | 2049.019 | 459.819 |
| 7 | VII | 2007-08 | 1581 | 3010.324 | 853.720 |
| மொத்தம் | | | 4946 | 9970.854 | 2021.98 |

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் பகுதி VII (அதாவது 2000 முதல் 2008 வரை) 4946 சாலைப்பணிகள் எடுக்கப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு விட்டன.

**<u>பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் பகுதி VIII</u>**

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் பகுதி VIII–ன்கீழ், 3,091 கி.மீ. நீளமுள்ள, 1295 சாலைப்பணிகள் மற்றும் 45 பாலங்கள், 1,128.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. இதில் 254.06 கோடி ரூபாய் மாநில அரசின் பங்கு அடங்கும்.



**<u>பிரதம மந்திரி கிராம சாலை திட்டம் பகுதி IX</u>**

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் பகுதி IX–ன் கீழ், 956 கி.மீ. நீளமுள்ள 401 சாலைப்பணிகள் மற்றும் 6 பாலங்கள் 357.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. இதில், 160.72 கோடி ரூபாய் மாநில அரசின் பங்கு அடங்கும்.

### 4.5. தூய்மை பாரத இயக்கம் ( ஊரகம்)

அனைத்து வீடுகளுக்கும் சுகாதார வசதிகளை 2012க்குள் ஏற்படுத்திடவும், ஊரகப் பகுதிகளில் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலும் மத்திய அரசால் ‘‘முழு சுகாதார இயக்கம்’’ 1999ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, பின்னர் 2004 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டது.

இத்திட்டமானது, 1.4.2012 முதல், ‘‘நிர்மல் பாரத் அபியான்’’ என பெயர் மாற்றம் செய்யப்பட்டு மத்திய அரசு திருத்திய வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டது. இத்திட்டத்தின் கீழ் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுவதற்காக வழங்கப்படும் ஊக்கத் தொகை, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள் மட்டுமல்லாமல் வறுமைக்கோட்டிற்கு மேலுள்ள குடும்பங்களில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகள், வீடு உள்ள ஆனால் நிலமற்ற விவசாய உழைப்பாளிகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பெண்கள்

தலைமையில் செயல்படும் குடும்பங்களுக்கு மட்டும் விரிவுபடுத்தப்பட்டது.

மகாத்மா காந்தியடிகளின் 150–வது பிறந்த நாளில் அவருக்குப் பொருத்தமான அஞ்சலி செய்யும் வகையில் அனைத்து முயற்சிகளையும் முடுக்கிவிட்டு அனைவருக்கும் சுகாதார வசதிகள் முழுமையாக அடைவதன் மூலம் தூய்மை பாரதம் என்ற நிலையை 2019ம் ஆண்டிற்குள் எய்த வேண்டி, மத்திய அரசால் 2014ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2ம் நாள் முதல், நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின் தொடர்ச்சி திட்டமாக "தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)" தொடங்கப்பட்டது.

### திட்டத்தின் நோக்கங்கள்

தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

அ) திறந்த வெளியில் மலம் கழித்தலை ஒழித்து, தூய்மை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தி ஊரகப் பகுதிகளில், மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்பாடு செய்தல்.

ஆ) 2.10.2019க்குள் தூய்மை பாரதத்தின் இலக்கினை எய்த ஊரகப் பகுதிகளில் சுகாதார மேம்பாட்டின் செயல்பாடுகளை விரைவு படுத்துதல்.



இ) நிலையான சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்திட ஊராட்சி அமைப்புகள் மற்றும் சமூகங்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் சுகாதாரக் கல்வி மூலம் ஊக்குவித்தல்.

ஈ) நிலையான சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பான வகையில், சிக்கனமான மற்றும் பொருத்தமான தொழில்நுட்பத்தை ஊக்குவித்தல்.

உ) ஊரகப் பகுதியில் ஒட்டுமொத்த சுகாதாரத்தினை ஏற்படுத்தத் தேவையான இடங்களில் அறிவியல் பூர்வமான திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை முறைகளை, சமூகத்தால் நிர்வகிக்கப்படும் வகையில் ஏற்படுத்துதல்.

### தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கூறுகள்

தனிநபர் இல்லக் கழிப்பறை, சமூக சுகாதார வளாகம், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டம் ஆகியவை தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின் முக்கிய கூறுகளாகும்.

### அ) தனி நபர் இல்லக் கழிப்பறை

முறையாக முடிக்கப்பட்ட தனிநபர் இல்ல சுகாதார கழிப்பறையானது, அடித்தள கட்டுமானம், மேல்தளக் கட்டுமானம் மற்றும் தண்ணீர் வசதி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். அனைத்து ஊரக குடும்பங்களும்

கழிப்பறை வசதி பெறுவதை உறுதி செய்வதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும்.

தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கீழ், வறுமைக் கோட்டிற்கு கீழ் மற்றும் அடையாளம் காணப்பட்ட வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பத்திற்கு தனி நபர் இல்லங்களில் கழிப்பறை கட்ட அலகுத் தொகை ரூ. 12,000 ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. மத்திய அரசு 2015–16 ம் ஆண்டு முதல் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்குத் தொகையினை 60:40 என்ற விகிதத்தில் மாற்றம் செய்துள்ளது. பயனாளியின் பங்களிப்பு இல்லாமல் இந்த தொகை முழுவதும் தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கீழ், மத்திய அரசு பங்குத் தொகையாக ரூ. 7,200 மற்றும் மாநில அரசு பங்குத் தொகையாக ரூ. 4,800 வழங்கப்படுகிறது.

2013–14, 2014–15 மற்றும் 2015–16ம் ஆண்டுகளில், 16,39,851 தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. தூய்மை பாரத இயக்க (ஊரகம்)–த்தின் கீழ் 2016–17ம் ஆண்டில், ரூ. 919.45 கோடி நிதி ஒதுக்கீட்டில், 7,66,208 தனிநபர் இல்லக் கழிப்பறைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுதல்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் தனியாக தனிநபர் இல்லக் கழிப்பறைப் பணிகள், ரூ. 12,000 அலகுத் தொகையில் எடுக்கப்படுகிறது. 2016–17ம் ஆண்டில் 7.51 இலட்சம் தனிநபர் இல்லக்



கழிப்பறைகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ளன.

**(ஆ) திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை**

திட மற்றும் திரவ கழிவுக் மேலாண்மை இத்திட்டத்தின் ஒரு கூறாகும். தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கீழ், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்ட செயலாக்கத்திற்கான மொத்த உதவித் தொகை ஒவ்வொரு கிராம ஊராட்சியின் மொத்த தனிநபர் இல்லங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கணக்கிடப்படும்.

**(இ) சமூக சுகாதார வளாகங்கள்**

போதிய எண்ணிக்கையிலான கழிப்பறைகள், குளியலறைகள், துணி துவைக்கும் மேடைகள், கை கழுவுவதற்கான வசதி மற்றும் இதர வசதிகளை உள்ளடக்கிய சமூக சுகாதார வளாகங்கள் கிராம மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய மற்றும் எளிதில் அணுகக் கூடிய இடத்தில் அமைத்திடலாம். ஒவ்வொரு சமூக சுகாதார வளாகத்திற்கும் அதிகபட்சமாக ரூ. 2 லட்சம் வரை நிதி உதவி அளிக்கப்படும். மத்திய அரசு, மாநில அரசு மற்றும் சமுதாயப் பங்குத் தொகை 60:30:10 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது.

**4.6. நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம்**

நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் 11.10.2014ல் மத்திய அரசால் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகள் www.saanjhi.gov.in வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்வு செய்யப்படும் கிராமங்களில் அனைத்து துறைகளின் திட்டங்களையும் ஒருங்கிணைத்து, ஒருமுகப்படுத்தி, மாதிரி கிராமங்களில் செயல்படுத்தி அனைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கிராம ஊராட்சியே இத்திட்ட செயலாக்கத்தின் அடிப்படை அலகாகும். சமவெளிப்பகுதிகளில் மக்கள் தொகை 3000 முதல் 5000 வரையும், மலைப்பகுதி மற்றும் பழங்குடி கிராமங்கள் எனில் மக்கள் தொகை 1000 முதல் 3000 வரையும் உள்ள கிராம ஊராட்சியை ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தேர்ந்தெடுக்க வேண்டும். மாவட்டங்களில் இந்த அலகு அளவுக்கு மக்கள் தொகை கிடைக்கவில்லை என்றால் ஏறக்குறைய இதே அளவுக்கு மக்கள் தொகை உள்ள கிராம ஊராட்சிகளை தேர்வு செய்யலாம். நாடாளுமன்ற உறுப்பினர் தனது (அ) தனது மனைவியின் / கணவனின் சொந்த கிராமத்தை தவிர்த்து இதர கிராமங்களிலிருந்து மாதிரி கிராமமாக உருவாக்க வேண்டிய கிராம ஊராட்சியை தங்கள் விருப்பப்படி கண்டறியலாம். மக்களவை உறுப்பினர் தனது தொகுதிக்குள்ளும், மாநிலங்களவை உறுப்பினர் தனது மாநிலத்திற்குள்ளும், நியமன உறுப்பினர் இந்திய அளவில் எந்த ஒரு மாநிலத்திலும், ஒரு கிராமத்தை தேர்ந்தெடுக்கலாம். நகர்ப்புற தொகுதியை பொறுத்தவரையில் கிராம ஊராட்சிகள் இல்லையெனில் சம்பந்தப்பட்ட மக்களவை உறுப்பினர் அருகிலுள்ள ஊரகத் தொகுதியிலிருந்து கிராமத்தை தேர்ந்தெடுக்க வேண்டும்.



நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமமாக உருவாக்க வேண்டிய ஒரு கிராம ஊராட்சியை உடனடியாகவும் மற்ற இரண்டு கிராம ஊராட்சிகளை பின்னரும் தெரிவு செய்ய வேண்டும். முக்கியமாக, 2019 மார்ச் மாதத்திற்குள் மூன்று மாதிரி கிராமங்களை உருவாக்க வேண்டும் என்பதும், அதில் ஒன்று 2016க்குள் உருவாக்கப்படுதல் வேண்டும். இவ்வாறாக 2024–க்குள் 5 மாதிரி கிராம ஊராட்சிகளை (ஆண்டிற்கு ஒன்று வீதம்) தேர்வு செய்து மேம்படுத்த வேண்டும்.

அரசு தலைமை செயலாளரின் தலைமையிலான உறுப்பினர்கள் அடங்கிய மாநில அளவிலான அதிகாரம் அளிக்கப்பட்ட குழு அரசாணை நிலை எண்.23, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அ.தி 2) துறை நாள் 13.02.2015ன்படி அமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி கிராமங்களில் பல்வேறு துறைகளின் ஏற்கனவே நடைமுறையில் உள்ள அரசுத் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு என தனியாக நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. மேலும், புதிய உட்கட்டமைப்பு மற்றும் கட்டுமானம் தொடர்புடைய திட்டங்களும் அனுமதிக்கப்படவில்லை. அனைத்து வளங்களும் ஒரே இலக்கினை நோக்கி ஒருங்கிணைந்த வகையில் அதிகபட்ச பயன்களை தரும் வகையில் உபயோகிக்கப்பட வேண்டும். மத்திய அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களில் தொடர்புடைய

அமைச்சகம், மத்திய அரசுத் துறைகள் / மத்திய அரசு நிதிப் பங்களிப்போடு செயல்படுத்தப்படும் திட்டங்களில் மாதிரி கிராங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் வழிகாட்டு நெறிமுறைகளில் தகுந்த மாற்றங்கள் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தில் அதிகபட்ச பலன்களை அடைய மாநில அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்த வேண்டும்.

### 4.7. தேசிய கரிமவாயு மற்றும் உர மேலாண்மைத் திட்டம்

இயற்கைக் கழிவுகளை சக்தியாக மாற்றம் செய்து முழுமையாக பயன்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். இத்திட்டம் 100 விழுக்காடு மத்திய அரசு மானியத்துடன் செயல்படுத்தப்படுகிறது. பொதுப் பிரிவினருக்கு ஒரு கன மீட்டருக்கு ரூ.5,500 மற்றும், 2–6 கன மீட்டருக்கு ரூ.9,000 வீதம் மானியம் வழங்கப்படுகிறது, ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் மலைப்பாங்கான பகுதிகளில் உள்ள பயனாளிகளுக்கு ஒரு கன மீட்டருக்கு ரூ.7,000 மற்றும் 2–6 கன மீட்டருக்கு ரூ.11,000 என மானியம் வழங்கப்படுகிறது. மேலும் கழிவறைகளுடன் கூடிய கரிம வாயுக் கலன்களுக்கு கூடுதலாக ரூ.1,200 வீதம் மானியம் வழங்கப்படுகிறது.

2016–17ம் நிதி ஆண்டில் மத்திய அரசு 300 கரிம வாயுக் கலன்கள் அமைத்திட செயல் இலக்காக நிர்ணயித்துள்ளது.



## 5. மனித வள மேம்பாடு

## 5. மனித வள மேம்பாடு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையானது பணியாளர்களின் பணிநிலையினை மேம்படுத்தவும், அவர்களின் உரிமைகளை உறுதிபடுத்தவும் தொடர்ச்சியான மற்றும் உறுதியான முயற்சிகளை எடுத்து வருகிறது.

### 5.1. அரசிதழ் பதிவு பெற்ற பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் மொத்தம் 1,562 அரசிதழ் பதிவு பெற்ற பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**அட்டவணை 5.1.**

**வகைவாரியான பணியாளர்கள் விவரம்**

அரசுப் பணியாளர்கள் – அரசிதழ் பதிவு பெற்றவர்கள்

| வ. எண் | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் எண்ணிக்கை | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1. | கூடுதல் ஊரக வளர்ச்சி இயக்குநர் | 20 | ரூ.37400-67000+8800 தர ஊதியம் |
| 2. | இணை இயக்குநர் | 89 | ரூ.15600-39100+7600 தர ஊதியம் |
| 3. | உதவி இயக்குநர் | 407 | ரூ.15600-39100+5400 தர ஊதியம் |
| 4. | வட்டார வளர்ச்சி அலுவலர் | 1046 | ரூ.9300-34800+5100 தர ஊதியம் + 1000 சிறப்பு படி |
| **மொத்தம்** | | **1,562** | |

காலியாக உள்ள கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பணியிடங்களை நிரப்ப அரசு உத்தரவிட்டுள்ளது. அரசுப் பணியாளர்களின் உரிமைகள், பதவி உயர்வு உள்பட, உரிய காலத்தில் வழங்கப்படுவதை அரசு உறுதி செய்துள்ளது.



- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 16 கூடுதல் இயக்குநர்களும் இதர துறைகளில் 4 கூடுதல் இயக்குநர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.
- இணை இயக்குநர் நிலையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 75 இணை இயக்குநர்களும் இதர துறைகளில் 14 இணை இயக்குநர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.
- உதவி இயக்குநர் நிலையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 323 உதவி இயக்குநர்களும் இதர துறைகளில் 2 உதவி இயக்குநர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

500 ஊரட்சிகளுக்கு மேல் உள்ள விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் கூடுதலாக 5 உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மற்றும் 5 உதவி இயக்குநர் (தனிக்கை) பணியிடங்கள் தேற்றுவித்து உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி, புதியதாக தோற்றுவிக்கப்பட்ட அலுவல கங்களுக்கு உதவி இயக்குநர்கள் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள்.

### 5.2. பொறியியல் பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பொறியியல் பிரிவில் மொத்தம் 5,300 பொறியியல் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

அட்டவணை 5.2.

வகைவாரியாக பொறியியல் பணியாளர்கள் விவரம்

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப் பட்ட பணியிடங்கள் | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1. | கண்காணிப்பு பொறியாளர் | 2 | ரூ.37400-67000+ தர ஊதியம் ரூ. 8700 |
| 2. | செயற்பொறியாளர் | 47 | ரூ.15600-39100+ தர ஊதியம் ரூ.6600 |
| 3. | உதவி செயற்பொறியாளர் | 195 | ரூ.15600-39100+ தர ஊதியம் ரூ.5400 |
| 4. | உதவிப் பொறியாளர் | 952 | ரூ.9300-34800+ தர ஊதியம் ரூ.5100 |
| 5. | முதுநிலை வரைதொழில் அலுவலர் | 34 | ரூ.9300-34800+ தர ஊதியம் ரூ.5100 |
| 6. | இளநிலைப் பொறியாளர் | 317 | ரூ.9300-34800+ தர ஊதியம் ரூ.4400 |
| 7. | பணிப்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர் | 2604 | ரூ.9300-34800+ தர ஊதியம் ரூ.4200 |
| 8. | சாலை ஆய்வாளர் | 1149 | ரூ.5200-20200+ தர ஊதியம் ரூ.2400 |
| மொத்தம் | | 5,300 | |

- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 39 செயற்பொறியாளர்களும் இதர துறைகளில் 6 செயற்பொறியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.
- உதவி செயற்பொறியாளர் நிலையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 173 உதவி செயற்பொறியாளர்களும், இதர துறைகளில் 10 உதவி செயற்பொறியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.



- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 811 உதவி பொறியாளர்களும், 135 இளநிலை பொறியாளர்களும், 15 முதுநிலை வரைதொழில் அலுவலர்களும், 1,838 பணிப்பார்வையாளர்கள் / இளநிலை வரைதொழில் அலுவலர்களும் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், அரசாணை (நிலை) எண். 49 ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை (இ3) நாள் 31.3.2015ல் சாலை ஆய்வாளர் நிலை–2 மற்றும் சாலை ஆய்வாளர் நிலை–1 ஆகியவற்றை ஒருங்கிணைத்து சாலை ஆய்வாளர் என ஆணையிடப்பட்டுள்ளது. தற்பொழுது 635 சாலை ஆய்வாளர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பணி புரிந்து வருகின்றனர்.

## 5.3. முதுநிலை அலுவலர்களை பிற துறைக்கு மாற்றுப் பணியில் அனுப்புதல்

இத்துறையைச் சார்ந்த கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர், செயற்பொறியாளர், உதவி இயக்குநர் மற்றும் உதவி செயற்பொறியாளர் நிலையில் உள்ள முதுநிலை அலுவலர்களை சிறப்பு திட்டங்கள் நிறைவேற்றல் துறை, தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியம், மாநில திட்டக்குழு, கால்நடை பராமரிப்புத் துறை, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை, மின் வாரியம், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, மோனோ ரயில் திட்டம், தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பகம், சமூகநலம் மற்றும் சத்துணவுத் துறை, தமிழ்நாடு

ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO), தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக் கழகம் (TANUVAS) தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் (ஆவின்), சென்னை பெருநகர வளர்ச்சி கழகம் (CMDA), பேரூராட்சிகள் இயக்ககம், மாநில நலவாழ்வு சங்கம் (TNHSP), தேசிய ஊரக சாலை மேம்பாட்டு முகமை (NRRDA) போன்ற துறைகளில் மாற்றுப் பணியில் பணிபுரிய உத்தரவிடப்பட்டுள்ளது. இது இத்துறையில் அவரது பணிகளை திறம்பட செய்ய அனுபவம் மற்றும் பட்டறிவை வழங்குகிறது.

**5.4 அரசிதழ் பதிவு பெறா பணியமைப்பு**

தமிழக அரசு கடந்த ஐந்து ஆண்டுகளில் பணியாளர் நலன் தொடர்பான நடவடிக்கைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்துள்ளது. சிறந்த நிர்வாகத்தினை உறுதி செய்யும் பொருட்டு அனைத்து மட்டங்களிலும் பணியாளர்களுக்கு உரிய காலத்தில் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் நிலையில் பல்வேறு காலிப்பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடி நியமனத்தால் நிரப்பப்பட்டுள்ளன. தமிழ்நாடு அடிப்படை பணியமைப்பின் கீழ் வரும் காலிப் பணியிடங்களும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பட்டியல் பெற்றும் செய்தித் தாள்களில் விளம்பரம் வெளியிடப்பட்டும் நேரடி நியமனத்தின் மூலம் நிரப்பப்பட்டுள்ளன. **2015–16** ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளின் கீழ் வரப்பெறும் **4375** காலிப் பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட்டுள்ளன. மேலும் **2015–2016**ம் ஆண்டில் தமிழ்நாடு பொதுசார்நிலைப் பணிகள் மற்றும் அடிப்படை பணிகளின் கீழ் அமையும் **381** பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட்டுள்ளன.

மேலும், **1018** துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்களாகவும், **1316** உதவியாளர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களாகவும், மற்றும் **2013** தட்டச்சர்கள் / இளநிலை உதவியாளர்கள், உதவியாளர்களாகவும் பதவி உயர்வு பெற்றுள்ளனர். **475** நபர்கள் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். **2011–2012** முதல் **2015–2016**ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் பதிவறை எழுத்தர் / அலுவலக உதவியாளர் / இரவுக்காவலராக பணியாற்றிய **126** நபர்கள் **10%** இட ஒதுக்கீட்டின் கீழும் **599** ஊராட்சி செயலர்கள் **20%** இட ஒதுக்கீட்டின் கீழும் இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

கிராம ஊராட்சி பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அரசால் பிறப்பிக்கப்பட்டுள்ள பல்வேறு ஆணைகளின் விவரம் பின்வருமாறு:

- “ஊராட்சி உதவியாளர்” என்ற பணியிடத்தின் பெயரினை “ஊராட்சி செயலாளர்” என பெயர்

மாற்றம் செய்து அவர்களுக்கு சிறப்புப்படியாக மாதம் ரூ.500/– வழங்கி அரசாணை (நிலை) எண். 52, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள். 29.08.2011 –ல் ஆணையிடப்பட்டுள்ளது.

- அரசாணை (நிலை) எண். 70, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள். 07.08.2012–ல் நிரந்தர பயணப்படியாக ரூ.300/– ஊராட்சி செயலர்களுக்கு அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.
- அரசாணை (நிலை) எண். 71, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள். 07.08.2012–ல் கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்களுக்கு மாதம் ரூ.200/– சிறப்புப்படியாக அனுமதித்து ஆணையிடப் பட்டுள்ளது.
- அரசாணை (நிலை) எண். 39, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள். 07.05.2013–ல் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் அரசு அலுவலகங்களில் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் துப்புரவு பணியாளர்களாக பணிபுரிந்துள்ள 10101 துப்புரவு பணியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் ரூ.1300–3000 + தரஊதியம் ரூ.300/– அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.
- அரசாணை (நிலை) எண். 129 மற்றும் 130, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள். 14.09.2013 –ல் மக்கள் தொகை அடிப்படையில் 16726



துப்புரவு பணியாளர்களை கிராம ஊராட்சிகளில் பணியமர்த்த ஆணையிடப்பட்டு, அவ்வரசு ஆணைகளில் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளின்படி 16508 துப்புரவு பணியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

- பெண் அரசு ஊழியர்களுக்கு அனுமதிக்கப்பட்டது போன்றே பெண் ஊராட்சி செயலர்களுக்கும் மகப்பேறு விடுப்பு 180 நாட்களாக உயர்த்தி அரசாணை (நிலை) எண். 148, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள். 27.11.2014–ல் அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.
- கிராம ஊராட்சி செயலர்கள், துப்புரவு பணியாளர்கள், மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி இயக்குபவர்கள் மற்றும் இதர கிராம ஊராட்சி பணியாளர்களுக்கு ஜூன் 2014 முதல் மாதந்தோறும் ஊதியம் மின்னணு பரிமாற்றம் (ECS) மூலம் வழங்கப்படுகிறது. கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களின் விபரங்களும் tnrd.gov.in வலைதளத்தில் பதியப்பட்டுள்ளது.
- அரசாணை (நிலை) எண். 42, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள். 24.03.2015 –ல் ஊராட்சி செயலர்களுக்கு ஓய்வுபெறும்போது வழங்கப்படும் சிறப்பு ஓய்வூதியத் தொகை ரூ.700/– லிருந்து ரூ.1000/– ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

### 5.4.1 பணியிட விபரங்கள்

அரசிதழ் பதிவு பெறா பணியமைப்பின் கீழ் வரும் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை மற்றும் அப்பதவிகளுக்குரிய ஊதியக் கட்டு பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது :–

**அட்டவணை 5.3**

**பணியாளர்களின் வகை**

| வரிசை எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிட எண்ணிக்கை | ஊதியவிகிதம் |
|---|---|---|---|
| **அ)** | **அரசுப் பணியாளர்கள்** | | |
| 1 | துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 3938 | ரு. 9300–34800<br>தர ஊதியம் 4800 +<br>தனி ஊதியம் 500/– |
| 2 | உதவியாளர் | 5563 | ரு. 5200–20200 +<br>தர ஊதியம் 2800/– |
| 3 | இளநிலை உதவியாளர் | 3137 | ரு. 5200–20200 +<br>தர ஊதியம் 2400/– |
| 4 | சுருக்கெழுத்து தட்டச்சர் | 182 | ரு. 5200–20200 +<br>தர ஊதியம் 2800/– |
| 5 | தட்டச்சர் | 1042 | ரு. 5200–20200 +<br>தர ஊதியம் 2400/– |
| 6 | ஓட்டுநர் | 899 | ரு. 5200–20200 +<br>தர ஊதியம் 2400/– |
| 7 | பதிவுரு எழுத்தர் | 137 | ரு. 4800–10000 +<br>தர ஊதியம் 1400/– |
| 8 | அலுவலக உதவியாளர் | 716 | ரு. 4800–10000 +<br>தர ஊதியம் 1300/– |
| 9 | இரவுக் காவலர் | 128 | ரு. 4800–10000 +<br>தர ஊதியம் 1300/– |
| 10 | மசால்ஜி | 14 | ரு. 4800–10000 +<br>தர ஊதியம் 1300/– |
| | **உள்ளாட்சிப் பணியாளர்கள் விவரம்** | | |
| **ஆ)** | **ஊராட்சி ஒன்றிய பணியாளர்கள் விவரம்** | | |
| 1 | ஓட்டுநர் | 770 | ரு. 5200–20200 +<br>தர ஊதியம் 2400/– |
| 2 | பதிவுரு எழுத்தர் | 387 | ரு. 4800–10000 +<br>தர ஊதியம் 1400/– |
| 3 | அலுவலக உதவியாளர் | 1521 | ரு. 4800–10000 +<br>தர ஊதியம் 1300/– |
| 4 | இரவுக் காவலர் | 377 | ரு. 4800–10000 +<br>தர ஊதியம் 1300/– |
| 5 | மசால்ஜி | 9 | ரு. 4800–10000 +<br>தர ஊதியம் 1300/– |
| **இ)** | **கிராம ஊராட்சிப் பணியாளர்கள்** | | |
| 1 | ஊராட்சி செயலர் | 12,524 | ரு. 2500–5000 +<br>தர ஊதியம் 500/– |
| 2 | துப்புரவு பணியாளர்கள் | 25,155 | ரு. 1300–3000 +<br>தர ஊதியம் 300/– ( 3 வருடம் பணி முடித்தவர்களுக்கு)<br>ரூ.2000/– தொகுப்பு ஊதியம் + ரூ.40/– ஒரு அரையாண்டிற்கு)<br>(மற்றவர்களுக்கு) |
| 3 | மேல்நிலை நீர்தேக்க தொட்டி இயக்குபவர்கள் | 35,548 | ரூ.2000/– தொகுப்பு ஊதியம் + அகவிலைப்படி ரூ.40/– ஒரு அரையாண்டிற்கு. |

### 5.4.2 வட்டார நிர்வாகத்தை மறுசீரமைத்தல்

நிர்வாகத் திறனை மேம்படுத்துவதற்காகவும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களிடையே தொடர்புடைய மாவட்ட மற்றும் வட்டார அளவில் வேலைப்பளுவை சரிசமமாக பகிர்ந்து வழங்குவதற்காகவும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பணியிடங்கள் தலைமையிடத்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் என மறுசீரமைக்கப்பட்டு அரசாணை (நிலை) எண். 127, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள். 21.09.2015–ன்படி ஆணை வெளியிடப்பட்டது. இவ்வரசாணையின்படி ஏற்கனவே நடைமுறையிலிருந்த வட்டார நிர்வாகம் மாற்றியமைக்கப்பட்டு புதிய பணியிடம் எதுவும் தோற்றுவிக்கப்படாமல், 1925 தலைமையிடத்து

துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் 1585 மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையிலான பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன. தற்போது ஊராட்சி நிர்வாகத்தை செம்மையாக வழிநடத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் தனிப்பட்ட முறையில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையிலான தனி அமைப்பு உள்ளது.

**5.4.3 மாவட்ட மற்றும் இயக்கக அளவில் உள்ள துணை வட்டார வளர்ச்சி அலுவலர் / கண்காணிப்பாளர் நிலையிலான பணியிடங்களை வட்டார வளர்ச்சி அலுவலர்/ கண்காணிப்பாளர் பணியிடங்களாக தரம் உயர்த்துதல்**

ஊரக வளர்ச்சி இயக்ககம் மற்றும் மாவட்ட அளவில் உதவி இயக்குநர் (ஊராட்சி) மற்றும் உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகங்களில் பணிபுரியும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களின் வேலைப்பளுவினைக் கருத்திற்கொண்டு, கீழ்க்கண்ட 87 துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பணியிடங்களை வட்டார வளர்ச்சி அலுவலர் பணியிடங்களாக தரம் உயர்த்தி அரசாணை (நிலை) எண்.52, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ6) துறை, நாள். 06.04.2015–ல் உத்திரவிடப்பட்டது.

1. உதவி இயக்குநர் (ஊராட்சி) அலுவலகங்களிலுள்ள 36 துணை வட்டார வளர்ச்சி அலுவலர் / தலைமை எழுத்தர் பணியிடங்கள் வட்டார வளர்ச்சி அலுவலர்/கண்காணிப்பாளர் பணியிடங்களாக தரம் உயர்த்தப்பட்டன.



2. உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகங்களிலுள்ள 33 துணை வட்டார வளர்ச்சி அலுவலர் / தலைமை எழுத்தர் பணியிடங்கள் வட்டார வளர்ச்சி அலுவலர்/கண்காணிப்பாளர் பணியிடங்களாக தரம் உயர்த்தப்பட்டன.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்திலுள்ள 18 துணை வட்டார வளர்ச்சி அலுவலர் / கண்காணிப்பாளர் பணியிடங்கள் வட்டார வளர்ச்சி அலுவலர்/கண்காணிப்பாளர் பணியிடங்களாக தரம் உயர்த்தப்பட்டன.

**5.4.4 துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு) பணியிடம் தோற்றுவித்தல்**

மாநிலத்தில் உள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களில் 27 ஊராட்சி ஒன்றியங்களைத் தவிர மீதமுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் சத்துணவுத்திட்டமானது வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி)–இன் கீழ் துணை வட்டார வளர்ச்சி அலுலவர் (சத்துணவு திட்டம்) உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விடுபட்டுப் போன 27 ஊராட்சி ஒன்றியங்களில் சத்துணவுத் திட்டம், வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி)–யால் துணை வட்டார வளர்ச்சி (நிர்வாகம்) உதவியுடன் தினசரி பணிகளோடு கூடுதல் பொறுப்பாக கவனிக்கப்பட்டு வந்தது. இந்த நிலை சுமார் 27 வருடங்களாக நீடித்து வந்தது.

இதனை சரிசெய்யும் பொருட்டு மேற்படி 27 ஊராட்சி ஒன்றியங்களில் அனுமதிக்கப்படாமல் இருந்த 27 துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு) பணியிடங்கள் அரசாணை (நிலை) எண். 2, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள். 04.01.2016–ன்படி தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அரசாணை (நிலை) எண். 127, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள். 21.09.2015–ற்கு உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, 27 மண்டலங்களை கூடுதலாக உருவாக்கி அரசாணை (நிலை) எண். 15, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ6) துறை, நாள். 01.02.2016–ன்படி ஆணையிடப்பட்டுள்ளது.

**5.4.5 அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் அடிப்படை பயிற்சி**

சீரிய முயற்சிகள் மேற்கொண்டதன் விளைவாக இளநிலை உதவியாளர் / நேரடி நியமன உதவியாளர்கள் தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்ய மற்றும் அடுத்தகட்ட பதவி உயர்வு பெறுவதற்கு தேவைப்படும் பணித்தகுதியை அடைவதற்காக பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்திற்கு அடிப்படைப் பயிற்சி பெற அனுப்புவதில் இருந்த பின்னடைவுகள் களையப்பட்டன. இதன் விளைவாக நேரடி நியமன உதவியாளர் உட்பட 1515 பணியாளர்கள் அடிப்படைப் பயிற்சிக்கு அனுப்பப்பட்டு வெற்றிகரமாக பயிற்சியினை நிறைவு செய்துள்ளனர்.



**5.4.6 கிராம ஊராட்சி பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள்**

நிர்வாகத்தின் கீழ் நிலையில் உள்ள கிராம ஊராட்சி பணியாளர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு அரசு பல்வேறு சலுகைகளை அவர்களுக்கு வழங்கியுள்ளது.

- கிராம ஊராட்சி பணியாளர்களுக்கு உரிய காலத்தில் ஊதியம் வழங்கப்படுவதை உறுதி செய்ய அரசாணை (நிலை) எண். 89 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா.I) துறை, நாள். 15.06.2015–ல் கூடுதலாக, கிராம ஊராட்சிகளில் 'கணக்கு எண். 7 கிராம ஊராட்சி பணியாளர்களின் சம்பளக் கணக்கு' உருவாக்கப்பட்டது. மேற்கண்ட அரசாணையின்படி உரிய நேரத்தில் ஊதியம் கிடைப்பதை உறுதி செய்ய மாநில நிதிக்குழு மானியத்திலிருந்து சம்பளம் மற்றும் இதரபடிகளுக்கு தேவையான தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு 7 வது கணக்குக்கு வழங்கப்படுகிறது.
- அரசாணை (நிலை) எண். 101, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அ.தி–1) துறை, நாள் 10.07.2015–ல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித்திட்ட பணிகள் மேற்கொள்வதற்கு ஊராட்சி செயலர்களுக்கு பிரதிமாதம் ரூ.1000/– சிறப்புப்படி அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.
- அரசு ஊழியர்களுக்கு இணையாக, கருணையடிப்படை நியமனத்தின் பலனை பணியிடை மரணமடையும் ஊராட்சி செயலர்களின் வாரிசுகளுக்கும் நீட்டித்து அரசாணை (நிலை) எண். 102, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள். 13.07.2015–ல் ஆணையிடப்பட்டுள்ளது.

## 5.5. திறன் மேம்பாடு

பயிற்சியானது எந்தவொரு செயலாக்கத்திற்கும் அல்லது திட்டத்திற்கும் முதுகெலும்பு போன்றதாகும். அரசின் திட்டமானது பெருமளவில் வெற்றி பெறுவது **திறன் மேம்படுவதிலும் மற்றும் அதனைச் சிறப்பாக செயல்படுத்துவதிலுமே சார்ந்துள்ளது.** பயிற்சி என்பது, பயிற்சி பெறுபவருடைய தனித்திறன், அறிவு, திறமை, பயிற்சி பெறுபவருடைய திறமை, சக்தி, செயல்படும் திறனை மேம்படுத்துதல் ஆகியவை பயிற்சி மூலமாக மேம்படுகிறது.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந் தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் தத்தம் கடமைகளையும், பொறுப்புகளையும் சிறப்பாக நிறைவேற்றிடவும், ஊரக வளர்ச்சிக்கான திட்டங்களை செவ்வனே செயல்படுத்திடவும் திறன் மேம்பாடானது ஒரு முக்கிய கருவியாகும். மாநில அளவில் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் திருவண்ணாமலை மாவட்டத்தில் சத்தியவிஜயநகரம், ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை மற்றும் மதுரை மாவட்டத்தில் தே.கல்லுப்பட்டி ஆகிய மண்டலங்களில் அமைந்துள்ள 5 மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் மூலம் பயிற்சிகள் வழங்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.



### அட்டவணை 5.4

### மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் அடிப்படை விவரம்

| வ. எண். | மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் பெயர் | மாவட்டத்தின் பெயர் | எல்லைக்குட்பட்ட மாவட்டங்கள் | துவக்க ஆண்டு | நிறுவனத்தின் பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|---|---|
| 1. | ச.வி.நகரம் | திருவண்ணாமலை | காஞ்சிபுரம், விழுப்புரம், திருவள்ளூர், கடலூார், திருவண்ணாமலை | 1956 | 34.59 |
| 2. | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம், தர்மபுரி, வேலூார் | 1958 | 55.05 |
| 3. | பட்டுக்கோட்டை | தஞ்சாவூர் | தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டிணம், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை | 1954 | 20.92 |
| 4. | பவானிசாகர் | ஈரோடு | ஈரோடு, கோயம்புத்துார், திண்டுக்கல், நீலகிரி, கரூர், பெரம்பலுார், அரியலுார், திருப்பூர் | 1972 | 71.89 |
| 5. | டி.கல்லுப்பட்டி | மதுரை | மதுரை, தேனி, விருதுநகர், இராமநாதபுரம், திருநெல்வேலி, துாத்துக்குடி, கன்னியாகுமரி | 1948 | 49.00 |

### 5.5.1. மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் பயிற்சி பங்கேற்பாளர்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், கிராம ஊராட்சித் தலைவர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் சார்பு துறையில் பணிபுரியும் அலுவலர்கள் ஆகியோருக்கு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

### 5.5.2. பயிற்சி திட்டங்கள்

மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் நடைபெறும் பயிற்சிகளில், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, ஊராட்சி நிர்வாகம், கணக்குகள் மற்றும் தணிக்கை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் திட்டங்கள், ஊரக சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை, மரபு சாரா எரிசக்தி, மனவியல் மேலாண்மை, கணினி மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஆகிய பொருள்கள் குறித்து பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இவை தவிர சாலைகள் அமைத்தல், பாலங்கள் கட்டுதல் மேற்படி பணிகள் குறித்த பயிற்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் மூலம் குறைந்தபட்சம் 5,000 (உள் வளாகம்) முதல் அதிகபட்சம் 25,000 (வெளி வளாகம்) நபர்களுக்கு பயிற்சி அளித்திட திட்டமிடப்பட்டுள்ளது.



### 5.5.3. பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கூடுதல் இயக்குநர்/ இணை இயக்குநர் நிலையிலான முதல்வர்களால் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

### 5.5.4. நிதி

ஊதியம் மற்றும் ஊதியம் சாராத வழக்கமான செலவினங்களுக்கு தமிழ்நாடு அரசு, ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களுக்கு நிதி வழங்குகிறது. மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி திட்டம் தொடர்பான செலவினங்களை மேற்கொள்ள ரூ.20 இலட்சம் தொடர் செலவின மானியமாக வழங்குகிறது. மேலும் இந்நிறுவனங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட மத்திய அரசு தொடரா செலவினத்தின் கீழ் நிதியினை வழங்குகிறது.

**அட்டவணை.5.5**

**2015–16ஆம் ஆண்டில் ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் எய்தப்பட்ட பயிற்சி சாதனைகள்**

| வ. எண். | பயிற்சியின் பெயர் | அணிகள் | | பயிற்சியாளர்கள் | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 1. | வழமையான பயிற்சி | 435 | 446 | 13050 | 11643 |
| 2. | கணினி பயிற்சி | 232 | 238 | 5850 | 4804 |
| 3. | புது வாழ்வு பயிற்சி | 2 | 2 | 85 | 82 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | மகளிர் திட்டம் (சுய உதவி குழு/ ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் | 5 | 5 | 260 | 255 |
| 5. | சட்ட மன்ற பொது தேர்தல் 2016 ஆண்டிற்கான தேர்தல் அலுவலர்களுக்கான பயிற்றுநர் பயிற்சி | 10 | 10 | 460 | 460 |
| | **மொத்தம்** | **684** | **701** | **19,705** | **17,244** |

**2015–16**ஆம் ஆண்டில் இலக்கை விட அதிக எண்ணிக்கையிலான அணிகள் ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் பயிற்சி பெற்று **102** விழுக்காடு இலக்கு எய்தப்பட்டுள்ளது. ஆனால் எதிர்பாராத பெருமழை மற்றும் பெருவெள்ளம், மீட்பு மற்றும் நிவாரண பணிகள் மற்றும் **2016** சட்டமன்ற பொதுத் தேர்தல் ஆகிய காரணங்களால் பயிற்சியாளர்கள் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டுள்ளது.

**2016–17**ஆம் ஆண்டில் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் ஏறக்குறைய **38,150** எண்ணிக்கையிலான பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இந்நிறுவனங்களுக்கு மாநில அரசு **2016–17**ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின் கீழ் ரூ.**606.80** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### 5.5.5. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் 1961 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிறுவனமானது தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975ன் கீழ் ஓர் சங்கமாக **1990–**ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டு முதல் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள மறைமலைநகரில் தனது சொந்த இடத்தில் **25** ஏக்கர் பரப்பளவில் செயல்பட்டு வருகிறது.

### 5.5.6. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் குறிக்கோள்

பல்வேறு நிலையிலான பயிற்சியாளர்களின் அறிவினை மேம்படுத்துவதும், அவர்களின் தனிநபர் திறமையை உயர்த்துவதும் மற்றும் அவர்களின் செயல்பாடுகளை மாற்றுவதின் மூலம் அரசின் திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்த வைப்பதே இந்நிறுவனத்தின் முதன்மை குறிக்கோளாகும்.

### 5.5.7. விரிவுரையாளர்கள் மற்றும் நிர்வாக பணியாளர்கள்

இந்நிறுவனத்தில் பயிற்சிகள் நடத்துதல் மற்றும் அது சார்ந்த பணிகளை செய்திட விரிவுரையாளர்கள் மற்றும் நிர்வாகப் பணியாளர்கள் பணியிடங்களை தமிழ்நாடு அரசு அனுமதித்துள்ளது. மேலும், மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் ஐந்து விரிவுரையாளர்களை ஒப்பந்த அடிப்படையில் ஒழுங்கு மேலாண்மை, வாழ்வாதாரம், தகவல் தொழில்நுட்பம்(கணினி வல்லுநர்) ஒருங்கிணைத்தல் மற்றும் விரிவாக்க கல்வி ஆகிய பயிற்சிகள் எடுக்க பயன்படுத்திக் கொள்ள மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கு அனுமதி அளித்துள்ளது.

### 5.5.8. பயிற்சிக்கான நிதி ஆதாரம்

இந்நிறுவனம் பல்வேறு வகையான பயிற்சிகளை நடத்துவதற்கு மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம், மத்திய அரசின் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம், தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், ஐதராபாத் மற்றும் மத்திய அரசின் பணியாளர்கள் மற்றும் பயிற்சித்துறை, மாநில அரசு ஆகியவற்றிடமிருந்து நிதியினை பெறுகிறது. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் அதன் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் நிர்வாகச் செலவினங்களுக்கு நிதி உதவியினை(Grants-in-aids)தொடர் செலவினத் தலைப்பில் மத்திய மற்றும் மாநில அரசு பங்குத்தொகையாக 50 : 50 அடிப்படையில் பெறுகின்றது. பயிற்சி தொடர்பான அடிப்படை ஆதார வசதிகளான பயிலரங்கு கூடங்கள், பயிற்சியாளர் தங்கும் விடுதிகள் கட்டுதல் மற்றும் பயிற்சி உபகரணங்கள் வாங்குதல் ஆகியவற்றிற்கு மத்திய அரசின் ஊரக அமைச்சகம் 100 விழுக்காடு நிதி உதவி வழங்குகிறது.

### 5.5.9. பயிற்சி பங்கேற்பாளர்கள்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், சுய உதவிக் குழு, கூட்டமைப்பு உறுப்பினர்கள், சமுதாய பயிற்றுநர்கள், கிராம தன்னார்வலர்கள், பயிற்சி வல்லுநர்கள், பயிற்றுநர்கள்,



தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர நபர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது.

### 5.5.10. பயிற்சி முறைகள்

இந்நிறுவனத்தில் நடத்தப்படும் பயிற்சிகளில் 'விரிவுரை மற்றும் கலந்துரையாடல் அடிப்படையிலான பயிற்சி முறை' மற்றும் பயிற்சி சார்ந்த விளையாட்டுகள், தனி நடிப்பு, புத்துணர்வு நடவடிக்கைகள், பங்கேற்பு அணுகுமுறைகள், குழு விவாதங்கள், கள பணி வெற்றி கதைகளை கூறுதல், அனுபவ பகிர்வு, பட்டறிவுப் பயணங்கள், பயிற்சி அட்டைகள் (Charts Preparation) தயாரித்தல் செயல்முறை பயிற்சி ஆகியவற்றோடு குழு அடிப்படையிலான பணிகள் ஆகிய பல்வேறு விதமான பயிற்சி முறைகள் கடைபிடிக்கப்படுகின்றன.

### 5.5.11. பயிற்சிகள் நடத்துதல்

இந்நிறுவனமானது உறைவிடப் பயிற்சிகளை மறைமலைநகரில் உள்ள நிறுவன வளாகத்தில் நடத்துகின்றது. பிற பயிற்சிகள் வெளி வளாக பயிற்சிகளாக மாவட்ட, வட்டார மற்றும் கிராம ஊராட்சி அளவில் மாவட்ட நிர்வாகம் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகிறது

### 5.5.12. பயிற்றுநர்கள்

இந்நிறுவனத்தில் பணிபுரியும் பல்வேறு விரிவுரையாளர்கள் தவிர தேசிய ஊரக வளர்ச்சி மற்றும்

ஊராட்சி நிறுவனம், ஐதராபாத், தேசிய தகவல் தொழில்நுட்ப மையம், சென்னை, அண்ணா பல்கலைக் கழகத்தில் உள்ள தொலையுணர்வு மையம், சென்னை, அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனம் போன்ற நிறுவனங்களிலிருந்து சிறப்பு விரிவுரையாளர்கள் பயிற்சிக்கு பயன்படுத்தப்படுகின்றனர். இவர்களைத் தவிர சிறப்பாக பணியாற்றும் கிராம ஊராட்சித்தலைவர்கள், பணியில் உள்ள மற்றும் ஓய்வு பெற்ற அலுவலர்கள், மகளிர் திட்டம் மற்றும் புதுவாழ்வு திட்டத்தின் மாவட்ட முதன்மை பயிற்றுநர்கள், சமுதாய வள பயிற்றுநர்கள் ஆகியோரும் பயிற்சிகளில் பயிற்றுநராக பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றனர்.

### 5.5.13. நிறுவன உட்கட்டமைப்பு வசதிகள்

பயிற்சிகளை நடத்துவதற்குத் தேவையான குளிரூட்டப்பட்ட பயிற்சி அரங்குகள், பயிற்சி உபகரணங்கள், ஒலி, ஒளி அமைப்பு சாதனங்கள், படிப்பகத்துடன் கூடிய நூலகம், இணைய தள வசதியுடன் கூடிய கணினி பயிற்சி கூடங்கள், பயிற்சியாளர்கள் தங்கி உணவருந்தக் கூடிய வகையில் விடுதி வசதி, தானியங்கி மின்னாக்கி ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் உள்ளன.



## அட்டவணை 5.6

## 2015–16 –ஆம் ஆண்டின் சாதனைகள்

## மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், மறைமலைநகர் – ஆண்டு முன்னேற்ற அறிக்கை

| எண் | திட்டங்கள் | இலக்கு | | சாதனை (பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை) | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அணி களின் எண்ணிக்கை | பயிற்சி யாளர் களின் எண்ணிக்கை | அணி களின் எண்ணிக்கை | தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கை | அலுவலர்கள் | உள்ளாட்சி அமைப்புகள் | சுய உதவிக்குழுக்கள் | தன்னார்வர்கள்/ ஊராட்சி செயலர்/ இதரர் | மொத்த பயிற்சி பெற்றவர் களின் எண்ணிக்கை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| 1. | தேசிய கிராம சுயாட்சி திட்டம் கணினி பயிற்சி | **20** | 598 | 16 | 130 | 295 | 0 | 0 | 0 | 425 |
| 2. | ஊரக தொழில் நுட்ப வள மையம் (RTRC) | **17** | 582 | 7 | 0 | 0 | 0 | 164 | 0 | 164 |
| 3. | பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மானிய நிதி (BRGF) | **6** | 172 | 6 | 140 | 32 | 0 | 0 | 0 | 172 |
| 4. | மக்களை நோக்கி / கிராம தன்னார்வலர் திட்டம் | **28** | 841 | 25 | 0 | 0 | 0 | 694 | 61 | 755 |
| 5. | சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத் திட்டம் | **1750** | 200000 | 1705 | 0 | 1064 | 195057 | 0 | 0 | 196121 |
| 6. | ராஜீவ்காந்தி பஞ்சாயத்து சஷக்திகரன் அபியான் (RGPSA) | **444** | 17149 | | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 7. | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS) | **6** | 464 | 6 | 0 | 464 | 0 | 0 | 0 | 464 |
| 8. | ஊராட்சி நிறுவனங்கள் குறித்த பயிற்சி (PRI - II) | **74** | 2261 | 24 | 285 | 259 | 89 | 0 | 0 | 633 |
| 9. | மத்திய பணியாளர் (ம) பயிற்சித் துறை ( DoPT) | **3** | 127 | 3 | 0 | 127 | 0 | 0 | 0 | 127 |

| எண் | திட்டங்கள் | இலக்கு | | சாதனை (பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை) | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அணி களின் எண்ணிக்கை | பயிற்சி யாளா் களின் எண்ணிக்கை | அணி களின் எண்ணிக்கை | தோ்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கை | அலுவ லா்கள் | உள்ளாட்சி அமைப்புகள் | சுய உதவிக்குழுக்கள் | தன்னாா்வலா்கள்/ ஊராட்சி செயலா்/ இதரா் | மொத்த பயிற்சி பெற்றவா் களின் எண்ணிக்கை |
| 10. | தேசிய ஊரக வளா்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவன வெளிவளாக பயிற்சி | **10** | 349 | 10 | 17 | 332 | 0 | 0 | 0 | 349 |
| 11. | தேசிய ஊரக வளா்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் Net Working பயிற்சி | **14** | 420 | 6 | 0 | 135 | 0 | 0 | 0 | 135 |
| 12. | பாலினம் சாா்ந்த வரவு செலவு திட்டம் (Gender Budgeting) | **2** | 79 | 2 | 79 | 0 | 0 | 0 | 0 | 79 |
| 13. | பயிற்சி நிதி(TCF) | **38** | 1021 | 38 | 0 | 1021 | 0 | 0 | 0 | 1021 |
| 14. | சுகாதாரம் மாநில அளவிலான பயிற்றுனா்களுக்கான பயிற்றுனா் பயிற்சி (State Level Master Training) | **6** | 322 | 6 | 6 | 8 | 0 | 302 | 6 | 322 |
| 15. | இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம் (IAY) | **1** | 81 | 1 | 0 | 81 | 0 | 0 | 0 | 81 |
| 16. | பிற நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் பயிற்சி (Venue Programme) | **16** | 934 | 16 | 0 | 379 | 249 | 55 | 251 | 934 |
| | **மொத்தம்** | **2,435** | **2,25,400** | **1,871** | **657** | **4,197** | **1,95,395** | **1,215** | **318** | **2,01,782** |

- **2015–16** ஆம் ஆண்டில், இந்நிறுவனம், **2,01,782** எண்ணிக்கையிலான தோ்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் ஊரக வளா்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலா்களாலும், தன்னாா்வலா்கள், பேரிடா் மீட்பு மேலாண்மை திட்டத்தின் கீழ் அலுலா்கள் மற்றும் சுய உதவிக்குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினா்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.



- புதிய விடுதிக் கட்டிடம் ரூ.1100 இலட்சம் மதிப்பீட்டிலும், பல்நோக்கு கருத்தரங்கு கூடம் ரூ.1271.36 இலட்சம் மதிப்பீட்டிலும் இந்நிறுவன வளாகத்தில் கட்டப்பட்டு வருகின்றன. இப்பணிகள் காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளா்ச்சி முகமையின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. புதிய விடுதிக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. பல்நோக்கு கருத்தரங்கு கூடம் கட்டட பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- **2015–16** ஆம் ஆண்டில், மாநில ஊரக வளா்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கு அரசு கீழ்க்கண்ட பணிகளுக்கு ஒருங்கிணைந்த ஒப்படைப்பு வருவாய் திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளித்துள்ளது.

**அட்டவணை 5.7**

| வ.எண் | வேலை | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மாநில ஊரக வளா்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தை சுற்றிலும் மதில் சுவா் கட்டும் பணி | 156.00 |
| 2 | உயா் மின் அழுத்த கம்பி லைன்அமைத்தல் | 200.00 |
| | **மொத்தம்** | **356.00** |

மேற்படி இரு பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

**5.5.14. 2016–17-ஆம் ஆண்டில் வழங்கப்படும் பயிற்சிகள்**

2016–17-ஆம் ஆண்டில் இந்நிறுவனம் 13,264 எண்ணிக்கையிலான அணிகளுக்கும், அதன் மூலம் 5,26,147 பயிற்சியாளர்களுக்கும் பயிற்சி அளிக்க உத்தேசித்துள்ளது. இதில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கிராம பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள், உள்ளாட்சியின் அமைப்புகளுக்கும், தொடர்புடைய துறை களப்பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதில் ராஜ்ய கிராம் ஸ்வராஜ் யோஜனா (RGSY)திட்டத்தின் கீழ், கிராம ஊராட்சி மேம்பாட்டுத் திட்டம் (VPDP), மின்-பஞ்சாயத்து பயிற்சி மேலும், சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத் திட்டம் மற்றும் சென்ற வருடங்களில் நிலுவையிலுள்ள பயிற்சிகளும் அடங்கும்.

**5.5.15. சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத்திட்டம்**

சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத் திட்டம் என்பது கடலோர பேரிடர் இன்னல் குறைப்பு திட்டத்தின் ஒரு பகுதி ஆகும். இத்திட்டத்தினை உலக வங்கி உதவியுடன் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் இத்திட்டத்தினை செயல்படுத்தும் அமைப்பாக உள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் இயற்கை சீற்றங்கள் மற்றும் பேரிடர் கால கட்டங்களில் கடலோர பகுதி



வாழ் மக்களின் பாதிப்புகளைக் குறைக்க மற்றும் அவ்வாறான காலங்களில் ஏற்படும் இடையூறுகளை சமாளிக்க அவர்களுக்குத் தேவையான திறன்களை வலுப்படுத்த ஆபத்து குறைப்பு திட்ட வரைவினை தயார் செய்தல் ஆகும். கடலோர பகுதிகளில் வசிக்கக் கூடிய பாதிப்புக்குள்ளாகும் சமுதாயத்தினர் மற்றும் பள்ளி மாணவர்கள் இத்திட்டத்தின் முக்கிய பங்காளர்களாக உள்ளனர். மேலும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளும், சமுதாயம் சார்ந்த அமைப்புகளும் அப்பகுதியில் பணியாற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், பயிற்றுநர்கள், அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரும் இத்திட்டத்தின் பங்காளர்கள் ஆவர்.

தமிழ்நாட்டில் 12 கடலோர மாவட்டங்களில் உள்ள 561 கடலோர கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுத்தொகை ரு.15 கோடி ஆகும். ஜுன் 2013 முதல் ஜுலை 2018 வரையிலான காலகட்டத்திற்கு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது

இத்திட்டத்தின் கீழ் கிராம பேரிடர் மேலாண்மை குழு மற்றும் கிராமஅளவிலான 5 வகை குழுக்களை உருவாக்குதல், அவர்களை கொண்டு பேரிடர் காலங்களை எதிர்கொள்ளக்கூடிய உத்திகளை கையாளும் முறைகுறித்த பயிற்சியினை அளித்தல், சமுதாயஅடிப்படையிலான பேரிடர் மேலாண்மை திட்டம் தயாரித்தல், கிராம பேரிடர் அபாய

மேலாண்மை குழு உறுப்பினர்கள் மற்றும் **5** பேரிடர் தடுப்பு அணிகள்அமைத்து அவர்களுக்கு சிறப்பு வல்லுநர்களின் மூலமாக பயிற்சி அளித்து பேரிடர் காலங்களில் சவால்களை எதிர் கொள்ளக்கூடிய திறனுடையவர்களில் முதன்மையானவர்களாக உருவாக்குதல் போன்ற செயல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத்திட்டத்தின் கீழ் **1,705** பயிற்சிகள் நடத்தப்பட்டு **1,96,121** நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மாநில அளவிலான கருத்தரங்குகள் | : | 6 பயிற்சிகள் |
| புத்தாக்க பயிற்சிகள் | : | 139 பயிற்சிகள் |
| பயிற்றுநர்களுக்கான பயிற்றுநர் பயிற்சி | : | 5 பயிற்சிகள் |
| மாவட்ட/வட்டார/ஊராட்சி அளவிலான பயிற்சிகள் | : | 1,550 பயிற்சிகள் |
| பட்டறிவு பயணம் | : | 5 பயிற்சி |

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் 2016-17 ஆம் ஆண்டில் சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை திட்டத்தின் கீழ் **12** கடலோர மாவட்டங்களில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் 1,48,561 நபர்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**2016–17**ஆம் ஆண்டில் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் **5,26,147** எண்ணிக்கையிலான நபர்களுக்கு பயிற்சி அளித்திட இலக்கும் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் **38150**



நபர்களுக்கு பயிற்சி அளித்திட இலக்கும் ஆக மொத்தம் **5,64,297** நபர்களுக்கு **14,004** அணிகளில் பயிற்சி அளித்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு **2016–17** வரவு செலவு திட்டத்தின் கீழ் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கு **ரூ.7,583.23** இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. **2016–17**ஆம் ஆண்டில் அனைத்து விதங்களிலும் பயிற்சியாளர்களின் திறனை மேம்படுத்துவதே குறிக்கோள் ஆகும்.

# 6. தமிழ்நாடு புதுவாழ்வு திட்டம்



## 6. தமிழ்நாடு புது வாழ்வு திட்டம்

தமிழக அரசின் முன்னோடித் திட்டமான புது வாழ்வு திட்டம் **2005–**ம் ஆண்டு நவம்பர் **15**ஆம் நாள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மிகவும் ஏழை எளிய மக்களை, மக்களின் பங்கேற்புடன் கண்டறிந்து அவர்களின் வறுமையை அகற்றுவதையும் மற்றும் அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதையும் நோக்கங்களாக கொண்டு செயல்படுத்தப்படுகிறது. ஏழை, எளிய மக்களை உள்ளடக்கிய சமுதாய அமைப்புகளைத் தோற்றுவித்து, பயிற்சிகள் மூலமாக அவர்களுடைய ஆற்றலை மேம்படுத்தி தேவைப்படும் நிதி ஆதாரத்தைப் பெற வழிவகை செய்து, பிற சமூக பாதுகாப்புத் திட்டங்கள் மூலம் பலன் பெறவும் மீண்டும் அவர்கள் ஏழ்மை நிலைக்கு உள்ளாவதை தவிர்ப்பதற்கான வாழ்வாதார செயல் திட்டங்கள் மூலம் உறுதி செய்வது போன்ற பல்முனை வறுமை போக்கும் அணுகுமுறையை இத்திட்டம் பின்பற்றி வருகிறது. உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலை நோக்கு பார்வையான **“அனைத்து தரப்பு மக்களின் தேவைகளை உள்ளடக்கிய உயரிய வளர்ச்சியை வெளிப்படுத்தும் – மிகவும் பின்தங்கிய, நலிவுற்றோர் மற்றும் ஆதரவற்றோர் நலனில் அக்கறை கொண்டு சமமான வாய்ப்புகளும், வசதிகளும் பெற்று, வேண்டுவோருக்கு வேலை கிடைக்கச்செய்து, வறுமை**

**முற்றிலும் அகன்ற முதன்மையான மாநிலமாக தமிழ்நாடு உருவாகும்."** என்ற கனவை நனவாக்கும் முயற்சிகளை மேற்கொள்கிறது.

இத்திட்டத்தின் கீழ், சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், ஒத்த தொழில் குழுக்கள் மற்றும் மக்கள் கற்றல் மையங்கள் போன்ற வலுவான, துடிப்பான செயல்பாடுகள் கொண்ட சமுதாய அமைப்புகள் உருவாக்கப்படுகின்றன. இவை கிராம சபையின் ஒப்புதலுக்குட்பட்டவையாகும். இச்சமுதாய அமைப்புகளின் மூலமாக அனைத்து திட்ட செயல்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இலக்கு மக்களின் திறன் வளர்த்து, நீடித்த நிலைத்த வாழ்வாதாரங்களை உருவாக்கவும், வெளிப்படையான நிர்வாக செயல்பாடுகள் மற்றும் சமுதாய பங்கேற்பினை இச்சமுதாய அமைப்புகள் உறுதிபடுத்துகின்றன.

### 6.1. திட்ட செயலாக்க பகுதிகள்

இத்திட்டம் 2005ம் ஆண்டில் 15 மாவட்டங்களில் துவக்கப்பட்டு, தற்போது 26 மாவட்டங்களில் மிகவும் பின்தங்கிய 120 வட்டாரங்களில் உள்ள 4,174 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 9.8 இலட்சம் ஏழை குடும்பங்கள் பயனடையும் வகையில் ரூ.1,667.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### 6.2. திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் கீழ்க்கண்டவாறு:

- வலுவான மற்றும் பொறுப்புணர்வுடன் கூடிய மக்கள் அமைப்புகள் மூலம் ஏழை மற்றும் நலிவுற்றோரின் வாழ்க்கைத்தர மேம்பாடு மற்றும் சமூக பொருளாதார வளர்ச்சி அடைய வழிவகை செய்தல்.
- ஏழை, எளிய, நலிவுற்ற மக்களின் ஆற்றலை மேம்படுத்தி அவர்களின் வாழ்வாதார வளர்ச்சிக்கு தேவையான நிதி மற்றும் இதர உதவிகளை "மாறா கோட்பாடு அணுகுமுறையினை" பின்பற்றி நுகரச் செய்தல்.
- ஏழை மக்கள் குறிப்பாக பெண்கள் மற்றும் நலிவுற்றோர் திறன் மேம்பாட்டில் தனிக் கவனம் செலுத்துதல்

### 6.3. திட்ட செயலாக்க முறை

புது வாழ்வு திட்டம் ஏழை மக்களின் தேவைகளை கண்டறிந்து மக்களுக்காக மக்களே திட்டமிட்டு செயலாற்றும் அணுகுமுறையைப் பின்பற்றி, நிலையான வாழ்வாதாரம் மூலம் வருவாய் பெருகிட முனைப்புடன் செயல்படுகிறது. மேலும், பல்வேறு அரசு திட்டங்களின் மூலம் வழங்கப்படும் பயன்களை உறுதிப்படுத்தவும், தங்கள் உரிமைகளை பெற்றிட மக்களை ஆற்றல்படுத்திடவும் பிற துறைகளுடன் சீரிய முறையில் இணைந்து செயல்படுகிறது.
திட்ட நோக்கங்களை அடைந்திட கீழ்க்கண்ட வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

- சமூக அமைப்புகளின் வாயிலாக சமுதாய ஒருங்கிணைப்பு மற்றும் பொருளாதார உயர்வு
- நிதி சேவை மற்றும் நலிவடைவு நீக்கம்
- இளைஞர்களுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சிகள்
- வாழ்வாதார மேம்பாடு

**6.4. திட்ட செயலாக்க அமைப்பு**

**6. 4.1. மாநில அலகு**

தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975ன் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கமான தமிழ்நாடு மாநில புது வாழ்வு சங்கம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலர் தலைமையில் செயல்படுகிறது. இச்சங்கம் மாநில அளவில் திட்ட நிர்வாகத்தினை மேற்கொள்கிறது. திட்ட இயக்குநர் தலைமையில் மாநில திட்ட மேலாண்மை அலகு செயல்படுகிறது. திட்ட செயல்பாடுகளை சரியான முறையில் வழிநடத்தும் பல்துறை வல்லுநர் குழுவும் இதில் அடங்கும். திட்டத்தின் நிர்வாகம், செயலாக்கம், வழிநடத்துதல், நிதி விடுவித்தல் மற்றும் கண்காணிப்பு ஆகிய பணிகளை மாநில அலகு மேற்கொள்கிறது.

**6.4.2. மாவட்ட அலகு**

மாவட்ட அளவில் இத்திட்டத்தினை செயல்படுத்த பதிவு செய்யப்பட்ட புது வாழ்வு மாவட்ட சங்கங்கள், மாவட்ட ஆட்சியர்களது தலைமையில் செயல்படுகின்றன. மாவட்ட திட்ட அலகின் மூலம் இத்திட்டத்தின் செயல்பாடுகள்



மாவட்ட திட்ட மேலாளர் மற்றும் உதவித் திட்ட மேலாளர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

**6.4.3. பகுதி அலகு**

அடித்தள மக்கள் அமைப்புகளுக்கு உறுதுணையாக செயல்பட 10 முதல் 15 கிராம ஊராட்சிகள் இணைந்து களப்பகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்களப்பகுதி அமைப்புகளை ஒரு அணித்தலைவர் மற்றும் 4 ஒருங்கிணைப்பாளர்கள் கொண்ட திட்ட ஒருங்கிணைப்பு குழு நிர்வகிக்கிறது.

**6.4.4.கிராம அலகு**

கிராம அளவில் கண்டறியப்பட்ட திட்ட இலக்கு மக்களை உள்ளடக்கிய தன்னாட்சி அமைப்பாக **கிராம வறுமை ஒழிப்பு சங்கம்** செயல்படுகிறது. இச்சங்கம், வலுவான அடித்தள சமுதாய அமைப்புகளை ஏற்படுத்துவதுடன் அவற்றிற்கு நிதி உதவி செய்வதையும், இவ்வமைப்புகள் மூலமாக நலிவுற்ற மிகவும் ஏழை, மாற்றுத் திறனாளிகள் மற்றும் பழங்குடியினர் உள்ளிட்ட திட்ட இலக்கு மக்களது திறன் வளர்த்து அவர்கள் வறுமையில் இருந்து மீள்வதற்கான ஆற்றல் பெறுவதையும், தங்களுக்கு தேவையான சேவைகள் பெறுவதையும் வழிவகை செய்கிறது.

கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் கிராம அளவில், திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், மேம்பட்ட நிலையான கிராம கற்றல் மையங்களாக செயல்படுகின்றன. இதன் வாயிலாக பல்வேறு அரசு நலத் திட்ட பயன்கள்

கடைநிலை மக்களுக்கும் மின் ஆளுமை மற்றும் மின் வணிக சேவை மூலம் பெற்று தரப்படுகின்றது. ஊராட்சிமன்றத் தலைவரே கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கத்தின் கௌரவத் தலைவராக செயல்படுவார்.

### 6.5. திட்ட செயல்பாடுகள்

#### 6.5.1. தகவல் தொடர்பு

புது வாழ்வு திட்டத்தின் நோக்கங்கள், உயிர்மூச்சுக் கொள்கைகள் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்த தகவல்கள் தேவையின் அடிப்படையில் தகவல் தொடர்பு பிரச்சாரம் மூலம் முனைப்புடன் மக்களிடையே பரவலாக்கப்படுகிறது. தெருமுனை நாடகங்கள், கொள்கை பரப்பு ரதம், துண்டுப்பிரசுரங்கள் மற்றும் சுவர் விளம்பரங்கள் போன்றவை இத்திட்டத்தின் பிரபலமான பிரச்சார முறைகளாகும்.

#### 6.5.2. மக்களின் பங்கேற்புடன் இலக்கு மக்களைக் கண்டறிதல்

கிராமம் முழுவதிலும் நடைப்பயணம், சமூக வரைபடம் மற்றும் பொருளாதார நிலை மதிப்பீடு ஆகியவற்றின் அடிப்படையில் மக்கள் பங்கேற்புடன் திட்டத்தின் இலக்கு மக்களாகிய ஏழைகள், நலிவுற்றோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பழங்குடியினர் கண்டறியப்பட்டுள்ளனர். இத்தகையை மக்கள் பங்கேற்புடன் கூடிய வெளிப்படையான இலக்கு மக்கள் தேர்வு, கிராம சபை மற்றும் அனைத்து தரப்பினரது அங்கீகாரத்தை பெற்றுள்ளது.



#### 6.5.3. கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள்

இலக்கு மக்கள் பிரதிநிதித்துவம் கொண்டு உருவாக்கப்படும் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மக்களது தேவைகளை நிறைவேற்றும் ஒரு சுய சார்புடைய அமைப்பாகும். திட்டத்தில் வலியுறுத்தப்படும் செயல்பாடுகளுக்காகவும், இலக்கு மக்களின் அனைத்து தேவைகளை நிறைவேற்ற ஏதுவாகவும் மக்கள் தொகை அடிப்படையில் ரூ.6 இலட்சம் முதல் ரூ.12 இலட்சம் வரை 3 தவணைகளில் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு நிதி விடுவிக்கப்படுகிறது. இந்நிதியில் 40 விழுக்காடு ஆற்றல் வளர்ப்புக்கும், 40 விழுக்காடு மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர் சிறப்பு கடன் உதவிக்கும், 20 விழுக்காடு இளைஞர்கள் திறன் மேம்பாட்டிற்காகவும் செலவிடப்படுகிறது.

**அட்டவணை 6.1**

**கிராம வறுமை ஒழிப்பு சங்க நிதி செலவினம் 31.05.2016 வரை**

| ஊராட்சிகளின் எண்ணிக்கை | கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களின் எண்ணிக்கை | கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கான நிதி செலவினம் | | | |
|---|---|---|---|---|---|
| | | 2015–16 | | 31.05.2016 வரை | |
| | | எண்ணிக்கை | நிதி வெலவினம் (ரூ.கோடியில்) | எண்ணிக்கை | நிதி செலவினம் (ரூ. கோடியில்) |
| 4,174 | 4,465 | 600 | 27.03 | 4,465 | 623.23 |

#### 6.5.4.சமூகத் தணிக்கை குழுக்கள்

திட்டத்தின் உயிர் மூச்சு கொள்கைகளான அனைவரும் சேர்ந்து முடிவு எடுத்தல், நலிவுற்றோருக்கு முன்னுரிமை அளித்தல், பொறுப்புணர்வுடன் நடத்தல் மற்றும்

வெளிப்படைத் தன்மை ஆகியவற்றை பின்பற்றி மக்கள் அமைப்புகள் செயல்படுகின்றனவா என்பதை உறுதி செய்வதற்காக 5 முதல் 7 உறுப்பினர்கள் கொண்ட சமூகத் தணிக்கை குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. திட்டப்பகுதிகளில் **4,465** சமூக தணிக்கை குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் மூலம் திட்ட செயலாக்கம் கண்காணிக்கப்படுகிறது.

### 6.5.5. சுய உதவிக் குழுக்கள்

இத்திட்டத்தின் கீழ் விடுபட்ட இலக்கு மக்களிலிருந்து 12 முதல் 20 மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. மாற்றுத் திறனாளிகளுக்கான தனி சுய உதவிக்குழுக்கள் 5 அங்கத்தினர்களைக் கொண்டதாகக் கூட இருக்கலாம். உறுப்பினர்களின் திறன் வளர்ப்பு மற்றும் அவர்களுக்குத் தேவையான கடன் வசதி பெற்றுத்தர இத்திட்டம் வழிவகை செய்கிறது. மேலும் கிராம ஊராட்சிகளில் ஏற்கனவே செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுக்களையும் இணைத்து, குழுக்களுக்குத் தேவையான திறன் வளர்ப்புப் பயிற்சி, வங்கி கடன் இணைப்பு மூலம் வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.



**அட்டவணை 6.2**

**சுய உதவிக்குழுக்களின் விவரம் 31.05.2016 வரை**

| விவரம் | 31.05.2016 வரை சாதனை |
|---|---|
| **அ.புதிய குழுக்கள்** | |
| பெண்களுக்கான சுய உதவிக்குழுக்கள் | 22,861 |
| மாற்றுத் திறனாளிகளுக்கான சுய உதவிக்குழுக்கள் | 13,286 |
| **திட்டத்தினால் உருவாக்கப்பட்ட மொத்த சுய உதவிக் குழுக்கள்** | **36,147** |
| **ஆ. ஏற்கனவே செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுக்கள்** | **71,289** |
| **மொத்தம் (அ+ஆ)** | **1,07,436** |

### 6.5.6. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்

சுய உதவிக் குழுக்களை உள்ளடக்கிய ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, குழுக்களுக்கான நிதி மற்றும் பிற சேவைகளை பெற்றுத்தரும் அமைப்பாக செயலாற்றுகிறது. திட்ட செயல்பாடுகளின் அடிப்படையில் ஒவ்வொரு கூட்டமைப்புக்கும் வாழ்வாதார மேம்பாட்டிற்காக ரூ.12 இலட்சம் முதல் ரூ.18 இலட்சம் வரை அமுத சுரபி நிதி திட்டத்திலிருந்து இரண்டு தவணைகளில் விடுவிக்கப்படுகிறது. இந்த அமைப்பு தனது சீரிய சேவையின் மூலம் கந்து வட்டிக் காரர்கள், நுண்நிதி கடன் நிறுவனங்களது பிடியிலிருந்து குழு உறுப்பினர்களை விடுவிப்பதில் பெறும் பங்கு வகிக்கிறது.

## அட்டவணை 6.3

## ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான நிதி செலவினம் 31.05.2016 வரை

| ஊராட்சிகளின் எண்ணிக்கை | கூட்டமைப்புகள் எண்ணிக்கை | அமுதசுரபி நிதி விடுவிப்பு | | | |
|---|---|---|---|---|---|
| | | 2015 –2016 | | 31.05.2016 வரை செலவினம் | |
| | | எண்ணிக்கை | நிதி செலவினம் (ரூ. கோடியில்) | எண்ணிக்கை | நிதி செலவினம் (ரூ. கோடியில்) |
| 4,174 | 4,464 | 971 | 108.77 | 4,464 | 518.92 |

### 6.5.7. ஒத்த தொழில் குழுக்கள்

கிராமங்களில், ஒரே மாதிரியான வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோரை ஒருங்கிணைத்து அவர்களுக்குத் தேவைப்படும் பொது உட்கட்டமைப்பு வசதி, கொள்முதல், சந்தைப்படுத்துதல் மற்றும் திறன் வளர்ப்பு ஆகிய தேவைகளை பெற்றுத்தருவதற்காக ஒத்த தொழில் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒத்த தொழில் குழுக்கள், உறுப்பினர்களின் வருமானம் மற்றும் வாழ்வாதாரத்தை உருவாக்குவதன் மூலம் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகுக்கிறது. திட்ட நிதியிலிருந்து பொது உட்கட்டமைப்பு வசதி உருவாக்கவும், பிற ஒருங்கிணைப்பு நடவடிக்கைளுக்காகவும் ஒவ்வொரு குழுவிற்கும் அதிகபட்சமாக ரூ.1.00 இலட்சம் வழங்கப்படுகிறது.



## அட்டவணை 6.4

## ஒத்த தொழில் குழுக்கள் நிதி செலவினம் 31.05.2016 வரை

| ஊராட்சிகளின் எண்ணிக்கை | ஒத்த தொழில் குழுக்களின் எண்ணிக்கை | குழுக்களுக்கு விடுவிக்கப்பட்ட நிதி | | | |
|---|---|---|---|---|---|
| | | 2015 – 2016 சாதனை | | 31.05.2016 வரை செலவினம் | |
| | | எண்ணிக்கை | நிதி செலவினம் (ரூ. கோடியில்) | எண்ணிக்கை | நிதி செலவினம் (ரூ. கோடியில்) |
| 4,174 | 5,869 | 1500 | 15.00 | 5,059 | 51.82 |

2016–2017 ல் மேலும் 280 ஒத்த தொழில் குழுக்களுக்கு ரூ.2.80 கோடி நிதி வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 6.5.8. ஒத்த தொழில் கூட்டமைப்புகள்

ஒரே மாதிரியான தொழிலில் ஈடுபடுகின்ற, ஒத்த தொழில் குழுக்களை வட்டாரம் / மாவட்ட அளவில் ஒருங்கிணைத்து பதிவு செய்யப்பட்ட சங்கங்களாக ஒத்த தொழில் கூட்டமைப்புகள் அமைக்கப்படுகின்றன. இக்கூட்டமைப்பின் கீழ் உள்ள குழுக்களுக்கு பலதரப்பட்ட சேவைகள் மற்றும் தொழில் வளர்ச்சிக்கான மேல் நிலை ஆலோசனைகள் கூட்டமைப்பின் மூலம் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு கூட்டமைப்பிற்கும் அவர்களது செயல் திட்ட அறிக்கை அடிப்படையில் திட்டத்திலிருந்து தொகை வழங்கப்படுகிறது. ஒவ்வொரு கூட்டமைப்பிற்கும் – 75 விழுக்காடு திட்ட நிதி, 20 விழுக்காடு வங்கி இணைப்பு மற்றும் 5 விழுக்காடு உறுப்பினர்கள் பங்களிப்பு என்ற வகையில் நிதி ஆதாரம் ஏற்படுத்தப்படுகிறது. இதுவரை விவசாயம், பால் பண்ணை தொழில், வெள்ளாடு வளர்ப்பு மற்றும் காபி பயிர்சார் தொழில் போன்ற ஒத்த

தொழில்களுடைய 15 கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டு அவை ரூ.3.82 கோடி திட்ட நிதி ஆதாரம் பெற்றுள்ளன.

மேலும் 2016 – 2017 நடப்பாண்டில் 10 ஒத்த தொழில் கூட்டமைப்புகள் அமைத்து ரூ. 2 கோடி திட்ட நிதி உதவி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 6.5.9. மக்கள் கற்றல் மையங்கள் (மகமை)

புது வாழ்வு திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சமூக அமைப்புகளான சுய உதவி குழுக்கள், கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் ஒத்த தொழில் குழுக்கள் ஆகியவை நிலைத்து வேரூன்றி செயல்படுவதற்கு உதவியாக மக்கள் கற்றல் மையங்கள் (மகமை) 16 மாவட்டங்களில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு சங்கங்களின் பதிவு சட்டம் 1975ன் கீழ் மக்கள் கற்றல் மையங்கள் (மகமை) பதிவு செய்யப்பட்டுள்ளன. மக்கள் கற்றல் மையங்கள் (மகமை) செயல்பாட்டிற்கு உறுதுணையாக 6024 சமூக வல்லுனர்கள் உருவாக்கப்பட்டு திறன் பயிற்சி பெற்று செயல்பட்டு வருவது இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும். இவ்வமைப்பு, திட்ட காலத்திற்கு பின்னரும் புது வாழ்வு திட்ட செயல்பாடுகள் நீடித்து நிலைப்பதை கண்காணித்து உறுதி செய்யும் உயர்மட்ட அமைப்பாக செயல்படும். இதுவரை மக்கள் கற்றல் மைய நிறுவன மேம்பாட்டு நிதியாக ரூ.7 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

2016–2017 ஆம் ஆண்டில் 10 மாவட்டங்களில் 9 மக்கள் கற்றல் மையங்களும் 120 வட்டார அளவிலான அமைப்புகளும் ரூ.5.82 கோடியில் உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



### 6.5.10. சுய உதவிக் குழுக்களின் வங்கி இணைப்பு

சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பு முக்கிய நிதி ஆதாரமாகும். சுய உதவிக் குழுக்களின் நிதி தேவை மிகுதியின் காரணமாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வங்கியிலிருந்து பெருங்கடன் பெற்று உறுப்பினர்களின் நிதி தேவையைப் பூர்த்தி செய்கின்றன. சுய உதவிக் குழு உறுப்பினர்கள் எளிதாக தொடர்ந்து கடன் இணைப்பு பெறுவதற்கு சுய உதவிக் குழுக்கள் தங்களது தரத்தையும் நம்பகத் தன்மையையும் தொடர்ந்து நிலைநிறுத்தி கொள்ள இத்திட்டத்தின் கீழ் தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**அட்டவணை 6.5**

**சுய உதவிக்குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் வங்கி கடன் இணைப்பு 31.05.2016 வரை**

| விவரம் | 2015 – 2016 சாதனை | | 31.05.2016 வரை சாதனை | |
|---|---|---|---|---|
| | குழுக்களின்/ கூட்டமைப்பு எண்ணிக்கை | நிதி சாதனை (ரூ. கோடியில்) | குழுக்களின்/ கூட்டமைப்பு எண்ணிக்கை | நிதி சாதனை (ரூ. கோடியில்) |
| **அ.** முதல் வங்கி கடன் இணைப்பு பெற்ற சுய உதவி குழுக்கள் | 3,089 | 158.99 | 1,05,739 | 687.50 |
| **ஆ.** வங்கிலிருந்து இரண்டாம் மற்றும் அதற்கு மேல் வங்கிக் கடன் இணைப்பு பெற்ற குழுக்கள் | 38,768 | 936.55 | 93,021 | 3698.55 |
| **வங்கி இணைப்பு பெற்ற மொத்த குழுக்கள் விவரம் (அ+ஆ)** | **41,857** | **1095.54** | **1,98,760** | **4386.05** |
| ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பெருங்கடன் | 122 | 43.79 | 783 | 211.78 |
| **மொத்த கடன் நுகர்வு** | | **1139.33** | | **4597.83** |

2016 – 2017 ல் 36,123 சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி இணைப்பு மூலம் ரூ.1211.61 கோடி கடன் பெற்றுத்தர திட்டமிடப்பட்டுள்ளது.

**6.5.11. நலிவுற்ற தன்மை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலம்**

நலிவுற்ற ஏழைகள், மாற்றுத் திறனாளிகள், பழங்குடியினர் மற்றும் இளைஞர்கள் ஆகியோரின் நலிவு தன்மை குறைப்பு மற்றும் சமூக பாதுகாப்பினை உறுதி செய்ய முனைப்புடன் கூடிய சிறப்பான சேவைகளை இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சமூக அமைப்புகள் வழங்குகின்றன. கிராம வறுமை ஒழிப்பு சங்க நிதியில் இருந்து 40 விழுக்காடு நிதி நலிவுற்ற தன்மை குறைப்பு மற்றும் மாற்றுத் திறனாளிகள் வாழ்வாதார நலம் பேணுவதற்கு செலவிடப்படுகிறது. காப்பீடுகள், மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டைகள், தொழிலாளர் நலவாரிய அடையாள அட்டைகள், ஓய்வூதியங்கள் போன்ற சேவைகளைப் பெற்றுத் தருதல் மற்றும் மருத்துவ உதவி, உணவு பாதுகாப்பு போன்ற இதர தேவைகளை பிற துறைகளுடன் இணைந்து பெற்றுத் தருவதன் வாயிலாக இலக்கு மக்களின் சமூகப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதோடு சமூக நிர்வாக பங்கேற்றலையும் உறுதி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**அட்டவணை 6.6**

**மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கான திட்டம் மற்றும் பிற துறை உதவிகள் 31.05.2016 வரை**

| விவரம் | 2015 – 2016 | | 31.05.2016 வரை சாதனை | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | நிதி சாதனை (ரூ. கோடியில்) | எண்ணிக்கை | நிதி சாதனை (ரூ. கோடியில்) |
| நிதி உதவி | 25,550 | 9.72 | 3,04,086 | 208.62 |
| உபகரணங்கள் | 2,072 | 2.09 | 35,704 | 13.21 |
| பராமரிப்பு நிதி | 4063 | 0.40 | 19,901 | 1.65 |
| ஓய்வூதியம் | 20,640 | 0.33 | 1,71,232 | 144.78 |
| சிறப்பு சுய உதவிக் குழுக்களுக்கான கடன் உதவி | 1,659 | 3.42 | 10,122 | 61.28 |



2016–2017 ஆம் ஆண்டில் 120 ஒன்றியங்களில் வட்டார அளவில் பயிற்சி அளிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளை கொண்டு கிராம கற்றல் மையங்களின் மூலம் சேவை புரியும் வகையில் தொழில் நுட்ப மையங்கள் அமைக்கப்படும். மேலும் கணினி சேவை, வீட்டு உபயோகப் பொருட்கள் பழுது நீக்குதல் போன்ற தொழில்களில் திறன் பயிற்சி வழங்கப்பட்டு அதன் மூலம் அவர்களுக்கு நிலையான வாழ்வாதார முன்னேற்றத்திற்கு வழிவகை செய்யப்படும்.

**6.5.12. இளைஞர்கள் திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு**

சந்தை தேவையின் அடிப்படையில் இளைஞர்களுக்கு வேண்டிய திறன் வளர்ப்பு பயிற்சிகள் அளித்து, அதன் மூலம் நிலையான வேலை வாய்ப்பு பெற்றிடச் செய்வது திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாகும். 18 முதல் 35 வயதுடைய வேலையில்லாத அல்லது தகுதி குறைவான வேலையிலுள்ள இளைஞர்களை ஊராட்சி வாரியாகக் கண்டறிந்து அவர்களின் ஆர்வம் மற்றும் தகுதிக்கு ஏற்ப வேலைவாய்ப்பு பெற்றிடும் வகையில் பல்வேறு வகையான தொழில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மேலும், தொழில் நிறுவனங்களை வேலை வாய்ப்பு முகாம்களில் பங்கேற்கச் செய்து அவர்களுக்குத் தேவைப்படும் பணியாளர்களை முகாம்கள் மூலம் தேர்வு செய்து பணியமர்த்தியும்,

பயிற்சியுடன் கூடிய வேலை வாய்ப்பு பெற்றுத் தரவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### அட்டவணை 6.7

### இளைஞர்கள் வேலைவாய்ப்பிற்கான திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு 31.05.2016 வரை

| விவரம் | 2015 – 2016 | 31.05.2016 வரை சாதனை |
|---|---|---|
| | எண்ணிக்கை | எண்ணிக்கை |
| பயிற்சி பெற்ற இளைஞர்கள் | 92,654 | 4,33,361 |
| வேலைவாய்ப்பு பெற்ற இளைஞர்கள் | 83,587 | 3,69,367 |

### அட்டவணை 6.8

### இளைஞர் திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு தொழில் வாரியாக 31.05.2016 வரை

| தொழில்திறன் | பயிற்சி பெற்றோர் | வேலைவாய்ப்பு பெற்றோர் | வேலைவாய்ப்பு பெற்றோர் விழுக்காடு |
|---|---|---|---|
| இலகு மற்றும் கனரக வாகன ஓட்டுநர் மற்றும் பழுதுபார்த்தல் | 1,48,374 | 1,32,273 | 89 |
| ஆயத்த ஆடை தயாரித்தல் | 73,272 | 63,576 | 87 |
| கணினி பணி | 65,015 | 53,570 | 82 |
| தொழில் நுட்பம் சார்ந்த பணி | 43,292 | 35,285 | 82 |
| கைபேசி பழுதுபார்த்தல் | 6,537 | 5,804 | 89 |
| தோல் பொருள் உற்பத்தி | 6,211 | 5,383 | 87 |
| மருத்துவம் சார்ந்த தொழில் | 13,880 | 11,057 | 80 |
| கட்டுமானத் தொழில் | 19,275 | 16,216 | 84 |



| தொழில்திறன் | பயிற்சி பெற்றோர் | வேலைவாய்ப்பு பெற்றோர் | வேலைவாய்ப்பு பெற்றோர் விழுக்காடு |
|---|---|---|---|
| இலகு மற்றும் கனரக வாகன ஓட்டுநர் மற்றும் பழுதுபார்த்தல் | 1,48,374 | 1,32,273 | 89 |
| ஆயத்த ஆடை தயாரித்தல் | 73,272 | 63,576 | 87 |
| கணினி பணி | 65,015 | 53,570 | 82 |
| தொழில் நுட்பம் சார்ந்த பணி | 43,292 | 35,285 | 82 |
| கைபேசி பழுதுபார்த்தல் | 6,537 | 5,804 | 89 |
| தோல் பொருள் உற்பத்தி | 6,211 | 5,383 | 87 |
| மருத்துவம் சார்ந்த தொழில் | 13,880 | 11,057 | 80 |
| கட்டுமானத் தொழில் | 19,275 | 16,216 | 84 |
| பிற தொழில்கள் | 57,505 | 46,203 | 80 |
| **மொத்தம்** | **4,33,361** | **3,69,367** | **85** |

நடப்பாண்டில் (2016–17) 4,500 இளைஞர்களுக்கு ரூ.4.5 கோடி நிதி ஒதுக்கீட்டில் பல்வேறு திறன் வளர்ப்பு பயிற்சி அளித்து வேலைவாய்ப்பு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 6.5.13. புது வாழ்வு மனநலத் திட்டம்

ஜப்பான் நாட்டின் "மனிதவள மேம்பாட்டு திட்ட" நிதியுதவியுடன் புது வாழ்வு மனநலத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மூலம் மனநலம் பாதிக்கப்பட்டோர், மனநலம் குன்றியோர் மற்றும் அவர்கள் குடும்பத்தார் பயன்பெறும் விதமாக அரசால் செயல்படுத்தப்படும் முன்னோடித் திட்டமாகும். 15 மாவட்டங்களில் 15 வட்டாரங்களில் 578

கிராம ஊராட்சிகளில் உள்ள 609 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் வாயிலாக செயல்படுத்தப்படும் இத்திட்டம், சமூகம் சார்ந்த நடவடிக்கைகள் மூலமாக மனநலம் பேணுதலின் அவசியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. மேலும், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்து மருந்து உட்கொள்ளுதல் மற்றும் சிகிச்சை பெறுதல் ஆகியவற்றை உறுதி செய்வதன் மூலம் அவர்கள் பாதிப்பிலிருந்து விடுபட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. முழுமையாக குணம் அடைந்தவர்கள் சுய உதவிக்குழுவில் உறுப்பினர்களாக சேர்க்கப்படுவதன் மூலம் தங்களுடைய வாழ்வை பொருள்பொதிந்த வாழ்வாக மறுமலர்ச்சி அடைய வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கும் வழிவகை செய்யப்படுகிறது.

**அட்டவணை 6.9**

**மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மனநலம் குன்றியோர்களுக்கான உதவிகள் 31.05.2016 வரை**

| வ.எண் | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கண்டறியப்பட்ட மனநலம் பாதிக்கப்பட்டோர்கள் | 2,736 |
| 2 | மனநல ஆலோசனை பெற்றவர்கள் | 2,679 |
| 3 | மருத்துவ உதவி பெற்றவர்கள் | 2,558 |
| 4 | வாழ்வாதார உதவி பெற்றவர்கள் | 2,460 |
| 5 | மருத்துவமனை சிகிச்சை பெற்றவர்கள் | 440 |
| **மொத்த நிதி செலவினம்** | | **ரூ.13.89 கோடி** |



### 6.5.14. கிராம கற்றல் மையம்

திட்ட பகுதியில் உள்ள 4,174 ஊராட்சிகளிலும் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் கிராம கற்றல் மையங்களாக செயல்பட வலுப்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து கிராம கற்றல் மையங்களுக்கும் இணையதள வசதியுடன் கூடிய கணினி, கல்வி கற்பதற்கான குறுந்தகடுகள், போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்கள், நாளேடுகள் ஆகியன மக்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் கடைநிலை மக்களும் சந்தை நிலவரம், தொலை மருத்துவ வசதி, இளைஞர்களுக்கான தொழில் மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டல் மற்றும் மாணவர்களுக்கான உயர்கல்வித் தகவல்கள் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கிராம கற்றல் மையங்கள் தமிழக அரசின் மின் ஆளுமை மற்றும் மின் வணிக திட்டங்களின் சேவை மையங்களாக செயல்படுகின்றன. இதன் மூலம் மக்கள் சாதி, வருமானம், பிறப்பு, இறப்பு மற்றும் மதிப்பெண் சான்றிதழ்களும் உதவித்தொகை மற்றும் சமூக பாதுகாப்பு திட்டப்பயன்கள் பெற அந்தந்த கிராமங்களிலேயே விண்ணப்பித்து பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. திட்டப் பகுதிகளில் உள்ள மின் ஆளுமை மையங்களின் மூலம் இதுவரை 5,04,958 சான்றிதழ்களும், அரசு திட்ட பயன்களும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், அலைபேசி கட்டணம் செலுத்துதல், ஆதார் அட்டை அச்சடித்தல் போன்ற மின் வணிக பரிவர்த்தனைகள் மூலமாக 1,20,576 நபர்கள் சேவைகளைப் பெற்றுள்ளனர். கிராமப்புற மக்கள் தங்களின்

மின் கட்டணத்தை எளிய முறையில் செலுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2016–2017 ம் ஆண்டில் மேற்கண்ட சேவைகளை திறம்பட செய்யவும் மேலும் பல புதிய சேவைகளை அறிமுகப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**6.5.15. தேசிய வள மையம்**

தமிழ்நாடு மாநில புது வாழ்வு சங்கம் மூலம் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு புது வாழ்வு திட்டம் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முக்கிய கூறுகளான மக்களின் பங்கேற்புடனான ஏழ்மை நிலை கண்டறிதல், சமூக ஒருங்கிணைப்பு, நிறுவன கட்டமைப்பு, நிதி செயல்பாடு, வாழ்வாதார மேம்பாடு, திறன் மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்பு, ஊராட்சி நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு போன்ற நடவடிக்கைகளை மிகப்பெரிய அளவில் சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது. இதன் அடிப்படையில், தேசிய வாழ்வாதார மேலாண்மை இயக்க அலகு வறுமை நீக்கும் திட்ட செயல்பாடுகளில் நீண்ட கால அனுபவம் உள்ள தமிழ்நாடு புது வாழ்வு சங்கத்தினை வள மையமாக கண்டறிந்து, தேசிய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய வாழ்வாதார மேலாண்மை அலகு வெளியிட்டுள்ள – வள மையங்களுடனான கூட்டு செயல்பாடுகளின் வழிகாட்டி நெறிமுறைகளின் படி, அனைத்து மாநில ஊரக வாழ்வாதார இயக்கங்களுடன் இணைந்து செயல்படவும், திட்ட செயல்பாடுகளை தெளிவாக கற்றறிய மற்றும் தொழில்நுட்ப உதவி புரியவும் தமிழ்நாடு புது வாழ்வு சங்கத்தினை தேசிய வள மையமாக அங்கீகரித்துள்ளது.



தேசிய வள மையத்தின் 26 மாநிலங்களைச் சார்ந்த உயர் அலுவலர்களுக்கு மக்கள் நிலை ஆய்வைப்பற்றிய கருத்துப்பட்டறை நடத்தப்பட்டது. இதன் மூலம் இதர மாநிலங்களைச் சார்ந்தவர்கள் நமது மாநிலத்திற்கு வந்து திட்டத்தின் செயல்பாடுகளையும், பணிகளையும் களப்பயணம் மூலம் பார்வையிட்டு சென்றுள்ளனர். இதன் தாக்கமாக புதுச்சேரி, மேற்கு வங்காளம் மற்றும் பீகார் மாநிலங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு புது வாழ்வு திட்டத்தினின்று 20 பணியாளர்கள் மேற்கண்ட மாநிலங்களில் மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் வாழ்வாதார திட்ட செயல்பாட்டு பணிகளை நடைமுறைப் படுத்த உதவி வருகின்றனர்.

**6.6. திட்டத்தின் தாக்கம்**

திட்டத்தின் செயலாக்கம், இலக்கு மக்களிடையே ஏற்படுத்திய தாக்கம் குறித்து உலக வங்கி உதவியுடன் தனியார் நிறுவனம் மூலம் நடத்திய ஆய்வின் முக்கிய முடிவுகள்:

- அதிக வட்டி சுமை புதுவாழ்வு திட்ட முயற்சியால் 29 விழுக்காடு குறைந்துள்ளது.
- தொழில்திறன் பெற்ற பயனாளிகள் எண்ணிக்கை 32 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

- சொத்து குறியீடு 22.42 அலகுகள் உயர்ந்துள்ளதன் மூலம் இப்பகுதி மக்கள் கூடுதல் உடைமைகளை பெற்றுள்ளனர்.
- திட்ட செயலாக்க பகுதிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி அளிப்பு திட்டத்தின் கீழ் பணி பெறுவோரின் எண்ணிக்கை 15 விழுக்காடுகள் உயர்ந்துள்ளது.
- கிராம சபைகளில் பெண்களின் பங்கேற்பு 65 விழுக்காடு உயர்ந்துள்ளது.
- திட்ட பகுதிகளில் தங்களது வாழ்வாதாரம் குறித்து முடிவெடுக்கும் பெண்கள் விகிதம் 21 விழுக்காடு உயர்ந்துள்ளது.

### 6.7. நிதி செயலாக்கம்

2015–2016 ஆம் ஆண்டில் ரூ.202.73 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. 2016–17 ஆம் ஆண்டிற்கு ரூ.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அந்நிய செலாவணிக்கு எதிரான பணத்தின் மதிப்பு வேறுபாட்டினால் ஏற்பட்ட கூடுதல் தொகையையும் திட்ட ஒதுக்கீட்டுத் தொகையான ரூ.1667.10 கோடியுடன் திட்ட செயல்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் ரூ.1718.53 கோடி ஒட்டுமொத்த திட்ட செலவினமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.



## 7. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

## 7. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு மற்றும் சுய சார்பு தன்மை மூலம் பெண்களின் நிலையை மேம்பாடு அடையச் செய்யும் நோக்கத்துடன் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் **1983–**ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிறுவனம், மகளிர் சுய உதவிக் குழு இயக்கத்தினை தமிழ்நாடு முழுவதும் பரவலாக்கி, சமுதாயத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்கள் அவர்களின் உரிமைகளை பெறுவதை உறுதி செய்து சரிநிகர் சமுதாயம் உருவாகிட தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் இடைவிடாது தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூன்று முக்கிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

I. **மகளிர் திட்டம்:** மாநில அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்.

II. **தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்:** மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன் 60:40 என்ற விகிதத்தில் செயல்படுத்தப்படும் திட்டம்.

III. **தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்:** மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன் 60:40 என்ற விகிதத்தில் செயல்படுத்தப்படும் திட்டம்.

### 7.1. மகளிர் திட்டம்

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் முதன் முதலில், தர்மபுரி மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண்மை



வளர்ச்சி நிதியத்தின் (IFAD) நிதியுதவியுடன் சுய உதவிக் குழுக்களை அமைத்து, மகளிர் திட்டத்தினை செயல்படுத்தியது. பின்னர் இத்திட்டம் சேலம், தென்னாற்காடு (கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம்), மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு படிப்படியாக விரிவு படுத்தப்பட்டது. மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் வெற்றியினை அடிப்படையாகக் கொண்டு மாநில அரசு ‘மகளிர் திட்டம்’ என்ற பெயரில் இத்திட்டத்தினை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தியது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், மகளிரைக் கொண்டு சுய உதவிக் குழுக்களை உருவாக்கி, அவர்களின் திறன்களை மேம்படுத்தி, கூட்டமைப்புகள் மூலம் ஒருங்கிணைத்து, வருமானம் ஈட்டும் தொழில் தொடங்க வங்கிக்கடன் இணைப்புகளை ஏற்படுத்தி, அவர்களை சமூக மற்றும் பொருளாதார சுயசார்பு அடையச்செய்ய ஆற்றல் படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

#### 7.1.1. சுய உதவிக் குழுக்கள்

ஒரே பகுதியில் வசிக்கும் 18 முதல் 60 வயதிற்குட்பட்ட 12 முதல் 20 ஏழை மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. பொருளாதார சுரண்டலை ஏற்படுத்தக்கூடிய கந்துவட்டிக்காரர்கள், அடகுகாரர்கள் மற்றும் இதர சமுதாய கொடுமைகளிலிருந்து மகளிரை விடுவிப்பதை ஒரே நோக்கமாகக் கொண்டு, சுய உதவிக்

குழுக்களுக்கு சேமிப்பு பழக்கம், முறையான கணக்குப் பதிவேடுகள் பராமரித்தல், வங்கிக்கடன் பெறுதல் மற்றும் திரும்ப செலுத்துதல் ஆகியவற்றில் பயிற்சியும் ஆலோசனையும் வழங்கப்படுகிறது.

**அட்டவணை 7.1.**

**சுய உதவிக் குழுக்கள் பற்றிய விவரம்**

| | | |
|---|---|---|
| 1 | சுய உதவிக் குழுக்களின் மொத்த எண்ணிக்கை | 6.14 இலட்சம் |
| | மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | 92.84 இலட்சம் |
| 2 | ஊரகப் பகுதி சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 4.30 இலட்சம் |
| | மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | 64.51 இலட்சம் |
| 3 | நகர்ப்புற பகுதி சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 1.84 இலட்சம் |
| | மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | 28.33 இலட்சம் |
| 4 | மொத்த சேமிப்பு | ரூ.6004.53 கோடி |
| 5 | சுழல் நிதி/ஆதார நிதி பெற்ற சுய உதவிக்குழுக்களின் எண்ணிக்கை | 5.23 இலட்சம் |
| 6 | சுய உதவிக்குழுக்கள் பெற்ற ஒட்டு மொத்த கடன் இணைப்பு | ரூ.38,064.56 கோடி |

## 7.2. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

தமிழ்நாடு அரசு 2012–13–ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் என்ற திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இந்த திட்டத்தின் செயல்பாடுகளுக்கான நிதி, மத்திய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது. ஊரகப்பகுதிகளில் வறுமை கோட்டிற்குக்கீழ் வாழும் ஏழை



மக்களுக்காக, வலுவான மற்றும் துடிப்பான சமுதாய அடிப்படையிலான அமைப்புகளை உருவாக்கி நீடித்த வாழ்வாதாரத்துடன் கூடிய குடும்ப வருமானத்தை உயர்த்தி, நிதி மற்றும் பல்வேறு சேவைகளை முறையாகப் பெறுவதற்கு வழிவகை செய்வதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும்.

### 7.2.1. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முக்கிய அம்சங்கள்

- விடுபட்ட ஏழை மக்களை கண்டறிந்து அவர்களை சுய உதவிக் குழுவில் ஒருங்கிணைத்தல்.
- ஊரக பகுதிகளில் ஏழைகளைக் கொண்ட சமுதாய நிறுவனங்களை உருவாக்கி வலுப்படுத்துதல்.
- திறன் வளர்ப்புப் பயிற்சிகளின் மூலம் ஊரக ஏழை மக்களை சமூக மேம்பாடு அடையச் செய்தல்.
- நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட ஏழைகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல்.
- சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் தரத்தினை மேம்படுத்தி அவற்றைச் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.
- சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பொருளாதார நடவடிக்கை மேற்கொள்ள அவர்களுக்கு கடன் வழங்கும் பொருட்டு குழுக்களுக்கு நிதியுதவி வழங்குதல்.

- ஊரக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன்பயிற்சி அளித்தல்.
- அரசுத்துறைகள் நிதி மற்றும் நிதி சாரா சேவைகளை முறையாகப் பெற்று திறம்பட பயன்படுத்திட வழிவகை செய்தல்.
- கிராமப்புற ஏழை மக்கள் அடிப்படை வசதிகள் பெறக்கூடிய வாய்ப்புகளை உருவாக்குதல், சுகாதாரம் மற்றும் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கான பயிற்சிகள் வழங்குதல்.

### 7.2.2. திட்டச் செயலாக்கப் பகுதி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், சென்னை நீங்கலாக, தமிழ் நாட்டின் 31 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மொத்தமுள்ள 385 வட்டாரங்களில், புதுவாழ்வுத் திட்டம் 120 வட்டாரங்களிலும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மீதமுள்ள 265 வட்டாரங்களிலும் மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்படுகிறது. அவற்றுள் 4 மாவட்டங்களில் உள்ள 16 வட்டாரங்களில் உலக வங்கி நிதியுதவியுடன் தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம் (NRLP) செயல்படுத்தப்படுகிறது.



**அட்டவணை 7.2.**
**திட்டம் வாரியாக செயல்படுத்தப்படும் வட்டாரங்களின் விபரம்**

| வ. எண் | திட்டம் | மாவட்டங்கள் | வட்டாரங்கள் | பகுதிகள் | ஊராட்சி கள் |
|---|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு புதுவாழ்வு திட்டம் | 26 | 120 | 302 | 4,211 |
| 2 | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் | 31 | 249 | 694 | 7,855 |
| 3 | தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் | 4 | 16 | 48 | 458 |
| **மொத்தம்** | | **31** | **385** | **1,044** | **12,524** |

**முதற் கட்டம்:–** இத்திட்டம் 2012–2013 ஆம் ஆண்டு முதல் 15 மாவட்டங்களின் 60 வட்டாரங்களில் உள்ள 2,323 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**இரண்டாம் கட்டம்:–** இத்திட்டம் 2013–14 ஆம் ஆண்டு முதல் 27 மாவட்டங்களில் 110 வட்டாரங்களில் உள்ள 3,458 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**மூன்றாம் கட்டம்:–** 2014–15 ஆம் ஆண்டில் 21 மாவட்டங்களில் 95 வட்டாரங்களில் 2,451 கிராம ஊராட்சிகளுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

### 7.2.3. செயலாக்க அமைப்பு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தை செயல்படுத்த மாநில இயக்க மேலாண்மை அலகாக, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தை, மாநில

அரசு நியமித்துள்ளது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க செயல்பாடுகள் மாநில, மாவட்ட, வட்டார மற்றும் பகுதி அளவில் தனிப்பட்ட நிர்வாக பணியாளர்கள் அமைப்பின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த இயக்கத்தின் செயல்பாடுகளுக்கு கொள்கை வடிவிலான வழிகாட்டுதல் மற்றும் திட்டச் செயல்பாடுகளை கண்காணித்தல் போன்ற பணிகளுக்காக மாண்புமிகு அமைச்சர், நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அவர்களின் தலைமையில் உயர்நிலை அதிகாரம் பெற்ற குழு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வியக்கத்தின் இயக்குநராக அரசு முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்களும், முதன்மைச் செயல் அலுவலராக தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண் இயக்குநரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.


### 7.2.4. தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முக்கிய செயல்பாடுகள்

- தகவல் கல்வி மற்றும் தொடர்பு செயல்பாடுகள்
- சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிலவரங்கள் தொடர்பான அடிப்படை தகவல் சேகரித்தல் மற்றும் பராமரித்தல் (செயல்பாட்டிலுள்ள, செயலிழந்த மற்றும் கலைந்த குழுக்கள்)
- மக்கள் நிலை ஆய்வு



- கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அமைத்தல்
- திட்டப் பணியாளர்களுக்கான பயிற்சிகள்
- கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி வழங்குதல்
- விடுபட்ட ஏழை மக்களைக் கொண்டு புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்
- நிதி உள்ளாக்கத்தின் மூலம் வங்கி இணைப்பு
- பணியமர்வு தொடர்பான திறன் பயிற்சி
- வாழ்வாதார மேம்பாடு
- சுய உதவிக் குழுக்களின் பொருட்களை சந்தைப்படுத்தல்

### 7.2.5. வரிசைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள்



## 7.3. திட்ட செயல்பாடுகள்

### 7.3.1. தகவல், கல்வி மற்றும் தொடர்பு மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் பற்றிய விழிப்புணர்வு பொது மக்களிடையே பேரணி, தெரு நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், ரதம், சுவரொட்டிகள், ஒட்டுப்படங்கள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் இயக்க தகவல் பலகைகள் போன்றவற்றின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 7.3.2. அடிப்படை விவரக் கணக்கெடுப்பு

அனைத்து கிராம ஊராட்சிகளிலும் செயல்பாட்டில் உள்ள சுய உதவிக் குழுக்கள், செயல்பாட்டில் இல்லாத மற்றும் கலைந்துவிட்ட சுய உதவிக் குழுக்கள் குறித்த கணக்கெடுப்பு, புது வாழ்வு திட்ட சமூக வல்லுநர்களால் நடத்தப்பட்டுள்ளது. இதில் கண்டறியப்பட்ட, செயல்பாட்டில் இல்லாத சுய உதவிக் குழுக்களை திறன் வளர்க்கும் பயிற்சிகள் மூலமாக புத்துயிர் அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 7.3.3. மக்கள் நிலை ஆய்வு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வதார இயக்கம், ஏழைக் குடும்பங்கள் எதுவும் விடுபடாமல் இருப்பதை உறுதி செய்ய, மக்கள் பங்கேற்புடன் கூடிய ஊரக பங்கேற்பு மதிப்பீட்டு முறையில் நடைப்பயணம், சமுதாய வரைபடம், பொருளாதார மதிப்பீடு மற்றும் மூன்று வெவ்வேறு பகுதிகளில் அதனை சரிபார்த்தல் போன்ற யுத்திகளை பின்பற்றுகிறது. அனைத்து கிராம ஊராட்சிகளிலும் உள்ள குக்கிராமங்களில்



குடியிருப்புகள் வாரியாக மிகவும் ஏழைகள், ஏழைகள், மாற்றுத்திறனாளிகள், நலிவுற்றோர், பழங்குடியினர் மற்றும் விளிம்பு நிலைச் சமூகத்தினரை கண்டறிந்திட சமுதாய பங்கேற்புடன் கூடிய மக்கள் நிலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தேர்வு செய்யப்பட்ட மக்கள் நிலை பட்டியலை அனைத்து குக்கிராமத்திலுள்ள முக்கியமான இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு, எதிர்ப்புகள் மற்றும் புதிதாக சேர்ப்பதற்கான கோரிக்கை ஏதேனும் இருப்பின் அவற்றினைப் பெற்று அதனை இறுதி செய்து, பின்னர் இறுதி இலக்கு மக்கள் பட்டியல் கிராம சபையில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மக்கள் நிலை ஆய்வு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்களிலும் முடிக்கப்பட்டுள்ளது.

### 7.3.4. கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், இலக்கு மக்களை உள்ளடக்கிய ஒரு சுய சார்பு அமைப்பாகவும், கிராம அளவில் இயக்கத்தின் செயல்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முழுப் பொறுப்பு ஏற்பதோடு கிராம சபைக்கு விளக்கம் அளிக்கக்கூடிய அமைப்பாகவும் திகழ்கிறது. இந்த அமைப்புகள் சமுதாயத்திற்கும், திட்டத்திற்கும் இடையே மிக முக்கிய இணைப்பாக செயல்படுகிறது. ஊராட்சி மன்ற தலைவரே கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் பதவி வழித் தலைவராகவும் இருப்பார்.

ஒவ்வொரு கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திலும் 10 முதல் 20 உறுப்பினர்கள் கீழ்க்கண்டவாறு கிராம சபை ஒப்புதலுடன் தேர்வு செய்யப்படுகின்றனர்.

1. ஒவ்வொரு குடியிருப்பிலும் உள்ள இலக்கு மக்கள் பட்டியலிலிருந்து ஒரு சுய உதவிக் குழு உறுப்பினர்.
2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தவர் 30 விழுக்காடு.
3. மாற்றுத்திறனாளி மற்றும் இளைஞர் பிரதிநிதி ஒருவர்.
4. 50 விழுக்காடு பெண்களாக இருத்தல் வேண்டும்.

இதுவரை மூன்று கட்டங்களிலும் 7,456 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 7.3.**

**வறுமை ஒழிப்புச் சங்கங்களின் விவரங்கள்**

| வட்டாரங்கள் – கட்டங்கள் | ஊராட்சிகளின் எண்ணிக்கை | பொது கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் எண்ணிக்கை | பழங்குடியினர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் எண்ணிக்கை | மொத்த கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| முதல் கட்ட மாவட்டம் | 2,323 | 2,322 | 66 | 2,388 |
| இரண்டாம் கட்ட மாவட்டம் | 3,458 | 3,457 | 81 | 3,538 |
| மூன்றாம் கட்ட மாவட்டம் | 2,451 | 1,530 | 0 | 1,530 |
| **மொத்தம்** | **8,232** | **7,309** | **147** | **7,456** |



### 7.3.5 சமூகத் தணிக்கை குழு

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அமைக்கப்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் 5 முதல் 7 உறுப்பினர்களைக் கொண்ட சமூகத் தணிக்கை குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு திட்டச் செயல்பாட்டினை கண்காணித்து கிராம சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்.

### 7.3.6. புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்

2015–16 –ஆம் ஆண்டில், விடுபட்ட ஏழை மகளிரைக் கொண்டு 11,496 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. குழுவிலுள்ள ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கும் மற்றும் குழுவின் உறுப்பினர்களுக்கும் குழுச் செயல்பாடுகள் மற்றும் கணக்குப் புத்தகப் பராமரிப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த குழுக்கள் தரமதிப்பீடு செய்யப்பட்டு, பொருளாதாரச் செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக நிதியுதவி வழங்கப்படுகிறது.

### 7.3.7. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு

நிதி சார்ந்த மற்றும் இதர சேவைகளை சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கி அவைகளை வழி நடத்திடும் பொருட்டு சமுதாயம் சார்ந்த அமைப்புகளாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் தமிழ்நாடு சங்க பதிவுச் சட்டம் 1975ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை கிராம சுய உதவிக் குழுக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு அடிப்படைத் தளமாக விளங்குகின்றன.

### 7.4. திறன் வளர்ப்பு

### 7.4.1. திட்டப் பணியாளர்களுக்கான பயிற்சிகள்

மாநில, மாவட்ட, வட்டார மற்றும் பகுதி அளவில் உள்ள அனைத்து திட்ட பணியாளர்களுக்கும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலமாக கீழ்கண்டவாறு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

- **தூண்டல் பயிற்சி I –** கிராம அளவிலான ஆழ்ந்து கற்றல் பயிற்சி 7 நாட்களுக்கும், நிறுவன கட்டமைப்பு பயிற்சி 16 நாட்களுக்கும் மற்றும் 5 நாட்கள் களப்பணி பயிற்சியும் வழங்கப்படுகிறது
- **தூண்டல் பயிற்சி II –** முதல் தூண்டல் பயிற்சி முடிவுற்ற பிறகு அனைத்து அலுவலர்களுக்கும் இரண்டாம் நிலை தூண்டல் பயிற்சி 12 நாட்களுக்கு அளிக்கப்படுகிறது.
- **கருப்பொருள் சார்ந்த பயிற்சி –** தூண்டல் பயிற்சி I மற்றும் IIக்குப் பின்னர், திட்டப் பணியாளர்களுக்கு அவர்களுடைய சிறப்புப் பணி சார்ந்த கருப்பொருள் பயிற்சி 6 நாட்களுக்கு வழங்கப்படுகிறது.
- **பிற பயிற்சிகள்** – மாவட்ட அளவில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் பற்றிய அறிமுகப் பயிற்சி, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கும், தொண்டு நிறுவனங்களுக்கும், கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கும் மற்றும் தொடர்புடைய பிற அரசுத் துறை அலுவலர்களுக்கும் வழங்கப்படுகிறது.



### 7.4.2. சமுதாய அடிப்படையிலான அமைப்புகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், சமுதாய அடிப்படையிலான அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு கீழ்க்கண்ட பயிற்சிகளை வழங்குகிறது.

- சமுதாய செயல்பாட்டிற்கான விளக்க கையேடு குறித்து கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்களுக்கு பயிற்சிகள்.
- சமூகத் தணிக்கை குறித்து சமூக தணிக்கை குழு உறுப்பினர்களுக்கு பயிற்சிகள்.
- புதிதாக உருவாக்கப்பட்ட சுய உதவிக் குழுவின் ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கான பயிற்சி மற்றும் குழு உறுப்பினர்களுக்கான பயிற்சிகள்.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கு, நிர்வாகம் மற்றும் நிதி மேலாண்மை குறித்த பயிற்சிகள்.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயற்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சிகள்.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் துணைக் குழுக்களான குடியிருப்பு அளவிலான கூட்டமைப்பின் நிர்வாகிகளுக்கான பயிற்சி மற்றும் சமூக தணிக்கை குழு உறுப்பினர்களுக்கான பயிற்சிகள்.

### 7.4.3. முதன்மைப் பயிற்றுநர்களை உருவாக்குதல்

மாவட்ட, வட்டார மற்றும் கிராம அளவிலான பயிற்சிகளுக்கான பயிற்றுநர்களை பயிற்றுவிக்க மாநில மற்றும் மாவட்ட அளவில் முதன்மைப் பயிற்றுநர்கள் கருப்பொருள் வாரியாக உருவாக்கப் படுகின்றனர்.

### 7.4.4. சமுதாய வளப் பயிற்றுநர்களை உருவாக்குதல்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் கீழ்க்கண்ட சமுதாய வள பயிற்றுனர்களை உருவாக்க முனைகிறது.

- **சமுதாய சுய உதவிக்குழு பயிற்றுநர்கள் –** சுய உதவிக் குழுக்களுக்கு பயிற்சி அளித்து கண்காணித்திடும் பொருட்டு, 10 முதல் 15 சுய உதவிக் குழுக்களுக்கு ஒருவர் என்ற விகிதத்தில் பயிற்றுநர்கள் உருவாக்கப் படுகின்றனர்.
- **சமுதாய வல்லுநர் (வேலைவாய்ப்பு) –** ஒரு ஊராட்சிக்கு ஒருவர் என்ற அளவில், இளைஞர்கள் பற்றிய அடிப்படை விவரங்கள் பராமரிக்கவும், திறன் பயிற்சி நிகழ்ச்சிகளை கண்காணித்திடவும் மற்றும் கிராம வறுமை ஒழிப்பு சங்க உறுப்பினர்களுக்கு சமுதாய விளக்க கையேடு குறித்த பயிற்சி அளிக்கவும் பயிற்றுநர்கள் உருவாக்கப்படுகின்றனர்.
- **சமுதாய மாற்றுத் திறனாளி வழிநடத்துனர் –** ஒரு ஊராட்சிக்கு ஒருவர் என்ற விகிதத்தில், மாற்றுத் திறனாளிகள் பற்றிய புள்ளி விவரங்கள் பராமரிக்கவும், அவர்களின் தேவையை



கண்டறியவும் மற்றும் இதர அரசுத்துறை நிறுவனங்களுக்கு தொடர்பு அலுவலராக செயல்படவும் பயிற்சி வழங்கப்படுகிறது.

- **சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர் –** ஒரு தொகுப்பிற்கு 4 நபர்கள் வீதம் சுய உதவிக் குழுக்களிலிருந்து, சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்–படுகின்றனர். அவர்களுக்கு வங்கி மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு இடையே இணைப்பை ஏற்படுத்துதல், உறுப்பினர்களுக்கு கடன் பெற வழிகாட்டுதல், கடன் திரும்ப செலுத்தல், காப்பீடு மற்றும் நிதிக்கல்வி ஆகியவற்றில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

### 7.4.5 வங்கியாளர்கள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது, பல்வேறு நிலைகளிலும் நிதி உள்ளாக்கத்திற்கு கவனம் செலுத்தி வருகிறது. ஓய்வு பெற்ற வங்கியாளர்களை ஒருங்கிணைத்து, வளப் பயிற்றுநர்களாக உருவாக்கி அவர்கள் மூலம் மாநிலத்தில் உள்ள அனைத்து வங்கிக் கிளை மேலாளர்களுக்கும் சுய உதவிக் குழு வங்கிக் கடன் இணைப்பு மற்றும் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்த பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

### 7.5. திறன் மற்றும் பணியமர்வு பயிற்சி திட்டம்

#### 1) பணியமர்வு தொடர்பான திறன் பயிற்சி

திறன் மேம்பாடானது தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஓர் அங்கமாக திகழ்கின்றது. "தீன தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்யா யோஜனா" (ஆஜீவிக்கா திறன் பயிற்சி திட்டம்) மூலம் பணியமர்வுடன் கூடிய தொழில் பயிற்சி ஊரக பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான நிதியானது மத்திய, மாநில அரசுகளுக்கிடையே 60:40 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 15 முதல் 35 வயது வரை உள்ள கிராமப்புற ஏழை இளைஞர்கள் பயனாளிகள் ஆவர். இத்திட்டத்தின்கீழ் பயன்பெற பெண்கள், மாற்றுத்திறனாளிகள், நலிவுற்றோர்கள், விளிம்புநிலை பழங்குடியினர்கள் மற்றும் திருநங்கைகள் ஆகியோர் அதிக பட்ச வயது வரம்பு 45 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரம், தகவல் தொழில்நுட்ப சேவை, ஆயத்த ஆடை வடிவமைப்பு, ஓட்டுநர், ஆட்டோமொபைல், விருந்தோம்பல், வெல்டிங், கட்டுமானம் போன்ற துறைகளில் பெரும்பான்மையான திறன் பயிற்சிகள் அளிக்கப் படுகின்றன.

தமிழக அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசாணை எண். 35 நாள் 02.03.2016 வாயிலாக ஏற்படுத்தப்பட்டுள்ள மாநில அளவிலான உயர்மட்ட குழுவின் மூலமாக பயிற்சிக்கான ஒப்புதல் வழங்கப்பட உள்ளது.



#### இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

- நிரந்தர பதிவெண்கள் பெற்ற திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு ஏற்படுத்துதலில் திறமையும் அனுபவமும் நிறைந்த அங்கீகரிக்கப்பட்ட திறம் வாய்ந்த பயிற்சி நிறுவனங்கள் மட்டுமே பயிற்சி வழங்குவதற்கு தேர்வு செய்யப்படுகின்றன.
- இத்திட்டத்தின் கீழ் அட்டவணை வகுப்பினர் 50 விழுக்காடும், சிறுபான்மையினர் 15 விழுக்காடும், மாற்றுத் திறனாளிகள் 3 விழுக்காடும், மற்றும் அனைத்து பிரிவினரையும் சார்ந்த பெண்கள் 33 விழுக்காடும் பயன்பெறுவர்.
- தொழில்களுக்கு ஏற்றவாறு பயிற்சி காலமானது 3 முதல் 12 மாதங்கள் வரை வேறுபடும்.
- தொழில்சார் அறிவு மென்திறன் மற்றும் வேலையிடத்தில் பயிற்சி ஆகியவை பயிற்சி பாடத்திட்டத்தின் பகுதிகளாகும்.
- பயிற்சி அளிக்கப்பட்ட இளைஞர்களில் குறைந்தது 75 விழுக்காட்டினர் பணியமர்த்தப்பட வேண்டும்.
- பயிற்சி பெற்ற இளைஞர்கள், பணியில் நீடித்திருப்பதை உறுதி செய்வதற்காக பணியமர்வுக்கு பின்னும் ஆதரவு அளிக்கப்படுகிறது.
- பயிற்சியாளர்கள் பயிற்சிக்குப் பின்னர் தொடர்ந்து ஒரு வருடத்திற்கு பணியில் நீடிப்பதற்கும், பணியமைப்பில் கூடுதல் ஊதியத்தில் முன்னேறுவதற்கும், வெளிநாடுகளில்

பணியமர்த்தப்படுவதற்கும் பயிற்சி நிறுவனங்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

- பயிற்சியாளர்களுக்கு பயிற்சிக்குப் பின்னர் தொழிற்பயிற்சி தேசிய கவுன்சில் / துறை திறன் சபைகள் (NCVT/SSC) மூலமாக தகுதிச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.
- **2016–17** முதல் உண்டு உறைவிட வசதியுடனும் இப்பயிற்சி வழங்கப்பட உள்ளது.
- **2012–13** நிதியாண்டு முதல் **2015–16**ஆம் ஆண்டு வரை, **40,029** இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, அதில் **27,383** இளைஞர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**அட்டவணை 7.4.**

**மாவட்ட வாரியாக கிராமப்புற இளைஞர்களுக்கான திறன் வளர்ப்பு இலக்கு மற்றும் சாதனை 2013–16**

| வ. எண் | மாவட்டம் | இலக்கு | முடிவுற்றது | பணி அமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 285 | 285 | 221 |
| 2 | கோயம்புத்தூர் | 2,245 | 2,245 | 1,347 |
| 3 | கடலூர் | 1,560 | 1,560 | 1,087 |
| 4 | தர்மபுரி | 325 | 325 | 255 |
| 5 | திண்டுக்கல் | 1,180 | 1,180 | 906 |
| 6 | ஈரோடு | 1,745 | 1,745 | 1,509 |
| 7 | காஞ்சிபுரம் | 1,914 | 1,914 | 1,037 |
| 8 | கன்னியாக்குமரி | 620 | 620 | 316 |
| 9 | கரூர் | 510 | 510 | 443 |
| 10 | கிருஷ்ணகிரி | 960 | 900 | 689 |
| 11 | மதுரை | 660 | 660 | 301 |
| 12 | நாகப்பட்டினம் | 907 | 907 | 687 |
| 13 | நாமக்கல் | 1,156 | 1,156 | 682 |
| 14 | நீலகிரி | 345 | 345 | 222 |
| 15 | பெரம்பலூர் | 492 | 492 | 394 |
| 16 | புதுக்கோட்டை | 1,410 | 1,410 | 913 |
| 17 | இராமநாதபுரம் | 1,200 | 1,200 | 743 |
| 18 | சேலம் | 1,055 | 939 | 502 |
| 19 | சிவகங்கை | 840 | 840 | 704 |
| 20 | திருவண்ணாமலை | 1,910 | 1,910 | 1,337 |
| 21 | தஞ்சாவூர் | 1,533 | 1,513 | 695 |
| 22 | தேனி | 613 | 613 | 533 |
| 23 | திருவள்ளூர் | 1,720 | 1,720 | 979 |
| 24 | தூத்துக்குடி | 150 | 150 | 36 |
| 25 | திருநெல்வேலி | 980 | 980 | 556 |
| 26 | திருப்பூர் | 2,850 | 2,850 | 2,498 |
| 27 | திருவாரூர் | 745 | 745 | 370 |
| 28 | திருச்சி | 1,060 | 1,060 | 574 |
| 29 | வேலூர் | 2,340 | 2,340 | 1,492 |
| 30 | விழுப்புரம் | 1,775 | 1,745 | 1,277 |
| 31 | விருதுநகர் | 1,570 | 1,570 | 1,138 |
| | புது வாழ்வுத்திட்டம் | 3,600 | 3,600 | 2,940 |
| | **மொத்தம்** | **40,255** | **40,029** | **27,383 *** |

* மீதமுள்ள இளைஞர்களுக்கு சம்மந்தப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் வேலையில் அமர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### அட்டவணை 7.5.

### திறன் மற்றும் பணியமர்வு திட்டத்தின் கீழ் தொழில் வாரியான இலக்கு மற்றும் சாதனை (2013–14 மற்றும் 2014–15)

| வ. எண் | தொழில் துறைகள் | பயிற்சி பெற்றவர்கள் | பணியமர்வு செய்யப்பட்டவர்கள் |
|---|---|---|---|
| 1 | தொழில்கள் | 3,783 | 2,779 |
| 2 | தகவல் தொழில் நுட்பம் | 12,876 | 9,938 |
| 3 | ஆடைகள் மற்றும் ஆயத்த ஆடை | 9,423 | 5,968 |
| 4 | விருந்தோம்பல் | 2,837 | 1,956 |
| 5 | கட்டுமானம் | 771 | 467 |
| 6 | ஆட்டோ மொபைல் | 3,938 | 2,721 |
| 7 | அழகு கலை | 786 | 511 |
| 8 | தீ மற்றும் பாதுகாப்பு | 8 | 7 |
| 9 | சுகாதாரம் | 1,539 | 982 |
| 10 | சில்லறை வணிகம் | 1,683 | 798 |
| 11 | தோல் துறை | 270 | 233 |
| 12 | ஒட்டுநர் | 2,115 | 1,023 |
| **மொத்தம்** | | **40,029** | **27,383** |

**2) வேலைவாய்ப்பு முகாமின் மூலம் நேரடி வேலை வாய்ப்பு**

வேலைவாய்ப்பு முகாமானது, வேலை கொடுப்பவர் மற்றும் வேலை தேடுபவர்களை ஒரு குடையின் கீழ் இணைக்க தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்ட நிகழ்வாகும். மாவட்ட அளவில் நடத்தப்படும். இம்முகாம்களில் இளைஞர்களின் தகுதி மற்றும் திறன்களுக்கேற்றவாறு பணி வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன.

வேலை வாய்ப்பு முகாம்களில் புகழ்பெற்ற தொழில் மற்றும் உற்பத்தி நிறுவனங்கள் தங்களின் தேவையின் அடிப்படையில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்படுகிறது. இம்முகாம்களை நடத்துவதற்கு ஊரக பகுதிகளில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு முகாம்கள் நடைபெறும் நாள், இடம் முதலியவற்றை மாவட்ட நிர்வாகம் முடிவு செய்கிறது. முகாம்களில் முறையான பதிவு, கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டு நிறுவனங்களின் தேவைக்கேற்ப இளைஞர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

### அட்டவணை 7.6.

### வேலைவாய்ப்பு முகாம்கள் 2015–16

| வ. எண் | மாவட்டம் | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் | | புதுவாழ்வு திட்டம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை | பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை | பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை | பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை |
| 1 | அரியலூர் | 1 | 66 | 4 | 1,410 | 5 | 1,476 |
| 2 | கோயம்புத்தூர் | 4 | 3,169 | 4 | 1,380 | 8 | 4,549 |
| 3 | கடலூர் | 3 | 790 | 5 | 1,197 | 8 | 1,987 |
| 4 | தர்மபுரி | 1 | 5,463 | 5 | 1,542 | 6 | 7,005 |
| 5 | திண்டுக்கல் | 3 | 3,248 | 4 | 1,726 | 7 | 4,974 |
| 6 | ஈரோடு | 4 | 1,876 | 0 | 0 | 4 | 1,876 |
| 7 | காஞ்சிபுரம் | 3 | 1,581 | 6 | 1,623 | 9 | 3,204 |

| வ. எண் | மாவட்டம் | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் | | புதுவாழ்வு திட்டம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை | பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை | பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை | பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை |
| 8 | கன்னியாக்குமரி | 3 | 509 | 0 | 0 | 3 | 509 |
| 9 | கரூர் | 1 | 311 | 4 | 1,400 | 5 | 1,711 |
| 10 | கிருஷ்ணகிரி | 1 | 125 | 4 | 1,071 | 5 | 1,196 |
| 11 | மதுரை | 4 | 2,113 | 4 | 1,381 | 8 | 3,494 |
| 12 | நாகப்பட்டினம் | 2 | 844 | 4 | 962 | 6 | 1,806 |
| 13 | நாமக்கல் | 3 | 421 | 4 | 986 | 7 | 1,407 |
| 14 | நீலகிரி | 1 | 206 | 0 | 0 | 1 | 206 |
| 15 | பெரம்பலூர் | 1 | 664 | 4 | 1,301 | 5 | 1,965 |
| 16 | புதுக்கோட்டை | 3 | 3,117 | 3 | 1,217 | 6 | 4,334 |
| 17 | இராமநாதபுரம் | 2 | 484 | 3 | 891 | 5 | 1,375 |
| 18 | சேலம் | 6 | 334 | 3 | 1,175 | 9 | 1,509 |
| 19 | சிவகங்கை | 2 | 275 | 5 | 1,876 | 7 | 2,151 |
| 20 | திருவண்ணாமலை | 6 | 510 | 2 | 742 | 8 | 1,252 |
| 21 | தஞ்சாவூர் | 4 | 208 | 0 | 0 | 4 | 208 |
| 22 | தேனி | 2 | 306 | 3 | 808 | 5 | 1,114 |
| 23 | திருவள்ளூர் | 2 | 325 | 4 | 1,251 | 6 | 1,576 |
| 24 | திருவாரூர் | 2 | 172 | 4 | 1,561 | 6 | 1,733 |
| 25 | தூத்துக்குடி | 2 | 972 | 5 | 1,201 | 7 | 2,173 |
| 26 | திருநெல்வேலி | 4 | 1,086 | 4 | 1,327 | 8 | 2,413 |
| 27 | திருப்பூர் | 3 | 1,145 | 0 | 0 | 3 | 1,145 |
| 28 | திருச்சி | 5 | 988 | 0 | 0 | 5 | 988 |
| 29 | வேலூர் | 5 | 1,141 | 4 | 1,012 | 9 | 2,153 |
| 30 | விழுப்புரம் | 5 | 1,633 | 4 | 1,107 | 9 | 2,740 |
| 31 | விருதுநகர் | 2 | 2,571 | 4 | 1,380 | 6 | 3,951 |
| | **மொத்தம்** | **90** | **36,653** | **100** | **31,527** | **190** | **68,180** |



## அட்டவணை 7.7.
## வேலைவாய்ப்பு முகாம் மூலம் வேலை வழங்கப்பட்ட துறைகள் வாரியான பட்டியல் 2015–16

| வ. எண் | தொழிலின் பெயர் | பணி அமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் | புதுவாழ்வுத் திட்டம் | மொத்தம் |
| 1 | கைபேசி ஒருங்கிணைத்தல் | **102** | **241** | **343** |
| 2 | கணினி | 4111 | 4729 | 8840 |
| 3 | கட்டிட பணி | 1801 | 946 | 2747 |
| 4 | ஆயத்த ஆடைகள் | 6827 | 9458 | 16285 |
| 5 | தொழில் நிறுவனங்கள் | 5145 | 5195 | 10340 |
| 6 | ஓட்டுநர் | 2222 | 6749 | 8971 |
| 7 | மருத்துவ பயன்பாடுகள் | 1583 | 550 | 2133 |
| 8 | அழகுக்கலை | 273 | 1048 | 1321 |
| 9 | கோழி வளர்ப்பு | 51 | 0 | 51 |
| 10 | சமையல் கலை | 695 | 415 | 1110 |
| 11 | சில்லறை வர்த்தகம் | 3636 | 620 | 4256 |
| 12 | சேவை சார்பு | 3267 | 0 | 3267 |
| 13 | இதர (பொதுவானவை) | 6940 | 1576 | 8516 |
| | **மொத்தம்** | **36653** | **31527** | **68180** |

### 7.6. நிதி உள்ளாக்கம்

### 7.6.1. சுய உதவிக் குழுக்களுக்கான ஆதார நிதி

விடுபட்ட ஏழை மகளிர், மக்கள் நிலை ஆய்வு மூலம் கண்டறியப்பட்டு சுய உதவிக் குழுக்களாக உருவாக்கப் படுகின்றனர். மூன்று மாத கால முடிவில் இந்த சுய உதவிக் குழுக்களை, நிர்ணயிக்கப்பட்ட காரணிகளின் அடிப்படையில் தரம் பிரித்து குழுவின் சேமிப்பினை பெருக்குவதற்கு ஏதுவாக ஆதார நிதி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சுய உதவிக் குழுவிற்கும் தலா 15,000 ரூபாய்

வழங்கப்படுகிறது. உறுப்பினர்களிடையே கடன் வழங்குவதற்கு இத்தொகை பயன்படுத்தப்படுகிறது.

**7.6.2. சுய உதவிக் குழு – வங்கி இணைப்பு**

தொடர்ந்து சேமித்தல், கணக்குப் புத்தகங்களை முறையாகப் பராமரித்தல், குழு உறுப்பினர்களிடையே கடன்கள் வழங்குதல் மற்றும் அவற்றைத் தவறாமல் திரும்பச் செலுத்துதல் ஆகியவை நமது மாநிலத்தில் உள்ள சுய உதவிக் குழுக்களிடையே நிலவி வரும் சிறந்த செயல்பாடுகளாகும். இந்த செயல்பாடுகளின் அடிப்படையில் சுய உதவிக்குழுக்கள் உருவாகி 6 மாதத்திற்கு பிறகு தர மதிப்பீடு செய்யப்பட்டு, வங்கிகளிலிருந்து கடன் பெற தகுதியாக்கம் செய்யப்படும். சுய உதவிக் குழுக்கள் தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற பின்னரே வங்கிகள் மூலம் கடன் பெற தகுதி பெறுகின்றன. சுய உதவிக் குழு–வங்கி இணைப்பின் மூலம், உறுப்பினர்கள் வாழ்வாதார நடவடிக்கைகளில் முதலீடுகள் செய்ய ஊக்கப்படுத்தி கூடுதல் வருவாய் ஈட்டிடவும், கடன் சுமையிலிருந்து விடுபட்டு பொருளாதார ரீதியாக மேம்பாடு அடைந்திடவும் வழிவகை செய்யப்படுகிறது.

சுய உதவிக் குழு – வங்கிகள் இணைப்பு திட்ட செயலாக்கத்தில் இந்தியாவில் தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. 2015–16 ஆம் ஆண்டில் வங்கிக் கடன் இணைப்பு இலக்காக 6,000 கோடி ரூபாய் நிர்ணயிக்கப்பட்டு, அவ்விலக்கு எய்தப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் 26,460.73 கோடி ரூபாய் கடனாக குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.



**7.6.3. சுய உதவிக் குழுக்களுக்கான வட்டி மானியம்**

வட்டி மானிய திட்டம் மத்திய அரசால் தர்மபுரி, வேலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 4 மாவட்டங்களில் நேரடியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மீதமுள்ள 27 மாவட்டங்களில் இத்திட்டம் தமிழ்நாடு அரசால் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்டம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகளிடமிருந்து பெறப்படும் 3 லட்சம் ரூபாய் வரையிலான கடன் தொகையின் மீது 7 விழுக்காட்டிற்கு மேல் விதிக்கப்படும் வட்டித் தொகையில் அதிகபட்சமாக 5.5 விழுக்காடு வரை வட்டி மானியமாக மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படுகிறது. இதுவரை 1,13,314 சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானிய தொகையாக 24.86 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது. சுய உதவிக்குழுக்கள் வட்டி மானியத் திட்டத்தில் பயன்பெற ஏதுவாக தனியார் வங்கிகளின் புள்ளி விவரங்களையும் பகிர்ந்து கொள்ள மாநில அரசால் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.

**7.6.4. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான பெருங்கடன்**

வங்கிகளிடமிருந்து சுய உதவிக் குழுக்கள் பெற்றுவரும் கடன் அளவு போதுமானதாக இல்லாததால், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வங்கிகளிடமிருந்து பெருங்கடன் பெற்று, சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு நுகர்வு மற்றும் பொருளாதார தேவைகளுக்கான

கடன்களாக வழங்குகின்றன. பெருங்கடன், கூடுதல் நிதி ஆதாரமாகப் பயன்படுகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் மாநிலத்தில் 521 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பல்வேறு வங்கிகள் மூலம் பெருங்கடனாக 114.12 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

### 7.7. வாழ்வாதார மேம்பாடு

### 7.7.1. ஒத்த தொழில் குழு

வேளாண் சார் மற்றும் வேளாண் சாராத ஒத்த தொழில் புரியும் ஒரே பகுதியை சார்ந்த சுய உதவிக் குழு உறுப்பினர்களை ஒருங்கிணைத்து ஒத்த தொழில் குழு உருவாக்கப்படுகிறது. ஒவ்வொரு தொழில் குழுவிற்கும் வடிவமைக்கப்பட்ட காரணிகளின் அடிப்படையில் பொதுவான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தவும், மூலப்பொருட்கள் வாங்குவதற்கும், சந்தை இணைப்புகள் ஏற்படுத்துவதற்கும், உறுப்பினர்களுக்கு நிர்வாகம் மற்றும் தொழில் முனைவோர் பயிற்சிகளுக்கும் தொகுப்பு நிதி வழங்கப்படுகிறது. இந்த நடவடிக்கை அவர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்து வருவாயை பெருக்க வழிவகை செய்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் 919 ஒத்த தொழில் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

### 7.7.2. பெண் விவசாயிகள் மேம்பாட்டு திட்டம் – மகிளா கிசான் சசக்திகரன் பரியோஜனா (MKSP)

நீடித்த வேளாண்மை அடிப்படையிலான வாழ்வாதாரத்தில் மகளிரின் தற்போதைய நிலையை



மேம்படுத்தும் பொருட்டும், முறையான முதலீட்டின் மூலம் அவர்களது பங்களிப்பு மற்றும் உற்பத்தி திறன் ஆகியவற்றை உயர்த்தும் பொருட்டும், தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் துணைக் கூறாக பெண் விவசாயிகள் மேம்பாட்டு திட்டம் என்ற திட்டத்தினை மத்திய அரசு துவக்கியுள்ளது.

மத்திய அரசின் உயர்நிலைக்குழு 2015–16ஆம் ஆண்டில் 15.96 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. திட்ட காலம் 3 ஆண்டுகள் ஆகும். இத்திட்டமானது கீழ்க்கண்ட 3 மாவட்டங்களில் உள்ள 10 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்படுகிறது.

**அட்டவணை 7.8.**

**பெண் விவசாயிகள் மேம்பாட்டு திட்டம்**

**மகிளா கிசான் சசக்திகரன் பரியோஜனா**

| வருடம் | மாவட்டத்தின் பெயர் | வட்டாரத்தின் பெயர் | கிராம ஊராட்சின் எண்ணிக்கை | பயனாளிகள் | தொண்டு நிறுவன பெயர் |
|---|---|---|---|---|---|
| 2015–16 மற்றும் 2016–17 | விழுப்புரம் | செஞ்சி, விக்கிரவாண்டி, | 40 | 4000 | ரிவார்டு, |
| | | கோலியநல்லூர், திருவெண்ணை நல்லூர் | 20 | 3800 | கல்வி கேந்திரா, பல்மிரா |
| | | வானூர், மரக்காணம் | 20 | 3000 | |
| | காஞ்சிபுரம் | திருப்போரூர் | 30 | 2000 | நேஷனல் அக்ரோ பவுண்டேஷன் |
| | திருவள்ளூர் | கும்மிடிப்பூண்டி | 13 | 1000 | |
| 2016–17 | காஞ்சிபுரம் | திருக்கழுக்குன்றம் | 30 | 2000 | |
| | திருவள்ளூர் | சோழவரம் | 13 | 1000 | |
| | | **மொத்தம்** | **166** | **16,800** | |

### 7.7.3. ஏழை மகளிரை தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கான சிறப்பு வாழ்வாதாரத் திட்டம்

ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள ஏழை மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கு உதவி செய்யும் பொருட்டு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி வழங்கிடும் புதிய திட்டம் அரசு ஆணை எண். 82 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (சிஜிஎஸ் 3) துறை நாள் 25.5.2015 மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது, இத்திட்டத்திற்கு தேவைப்படும் நிதி ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் செயல்படுத்தப்படும் பல்வேறு வாழ்வாதார இயக்க திட்டங்களின் மூலம் பெறப்படும்.

தமிழ்நாடு திறன் வளர்ச்சி இயக்கம் மூலம் 313.95 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை 29,155 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2015–16 ம் ஆண்டில் 400 சிறப்பு வாழ்வாதாரக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

### 7.7.4. சந்தைப்படுத்துதலுக்கு ஆதரவு

**i) கண்காட்சி**

மகளிர் சுய உதவிக் குழு பொருட்களின் விற்பனையை அதிகரிக்கவும், பிரபலப்படுத்தவும் ஒவ்வொரு ஆண்டும் மாநில அளவில் பொங்கல், சித்திரை மற்றும் நவராத்திரி சமயங்களில் ‘‘மகளிர் மேளா’’ என்ற பெயரில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. கைவினைப் பொருட்கள், செயற்கை ஆபரணங்கள், சணல் பொருட்கள்,



தோல் பொருட்கள், சிறு தானியப் பொருட்கள் ஆகியவை இந்த கண்காட்சிகளில் விற்பனை செய்யப்படுகின்றன.

2015–16 ஆம் ஆண்டில் 360 மகளிர் சுய உதவிக் குழுக்கள் இக்கண்காட்சிகளில் கலந்து கொண்டு 184.28 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்களை விற்பனை செய்துள்ளனர்.

தேசிய அளவில், தில்லியில் நடைபெறும் இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சி மற்றும் பிற மாநிலங்களில் நடத்தப்படும் மண்டல அளவிலான ‘‘சாராஸ்’’ கண்காட்சிகள் ஆகியவற்றில் சுய உதவிக் குழுக்கள் பங்கேற்கின்றன. 2015–16 ஆம் ஆண்டில், தேசிய அளவில் நடைபெற்ற 15 ‘‘சாராஸ்’’ கண்காட்சிகளில் 199 மகளிர் சுய உதவிக் குழுக்கள் பங்கேற்று 54.45 இலட்சம் ரூபாய் மதிப்பிலான உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்துள்ளனர்.

**ii) மாநில / மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கம்**

தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவில் சுய உதவிக்குழுக்களின் உற்பத்தி பொருட்களின் விற்பனையை மேம்படுத்தும் பொருட்டு, மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் தோற்றுவிக்கப்பட்டு, தமிழ்நாடு சங்க பதிவுச் சட்டம் 1975 ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கங்கள் அனைத்தும் மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் மாநில, மாவட்ட, வட்டார அளவில் சிறப்பு விற்பனை கண்காட்சிகளை நடத்துவதுடன், மதிப்பு

கூட்டுதல் முறை மற்றும் கவர்ந்திழுக்கும் உறைகளுடன் கூடிய பொட்டலமிடுதல் மூலம் மகளிர் சுய உதவிக்குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனையை போட்டிச் சந்தையில் அதிகரிக்கவும் ஊக்குவிக்கின்றன.

**iii) மதி அங்காடி (Mathi KIOSK)**

மதி அங்காடி என்பது மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்த ஏற்படுத்தப்பட்ட பிரத்யேகமான விற்பனை மையம் ஆகும். இம்மையங்கள், நகர்ப்புற பகுதிகளில் மக்கள் அதிகமாக கூடும் இடங்களான பேருந்து நிலையங்கள், கோயில்கள், அரசு அலுவலகங்கள் / நிறுவனங்கள் போன்ற இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. மூலிகைப் பொருட்கள், கைவினைப்பொருட்கள், நவீன சணல் பொருட்கள். செயற்கை ஆபரணங்கள், சிறுதானியங்கள், பொம்மைகள் ஆகியவை சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்படும் முக்கிய பொருட்கள் ஆகும். இதுவரை ரூ.59.78 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் மதி அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**7.8. 2015–16 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள்**

- 95 வட்டாரங்களில் உள்ள 2,451 கிராம ஊராட்சிகளில் 1,530 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களும், சமூக தணிக்கைக் குழுக்களும் துவங்கப்பட்டுள்ளன.



- 20,859 இளைஞர்களுக்கு திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு, இதுவரை 12,055 இளைஞர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.
- 1,18,920 கிராம வறுமை ஒழிப்பு சங்க உறுப்பினர்களுக்கு 1 முதல் 4 கட்டங்களாக இயக்க வழிகாட்டி கையேடு குறித்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- திட்ட அலுவலர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், இளம் வல்லுநர்கள் மற்றும் களப்பகுதி ஒருங்கிணைப்பாளர்கள் என மொத்தம் 1,605 நபர்களுக்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், திட்டம் குறித்த கட்டமைப்பு பயிற்சி – II அளிக்கப்பட்டுள்ளது.
- சுய உதவிக் குழுக்களின் புத்தக பராமரிப்பு பயிற்சியில் மொத்தம் 12,116 சமூக சுய உதவிக் குழு பயிற்றுநர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.
- கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களை கண்காணிக்கும் சமூக தணிக்கை குழு குறித்து 1,969 களப்பகுதி ஒருங்கிணைப்பாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- 190 வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் 68,180 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப் பட்டுள்ளது.

- 5,000 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- ''ஒரு கிராமம் ஒரு உற்பத்திப் பொருள்'' திட்டத்தின் கீழ் 224 ஒத்த தொழில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## 7.9. மாநில அரசின் இதர திட்டங்கள்

### 7.9.1. கலாச்சாரப் போட்டிகள்

மகளிர் சுய உதவிக் குழு மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்குள் திறமைகளை வெளிப்படுத்தவும், அவர்களுக்கிடையே கூட்டு முயற்சி மற்றும் ஒற்றுமையை ஊக்குவிக்கும் முகமாகவும் விளையாட்டுப் போட்டிகளுடன் கூடிய கலாச்சாரப் போட்டிகள், வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் நடத்தப்படுகின்றன. கலாச்சாரப் போட்டிகளுக்கென ரூ.160 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கிடையே இக்கலாச்சார போட்டிகள் 2016–17 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடத்தப்படும்.

### 7.9.2. கல்லூரிச் சந்தைகள்

இளைய சமுதாயத்தினரிடையே மகளிர் சுய உதவிக் குழு பொருட்களை பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளின் போதும் மற்றும் விழாக்காலங்களிலும் கல்லூரிச் சந்தைகள் நடத்தப்படுகின்றன.



2015–16 ஆம் ஆண்டில் 122 கல்லூரிச் சந்தைகள் நடத்தப்பட்டுள்ளன. இதில் 2,677 மகளிர் சுய உதவிக் குழுக்கள் பங்கேற்று, 203.74 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்களை விற்பனை செய்துள்ளனர்.

### 7.9.3. பிளாஸ்டிக் கழிவுகள் மறுசுழற்சி மையம்

சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தா பொருளாதார நடவடிக்கைகளிலும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஈடுபட ஊக்கப்படுத்தப்படுகின்றன. சுற்றுச் சூழலை பாதுகாப்பதில், சிறப்பு முயற்சியாக 35 பிளாஸ்டிக் கழிவுகள் மறுசுழற்சி மையங்கள் தலா 4 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ளன. இந்தச் செயல்பாடுகளுக்கு சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் ''பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதி'' பயன்படுத்தப்பட்டுள்ளது.

2015–16 ஆம் ஆண்டில் மேலும் 5 பிளாஸ்டிக் கழிவுகள் மறுசுழற்சி செய்யும் மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த மையங்களில் பிளாஸ்டிக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு, துகள்களாக்கப்பட்டு அந்த பிளாஸ்டிக் துகள்கள் தார்ச் சாலைகள் அமைப்பதில் பயன்படுத்தப்படுகின்றன.

இதுவரை 215.67 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 645.31 டன் பிளாஸ்டிக் கழிவுகள் துகள்களாக்கப்பட்டு, அவற்றைக் கொண்டு 1020.32 கி.மீ தார்ச் சாலைகள் போடப்பட்டுள்ளன.

**7.10. தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம்**

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம், தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் – 1975ன் கீழ் பதிவு செய்யப்பட்டு, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஒரு அங்கமாக செயல்படுகிறது. இந்த மையம் மாநில அளவில், திட்டப் பணியாளர்கள், சமுதாயம் சார்ந்த அமைப்புகள், வள பயிற்றுநர்களுக்கு பயிற்சி வழங்குதல் பல்வேறு பயிற்சிகளை ஏற்பாடு செய்து நடத்துதல் மற்றும் பயிற்சிப் புத்தகங்கள் / வழிகாட்டி கையேடுகள் தயாரித்தல், போன்ற முக்கியப் பணிகளை மேற்கொள்கிறது. மேலும் இம்மையமானது, திறன் மற்றும் பணியமர்த்துதல் அலகாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டத்தில் செயல்பட்டு வருகிறது.

**7.11. முற்றம் – மாத இதழ்**

மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு உடல் நலம், சுகாதாரம், மகளிர் மேம்பாடு, கிராமப்புற வளர்ச்சி, வறுமை ஒழிப்பு, நுகர்வோர் உரிமைகள் மற்றும் கடமைகள், பெண்களுக்கான சட்ட உரிமைகள், பெண்களுக்கு தேவைப்படும் இதர சேவைகள், பொருளாதார மேம்பாட்டின் வெற்றி கதைகள் குறித்த விபரங்களை பரப்பும் பொருட்டு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் வெளியிடப்படும் மாத இதழ் **முற்றம்** ஆகும்.



மேலும், முற்றம் மாத இதழ் மூலம் 70,000 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 14 இலட்சம் மகளிர் பயன் பெறுகின்றனர். இம்மாத இதழ், சுய உதவிக்குழுக்களின் நடவடிக்கைகளை அனைவருக்கும் தெரிவிக்கும் பொருட்டும், இதழை மேலும் செரிவூட்டும் பொருட்டும் பல்வேறு அரசுத் துறைகளுக்கும், நிறுவனங்களுக்கும் அனுப்பப்படுகிறது.

**7.12. 2015–16 ஆம் ஆண்டில் மகளிர் திட்டத்தின் செயல்பாடுகள்**

- 6,191.49 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பாக மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- 25 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 5.85 கோடி ரூபாய் பெருங்கடன் வழங்கப்பட்டுள்ளது.
- 32 மாவட்டங்களில் 122 கல்லூரிச் சந்தைகள் நடத்தப்பட்டு அவற்றில் 2,677 மகளிர் சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு 203.74 இலட்சம் ரூபாய்க்கு தங்களது பொருட்களை விற்பனை செய்துள்ளனர்.
- 5 மாவட்டங்களில் பிளாஸ்டிக் கழிவுகள் மறுசுழற்சி மையங்கள் தலா 4 லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ளன.
- 2015–16 ஆம் ஆண்டு மாநில அளவில் நடத்தப்பட்ட மூன்று விற்பனை கண்காட்சிகளில், மொத்தம் 360 மகளிர் சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு

184.28 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்களை விற்பனை செய்துள்ளனர். 15 தேசிய அளவிலான சாராஸ் கண்காட்சிகளில் 199 மகளிர் சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு, தங்களது பொருட்களின் விற்பனையின் மூலம் 54.45 இலட்சம் ரூபாய் ஈட்டியுள்ளனர்.

**7.13. தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்**

இந்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்பு அமைச்சகம் 2014–15ல் பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தினை (SJSRY) தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கமாக மறுசீரமைத்துள்ளது.

அதனடிப்படையில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் 60 : 40 என்ற விகிதத்தில் மத்திய மற்றும் மாநில அரசினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் ஆறு கூறுகள் பின்வருமாறு

1. சமூக அணி திரட்டல் மற்றும் நிறுவன மேம்பாடு
2. திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி
3. திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சி மூலம் வேலைவாய்ப்பினை உருவாக்குதல்
4. சுயவேலை வாய்ப்புத் திட்டம்
5. நகர்ப்புற தெரு வியாபாரிகளுக்கு வாழ்வாதாரம்
6. நகர்ப்புற வீடற்றோருக்கு உறைவிடம்

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கங்களை



செயல்படுத்திடும் அலகாக தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் நியமிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்ட மன்றத்தில் விதி எண் – 110ன் கீழ் அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில் அரசாணை(நிலை) எண்.62, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.2) துறை, நாள்–04.03.2016 அன்று வெளியிடப்பட்டது.

இதனடிப்படையில் இத்திட்டம் 2016–17ம் ஆண்டு முதல் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தினால் செயல்படுத்தப்படுகிறது.

**7.14. அம்மா கைபேசி திட்டம்**

தமிழ்நாட்டில் 92.84 லட்சம் உறுப்பினர்களை கொண்ட 6.14 லட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கூட்டமைப்பின் கீழ் 20 முதல் 25 சுய உதவிக் குழுக்கள் இயங்கி வருகின்றன. இந்த சுய உதவிக் குழுக்களை மேற்பார்வையிட 20,000 சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்கள் உள்ளனர். இந்த சமுதாய சுய உதவிக்குழு பயிற்றுநர்கள், சுய உதவிக் குழு கூட்டங்கள் நடத்துதல், புத்தக பராமரித்தல் போன்ற செயல்பாடுகளை மேற்பார்வையிட ஏதுவாக, தமிழ் மொழியில் சிறப்பு மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டு கைபேசியில் ஏற்றம் செய்யப்பட்டு "அம்மா கைபேசி" திட்டத்தின் கீழ் அனைத்து மகளிர் சுய உதவிக் குழு பயிற்றுநர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

## அட்டவணை 7.9
## மாவட்ட வாரியாக வழங்கப்பட்டுள்ள கைப்பேசிகள் பற்றிய விவரங்கள்

| வ. எண் | மாவட்டம் | கைப்பேசிகள் வழங்கப்பட்டுள்ள விவரங்கள் |
|---|---|---|
| 1 | அரியலூர் | 410 |
| 2 | கோயம்புத்தூர் | 399 |
| 3 | கடலூர் | 855 |
| 4 | தர்மபுரி | 675 |
| 5 | திண்டுக்கல் | 427 |
| 6 | ஈரோடு | 560 |
| 7 | காஞ்சிபுரம் | 1,147 |
| 8 | கன்னியாக்குமரி | 290 |
| 9 | கரூர் | 305 |
| 10 | கிருஷ்ணகிரி | 573 |
| 11 | மதுரை | 495 |
| 12 | நாகப்பட்டினம் | 817 |
| 13 | நீலகிரி | 145 |
| 14 | நாமக்கல் | 515 |
| 15 | பெரம்பலூர் | 260 |
| 16 | புதுக்கோட்டை | 675 |
| 17 | இராமநாதபுரம் | 500 |
| 18 | சேலம் | 695 |
| 19 | சிவகங்கை | 529 |
| 20 | திருவண்ணாமலை | 1,304 |
| 21 | தஞ்சாவூர் | 640 |
| 22 | தேனி | 335 |
| 23 | திருவள்ளூர் | 1,020 |
| 24 | திருவாரூர் | 770 |
| 25 | தூத்துக்குடி | 560 |
| 26 | திருநெல்வேலி | 575 |
| 27 | திருச்சி | 690 |
| 28 | திருப்பூர் | 344 |
| 29 | வேலூர் | 1,190 |
| 30 | விழுப்புரம் | 1,375 |
| 31 | விருதுநகர் | 514 |
| **மொத்தம்** | | **19,589** |



## 7.15. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொடர் வேலைவாய்ப்பிற்கான வாழ்வாதார திட்டம் (MGNREGS – Project LIFE)

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005ன்படி ஊரக குடும்பங்களுக்கு நிரந்தர வருவாய் ஈட்டிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனை கருத்தில் கொண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பயன்பெற்ற பயனாளி குடும்பங்களுக்கு நிரந்தர வருமானத்தை ஏற்படுத்தும் நோக்கில் இப்பயிற்சி திட்டம் உருவாக்கப்பட்டது ஆகும்.

இத்திட்டமானது **2015–16** முதல் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு தொழில் திறன் பயிற்சிகள் வழங்கி வேலையில் அமர்த்தப்பட்டு தற்பொழுது அக்குடும்பங்கள் பெற்று வருகின்ற பகுதிநேர வேலைவாய்ப்பு நிலையிலிருந்து முழு நேர வேலைவாய்ப்பு நிலைக்கு செல்வதை உறுதி செய்கிறது.

### இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

- இத்திட்டமானது மக்கள் பங்கேற்பு முறையிலான திட்ட உருவாக்க செயலாக்க (IPPE -II) நடைமுறைப்படி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியில் ஈடுபட்ட பணியாளர்களில் இருந்து பட்டியல் தயாரித்து,

அதன்மூலம் இத்திட்டத்திற்கான பயனாளிகளை ஊரகப்பகுதி வாரியாக கண்டறிந்துள்ளது.

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொடர் வேலைவாய்ப்பிற்கான வாழ்வாதார திட்டத்தை (**MGNREGS – Project LIFE**) செயல்படுத்திடும் பொறுப்பு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.
- **இப்பயிற்சியின் மூன்று முக்கிய கூறுகள் :** ஊதியம் சார்ந்த வேலைவாய்ப்பு பயிற்சிகள், சுய வேலைவாய்ப்பு திறன் சார்ந்த பயிற்சிகள் மற்றும் வாழ்வாதார முன்னேற்ற பயிற்சிகள்
- இத்திட்டமானது ஏற்கனவே நடைமுறையில் உள்ள DDU-GKY திட்டத்தின் கோட்பாடுகளின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது.
- பயிற்சி நிறுவனங்களான (PIAs) திட்ட செயலாக்க நிறுவனங்களை அவற்றின் உள்கட்டமைப்பு மற்றும் வேலை வாய்ப்பு பெற்றுத்தரும் திறனை அடிப்படையாகக் கொண்டு தேர்வு செய்யப்படும்.
- பயிற்சியாளர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.100 வீதம் ஊக்கத்தொகையாக அவர்களுடைய உணவு மற்றும், போக்குவரத்து செலவாக வழங்கப்படுகிறது.
- பல்வேறு வகையான திறன்மேம்பாட்டு பயிற்சிகள் : ஓட்டுநர் பயிற்சி, தகவல் தொழில் நுட்பம், ஆடைகள் மற்றும் ஆயத்த ஆடை, விருந்தோம்பல், கட்டுமானம், சுகாதாரம், சில்லறை வணிகம் மற்றும் அழகு கலை.



- சுய வேலை வாய்ப்பிற்கான பயிற்சிகள் அந்தந்த மாவட்டங்களில் உள்ள முன்னோடி வங்கிகளால் நடத்தப்படும் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (RSETIs) மூலமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் கீழ்கண்டவாறு மூன்று வகையான திட்டக் கூறுகளுக்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 7.10**

| வ. எண். | திட்ட கூறுகள் | பயனாளி எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஊதியம் சார்ந்த வேலைவாய்ப்பு பயிற்சிகள் | 23,100 |
| 2 | சுய வேலைவாய்ப்பு திறன் பயிற்சிகள் | 5,775 |
| 3 | வாழ்வாதார முன்னேற்ற பயிற்சிகள் | 4,040 |
| **மொத்தம்** | | **32,915** |

இத்திட்டத்திற்கான மொத்த நிதியான ரூ.92.28 கோடி இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அவர்களால் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.46.14 கோடி பெறப்பட்டுள்ளது.

இதுவரையிலும் 2,336 பயனளாளிகளுக்கு மேற்கூறப்பட்ட திட்ட கூறுகளில் பயிற்சிகள் தொடங்கப்பட்டு 2,296 பயனாளிகளுக்கு பயிற்சிகள் முடிவடைந்துள்ளன. நடப்பு ஆண்டில் மேற்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ள இலக்கை அடைவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# 8. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்



## 8. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

தமிழ்நாட்டின் கடலோரப் பகுதியை 26 டிசம்பர் 2004–ல் எதிர்பாராதவிதமாக தாக்கிய ஆழிப்பேரலையால் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள், கால்நடை, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கடலோர சமுதாய மக்களின் உடமைகள் கடுமையாக பாதிக்கப்பட்டன. தமிழ்நாடு **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக எடுக்கப்பட்ட மிகத் துரிதமான நிவாரணம் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் பன்னாட்டவராலும் பாராட்டப்பட்டதுடன், கடலோர சமுதாய மக்களின் நிலைத்த வாழ்வாதாரத்தை உறுதி செய்ய அரசின் தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையில், “**பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின்**” உதவியுடன் கூடிய “**சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்**” துவங்கப்பட்டது.

சுனாமியால் கடுமையாக பாதிக்கப்பட்ட கடலோர மாவட்டங்களில் வாழும் சமுதாய மக்களின் நிலைத்த வாழ்வாதாரத்தை மீட்பதும், அவற்றை மேம்படுத்துவதுமே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். கடற்கரை வள ஆதாரங்களை திறம்பட நிர்வகித்தல் குறித்த திறன் மேம்பாட்டு பயிற்சி அளிப்பதுடன், நீடித்து செயல்படுத்தக் கூடிய நுண் தொழில்கள் வளர்ச்சிக்கு வழி வகை செய்தும், பல்வகை காப்பீடு வசதிகளை ஏற்படுத்தி தருவதன் மூலம்

எதிர்பாராத விதமாக எழுகின்ற ஆபத்துக்களை ஈடுசெய்திட கடலோர சமுதாய மக்களை தயார் படுத்துவதும் இதன் முக்கிய நோக்கங்களாகும்.

இத்திட்டத்தின் மூன்று முக்கிய உட்கூறுகள் பின்வருமாறு 1) கடலோர வள ஆதார மேலாண்மை, 2) ஊரக நிதி மற்றும் இடர்பாடு நீக்கும் நடவடிக்கைகள், 3) வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் தொழில் திறன் பயிற்சி

### 8.1.1 திட்டப் பகுதிகள் :

இத்திட்டம், 2007 – 08 ஆண்டில் ஆறு கடலோர மாவட்டங்களில் முதல் கட்டமாக செயல்படுத்தப்பட்டு, தற்போது, தமிழ்நாட்டில், சென்னை தவிர இதர ஆறு கடலோர மாவட்டங்களுக்கும் 2016 – 17 லிருந்து விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**அ. ஏற்கனவே செயல்பட்டு வரும் மாவட்டங்கள்**

| | | |
|---|---|---|
| திட்டக் காலம் | : | 9 ஆண்டுகள் (2007 –08 முதல் 2016–17 வரை) தற்போது 31.03.2019 வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. |
| திட்ட மதிப்பீடு | | ரூ.283.69 கோடி |
| திட்டப் பகுதிகள் | : | திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி |

**ஆ. கூடுதலாக செயல்படுத்தப்படும் புதிய மாவட்டங்கள்**

| | | |
|---|---|---|
| திட்டக் காலம் | : | 3 ஆண்டுகள் (2016 – 17 முதல் 2018–19 வரை) |
| திட்ட மதிப்பீடு | | ரூ.279.49 கோடி |
| திட்டப்பகுதி | : | திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி |



### 8.1.2 செயலாக்க அமைப்பு :

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறையின் முதன்மை செயலாளர் அவர்களை தலைவராகக் கொண்டும், திட்ட இயக்குநர் அவர்களை உறுப்பினர் செயலராகக் கொண்டும் **“மாநில திட்ட வழிகாட்டுக் குழு”** அமைக்கப்பட்டு, இத்திட்டத்தின் செயல்பாடுகள் நிர்வகிக்கப்படுகின்றது. திட்ட இயக்குநர் தலைமையில், கூடுதல் இயக்குநர், நிதி (ம) நிர்வாக மேலாளர், முதுநிலை ஊரக நிதி மேலாளர், செயற் பொறியாளர், நிறுவன வளர்ச்சி மேலாளர், கண்காணிப்பு (ம) மதிப்பீடு மேலாளர் மற்றும் தகவல் (ம) தொழில் நுட்ப மேலாளர் ஆகியோரைக் கொண்டு **திட்ட மேலாண்மை அலகு** மாநில அளவில் செயல்பட்டு வருகின்றது. மாவட்ட ஆட்சியர் தலைமையில் **“மாவட்ட அளவிலான செயல்பாட்டு ஆலோசனைக் குழு”** அமைக்கப்பட்டு, மாவட்ட செயலாக்க அலுவலர், உதவி செயற் பொறியாளர், கணக்கு அலுவலர், சமுதாய வளர்ச்சி அலுவலர், நிறுவன வளர்ச்சி அலுவலர், கண்காணிப்பு (ம) மதிப்பீடு அலுவலர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோருடன் **மாவட்ட செயலாக்க அலகு** மாவட்ட அளவில் செயல்பட்டு வருகின்றது.

### 8.1.3 திட்டத்தின் நோக்கங்கள் :

கடலோர சமுதாய மக்களின் தற்சார்புடைய நீடித்த வாழ்வாதாரத்தை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சமுதாய மக்களின் ஒத்துழைப்புடனும், பல்வேறு நிறுவனங்களின் உதவியுடனும், நீடித்து செயல்படக்கூடிய

நுண் தொழில்களை ஏற்படுத்தி, திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்கி, கடன் வசதிகளை ஏற்படுத்தி கொடுத்து, இடர்பாடுகளை தவிர்க்க காப்பீடு வசதிகள் செய்து தருவதுடன், மீன்வள ஆதாரத்தை மேம்படுத்தும் முயற்சிகளையும் உருவாக்கி நீடித்த வாழ்வாதார நடவடிக்கைகளை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

**8.1.4 திட்டப் பயனாளிகள்:**

சுனாமியால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கப்பட்ட கடலோர கிராமங்களில் வசிக்கும் கீழ்க்கண்ட பிரிவினர்:–

- வள்ளம், சிறு படகு போன்றவற்றை பயன்படுத்தி கரையோரங்களில் மீன்பிடிக்கும் மீனவர்கள்
- சிறிய அளவில் வியாபாரம் செய்யும் பெண் மீன் வியாபாரிகள் மற்றும் பதப்படுத்துவோர்
- கடலோரப் பகுதிகளில் மீன்பிடி தொழில் மற்றும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள கூலித் தொழிலாளர்கள் சிறு மற்றும் குறு விவசாயிகள் பிற சிறு தொழில் செய்வோர் (உ.ம் :– சங்கு, சிப்பி சேகரிப்போர்)
- சமுதாய பங்கேற்புடன் கண்டறியப்பட்ட மிகவும் ஏழைகள் மற்றும் ஏழைகள்



**8.2 கடலோர வள ஆதார மேலாண்மை :**

**1. சமுதாய ஆதரவு :**

5 முதல் 7 வரையிலான கடலோர ஊராட்சிகளை உள்ளடக்கிய கூட்டு வள மையம் அடித்தட்டளவில் அரசு சாரா நிறுவனங்களின் உதவியுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது, திட்டம் செயல்பட்டு வரும் 6 மாவட்டங்களில் 28 கூட்டு வள மையங்களுடன், புதிதாக ஆரம்பிக்கப்படும் 6 மாவட்டங்களில் 36 கூட்டு வள மையங்களும் இந்த ஆண்டு துவங்கப்படும். ஒவ்வொரு கூட்டு வள மையத்திலும், திட்ட ஒருங்கிணைப்பாளர், திட்ட செயலாக்குநர், வியாபார ஊக்குநர் மற்றும் கூடுதல் வியாபார ஊக்குநர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். கூட்டு வள மையங்களுக்கு அலுவலகக் கட்டிடம், தகவல் தொழில்நுட்ப வசதிகளான கணினி, தொலைபேசி மற்றும் இணைய தள வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தை கள அளவில் செய்யக்கூடிய சமுதாய அமைப்பாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மறுசீரமைக்கப்பட்டு, தனியாக அலுவலகக் கட்டிடம், கணினி, தொலைபேசி மற்றும் இணைய தள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளன. சமுதாய மக்கள் மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நோக்கில், திறமையான நிர்வாகம், சிறந்த செயல்பாடுகள் மற்றும் இலாபகரமாக செயல்படும் நுண்தொழில்கள் உள்ள இடங்களுக்கு பட்டறிவுப் பயணங்கள் ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

**2. சமுதாய வள ஆதாரங்களுக்கான திட்டமிடுதல் :**

திட்ட செயல்பாடுகள் ஆரம்பிக்குமுன், ஒரு அடிப்படை வள ஆதாரக் கணக்கெடுப்பு, வாழ்வாதார வரைபடம், தர மதிப்பீடு போன்ற பணிகள் கடலோர சமுதாய பங்கேற்புடன் மேற்கொள்ளப்படுகிறது. வாழ்வாதார வாய்ப்புகள், சுற்றுச்சூழல் மற்றும் பாலினப் பிரச்சினைகளை பிரதிபலிக்கக் கூடிய ஒவ்வொரு கிராமத்திற்கும் நுண்திட்டங்கள் வடிவமைக்கப்படுகிறது. மீன் உலர் களம், மீன் கொள்முதல் நிலையம், மீன் ஏலக்கூடம், மீன்வலை பின்னும் தளம், மீன் விற்பனைக் கூடம், கூட்டமைப்பு அலுவலகக் கட்டிடம், தார்ச்சாலை, சிமெண்ட் சாலை, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் கலன்கள் போன்ற வாழ்வாதாரத்தின் தொடர்புடைய சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி தரப்படுகின்றன.

**3. மீன் வள ஆதார மேலாண்மை :**

இத்திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில், மீன் வளத்தை மேம்படுத்தும் பொருட்டு கடலில் சோதனை அடிப்படையில் செயற்கை பவளப் பாறைகள் அமைக்கப்பட்டுள்ளன. கடல்பாசி வளர்த்தல் போன்ற பணிகளும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மீன் வள மேலாண்மை தொடர்பான பிரச்சினைகளை கண்டறிந்திட மாநில மற்றும் மாவட்ட அளவிலான கருத்தரங்குகள் நடத்தப்படுவதுடன், கண்டறியப்படும் பிரச்சினைகளுக்கு தக்க வல்லுநர்களின் உதவியுடன் தீர்வு காணப்படுகின்றன.



**8.3 ஊரக நிதி மற்றும் இடர்பாடு நீக்கும் நடவடிக்கைகள் :**

**1. சுய உதவிக் குழுக்களுக்கு நுண் கடனுதவி :**

தேவைப்படும் நேரத்தில் உடனடி கடனுதவி கிடைக்கச் செய்வதே சுயஉதவிக் குழுக்களின் நீடித்த செயல்பாட்டினை உறுதி செய்யும் முக்கிய காரணியாக அமைகிறது. மாவட்ட மற்றும் மாநில அளவிலான கருத்தரங்குகள் மூலம் திட்டப் பகுதியிலுள்ள திறன்மிகு சுயஉதவிக் குழுக்கள் வங்கியாளர்களுக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் சிறப்பு வளமைகள் மற்றும் சீரிய நுண்தொழில்களை நேரடியாக அறிந்து கொள்ளும் பொருட்டு வங்கியாளர்களுக்கு பட்டறிவுப் பயணம் ஏற்பாடு செய்யப்படுகிறது. சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கியிலிருந்து நேரடி வங்கிக் கடன் இணைப்பு பெற்றுத் தருவதோடு, ஐசிஐசிஐ வங்கி, தேசிய வேளாண் வளர்ச்சி வங்கி நிறுவனமான நாபின்ஸ், பல்லவன் கிராம வங்கி போன்ற வங்கி நிறுவனங்களின் வியாபார மேம்பாடு முகவர்களாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் நியமனம் செய்யப்பட்டு சிறப்பு கடனுதவி பெற வழிவகை செய்யப்படுகிறது.

**2. இடர்பாடு மேலாண்மை :**

1. **துயர் குறைப்பு நிதி :**

   ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் துயர் குறைப்பு நிதி நிர்வகிக்கப்பட்டு. எதிர்பாராமல் ஏற்படும் வாழ்வாதார இழப்பை ஈடுசெய்ய ஏதுவாக குறைந்த வட்டியில் மக்களுக்கு சிறு கடன்களாக

வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதியின் 4/5 அளவு பங்கு திட்ட நிதியாகவும், 1/5 அளவு பங்கு பயனாளிகளின் பங்குத் தொகையாகவும் வரையறுக்கப்படுகிறது. இக்கடன் தொகை ரூ.1,000/– முதல் ரூ.7,500/– வரை வழங்கப்படுகிறது. 10 மாதத் தவணையில் இக்கடன் திருப்பி செலுத்தப்படுகின்றது.

**துயர் குறைப்பு நிதியின் பயன்பாடு விவரம்**

| வருடம் வாரியாக | பயனடைந்த பயனாளிகள் | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 2011 – 12 | 1598 | 64.00 |
| 2012 – 13 | 3385 | 152.47 |
| 2013 – 14 | 3708 | 207.71 |
| 2014 – 15 | 5421 | 240.59 |
| 2015 – 16 | 6787 | 344.75 |
| **மொத்தம்** | **20899** | **1009.52** |

**2. நுண் தொழில் மேம்பாடு மற்றும் புதிய உத்திகளுக்கான நிதி :**

தற்போது திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் 6 மாவட்டங்களில், சமையல் கழிவுகளிலிருந்து எரிவாயு உற்பத்தி செய்யும் கலன்கள் 363 எண்ணிக்கையில் பயனாளிகளின் வீடுகளில் அமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பயனாளிகள் இக்கலன்களை அமைப்பதற்கு ஏதுவாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் கடன், பயனாளிகளின் பங்குத் தொகை மற்றும் திட்ட



மானியம் ஆகியவற்றுடன் சேர்த்து ரூ.19,100/– மதிப்பீட்டில் கடனுதவி வழங்கப்படுகிறது.

**3. நலிவுற்ற தொழில் முனைவோர் மூலதன நிதி :**

இத்திட்டம் செயல்படும் மாவட்டங்களில் அதிக அளவில் நுண்தொழில்கள் ஏற்படுத்திட, நாபின்ஸ் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு, ரூ.5.00 கோடி நலிவுற்ற தொழில் முனைவோர் மூலதன நிதியாக நாபின்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, இதிலிருந்து ஒவ்வொரு தொழில் கடன் மொத்த தொகையில் 25 சதவீதமும், மீதமுள்ள தொகையில் 70 சதவீதம் நாபின்ஸ் நிறுவனத்தின் கடன் தொகையாகவும் வழங்கப்படுகிறது. 5 சதவீதம் பயனாளிகளின் பங்குத் தொகையாகும். இதுவரை 890 வருவாய் ஆதார நுண் தொழில்கள் ரூ.1,872.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டு, 4,174 மகளிர் பயனடைந்துள்ளனர்

**8.4 வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் தொழில் திறன் பயிற்சி :**

**1. சுய உதவிக் குழுக்களுக்கு ஆதரவு :**

கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கு நிர்வாகம் மற்றும் நிதி மேலாண்மை, கணினி இயக்குதல், மகளிரை வலிமைப்படுத்துதல் தொடர்பான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. சுய உதவிக் குழு உறுப்பினர்களின் அன்றாட

நடவடிக்கைகள் உள்ளிட்ட அனைத்து விபரங்களையும் சேகரித்து பராமரிக்க ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கென தனியாக டேலி மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிலிருந்து சுமார் 200 சமுதாய வள பணியாளர்களுக்கு திட்டக் காலம் முடிவடைந்த பின்னர் திட்டச் செயல்பாடுகளைத் தொடர்ந்திட தேவையான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

2. **மீன் விற்பனை சங்கங்கள் உருவாக்குதல் :**

தென்னிந்திய மீனவர் சங்கங்களின் கூட்டமைப்புடன் இணைந்து, சிறு படகுகள், கட்டுமரம் மற்றும் வள்ளம் மூலம் மீன் பிடிப்போர் ஆகியோரை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்ட 60 மீன் விற்பனை சங்கங்கள் உருவாக்கப் பட்டுள்ளன. மீன் விற்பனை சங்கங்களுக்கு அலுவலகக் கட்டிடங்கள், கணினி மற்றும் இதர தளவாடங்கள் வசதி அளிக்கப்பட்டுள்ளன. சங்க உறுப்பினர்களை கடனிலிருந்து மீட்க, மீன் விற்பனை சங்கங்கள் மூலமாக கடனுதவி அளிக்கப்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் திருவள்ளூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மீனவர்கள் சங்கங்களின் கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு, ரூ.51 இலட்சம் நடைமுறை மூலதன நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. படகு பழுது பார்த்தலை



எளிதாக்கிட வெளி பொருத்து மோட்டார் என்ஜின் பழுது நீக்கும் நிலையங்கள் மற்றும் படகு கட்டும் தளங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. மேலும், மீன்களை சுகாதார முறையில் கையாள்வதற்காக மீன் இறங்கு தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

3. **வருமானத்தை பெருக்கும் நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி :**

மக்களிடையே நிலைத்த வருமானத்தை ஈட்டக்கூடிய நுண் தொழில்கள் தொடங்குவதற்கு இருக்கும் வாய்ப்புகள் மற்றும் இதர வசதிகள் பெறுவதற்கான நடைமுறை குறித்து 17,092 சமுதாய மக்களுக்கு வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கை குறித்த பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

4. **நுண் தொழில் மேம்பாடு :**

உற்பத்திக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், மீன் விற்பனை சங்க உறுப்பினர்கள் மற்றும் ஏழ்மை நிலையிலுள்ளோர் நுண் தொழில்களை துவங்க ஊக்குவிக்கப்படுகின்றனர். தகுதியான பயனாளிகளைக் கண்டறிந்து அவர்களுக்கு வெற்றிகரமாக நுண்தொழில்களை உருவாக்குவதற்கு வழிகாட்ட ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வருவாய் பெருக்கும் நடவடிக்கை களிலிருந்து நகர்ந்து மரபு சார்ந்த மற்றும் புதுமையான உத்திகளின் அடிப்படையிலான

நுண்தொழில்களை பயனாளிகள் மேற்கொள்ளச் செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். காய்கறி, மூலிகை மற்றும் மா விவசாயம், மலர்த்தோட்டம், கருவாடு, மீன் விற்பனை, கோழி வளர்ப்பு, கொப்பரை எண்ணெய் தயாரித்தல், கயிறு தயாரித்தல், தென்னை ஓலை முடைதல், பொம்மை செய்தல், கடற்சிப்பி பொருட்கள் தயாரித்தல், முந்திரி பருப்பு பதனிடுதல், புடவை வண்ணம் தீட்டுதல், மளிகை வியாபாரம், சிற்றுண்டியகம், அழகுக் கலை நிலையம், மின்னணு சேவை மையம் போன்ற தொழில்களுக்கு இத்திட்டம் நிதி உதவி அளிக்கிறது.

5. **வேலையற்ற இளைஞர்களுக்கு தொழில்திறன் பயிற்சி :**

திட்டப் பகுதிகளில் வாழும் வேலையற்ற இளைஞர்களுக்கு மூன்று மாதம் முதல் ஒரு வருடம் வரையிலான காலத்திற்கு தகுந்த தொழில் பிரிவுகளில் தொழில் திறன் பயிற்சி வழங்கப்படுகிறது. இதுவரை 6,821 ஊரக இளைஞர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

### 8.5 கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு :

மாநிலம், மாவட்டம், கூட்டு வள மையம் மற்றும் ஊராட்சி அளவில் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. திட்ட செயல்பாடுகளின் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளின் அடிப்படையிலான முன்னேற்றம் இணையதளம் வாயிலாக



தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன. மாதாந்திர நேரடி ஆய்வுக் கூட்டங்கள், ஸ்கைப் மூலம் காணொலி ஆய்வு செய்தல் மற்றும் முகநூல் மூலம் கண்காணிக்கப்படுகிறது. மேலும், வாட்ஸ்அப் போன்ற சமூக ஊடகங்களின் மூலம் ஒவ்வொரு திட்டக் கூறின் செயல்பாடுகள் உரிய கால வரையறைக்குள் நிறைவேற்றப்படுவதை தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது. தகவல் பரிமாற்றம், சாதனைகளை அறிந்து கொள்ளுதல் மற்றும் யுக்திகள் பகிர்வு போன்ற பணிகள் ஊராட்சி அளவில் சமுதாய தொடர்பு மூலம் அறிய செய்யப்படுகிறது.

### 8.6 அறிவுசார் மேலாண்மை :

அடித்தட்டளவில் பல்வேறு பட்டறிவுப் பயணங்கள் நடத்தப்பட்டு வருவதன் மூலமும் திட்டம் குறித்த அறிவுத்தகவல்கள் உறுதி செய்யப்படுகிறது. சிறந்த செயல்பாடுகள் மற்றும் பயிற்சிகள் போன்றவை "முற்றம்" மாத இதழில் கட்டுரைகளாக வெளியிடப்படுகின்றன. துண்டுப் பிரசுரங்கள், குறும்படங்கள் ஆகியவையும் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

### 8.7. 2015 – 16 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சாதனைகள்

- ரூ.43.10 இலட்சம் செலவில் 5 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு அலுவலகக் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

- ரூ.124.30 இலட்சம் செலவில் 4 மீன் உலர் தளங்கள் மற்றும் 16 வலை பின்னும் தளங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ரூ.176.90 இலட்சம் செலவில் நான்கு மீன் ஏலக் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- திருவள்ளூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் நான்கு மீன் கொள்முதல் மையங்கள் ரூ.104.70 இலட்சம் செலவில் துவக்கப்பட்டுள்ளன.
- திருவள்ளூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் இரண்டு மீனவர்கள் சங்கக் கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது மற்றும் ரூ.56.00 இலட்சம் செலவில் மாவட்ட கூட்டமைப்பு கட்டிடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளது.
- 10 மீன் விற்பனை சங்கங்கள் அமைக்கப்பட்டு இச்சங்க அலுவலகக் கட்டிடங்கள் ரூ.40.27 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- 432 மீனவர்கள் ரூ.89.90 இலட்சம் கடனிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர்.
- மீன் பிடி தொழிலாளர்களுக்கு ரூ.10.95 இலட்சம் செலவில் 487 சூரிய சக்தி மின் விளக்குகள் வழங்கப்பட்டுள்ளன.
- திருவள்ளூர், கடலூர், காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ரூ.46.00 இலட்சம் செலவில் நான்கு



குடிநீர் சுத்திகரிக்கும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

- ரூ.39.06 இலட்சம் மதிப்பீட்டில் 794 குளிரூட்டும் பெட்டிகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.
- 476 தலைச்சுமை மீன் வியாபாரம் செய்யும் மகளிர்களை இணைத்து 119 கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு பிணையில்லா கடனாக ரூ.71.40 இலட்சம் வழங்கப்பட்டுள்ளன.
- நுண் தொழில்கள் செயல்பாடுகளை மேம்படுத்தும் வகையில் ஆறு திட்ட மாவட்டங்களில் 428 நுண்தொழில்கள் ரூ.1079 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ளது.
- 1,275 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ..3,964 இலட்சம் வங்கி கடன் இணைப்பு பெற்றுத் தரப்பட்டது.
- துயர் குறைப்பு நிதியாக 6,787 பயனாளிகளுக்கு ரூ.344 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.
- 1,000 பெண்களுக்கு வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது
- 521 ஊரக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய தொழில் திறன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

# 9. வரவு செலவுத் திட்டம் 2016–2017



## 9. வரவு செலவுத் திட்டம் 2016–2017

2016–2017 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.21,186.577 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் வருவாய் செலவினங்களுக்காக ரூ. 20,276.576 கோடியும், மூலதனச் செலவினங்களுக்காக ரூ.910.001 கோடியும் மற்றும் அரசு ஊழியர்களுக்கான கடன் தொகைக்காக ரூ.0.25 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 10. முடிவுரை



**முடிவுரை**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பல்வேறு திருப்புமுனை மற்றும் முன்னோடித் திட்டங்களின் மூலம் உருவாக்கப்பட்ட ஊரக உட்கட்டமைப்பானது, வாழ்வாதார வாய்ப்புகளை விரிவடையச் செய்து, அதன் விளைவாக கிராமப்புற மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளது.

இத்துறையின் நிர்வாக இயந்திரத்தினை வலுப்படுத்தும் விதமாக பல்வேறு தீர்க்கமான முயிற்சிகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. இத்தகைய முயற்சிகள் 2016–17 ஆம் ஆண்டிலும் தொடரும்.

ஊராட்சி அமைப்புகளை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன், கிராம ஊராட்சிகளுடன் நெருங்கிய ஒருங்கிணைப்புடன் செயல்படும் வகையில், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் என்ற நிர்வாக நிலையினை அறிமுகப்படுத்தியதன் மூலம், இந்த அரசு, கிராம ஊராட்சிகளின் நிர்வாக அமைப்பினை வலுப்படுத்த தீர்க்கமான முயற்சிகளை எடுத்துள்ளது.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் உதவி மற்றும் பங்கேற்பின்றி ஊரக வளர்ச்சித் திட்டங்களின் நோக்கங்களை முழுமையாக அடைய இயலாது. ஊராட்சி அமைப்பின் ஒவ்வொரு அடுக்கின் தன்னாட்சியை பாதுகாக்கும் அதே நேரத்தில், அவற்றை வலுப்படுத்தவும் பல்வேறு முன்முயற்சிகளை அரசு மேற்கொண்டுவருகிறது.

மகளிருக்கு அதிகாரமளிப்பதில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எப்போதுமே முன்னிலையில் இருந்துள்ளார்கள். இந்த இலக்கிற்கு மற்றுமொரு உத்வேகம் அளிக்கும் வகையில், இந்த அரசு, உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பதவிகளில், 50 விழுக்காட்டினை மகளிருக்கு ஒதுக்கீடு செய்துள்ளது.

கிராமச் சாலைகளை தரம் உயர்த்துதல், வலுப்படுத்துதல் மற்றும் பராமரித்தலில் முறையான நிதிப் பயன்பாட்டினை தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் உறுதி செய்துள்ளது. இது, ஊரகப் பகுதிகளின் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு உத்வேகத்தை அளித்து, கிராமப்புற மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளது.

ஏழைக் குடும்பங்களின் வருவாயினை உயர்த்துவதற்காக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட செயலாக்கத்திற்கு புதிய உத்வேகம் அளிக்கப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் மூலம், காடு வளர்ப்பிற்கு அளிக்கப்பட்டுள்ள முக்கியத்துவம், வனப்பரப்பை அதிகப்படுத்துவதிலும், நவீன நாகரீகத்தின் விளைவான சுற்றுச் சூழல் சமநிலைக் குலைவைச் சரி செய்வதிலும் நிரந்தர மாற்றத்தை ஏற்படுத்தும்.

தமிழகத்தில், திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையை அடைய எடுக்கப்பட்டுள்ள முன்னோடி முயற்சிகள்



மற்றும் ஊராட்சி அமைப்புகள் மற்றும் சுயஉதவிக் குழுக்களோடு ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட்ட திடக்கழிவு மேலாண்மை, விரும்பத்தக்க மாற்றங்களை அளித்துள்ளன.

தமிழ்நாடு புதுவாழ்வுத் திட்டத்தின் முன்னோடி முயற்சிகள் மூலம், 9.8 இலட்சம் இலக்கு குடும்பங்கள் பயன்பெற்று வறுமை நிலையினின்று முன்னேறி வருகின்றனர். புதுவாழ்வு திட்டம் ஏற்படுத்தியுள்ள தாக்கமானது, சுய உதவி, சுய மேலாண்மை, தன்னம்பிக்கை, சுய கண்காணிப்பு மற்றும் பிற துறை திட்டங்களோடு ஒருங்கிணைத்து செயல்படுவது, எப்போதும் வளர்ச்சியில் பங்கேற்று ஒருவருக்கொருவர் நன்மை பெற முடியும் என்ற நம்பிக்கையை வலுப்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனமானது, மகளிர் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகிய திட்டங்கள் மூலமாக மகளிர், ஏழைமக்கள், நலிவடைந்தோர் போன்ற சமூகத்தின் விளிம்பு நிலையில் வாழும் மக்களின் வறுமையைக் குறைத்து, நிலையான வாழ்வாதாரத்தை வழங்கி, அவர்கள் வாழ்வில் ஏற்றம் பெற அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

ஒப்பற்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் ஆற்றல்மிக்க வழிகாட்டுதலின்கீழ் செயல்படுத்தப்பட்ட பல்வேறு முன்னோடித் திட்டங்கள் மூலம், இந்த அரசால், கடந்த 5 ஆண்டுகளில் எடுக்கப்பட்ட தொடர் முயற்சிகள்,

ஊரகப் பகுதி மக்களது வாழ்க்கைத் தரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒவ்வொருவர் முகத்திலும் புன்னகை, மக்கள் மனதில் பொதுவான நல்லுணர்வு, தங்களது எண்ணமெல்லாம் நிறைவேறும் என்ற இளைஞர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட முதன்மை மாநிலமாக தமிழகத்தை ஆக்க வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சரின் எண்ணத்தினை முன்னெடுத்துச் செல்வதில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை என்றும் முன்னிலையில் இருக்கும்

**எஸ்.பி.வேலுமணி,**

**நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்**